## விஞ்ஞான மெய்யறிவுத் திருப்பணி III & IV.

# பாகம் II. கீதை, விஞ்ஞானம், நவீனம்

கீதையின் மகிமை; (2a) கீதையும் அஹிம்சையும்; (2b) மரணத்தின் ர்மம்; (3) சாங்கியமும், கீதையும்; (4) பரமனின் அறிகுறிகள்; (5) பஞ்சகோசங்கள்; பரிணாம முறை; (6) கர்ம விதியும், மறு பிறப்பும்; (7) வர்ண, ஆச்ரம, தர்மங்கள்; (8) ராஜயோகம்: (9) மானிடனும், இதர உயிரினங்களும்.

## பாகம் I. பகவத் கீதை (புதிய ஏற்பாடு)

ஹிந்து மதமானாலும், எந்த மதமானாலும், உண்மை ஞானமின்றி, மனிதன் குருட்டு வாழ்கை தும் காலம் மலையேறி விட்டது. முறையான மதபோதனையளிக்க, கிருஸ்தவர்களில் யாவரும், கென ஒரு வேதாகமப் பிரதிபெற்றுப் போற்றிப் படிப்பதுபோல், ஹிந்துகள் எல்லோரும் ள் ஆகம சாத்திரத்தைப் பயிலவேண்டி, இவ்விரு நூல்களும் சமைக்கப்பெற்றன.

ந்நூல்களின் நோக்கம் மெய்ப்பொருள் யாது, என மனிதன் காண வழி வகுத்தளித்து, அவன் ஆன்மநிலையை யுணர்ந்து, உலகோர் யாவரும், யோகநிலையில் நின்று, சமநோக்கடைந்து, த்தவிர்த்த, சமாதான சகவாழ்க்கை நடத்தல் வேண்டுமென்பதாம்.

உலோகாயத இருளில் மூழ்கி, மயங்கி, மனிதன், தான் படைத்த கருவிகளாலே தன் வைத் தேடிக்கொள்ளா வண்ணம் அருள்வழி ஏகத்தூண்டும் முறைகளை, விரிவாகவும், வாகவும், இணையற்ற உவமைகள், ஒப்பீடுகள் மூலம், இந்நூல்கள் அளிக்கின்றன.

கரடுமுரடான உயிர்த் தத்துவங்களையும், இனிய சுவையுள்ள பொருளாக்கி, ஆவலுடன் ண அளிப்பது பாகம் II. இருநூல்களும், வாழ்க்கையில் தொல்லைதரும் பலசிக்கல்களையும் த்து, மூலகாரணங்களை விண்டுகாட்டி, அவைகளை வென்று, ஆட்சிபெறவேண்டிய வாழ்கைக் யையும், மிகவும் எளிய செந்தமிழ் நடையில் போதித்து, சோகமுத்கரமாக—துன்பத்தைத் க்கும் சம்மட்டியாகத் திகழ்கின்றன.

*Edited & Published on behalf of*
Janaki Memorial Charity Trust by the Trustee
D. V. RAMAN, B. A., L. T., G. D. A.
Cert. A. I. B. (Lond); Inter. B. Com. (Lond.);
Inter. B. Sc. Econ. (Lond); F. B. I. (Lond); F. C. I. (B'ham);
Ex. Secretary, Chief-Accountant, Cost Officer, Internal Auditor, Tax-Consultant,
Vignan Mandir, Cheranmahadevi S. Ry. (South India)

Rights.
served

விலை { பாகம் I. Rs. 2-50
பாகம் II. Rs. 3-00

விஞ்ஞான மெய்யறிவுத் திருப்பணி III & IV.

# பாகம் II. கீதை, விஞ்ஞானம், நவீனம்

(1) கீதையின் மகிமை; (2a) கீதையும் அஹிம்சையும்; (2b) மரணத்தின் மர்மம்; (3) சாங்கியமும், கீதையும்; (4) பரமனின் அறிகுறிகள்; (5) பஞ்சகோசங்கள்; பரிணாம முறை; (6) கர்ம விதியும், மறு பிறப்பும்; (7) வர்ண, ஆச்ரம, தர்மங்கள்; (8) ராஜயோகம்: (9) மானிடனும், இதர உயிரினங்களும்.

## பாகம் I. பகவத் கீதை (புதிய ஏற்பாடு)

ஹிந்து மதமானாலும், எந்த மதமானாலும், உண்மை ஞானமின்றி, மனிதன் குருட்டு வாழ்கை நடத்தும் காலம் மலையேறி விட்டது. முறையான மதபோதனையளிக்க, கிருஸ்தவர்களில் யாவரும், தனக்கென ஒரு வேதாகமப் பிரதிபெற்றுப் போற்றிப் படிப்பதுபோல், ஹிந்துகள் எல்லோரும் தங்கள் ஆகம சாத்திரத்தைப் பயிலவேண்டி, இவ்விரு நூல்களும் சமைக்கப்பெற்றன.

இந்நூல்களின் நோக்கம் மெய்ப்பொருள் யாது என மனிதன் காண வழி வகுத்தளித்து, அவன் தன் ஆன்மநிலையை யுணர்ந்து, உலகோர் யாவரும், யோகநிலையில் நின்று, சமநோக்கடைந்து, துன்பந்தவிர்த்த, சமாதான சகவாழ்க்கை நடத்தல் வேண்டுமென்பதாம்.

உலோகாயத இருளில் மூழ்கி, மயங்கி, மனிதன், தான் படைத்த கருவிகளாலே தன் அழிவைத் தேடிக்கொள்ள வண்ணம் அருவ்வழி ஏகத்துண்டும் முறைகளை, விரிவாகவும், தெளிவாகவும், இணையற்ற உவமைகள், ஒப்பிடுகள் மூலம், இந்நூல்கள் அளிக்கின்றன.

கரடுமுரடான உயிர்த் தத்துவங்களையும், இனிய சுவையுள்ள பொருளாக்கி, ஆவலுடன் உண்ண அளிப்பது பாகம் II. இருநூல்களும், வாழ்க்கையில் தொல்லைதரும் பலசிக்கல்களையும் சித்தரித்து, மூலகாரணங்களை விண்டுகாட்டி, அவைகளை வென்று, ஆட்சிபெறவேண்டிய வாழ்கைக் கலையையும், மிகவும் எளிய செந்தமிழ் நடையில் போதித்து, சோகமுத்கரமாக—துன்பத்தைத் தகர்க்கும் சம்மட்டியாகத் திகழ்கின்றன.

*Edited & Published on behalf of*

Janaki Memorial Charity Trust by the Trustee

D. V. RAMAN, B.A., L.T., G.D.A.

Cert. A I.B. (Lond); Inter. B. Com. (Lond.);

Inter. B. Sc. Econ. (Lond); F.B.I. (Lond); F.C.I. (B'ham);

Ex. Secretary, Chief-Accountant, Cost Officer, Internal Auditor, Tax-Consultant,

Viguan Mandir, Cheranmahadevi S. Ry. (South India)

All Rights. Reserved

விலை { பாகம் I. Rs. 2-50 / பாகம் II. Rs. 3-00 }

28 MAY 1980

**VOL. I. SRI GITA, SCIENCE & MODERNITY RS. 6.**
**VOL. II. GITA SLOKAS** *(Freely Rendered into English Prose)*
With Running Commentary & Elucidatory Notes **Rs. 1-50.**

"Your two Books on the Gita are precious contributions to the Gita Library. You have a psychic intuition to take a pearl-diver's plunge into the ocean-depths of the Universal Book. You have brought out pearls from the heart of the Gita and have woven them into an ornament of crowning beauty The grand style and the deep substance afford a thought provoking study to Savants. You have taken into account the modern Science and schools of thought to enrich your art. Every English-knowing individual should read this Gita-elaboration. *Kavi Yogi Suddhananda Bharati.*

"A remarkable and profound study of the Gita, in a new spirit, combining research and devotion. An excellent and powerful work, contains an excellent exposition of dynamic, essential, integral, Hinduism, by an able modern probing challenging mind presenting the Gita Teaching as a **Spiritual** *Cum* **Socio - Political Gospel.** Gives a masterly analysis of the crisis that developed in the Soul of Arjuna. With rare and incisive insight, draws our attention to the two Natures and to two planes of conduct; shows well, how the Gita transcends the Sankhya and solves the puzzle of Soul, Body and Death. **The work is a fine synthesis of Religion, Science and Modernity".**

**K. S. RAMASWAMY SASTRY.**

---

**பாகம் I. பகவத் கீதை (புதிய ஏற்பாடு)**

(1) பரமான்மா; (2) பிரபஞ்சம்; (3) முக்குணங்கள்; (4) காமம்; (5) யோகம்; (6) கர்மம்; (7) பக்தி; (8) ஞானம்; (9) கதம்பம்.

"The Lord has lit the lamp of wisdom in your heart and it shines there for all men to see. The Book is very readable. It is in simple and chaste tamil. Your presentation emphasises the truth that the Bhagavat Gita is the New Testament of Hinduism."
**"ANNA" N. SUBRAMANIA IYER.**

---

## Modern Scientific Management Vols. I & II

*Complete Costing & Management Accounting with A. B. C. of Industrial & Production Engineering*

(Foreword by Dr. P. S. Lokanathan, New Delhi.)

**VOL. I. Cost-Control & Management Technique** *through* Standard Costing & Budgetary Control, Planning, Organisation, Marginal Costing, Labour Problems & Relations, Time & Motion Study, Job Evaluation, Bonus & Incentive Systems, Work-Study, Stores Organisation & Accounting etc., in 18 Chapters, Demy 8 vo. 340 pp. ... Rs. 12—50.

**VOL. II. Textiles Costing, Organisation & Cost Control** A classic for Textile-men, 232 pp. ... Rs. 7—50.

28 MAY 198

# முன்னுரை

சரித்திர காலத்துள் ஏற்பட்ட, பிற மதங்களைப்போல், ஹிந்து மதத்தின் ஆரம்பமோ, அதை நிறுவிய புருஷரோ இல்லை. மதங்களில் முதல்வனான ஹிந்து மதத்தின் பெயரே ஒரு புதிராக நிற்கின்றது சிந்து நதிப் பள்ளத்தாக்கில் வசித்தவர்களை சிந்துக்கள் (ஹிந்துக்கள்) என்றும், அந்நாட்டை (சிந்திய ), இந்தியாவாகவும், அவர்கள் பின்பற்றிய மதத்தை இந்து மதமென்றும் அழைக்கலானார்கள். பாமர ஹிந்து மக்கள், தங்கள் மதக் கொள்கைகளை, சமூகப் பழக்க வழக்கங்களிலிருந்தே இன்றும் அறிகின்றார்கள். பண்டிகைகள், திருவிழாக்கள், புராணங்கள், இவைகளே ஹிந்துக்களின் மதப்பற்றுக்கு அடிப்படையாகவும், காரணமாகவும் திகழ்கின்றன. முறையான மதபோதனையோ, மதக் கட்டுப்பாடோ கிடைக்காததால், ஹிந்துக்களிடத்திலும், பிறர்களிடத்திலும், தவறான கருத்துக்களே நிலவுகின்றன. அரசியலிலும், பொருளாதார வாழ்க்கைத்துறை யாவற்றிலும், இன்று மதப்பித்துப் புகுந்து, நெருக்கடியையும், மனிதப்பண்பற்ற செயல்களையும் உருவாக்குகின்றது. உண்மையான, உயர் மதக் கருத்துக்கள் மங்கிக்கிடப்பதுமின்றி, நேருக்குமாறாகக் கொள்ளப்படுவதால் ஏற்படும் பயங்கர இடர்களுக்கு வரம்பில்லை. இந்த அவல நிலையை உடனடியாகக் கட்டுப்படுத்த வேண்டி, எல்லா உயர்மத உண்மை அடிப்படையை, உலகோரெல்லாம் தெரிந்து கொள்ளச் செய்யவேண்டியது, அறிவாளிகளின் முதல் கடமை. இந்நோக்குக்குப் பெரிதும் உதவும்பொருட்டே இவ்விரு நூல்களும் ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் பிரசுரமாகின்றன.

ஹிந்து மதம் அபௌர்ஷ மதமாதலால், அதன் கொள்கைகள், குறுகிய தனி நோக்கில்லாமல், உலகோருக்கெல்லாம் பொதுவான நிரந்தர தத்துவங்களையே அடிப்படையாகக் கொண்டு, மிகவும் பரந்த மனப்பான்மையையும், சகிப்புத் தன்மையையும் வளர்க்க இடமளிக்கின்றது. பிற மதக் கோட்பாடுகள் தளர்த்த முடியாது, நெளிவற்றதாகவே காண்கின்றன. பரமனே தன் வரலாற்றை பாடுவதால், பகவத் (கீதம்) கீதை எனப் பெயர் கொண்டது. கீதை, ஒரே கோர்வையாகத் தொடர்ந்து இராமல், குரு-சிஷ்ய சம்வாதமாக அமைந்திருப்பதால், ஆங்காங்கே பிரிந்து நிற்கும் தத்துவங்களைத் திரட்டி, விஷய வாரியான தலைப்புக்களில், மூலச் சுலோகங்களையும், அவைகளின் விளக்கத்துடன் பாகம் I-ல் தொகுத்தளித்து, ஷெ நிரந்தர உண்மைகளை, விரிவாக ஆராய்ந்து, ஆய்வுக் கட்டுரைகளாக பாகம் II-ல் அளிக்கிறோம்.

பிற மதங்களைக் காட்டிலும், கணக்கற்ற உட் பிரிவுகள், ஹிந்து மதத்தில் ஏற்பட்டது, அம்மதம் வளர்ந்து வரும் பாங்கால் உண்டானவை. ஒவ்வொரு தீர்க்கதரிசியும், தங்கள் தங்கள் மனோ பீஷ்டப்படி சத்தியம், அன்பு, இவைகளுக்கு அளித்த விளக்கத்தில உருவாகியவையே, பல கிளைகளும், பிரிவுகளுமாம். இவ்வாறு, பல இஷ்ட தெய்வங்கள் வெவ்வேறு பெயருடனும், உருவுடனும் ஏற்பட்டு, ஹிந்து சமூகத்தின் பலவீனத்திற்குக் காரணமாயின. ஆனால், கீதையிலோ, உப

நிடதங்களிலோ, பிளவு நிலைகளுக்கு ஆதாரமே இல்லை என்பதைத் தெளிவாக்கியதோடு, அவ்வாறான, வேற்றுமை யுணர்ச்சிகள், பெருந் தவறானவை என்றும் இந்நூல்களில் மேற்கோள் காட்டியுள்ளோம். இன்பினிடி என்ற கருத்துப படிவத்தில் அடங்காத எண் உண்டோ? இல்லை. அதே போல், பரமன் (கடவுள்) என்ற கருத்துப் படிவத்திலும் அடங்காத பொருள்களோ, ஜீவன்களோ, எண்ணமோ, எண்ணே கிடையாது. கடவுளின்கருத்துப் படிவத்தின் உண்மையை உலகோரெல்லாம் தெளிவாகக்கொண்டாலே இப்புவிவாழ்க்கை நலம்பெறும். இவ்வுயிர்த் தத்துவத்தை விளக்கி, இவ்விரு நூல்களும் அரும் பணி யாற்றுகின்றன.

இன்று மானிட ஜீவன்களைக் கவரும் தத்துவம் விஞ்ஞானமே. ஆனால், இங்கும், கடவுள் தத்துவத்தில் காணுவதுபோல், உண்மையின் ஒரு சிறு அம்சமேயான விஞ்ஞான அறிவை, முழுதுமான உண்மையாகப் பாவித்து, மெய் ஞானத்தை மறுக்கின்றது, நவ நாகரீக உலகம். இன்றைய பயங்கரமான வாழ்க்கை நிலைக்கு இத் தவறே காரணமாதலால் இப்பேரிடரை ஒழிக்க முடியாவிட்டாலும், தணிக்கவேனும், அரும்பாடு எடுத்துப் பணியாற்ற இவ்விரு மொழி நூல்களும், இச் சேவையையே முதற் கடமையாகக் கருதி, விஞ்ஞானத்தின் உண்மை ரூபத்தையும், குறைகளையும் ஒப்பீடுகள் மூலம் எடுத்துக் காட்டாத இடமே இல்லை. ஒவ்வொரு நிலையிலும், ஒவ்வொரு துறையிலும், மானிட வாழ்வைப் பாழ்படுத்தும் மூல காரணங்களை அலசி, அவை யாவும், மெய் ஞானத்திற்கும், உலோகாயத ஞானத்திற்கு மிடையே யுள்ள முரண்பாடுகளே என்று தெளிவாக்கப்படுகின்றன. என்றாலும், விஞ்ஞான அறிவைக் குறை கூறாது, அதைத் தவறான வழியில் உபயோகிக்கும் மனிதனின் பண்பற்ற பாங்கையும், அதற்குக் காரணமா யுள்ள அவனது இழி குணங்களையுமே வன்மையாகக் கண்டித்துள்ளோம். விஞ்ஞான அறிவின் முன்னேற்றத்தையோ, அது அளிக்கக் கூடிய வாழ்க்கை அனுகூலங்களையோ தவிர்க்கும் எண்ணம் கிடையாதென்பதை உறுதி யளிக்கின்றோம்.

ஹிந்து மதத்தின் உயர்ப்பண்புகளையும், தத்துவங்களையும், ஹிந்து சமூகப் பழக்க வழக்கங்களினின்றும் பிரித்து, அம்மதத்தின் அடிப்படை உண்மைகள் ஒவ்வொன்றுக்கும், ஆதாரமாக, கீதையினின்றும், மேற்கோள் காட்டித் தொகுத்தளிக்கப்பட்டிருக்கின்றன. இந்நூல்களைப் பயின்று, ஒவ்வொரு ஹிந்துவும், ஏன், உயர்பண்புள்ள ஒவ்வொரு மானிடனும், தன் பிறப்பு, வாழ்வு, இறப்பின் உண்மைகளைத் தெரிந்து கொண்டு குருட்டு வாழ்க்கையைக் கைவிடவும், பிற மதங்களின் உண்மையை யுணராது, துவேஷத்தின் காரணமாகப் பழிப்பதும், இகழ்வதும் தவிர்க்கபபட்டு, எல்லா உலக மதங்களின் உண்மை ஒன்றே, ஒரே மூலத்திலிருந்து உதித்தவை என்று எளிதில் கண்டு கொள்ள இன்றியமையாதவை. ஜே, கீதா!

விஞ்ஞான மந்திர்
சேரன்மகாதேவி

**த. வெ. ராமன்**

28 MAY 1980

# பாகம் II கீதை, விஞ்ஞானம், நவீனம்

## I. கீதையின் மகிமை

கீதை, தத்துவமும், நிரந்தர தர்மமும் அடங்கிய மகத்தான ஒரு பொது நூல். ஹிந்து மத சம்பந்தமான பெயர்களும், சில பழக்க வழக்கங்களும் உதாரணங்களாகவே அதில் எடுத்துக் கொள்ளப் பட்டவை. இப்பூவுலக வாழ்க்கையின் ஆழ்ந்த தத்துவங்களைப் பொருத்த மட்டில், எம்மதத்தராயினும், நெருங்கிய ஆன்மீகத் தொடர்புடையவர்களாயிருந்தால், கீதையின் உண்மைகளை ஒப்புக் கொள்வார்கள். பைபிள், குர்ஆன், மற்றும் மத மூல நூல்களுக் கும், அம்மதங்களில் ஆன்ம உத்வேகம் பெற்ற மகான்களின் பொன் மொழிகளுக்கும், கீதையில் கண்ணன் கூறும் உண்மைகளுக்கும், கருத்தில் வேறுபாடேயில்லை எந்த மகோன்னதமான மத நூலி லும், நிரந்தரமாக நிற்பது, அதன் தத்துவ உபதேசமே யல்லாது, அதில் குறிப்பிட்டுள்ள உவமைகளோ உதாரணங்களோ, அல்லது அவைகளுக்குக் கொடுக்கப்பட்ட விளக்கமோ அல்ல. கீதையை வாசிப்போர் இவைகளை மனத்தில் ஏந்தி, வாழ்க்கை நடைமுறை யிலும், அதன் தத்துவங்களைக் கையாள முழுமூச்சுடன் முயல வேண்டும்.

டாம்பீக வாழ்க்கைக்கான சாதனங்களைத் தேடிக் கொள்ளு வதில் செலவிடும் அளவு கடந்த முயற்சிகளையும், இப்பூவுலக வாழ்வே, நமது முடிவு என்ற நினைப்பையும், நீக்கிவிடுவோமாயின், கடவுள் இருப்பதை நாம், தாஞகவே உணர்வோ மென்பதை, கீதை நிரூபிக்கின்றது. **கீதை, தனிச் சித்தாந்தம் எதையும், நிலைநாட்ட முயற் சிக்கவில்லை.** மனிதனின் தெய்வீகத் தன்மையே, கண்ணன் வடிவில் மானிட வர்க்கத்துடன் உரையாடுகிற தென்பதை கீதையை வாசிப் போர் உணர்ந்து அனுபவிக்க வேண்டும். மானிடன் தெய்வீக நிலையை அடைவதற்கு, கீதை ஒரு திட்டமெனலாம். சாசுவதமான உண்மைகளை, வாதத்துக்குரிய சில விஷயங்கள், ஒரு பொழுதும் பாதிக்கா. வாதத்துக்குரிய யாவும், முக்கியமான தத்துவ விஷயங் களல்ல. கண்ணன் என்ற பெயருக்குப் பதிலாக, கடவுளென்ருே, மற்றும் வாசகர்களுக்கு இஷ்டமான தெய்வப் பெயரையோ, வைத்துக் கொண்டாலும், பொருந்தும். தானே எல்லாம் என்று கண்ணன் கூறுவதை எப்பொழுதும் ஞாபகப்படுத்திக்கொண்டு, எல்லாம், கடவுளே என்ற நம்பிக்கையும், உணர்ச்சியும் ஏற்பட்டு,

செயல் வடிவில் காணக் கூடுமானுல், பின் கீதையின் சித்தாந்தங்கள் அனைத்தும் நமக்கு உண்மையாகிவிடும். **சமநோக்கு அல்லது பற்றற்ற நிலைக்கு அடிப்படை, யாவும் தெய்வமே என்பதாம்.** தன்னல மற்ற தியாக வாழ்க்கைக்கும், அஹிம்சையாகிய அன்புக்கும், ஊன்று கோலும் அதுவே. கடவுளைத் தவிர, படைப்பில் யாதொன்று மில்லை என்ற சித்தாந்தம், பகைமையையும் பொருமையையும் வேருடன் அகற்றிவிடும். மண்ணுலக வாழ்க்கை மேம்பட, அதற்கு எல்லாம் வல்ல திறவுகோல், சமநோக்காகிய யோக மனநிலையே. கீதையின் உபதேசங்களை யெல்லாம் ஒன்று திரட்டிக் கூறுவது, யோகம் என்ற ஒரே சொல். இந்த யோக நிலையின் பொருள் விளக்கமே, கீதை எனலாம். ஆனது பற்றியே, கண்ணனை, யோகக்கடவுளென வர்ணிக்கப்பட்டது.

**அபிப்பிராய வேற்றுமைகள ஏற்படுத்திக் கொள்வது மானிட வர்க்கத்தின் குறுகிய இயல்பு.** ஒவ்வொரு மனிதனும், தன்க்கு வழி காட்டியாகத் தன் அறிவை நாடாமல், தன்னுள்ளத்தில் எழுவதையே இறுதியாக நம்புகிருன். உள்ளம், உணர்ச்சிகளுடன் ஒரு முடிவைத் தீர்மானித்த பின், தன் பகுத்தறிவை நாடி, அந்த முடிவிற்கான காரணங்களைக் காண முயலுகிருன். முதலில், சித்தாந்தம் ஏற்படு கிறது; பின்னர் தான் வாதங்கள் நடைபெறுகின்றன. இத்தகைய மனப்பான்மையை, கீதை விடாப் பிடியாகக் கண்டிக்கின்றது. பற்றற்ற நடுநிலையாகிய யோக நிலையே, வாதப் பிரதிவாதங்களை யும், அவற்ருல் ஏற்படும் மட்டரக உணர்ச்சிகளையும் ஒழிக்கும். தன்னுள்ளத்தில் உதிக்கும் சித்தாந்தத்தை நிலைநாட்டவும், அதைப் பிறர் ஒப்புக்கொள்ளும்படி வாதாடுவதும், அறிவின் சாதுரியமல்ல; அகந்தையின் கூற்றே. **அகந்தையை அடியோடு அகற்றுவதே கீதையின் உபதேசம்.** நம் உள்ளத்தில் உதிப்பவைகளுக்கு இடங்கொடுப்பது போல், பிறர் உள்ளத் தெழுச்சிகளுக்கும், சரி மதிப்பும், இடமும் கொடுக்கவேண்டியது நம் கடமை. இதுவே சமநோக்கு என்ற யோக நிலை. பிறர் உள்ளம் நாடும் சித்தாந்தங்களைத் தகர்க்கும் நோக்கு சம நோக்கல்ல.

அஹிம்சையின் குரலாகிய கீதையின் சமநோக்குக்கு ஈடு இணையில்லை. பரமன் IV-11-ல் பகர்வதாவது:— "மனிதர்கள் எந்த வழியில் என்னை நாடினுலும், அதே வழியில், அந்த ரூபத்தில், அவர்களுக்கு [நானே] அருள் புரிகின்றேன். எவ்விதத்திலும், மனிதர் கள் பின்பற்றும் [] வழி என்னைச் சார்வதே யாகும். வழிபடுவோர் யாவரும், எந்த [] தெய்வத்தை வணங்கினுலும், இறுதியில் என்னையே

வந்தடைகின்றார்கள்." இதுவே IX-23-ன் கருத்தும். எத்தெய்வ மாயினும், அதாவது, எப்பெயர் கொண்டு ஆண்டவனைத் தொழு தாலும், அப்பக்தன், உண்மையான ஒரே கடவுளேயே அடைகிறான். களங்கமற்ற, பற்றற்ற பக்திதான், முக்கியமானது; சித்தாந்தங் களோ, சின்னங்களோ, பெயர்களோ அல்ல. எல்லாச் சின்னங்களும், பெயர்களும் அவருக் குரியவையேயாம். பரமனைப் போலவே, பரந்த சமநோக்குடைய கீதைக்கு வரம்புகீறி, கோட்டைகட்டி, கருத்தைத்திருகி, வேண்டாத முரண்பாடுகளை ஏற்படுத்திக்கொண்டு, பின், அவைகளுக்கு சமாதானம் காண, பண்டிதர்கள் பெரும்பாடு படுகிறார்கள், **பண்டைக் காலத்திய பல்வேறு சித்தாந்தங்களை இணைத்துக் கூறுகிறது கீதை.** சத்தியம், அன்பு, சமநோக்கு, பற்றின்மை என்ற அடிப்படையில், சொற்களுக்கு விளக்கந்தந்து, கீதையைப் படிப்பதே பலன் தரும். உதாரணமாக, வர்ண தர்மத்தை எடுத்துக்கொண் டால், அதைச் செயல் முறையில், சமநோக்குக்கு முரண்பட அமல் நடத்துவதை, கீதை ஆதரிப்பதாக வாதாடுவது வீணே. சமநோக்கு, சமமதிப்பு, கீதையின் உயிர்நாடி; அதைப் புறக்கணிக்கும் எந்த நடைமுறையும் தீயதெனக் கைவிடப்படவேண்டும். இதுபோலவே தான் அஹிம்சைக்கு கீதை, இடமளிக்கும் என்ற புரளியும். அஹிம்சை, சமநோக்கால் வலுவடைகிறது. சமநோக்கை ஆணி வேராகக் கொண்ட முறையில், உயர்ந்தது, தாழ்ந்தது, என்ற மனப் பான்மைக்கே இடமில்லை. கீதை எதை ஆதரிக்கின்றது? அத்து வைதமா, துவைதமா, விசிஷ்டாத்வைதமா? சந்நியாசமா, க்ருஹதர்மமா? செய்லையா, செயலின்மையையா? ஞானத்தையா, கர்மத்தையா, பக்தியையா — எதை வற்புறுத்துகிறது? வாதப் பிரதிவாதங்களைப் புழுதிபோல் எழுப்பும், இவ்வினுக்கள், கீதையின் நடுநிலைநோக்கின் உயிரையே உறிஞ்சி விடுகின்றன. தனதென, ஒரு சித்தாந்தத்தையோ, நடைமுறையையோ கீதை வகுக்கவில்லை. அக்காலத்திலுள்ள கோட்பாடுகளை எல்லாம் இணைத்துத் தன தாக்கிக் கொண்டு, **சமநோக்கு, சத்தியம்,** அன்பு **இவைகளையே நிலைநாட்டு கிறது.**

வேதங்களை கீதை, எவ்வாறு இகழ முடியும்? II-(42-46)-ல் குறிப்பிடுவது, வேதச் சடங்குகளையும், அவற்றை விளக்கும் வேதங் களின் முற்பகுதியாகிய கர்ம கண்டத்தையுமே. வேதங்களின் பிற்பகுதியான **உபநிடதங்களே, கீதையின் மூலமும்,** ஆதாரமுமாம். சாத்திரம் என்ற சொல், XVI-23, 24ல் உபயோகமாயிருப்பதற்கு, வேதங்களில் கர்மகாண்டங்களை யனுசரித்து ஏற்பட்ட நூல்க

ளெனப் பொருள் அளிப்பது பொருந்தாது. அவை II-42, 46-ல் கண்டனத்திற்குள்ளாகி ஒதுக்கப்பட்டவை. சாத்திரமென்பதும், தர்மமென்பதும், கீதை விளக்கி வரும் தருமத்தையே குறிக்கும். XV-20-லும், XVIII-66-லும் இச்சொல் இதே பொருளில் உபயோகப்பட்டிருப்பது தெளிவு. சு(ய)தர்மம் என்ற சொல்லுக்கு, சுயகர்மம் என்ற பொருள் அளித்து, குண — கர்ம அடிப்படையிலுண்டாகும் வர்ண தர்மத்தை வீண்பழிக்குள்ளாக்குகிருர்கள். கீதையில் காணும் சொற்களுக்குப் பொருளளிக்கும் பொழுது, முரண்பாடுகள் ஏற்படாமல் காப்பதே முறையாகும். முரண்பாடுகள், பாமரமக்களின் மனத்தைக் குழப்பிவிடும்; மேதைகளின் அகந்தையைத் தூண்டும்.

முன் காலத்தில் பற்றின்மை நடை முறையில் வெகுவாக அனுசரிக்க, இடமுண்டாயிருந்தது. ஏனெனில், அக்காலத்தில், வாழ்க்கையின் நோக்கம் ஆன்ம விடுதலே என்றே கருதினுர்கள். இக்காலத்திலோவெனில், டாம்பீக வாழ்வே, வாழ்க்கையின் நோக்கமாகப் பெரும்பாலோரால் கருதப்பட்டு அமலாகின்றது. களங்கமுற்ற மனத்தையுடைய நமக்கு, பற்றின்மை என்பது புரியாத புதிராக இருக்கின்றது. ஆகையால், கீதையின் போதனை, இக்காலத்தவர்களுக்கு வறட்டுச் சித்தாந்தமாகவே தோன்றுகிறது. கீதையின் லட்சியமாகிய, பற்றின்மை, தியாகம், இவற்றைக் குற்றம் குறைவின்றி வாழ்க்கையில் அனுசரிப்பவர்கள் அரிதாகிவிட்டார்கள். என்ருலும், இந்த சித்தாந்தங்களே, கீதை போல் வேறு எந்த நூலும், விரிவாகவும், விபரமாகவும் வாதிக்கவோ, வற்புறுத்தவோ இல்லே. இக்காலத்தவர்களது பெருங்குறையை, கீதை ஒன்றே எடுத்துக் கூறுவதால், அதைப் பின்பற்றுவதின் மூலமே, நமக்கு ஒளியும், சாந்தியும், பேரானந்தமும் எளிதில் கிட்டும். கீதையை மானிட வர்க்கத்தின் வேத நூலாக வாசகர்கள் ஒப்புக்கொண்டு விட்டால், பின் அவர்கள் சந்தேகத்தாலும், சோர்வாலும் வேதனேப்படமாட்டார்கள். அப்படி ஏதாவது அல்லல் ஏற்பட்டவுடன் தங்களுள்ளத்திலேயே வசிக்கும் பரமனே நாடி, கீதையில் அவரது பொன்மொழிகளுக்குச் செவிமடுத்து, அதன்படி நடந்து, தாங்கள் வருந்துவதற்குக் காரணமில்லாமலே செய்து கொள்ள இயலும்.

கீதையில் மானிட வர்க்கத்தின் பிரதிநிதியான அர்ஜுனன் மனங்கலங்கி, எது கடமை என்பது தெரியாது தவிக்கின்ருன். அவனது மனப்புரட்சியும், தன்னல உணர்ச்சியால் ஏற்பட்ட மயக்கமும், அவனே ஒரு சந்தேக வாதியாக நன்கு சித்தரித்துக் காட்டுகின்றன. சந்தேகம், சோர்வு, வேதனே ஆகியவற்ருல் அல்லல்படுகிருன்.

இதுவே சாதாரண மனிதனின் நிலையும். உண்மை எது, நலம் பயக்கக் கூடிய வினை எது, என்பவை, நம் சிற்றறிவுக்கு எட்டாதவை. அந்நிலையிலெல்லாம், தீயவழிகளில் செல்லும்படி தூண்டும் பிசாசாகிய, ஆசை, தன்னல மென்ற, நமது கீழ்க் குணங்களின் கையில் சிக்காமல், நம் ஒவ்வொருவரின் உள்ளத்தில் வசித்து. மனச்சாட்சியாகச் செயல்படும் கடவுளை நாடி, அவரது கீதை உபதேசங்களுக்குச் செவிமடுத்து, அதன்படி வழுவாமல் நடக்கவேண்டியது நமது கடமை என்று கீதை வலியுறுத்துகிறது. அவ்வாறு செய்தாலே, பின்னர் நாம் வருந்தக் காரணம் ஏற்படாது. கீதையின் காலத்தில், பல்வேறு குழப்பமான கருத்துக்கள் இருந்தன வென்பது கீதையின் மூல மாகவே அறிகிறோம்.

வேதங்களின் முற்பகுதியாகிய கர்மகாண்டங்கள், பல தெய்வங்களைப்பற்றியும், சுவர்க்க சுகங்களையடைய உதவும் சடங்குகளைப் பற்றியும் விவரிக்கின்றன. இப்பகுதியில் கூறப்பெற்றவைகளை, வேதங்களின் பிற்பகுதியாகிய உபநிடதங்கள் கண்டிக்கின்றன. ஆனால், விடுதலை யடைவதற்கான ஒரே வழி, துறவு வாழ்க்கை தான் என்று மிதமிஞ்சி சிலர் வற்புறுத்தினர். கீதையின் காலத்தில், சாங்கிய சித்தாந்தமும், அமலில் இருந்தாலும், அது திட்ட வட்டமான ஒரே கொள்கையாக உருவாக வில்லை. யோக சாத்திரமும் அவ்வாறே. நாத்திகமும், அக்காலத்தில் இருக்கத்தான் செய்தது. வேதாந்தம் விடாப்பிடியாக அத்துவைதத்தையே போதித்தது. துவைத மார்க்க பக்தர்களும் இருந்தார்கள். இன்று போல், அக்காலத்திலும், மக்கள் பல நிலைகளில் நின்று, தங்கள் ஆன்ம வளர்ச்சிக்கும், உணர்வுக்கும் உகந்ததைப் பின்பற்றி நடந்து வந்தார்கள். மோட்சம் அல்லது விடுதலைக்குரிய உண்மையான சாதனத்தைப் பெருவாரியான மக்கள் கண்டு கொள்ள இயலவில்லை. கலப்படமான முறைகளைக் கையாண்டு, பொய்யை மெய்யென நம்பி, திரும்பத் திரும்ப ஜனன, மரணச் சுழலில் அழுந்தித் தவித்தார்கள்.

கீதை, இந்நிலையில் ஒரு மிகவும் கஷ்டமான கடமையை நிறைவேற்றுகிறது. பொய்யிலிருந்து உண்மையைப் பிரித்துக்காட்டி, முரண்பாடாகத் தோன்றியவற்றை யெல்லாம் சீர்படுத்தி இணைத்து, உண்மையான ஒரே மோக்ஷ தத்துவத்தையும், உலக வாழ்க்கைக் கலையையும் உருவாக்குகிறது. கீதை முழுவதிலும், உபநிடதங்களின் சாரம் திரண்டு கிடப்பதைக் காணலாம். உபநிடதங்களின் சுலோகங்கள், சொற்கள், கருத்துக்களை கீதையை உருவாக்கியிருக்கின்றன. மூலாதாரமான முடிவுகள் உபநிடதங்களிலிருந்து உருச்சிதையாமல், அப்

படியே எடுத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. என்றாலும், பல இடங்களில், இவ்வுபநிடதச் சொற்களுக்கு, அதற்கு முன் இராத பொருள்களும், விளக்கங்களும் கீதையில் அளிக்கப்பட்டுள்ளன. பிரம்மன், ஆன்மா, புருஷன், பிரகிருதி, புருஷோத்தமர், சாங்கியம், யோகம், யக்ஞம், பக்தி, முதலிய சொற்களுக்கு, சில இடங்களில், புதிய, விரிவான பொருள்களும், புதிய உருவமும், கீதை கொடுக்கின்றது. இன்னும் சிலவிடங்களில், உபநிடதச் சுலோகங்களின் கருத்தைச் சுருக்கியும், வேறு இடங்களில், சிறந்த முறையில் விவரித்தும், அவற்றிற்குப் புதிய அர்த்தத்தையும் அளிக்கின்றது. வேதங்களிலுள்ள பல தெய்வங்களைப்பற்றி கீதை குறிப்பிட்டு, அவைகளுககு இடமளித்து, ஆனால், அத்தெய்வங்களெல்லாம், எங்கும் வியாபித்து, யாவற்றையும் அடக்கியுள்ள ஒரே பரமனின் பல்வேறு அம்சங்களே என்று விளக்கி, மானிடன் பக்தியுடன் வணங்கவேண்டும் தெய்வம், அந்த முழுமுதற் கடவுளாகிய பரமன் தான் என்றும் வற்புறுத்துகிறது. கீதையின் அடிப்படை, உபநிடதங்களே யானாலும், அவைகளில் முரண்பாடுகள் போல் தோன்றுவனவற்றைப் பொருத்தமான இடங்களில் இணைத்துக் காட்டி, அக்கருத்துக்களை மிகவும் ஊக்கமளிக்கும் உபதேசமாக கீதை மாற்றியமைக்கின்றது. உபநிடதங்களிலுள்ள ஆழ்ந்த, உயர்ந்த, ஆனால், எல்லோராலும் எளிதில் புரிந்து கொள்ள முடியாத, பரவலாகக் கிடக்கும், பரம ரகசியமான சித்தாந்தங்களைக் கல்வியறிவற்ற சாதாரண மானிடனும் கூட அறிந்து கொள்ளும்படி செய்த வகையே கீதையின் உலகப் புகழுக்கும், பெருமைக்கும் காரணம். அத்துவைத சித்தாந்தத்தையே, அதாவது, "மானிடனே, நீயே, கடவுள்" என்ற குறிக்கோளை, நடைமுறையில் யாவரும் பின்பற்றி நடக்கக்கூடிய தர்மம் என்று காட்டி, அதுவே வாழ்க்கையின் லட்சியம் என்றும், அதையடைவதற்கான வழி முறையையும் வகுத்துக் காட்டுவதுடன் நிற்காமல், இப்பூவுலக வாழ்க்கையும் வாழ்வதற்குரியதே என்ற உண்மையை, சந்தேகத்திற்கு இடமின்றி, கீதை பிரகடனம் செய்கிறது.

செயலைத் துறப்பதா, செயலில் ஈடுபடுவதா? அதாவது, சந்நியாச தர்மமா, கிரஹ தர்மமா, எது மோட்சத்திற்கு வழி, என்ற வாதம் வெகு தீவிரமாக இருந்த காலம் அது. இந்த இரு தர்ம முறைகளும், ஒன்றுக்கொன்று, முரண்பாடானவை யென்று கருதப்பட்டு வந்தது. ஆனால், இவ்விரு தர்மங்களையும் அபூர்வமான முறையில் இணைத்து, இவ்விரண்டுக்கும் ஒருமிப்பை யுண்டாக்கியது கீதையின் அரிய சாதனை. இந்த இணைப்பிலே தான், வாழ்க்கை வாழ்வதற்குரிய தென்பதை,

கீதை நிலைநாட்டுகிறது. ஆண், பெண், கூட்டு வாழ்க்கையாகிய கிரஹதர்மத்தை நடத்துவதற்கான வழியை, கீதை கற்பிக்கின்றது. அதைக் கடைப்பிடித்து, உலக வாழ்க்கையை நடத்துவோர் ஒரு பொழுதும் துன்பத்திற்குள்ளாகார். ஒரு தனிப்பட்ட ஜாதியினருக்கோ, மதத்தினருக்கோ அளித்த உபதேசமல்ல. கீதை, எல்லா அறிவாளிகளையும், அவர்கள் எம்மதத்தினராயினும் கவரவல்ல பெருமையுடைத்ததாக இருக்கிறது. ஏனெனில், கீதை ஒரு வாழ்க்கைக் கலையுங்கூட. பூவுலக வாழ்க்கையை வெற்றிகரமாக நடத்த, கீதையைப் போல உதவும் நூல் வேறில்லை எனலாம். சில குறிப்பிட்ட நிபந்தனைக்கு வாழ்க்கை முறையை உட்படுத்தி வகுத்தளித்து, அதை எல்லோரும் எளிதில் புரிந்து, நடந்து கொள்ள உதவுகிறது. தவிர, பரமனைப் பற்றி அறிந்து கொள்ளவும், உண்மை ஞானத்தைப் பெறவும், அது துணைபுரிகின்றது. மோட்சமாகிய விடுதலையை யடைவதற்கான வழியையும், உலக வாழ்க்கையைத் துன்பமின்றி நடத்தும் முறையையும், ஒன்ருகவே இணைத்துக் காட்டும் திறமை படைத்தது கீதை. பற்றுதலின்றி செயல் புரிபவன் துன்பந் தவிர்ப்பான், மோட்சமும் அடைவான் என்ற தரும விதியை விடாப்பிடியாக எடுத்துக் கூறி, அதையே தாரக மந்திரமாக மானிடனுக்கு அளிப்பதும் கீதையே.

கீதை, ஒரு தத்துவ ஆராய்ச்சி நூலல்ல. அது சில இறுதி தத்துவ நிலைகளை ஒப்புக்கொண்டே, வாழ்க்கைக் கலையையும், ஆன்மக் கலையையும் உருவாக்குகின்றது. மானிட வாழ்க்கையின் லட்சியம் யாது என்பது சாதாரண மனிதன் விடைகாண இயலாத ஒரு வினு ஆனல், அதன் விடையை, சந்தேகமறத் தெரிந்து கொள்வதே மானிட ஜீவனுக்கு மிகவும் முக்கியமானது. அதை விளக்கவே, சில அடிப்படைக் கொள்கைகளை வாதத்திற்கு உட்படுத்தாமல், கீதை எடுத்துக் கொள்ளுகிறது. அது தான், கடவுள் தத்துவம். அவர் பிறவாதவர், மரண மற்றவர், ஆதி, அந்த மற்றவர். நிரந்தரமாய் எங்கும் வியாபித் துள்ளவர்; ஆனல், நம் புலன்களுக்கும் அறிவுக்கும் புலப்படாதவர்; அவைகளால், நிரூபிக்க முடியாதவர். ஆன்மாவே கடவுள். ஆன்மாவே உயிர், உயிர் தான் கடவுள் என்பதை ருசுப்பிப்பது உயிரே. பிரபஞ்சத்தின் அமைப்பைப்பற்றி, அக்காலத்தில் வழக்கத்திலிருந்த கொள்கைகளையே கீதை தழுவுகிறது பரிணும முறையில் வளர்ச்சி பெற்று முன்னேற்ற மடைந்து வரும் ஜீவதத்துவம், கீதையில் இடம் பெறுகிறது; ஆனல், இந்த வளர்ச்சி, தெய்வீகத் தன்மையான ஆன்மாவை யொட்டியதே என்று கீதை வற்புறுத்துகிறது. அக்காலத்தில், அமுலான, சாங்கியக் கொள்கையை பரந்த

அடிப்படையாக, கீதை ஒப்புக்கொண்டாலும், சாங்கியத்தின் மூலக் கருவையே மாற்றியமைத்து, கபில சாங்கியத்தின் இரட்டை ஆட்சியையும், நாத்திகத்தையும், வேருடன் களைந்து விடுகிறது.

கீதையாலோ அல்லது வேறு எந்த மத போதனையாலோ பலன் அடையவேண்டுமானால், ஆன்ம தத்துவத்தை முழுமனத்துடன் நாம் நம்பினவர்களாக வேண்டும். கீதையில் இந்தத் தத்துவத்தில் ஊறிக்கிடக்கும் மனிதனின் தெய்வீகத் தன்மை, நிலைநாட்டப்பட்டு, அதன் அடிப்படையிலே வாழ்க்கையின் குறிக்கோளும் உருவாகிறது. மனிதன், கடவுளுடன் ஐக்கிய பாவத்தை அடைவதே, தன் நோக்கமென வகுத்துக்கொண்டு, அந்த நிலையை அடைவதற்கான முயற்சி யாகவே அவன் செயல்களெல்லாம் வடிவெடுக்கவேண்டும். இந்த லட்சியமே, மனிதன் தன்னைத்தானே அறிந்து கொள்வதாகும். இம்முயற்சிக்கு, கீதை ஒரு சிறந்த வழி காட்டியாக அமைகிறது. மற்ற சமய நூல்களில் அங்கு மிங்கும், பரவலாகக் கூறியிருப்பதை, கீதை சந்தேகத்திற்கு இடமின்றித் தொகுத்தளித்து திரும்பத் திரும்ப பறைசாற்றுகிறது. கீதை யளிக்கும் விடுதலை, அப்பழுக்கற்ற சாந்தியே. கீதை மோட்ச சாதனம் மட்டுமல்ல, இல்லற வாழ்க்கைக் கும், நல்லதொரு துணைவனே.

அநேகமாக நம்மில் எல்லோருக்குமே, நாம் பிறவி எடுத்த காரணம் புரியாத புதிராகவே, நம் வாழ்க்கை முடிவடைந்து விடுகிறது. பெரும் பாலோர், இப்பூவுலக வாழ்வையே, குறிக்கோளாகக் கருதிவிடு கின்றனர். அவர்களுக்கு அறிவு இருந்தும், சிந்திக்கும் திறமை யில்லை. பிறப்பு எடுத்தது இப்புவி வாழ்வுக்கே என்றால், நாம் ஏன் இவ்வுலகைவிட்டு ஏகவேண்டும்? நம்மை எதிர்பாராமலே, அவ் வாழ்வுக்கு முடிவு ஏன் ஏற்படவேண்டும்? ஒரு கணங்கூட ஒரு நிலையில் நிலைத்திராது, மாற்றமே வடிவெடுத்த இப்புவி வாழ்க் கையை எந்நிலையில் நாம் எக்காலும் அனுபவித்தால், அது நமக்கு திருப்தியளிக்கும்? மானிடவர்க்கம், இதற்கு ஒரே குரலில் விடை யளிக்க முடியுமா? மாறும் நியதியால், இப்புவியில் யாவற்றுக்கும் அழிவுண்டு என்ற உண்மை ஒன்றே போதும், இந்த ஸ்திரமற்ற புவி வாழ்க்கை நமது குறிக்கோளாகாது என்ற முடிவு கட்ட. மக்களில், நாத்தி கரும், ஆத்திகரும், யாவருமே, வாழ்க்கையில் உண்டாகும் மாறுதல் களையும், அதன் திட்டவட்டமான முடிவையும் உணர்ந்திருக் கின்றார்கள். இம்மாறுதல்களில், மிகவும் முக்கியமானது மூப்பும் அதன் முடிவாகிய மரணமும். இவை, நம்மால் வேண்டப்

படாதவை யானுலும், ஏதோ ஒரு பராசக்தியால் அமுலாக்கப்படு கின்றன.

வலிவிழந்து அழிந்து பட்டுப்போவது தானு வாழ்வின் முடிவு? அது தானு பிறவி யெடுத்ததின் குறிக்கோள்? மனிதனின் சிந்தனை களென்ன, கற்பனைகளென்ன, இவைகளுக்காக அரும்பாடுபட்டு வினைகளை ஆற்றிவிட்டு, திடீரென, மரணத்தால் இவ்வுலகை விட்டகல்வதால் யாது பயன்? அதன் நோக்கந்தான் என்ன? மரணம் இயல்பாக ஏற்படுவது நமது நன்மைக்கே என்றும், **பிறப் பெடுத்ததின் பிரதான நோக்கம், இப்புவி வாழ்க்கையல்ல வென்று பறை சாற்றுவது மூப்பும், மரணமுமே.** புவிவாழ்வு, கீழினங்களின் நோக்காக அமையலாம். அவைகளுக்கு புத்தியும், சிந்தனு சக்தியும், பேசும் திறமையும் அளிக்கப்படவில்லை. உண்ணுவதும், உறங்குவதும், இன உற்பத்தி செய்வதுமே அவைகளால் இயலும். நாமும், அவை போலவே, இப்புவி வாழ்க்கையைக் கருதினுல், அவைகளுக்கில்லாது, நமக்கு அளிக்கப்பட்ட தெய்வீக சக்திகளை வீணுக்கவா பிறந்தோம்? பின், மனிதப் பிறவி எதற்கு? மிருகங்களாய்ப் பிறந்தாலும், உண்ண லாம், உறங்கலாம், இனவிருத்தி பண்ணலாம். விலங்குகள், இவ் வினைகளை இயற்கைக்குக் கட்டுப்பட்டே ஆற்றுகின்றன; ஆனுல், மனிதன் இவற்றிலும் கூட நன்மை பயக்கும் இயற்கையின் நியதி களை மீறி, வெறி பிடித்தவன் போல், செயல்பட்டு, கீழினங்களும் வெட்கித் தலைகுனியுமாறு நடந்து, தனக்குத்தானே கேட்டை விளை வித்து, தன்னுள் மண்டிக்கிடக்கும் ஆன்மீகப் பொறிகளை அழித்து விடுகிருன்.

மரணபயமானது, மனிதனை "**நான் யார்?**" **என்ற வினுவுக்கு விடை** பகர அவனது ஆழ்ந்த சிந்தனையைத் தூண்டவேண்டும். சுயசிந்தனைவற்றி அற்றுப்போன இக்காலத்தில், **கீதையைப் போலுள்ள நூல்களையே நாடி, முடிவு கட்டவேண்டும்.** நான் ஆன்மாவே என்ற விடையில் முழு நம்பிக்கையும், நிச்சய உறுதியுங்கொண்டபின், உடலெடுத்த காரணமும், வாழ்க்கையின் குறிக்கோளும், அதை நிறைவேற்ற எடுத்துக் கொள்ள வேண்டிய முயற்சிகளையும் ஆன்ம அடிப்படையில் சங்கல்பித்துக் கொண்டு அச்செயல்களே நமது கடமை என்ற மனப்பான்மையில், மரணங்கிட்டும் வரை வினை யாற்றிக் கொண்டே இருக்கவேண்டும். தங்கள் மனச்சாட்சியைக் கொன்று, உண்மைக்கும் அஹிம்சைக்கும் முழுக்குப் போட்டவர் களிடத்தில், ஆன்ம போதம் ஏற்படாது. உலோகாயதக் கொள்கை வலுக்கும் இக்காலத்தில், பெரும்பாலோர் சந்தேகங்கொண்டவர்கள்.

இவர்கள் நிலை படுமோசமான நிலையே என்று பரமனே கூறுகின்றார் (IV-40). சம்சயம் வாழ்க்கைக்குப் பரம விரோதி. ஐயமுறுபவன் அழிவையே அடைகிறான். அவனுக்கு சுகம் எள்ளளவும் கிடடாது. நம்பிக்கையில் குழந்தைகளின் மனோபாவம் கிட்டினாலொழிய, ஆன்ம வளர்ச்சி யடைவது அரிது.

வாழ்க்கை நடத்த எடுக்கும் ஏற்பாடே நம் வாழ்நாட்களை முழுவதும் கவர்ந்துவிட்டால், பின் நாம், நம் தாயின் கருப்பையிலிருந்து வெளியேறி வந்ததின் நோக்க மென்ன? அங்கு நமக்கு நம் முயற்சியில்லாமலே நம் உடல் வளர்ச்சிக்கான தேவைகளெல்லாம் அளிக்கப் பட்டன. ஆனால், அந்த நிலை, நம் சுதந்திரத்தைப் பறித்து, நம் ஆன்ம பசிக்கு உணவளிக்க மறுத்ததாலேயே, அதைவிட்டு இப்பூவுலகுக்கு ஓடோடியும் ஏகினோம். இப்புவியின் ராஜாதி ராஜனான, பரமனைத் தரிசித்து, ஆன்மப் பசியைத் தணித்துக் கொள்ளும் நோக்கங் கொண்ட நாம், அப்பரமனது அரண்மனையாகிய இப்புவிக்கு வந்ததும், அதன் அழகாலும், அருமை பெருமை வாய்ந்த பொருள்களாலும் கவரப்பட்டு, நம் பொழுதையும், சக்திகளையும் வீணாக்கி விரையஞ் செய்து, நாம் வந்த நோக்கத்தை மறந்தது மன்னியில் மறுக்கவும் துணிந்தால், நமது மடமையை என்னவென்று கூறுவது? நம் புலன்களுக்கு ஊட்டந்தரும் இவ்வுலகம், நம் ஆன்மப் பசியை, போதைப் பொருள்கள் உடல் பசியைப் புறக்கணிக்கச் செய்வது போல், மறக்கடிக்கின்றன. புலன்களை, தர்ம நாட்டங்கொள்ளப் பழக்காவிட்டால், அவை நமக்குப் போதையளித்து, நம் அறிவை மயக்கி, மனத்தைத் தங்கள் பக்கமே வலிய வாரிச் சென்று, நம்மை இழிவு படுத்திவிடும். படைப்பின் எழிலில் மகிழ்வுற்றுப், பரமனின் திறனையும், கருணையையும் நம் மனத்தில் இருத்தி, அவர் நினைவை ஊட்ட ஏற்பட்ட நம் புலன்கள், அவரை மறக்கடிக்கவும், மறுக்கவும் தூண்டுமானால், மனிதனின் வீழ்ச்சியைக் கற்பனையும் செய்ய இயலாது.

II-13, 20-லும் பகர்வது, ஆன்மா வேறு, அதன் வடிவமாகிய உடல் வேறு. "நான்" என்ற உணர்வு ஆன்மாவையே சாரவேண்டுமேயல்லாது, உடலைச் சாராது. நாத்திகன், ஆன்மா, கடவுள் என்ற உண்மையை மறுப்பவன். அவன், உடலே எல்லாமாக நம்புகிறான். உடல் அழிந்ததும், அவனும் அழிந்து போவதாகவே எண்ணுகிறான். மறுபிறப்பிற்கு அவன் கோட்பாட்டில் இடமில்லை. சில அன்னிய மதஸ்தர்களும், கடவுள் நம்பிக்கை கொண்டாலும், மறுபிறப்பில்

நம்பிக்கை வைப்பதில்லை. ஆனால் ஹிந்து **மதத்தின் ஆணிவேர், மறு பிறப்பிலுள்ள, முழுநம்பிக்கையே.** இந்தக் கொள்கை, II-27-ல் கூறப்படுகிறது. "பிறந்தவன் சாவது உறுதி எனில், மறித்தவன் பிறப்பது உறுதி." "புனரபி ஜனனம், புனரபி மரணம்," என்பது மறுக்கவொண்ணாதது. இதை யொட்டியே, கர்ம விதியும். அதன் பலாபலன்களும், அவற்றால் ஏற்படும் குணவேறுபாடுகளும் எழுகின்றன. மானிட வாழ்க்கை இயற்கையால், இரட்டை நிலைக்கு உட்படுத்தப்பட்டது. **இந்த இரட்டை நிலையே துன்பநிலை** அந்நிலையில் மனிதன், சுகம் துக்கம், லாபம் நஷ்டம், வெப்பம், குளிர், வெற்றி தோல்வி, மானம், அவமானம், பிறப்பு, இறப்பு, இவைபோன்ற எதிர்நிலைகளுக்கு ஆளாகி அவதியுறுகிறான். இவை யாவும், உடல்பிணிகளேயாயினும், உடல் எடுத்த ஜீவனும், இப்பிணிகளினின்றும் விடுபட்டு, வாழ வழியுண்டு. பிறவிப்பிணி தீர்ந்து முக்தி பெற்றாலே, ஆனந்தம் காண முடியுமென்பதல்ல. பரமானந்தத்தை, மனிதன் இவ்வுலக வாழ்க்கையிலேயே அடையலா மென்பது கீதையின் கோட்பாடு. (V-13). **ஒருமைப்பாடே துயரைப் போக்க வல்லது.** ஒருமை காணுவதற்குத் தடையாயிருப்பது, இயற்கையின் முக்குணங்கள். வேறு பாட்டையே அடிப்படையாகக் கொண்ட இக்குணங்கள், பிறவி எடுத்ததுமே, மனிதனைத் தாக்கி விடுகின்றன (VII-27). விருப்பு, வெறுப்பு என்ற அடிப்படையில், மனிதன் இரட்டை நிலைகளுக்கு அடிமையாகி விடுகிறான். இதினின்றும் விடுபடுவது எங்ஙனம்? கீதையின் உபதேச மெல்லாம் இதற்கு வழி வகுப்பதே யாகும். கீதை வழி நடக்க, ஜாதி, மத வேறுபாடுகளோ, சமயப் பூசல்களோ, குறுக்கிட இடமில்லை. உலகிலுள்ள எல்லோரும் கீதை வழி நடந்து நலம் பெறலாம்.

சாதாரணமாக வினைப் பயனில் ஆசை கொண்டு, அப்பயனை அனுபவிக்கவே மானிடன் செயலாற்றுகிறான். பயனையடைய இச்சையில்லாது செயல்படுவது எங்ஙனம்? அப்பலனை அடைவது யார்? இவற்றிற்கு விடை பகரவேண்டியது நம் ஆன்ம அறிவே. **நாம் உண்மையான ஞானம் பெற்றாலே, இந்த அதி முக்கியமான வினாக்களுக்கு, உண்மையான விடை காண இயலும்.** நாம் ஆன்மாவே என்ற நம்பிக்கை வலுத்து, நம்முடைய செயல்களிலும் பிரதிபலிக்குமானால், அந்நிலையில் ஆசை யென்பதை உடலுடன் ஒட்டிய கூறாகக் கருதி, அதில் களிப்புறாமல், அதனால் ஏற்படும் குணதோஷங்களைச் சீர்தூக்கிப்

பார்த்து, அது நமது பகையாகச் செயல்படுவதை யுணர்ந்து, அதைத் தவிர்க்க நம்மாலியன்ற அளவு முயற்சிப்போம். **உடலால் ஏற்படும் ஆசைகளே மானிடனுக்குப் பெரும் பகையாம்**, என்பதை கீதை அழுத்தமாக கூறுகிறது. அனுபவியாது எஞ்சி நின்ற வினைப் பயன்களை அநுபவிக்கவே, நாம் இந்த உடலுடன் பிறவி எடுத்திருக் கின்றோம். மறுபடியும், மறுபடியும் ஆசையால் உந்தப்பட்டு வினையாற்றி, வினைப்பயன்களை அடையக் கோரினால், இந்தப் பிறப்பு, இறப்புச் சுழலுக்கு முடிவே யில்லாதுபோம். இக்கர்ம பூமியில் **எந்த வினைப்பயனும், சுகமும் துக்கமும், கலப்புற்றதாகவே இருக் கும்.** இதை யுணர்ந்தபின், பிறவித்தளைகளாகிய கர்மபலனை ஏன் விரும்பவேண்டும்? கர்மம், தன் மட்டில், பிறவித்தளைகளை விளைவிக்காது. கர்மமே, பிறவித்தளையாகுமானால், பின் ஜீவனுக்கு சுகமோ, விடுதலையோ, ஒரு பொழுதும் கிட்டாது. **உண்மையில், கர்மம் பிறவித்தளையல்ல. கர்மப்பயனே பிறவித்தளையாக ஏற்படுவதால், பயனையே தவிர்க்கவேண்டும்.** கர்மத்தியாகம் செய்வது எந்த ஜீவனாலும் முடியாது. ஆனால், கர்மபலத்தியாகம் எந்த ஜீவனும் செய்யக் கூடும், செய்யவும் வேண்டும். கைகூடாத முறையாகிய கர்மத் தியாகத்தை, கீதை புறக்கணித்து, செயல்படக்கூடிய கர்மபலத் தியாகத்தை ஒரே வழி என்று விடாப்பிடியாக வற்புறுத்துகிறது.

**இப்புவி, ஜீவன்களுக்கு ஒரு பரிசோதனைக்களம்.** இதில் கோடானு கோடி ஜீவன்கள் பல்வேறு இனங்களாக, வெவ்வேறு வளர்ச்சி நிலை களில் காணப்படுகின்றன. உயிரற்ற ஜடப் பொருள்களை நீக்கி, உயிரினங்களை எடுத்துக் கொண்டாலும், தாவரம், விலங்கினங்கள், விலங்கினத்தின் சிகரத்தில் நிற்கும் மனிதன், என, மூவ்வகையாகப் பிரித்துக்கூற இயலும். இம்மூன்று உயிரினங்களைப்பற்றிய விவர மான விளக்கம் பின்னால் கொடுக்கிறோம். நல்லுணர்வும், அறிவுமுள்ள ஜீவன்கள், வினைத் துன்பங்களைத் தவிர்க்க எத்தனிப்பது முறையே. படைப்பின் சிகரத்தை அடைந்த மனிதன், பிறப்பு இறப்பைத் தாண்டி, அப்பாலுள்ள நித்தியானந்த நிலையே தனது நிரந்தரமான இருக்கை என ஊகித்தறிந்தான். ஆந்நிலையே பரமனின் நிலை என்றும், அதில் ஐக்கிய மாவதே மானிடனின் குறிக்கோளென்றும் உறுதி கொண்டான். இப்புவி வாழ்க்கையும், அதில் உடலெடுத்துப் பிறவி எடுப்பதும், இக்குறிக்கோளையடைய ஒரு வாய்ப்பே என்று லும், வினைப்பயன்களால் உண்டாகும் தளைகள், இவ்வாய்ப்பை நல்ல முறையில் கையாள இடையூறாக நிற்கின்றனவென்றும்

அறிந்தான். ஆகையால், வினைப் பயன்களில் பற்றில்லாமல் வினை ஆற்றும் முறையே இந்த இக்கட்டான நிலையினின்றும் தப்ப ஒரே வழி என்றும் கண்டு கொண்டான்.

ஜீவன் என்பது, ஆன்ம பிரகிருதி சம்பந்தத்தால் ஏற்பட்ட நிலை. கீழினங்களில், பிரகிருதியின் பங்கும், ஆதிக்கமும் மேலோங்கி நிற்பதால், அவை இயற்கைக்கு அடிமைப்பட்டு, உடல் வழியாகிய ஆசையின் அடிப்படையிலே செயல்படுகின்றன. அவை இன்ப துன்பங்களைத் தவிர்க்க முடியாது வாழ்கின்றன. ஆனால், மானிட வர்க்கத்தில், ஆன்ம பாகம் வளர்ச்சி பெற்று, இயற்கைக்கு அடிமை யாகாது வினையாற்றும் திறனை ஜீவனுக்கு அளிக்கிறது. மனித இனத்தில், ஜீவன் ஓரளவு சுதந்தரமும் பெற்று, தன் இச்சைப்படி, ஆன்ம நிலையைத் தழுவியோ, அல்லது ஆசையின் அடிப்படை யிலோ வினை ஆற்றவல்லது. ஆன்மா வினையற்றது. இயற்கையே வினை ஆற்றுவது. ஒரு ஜீவன் தன்னை ஆன்மா என்று பரிபூர்ணமாக உணர்ந்தால், பின், அதன் வினைக்கருவிகளாகிய பிரகிருதி பாகங்கள் வினையாற்றி னாலும், தான் அவ்வினைகளுக்குக் கர்த்தா அல்ல என்றே பாவித்து, அவ்வினைகளின் பயன்களையும் தனதாக்கக் கருதான். இந்த மனப் பான்மையையே, கர்மத்தில் அகர்மம் காண்பதென்று கீதை IV-18-ல் வர்ணிக்கிறது. கர்ம பலத்தில் பற்றில்லாது, உலக நன்மைக்கு அப்பயன்களை அர்ப்பணம் செய்வதென்பது, ஆன்ம, நம்பிக்கை யுள்ளவர் களுக்கே, கைகூடும்.

ஆன்ம ஞானமில்லாது விடுதலையாகிய முக்திக்கு வழியில்லை. பரம பதத்தை அடைவதற்குத் திறவுகோல் ஞானமே. ஞானமில்லாது, நல்வினையோ, உண்மையான பக்தியோ ஏற்படாது. ஞானமே நமது செயல்களிலுள்ள களங்கத்தை, நெருப்பு, விறகை எரித்துச் சாம்ப ராக்கி விடுவது போல் நீக்கிவிடுகிறது (IV-37). ஞானத்தைப் போல், பரிசுத்தமாக்கும் கருவி இவ்வுலகில் வேறில்லை (IV-38). ஞானமே, நம்மைத் தீய வினைகளினின்றும், கடத்திச் செல்லும் ஒரு படகு ஆகும் (IV-36). அக்ஞானத்தால் ஏற்படும் வினைகள், அவற்றின் பலனில் ஆசையை ஏற்படுத்துவதின் மூலம், நம்மை பந்தப்படுத்துகின்றன. வினைத்தளைகள் என்ற கயிற்றால் கட்டுண்டு கிடக்கும் நாம், நம்மை கட்டும் கயிற்றை, ஞானத்தால் எரித்து விடலாம். எரிந்து போன கயிறு, தோற்றத்தில் கயிறு போலிருந் தாலும், நம்மைக் கட்டுப்படுத்தும் வலுவை இழந்து விடுகின்றது. கர்மம், ஞானம், பக்தி இவைகளின் வேறுபாடு யாது? மூன்றும்

ஒரே குறிக்கோளையே எய்துகின்றன; ஆனால், கையாளும் உபாயங்களில், வேறுபாடு அடைகின்றன. உண்மை பக்தன், துவக்கத்திலேயே தன்னைச் சூன்யமாக்கிக் கொண்டு, பரமனிடத்தில் சரண் புகுவதால், அவனுக்கு முக்தியின் வாயில் தானாகவே திறந்து விடுகிறது. கர்மயோகி, தன்வினைகளால் அந்த வாயிலின் திறவு கோலைப் பெற்று, அதைக் கொண்டு தன் குறிக்கோளையடைகிறான். ஞானயோகி, தன் ஆன்மபலத்தால், வாயிலை உடைத்துத் தகர்த்துத் தன் இலக்கையடைகின்றான். இந்த ஞானமுறை யார்க்கும் எளிதல்ல (XII-5). ஒரு சிலருக்கே அது கைகூடும். கீதை, இம் மூன்று உபாயங்களையும், இணைத்தே காட்டி, மானிடன் கடைத்தேற இம்மூன்றும் தகுதி யுள்ளவை என்று மீண்டும், மீண்டும் வலியுறுத்துகிறது.

பண்டைக்கால வழக்கத்தின்படி, ஞானமார்க்கத்தின் வெளிப் படைச் சின்னமாகிய, கர்ம சந்நியாசத்தை அர்ஜுனனும் தழுவ விரும்புகிறான். கர்ம **சந்நியாசம்** மேலான உபாயமா? அல்லது **கர்ம பலத் தியாகம்** மேம்பட்டதா என்ற கேள்வியையே, திரும்பத் திரும்ப, அத்தியாயம் மூன்றில் ஐந்தில், பதினெட்டில் கேட்கிறான். கண்ணனின், விடை, அவை இரண்டும் ஒன்றே என்பது தான். ஆசைகளை யொழித்த நிலையே, இவ்விரு முறைகளின் அடிப்படை. ஆசையால் உந்தப் பட்டு வினையாற்றும் கர்மங்களை ஒழித்தாலும் சரி, அல்லது பலன் களில் ஆசை கொள்ளாது பற்றற்று வினையாற்றினாலும் சரி, இவை இரண்டும் ஒன்றேயாம், என்று விளக்கப்படுகிறது. இவற்றில் யாதேனும் ஒன்றில் நன்கு நிலை பெற்றோன், இரண்டின் பலனையும் எய்துகிறான் (V-4). கர்ம சந்நியாசமும், கர்மபலத் தியாகமும் ஒன்றே என்பது தான் உண்மை (V-5). பக்தியும், கர்மமும், ஞானமும் பிரிந்து நிற்க இயலாது. இவை இணைந்தே செயல்படும். ஒரு ஜீவனிடத்தில் ஒன்று, மற்ற இரண்டைவிட மேலோங்கலாம். முக் குணங்கள் எவ்வாறு ஒரே ஜீவனிடத்தில் செயல்படுகின்றனவோ, அதே தன்மையில் கர்மம், ஞானம், பக்தியும் ஏற்படுகின்றன. என்றாலும், முக்குணங்களைப் போல், இவை ஒன்றுக்கொன்று முரண்பாடானவையல்ல. மூன்று இயல்புகளும், ஒன்றுக்கொன்று அநுசரணையாகவே நிற்பவை.

**ஞானமார்க்கம்**, சம்சார வாழ்க்கையை வெறுத்துத் துறவறத் துடன் இணைந்து, செயலின்மையை முறையாகக் கொண்டதின் காரணம், வேதாந்தத்தில், செயலற்ற, குணமற்ற பிரம்மத்தையே,

மேலான பரம்பொருளாகக் கொண்டதின் விளைவு. தவிர, உலக வாழ்க்கையில் ஈடுபடும் மானிடர்கள் தங்கள் சுயநலத்தைப் பேணி, தங்கள் ஆசைகள் நிறைவேற வேண்டி, யக்ஞம், தானம், தவம், தர்மம், முதலிய சடங்குகளை வேதத்தின் கர்மகாண்டத்தில் விதித்த படி செய்யலானார்கள். சாதாரணமாக, ஆசையின் அடிப்படையில் கர்மத்தின் பயனை நாடி, அதன் மூலம், ஆசையை நிறைவேற்றிக் கொள்ளவே, மானிடன் செயலில் ஈடுபடுகிறான் என்பதை மறுக்க முடியாது. **வேதச் சடங்குகளெல்லாம் ஆசையின் அடிப்படையிலே செயலாகும் வினைகளே.** துன்பமயமாகிய, இப்புவி வாழ்க்கையிலும், பிறப்பு இறப்பாகிய சுழலிலும், என்றென்றும் சிக்கிக்கிடக்கும் நிலைமையிலேயே அவை நாட்டங் கொண்டுள்ளவை எனவே, செயல் புரிவதென்பது, விடுதலைக்கு இடையூறெனக் கருத இடம் ஏற்பட்டது. ஆகையால், செயலைத் தவிர்ப்பதின் மூலமே, விடுதலைக்கு வழி ஏற்படுமென்று வெகுவாக நம்பப்பட்டது கீதை, இந்த மனப்பான்மையை, இயற்கைக்கு மாறானதென்று எதிர்த்துப் போராடுகின்றது அர்ஜுனனுக்குண்டான மதிமயக்கத்தில், இந்தத் தவறான மனப்பான்மையும் பெருமளவு பங்கு கொண்டது.

ஹிந்துமதக் கோட்பாடுகளும், அவற்றின் உட்பிரிவுகளும் பல உள. ஹிந்து மத நூல்களின் விரிவுரையாளர்கள் ஒவ்வொருவரும் அவரவர் கோட்பாட்டைப் பரப்புவதற்கென்றே, விரிவுரை, எழுத முன் வந்தனர். கீதைக்கும் விரிவுரை எழுதியவர்கள் அநேகர். அவர்களெல்லாம் கீதையை, பலவடிவாக எடுத்துக் காட்டுகிறார்கள். இவர்களில் பெரும்பான்மையோர் கீதையை, அத்துவைதம், துவைதம், விசிஷ்டாத்துவைதம், என மூன்றுவித முக்கிய கோட்பாடுகளைச் சார்ந்ததாக விளக்குகிறார்கள்; பிரகிருதி, ஆன்மா, பரம் பொருள், இம்மூன்றின் சம்பந்தத்தைப்பற்றிய கருத்து வேறுபாடுகளே, வெவ்வேறு உள் மதமாகப் பரிணமித்தன. கீதையில், இம்மூன்று நிலைக்கு மட்டுமில்லாமல், மற்றெல்லா மதங்கள் போதிக்கும் நிலைகளுக்கும் இடம் உண்டு. கீதை, ஒரு சர்வகத, அதாவது, உலகுக் கெல்லாம் பொது நூல். அது இந்த உலக வாழ்க்கைக்கும், அப்பாலுள்ள பரவாழ்க்கைக்கும், உரிய இடத்தை, முறையாக வகுத்துக் கூறுகிறது. இவைகளில், ஒன்று மற்றொன்றுக்கு முரண்பட்டதல்ல வென்றும், இல்லற வாழ்க்கையை நன்கு நடாத்துபவன், பரவாழ்க்கைக்கும் தன்னை உரியவனாக்கிக் கொள்வதோடு, அவனே இவ்வுலகத்திற்கும் நன்கு பயன்படுகிறான் என்பதே கீதையின் சித்தாந்தம்.

**இயற்கை, ஆன்மா, பரமன், ஆகியவை அநாதைகள்.** அவைகளுக்குத் துவக்கமுமில்லை, முடிவு மில்லை. இவைகளில், ஒன்றுக்கொன்றுள்ள தொடர்பில், கருத்து வேற்றுமைகளின் காரணமாக, இரட்டைநிலை யென்றும், ஒருமைநிலை யென்றும், இரண்டும் கலந்த நிலையென்றும், வெவ்வேறு கோட்பாடுகள், மனிதனால் ஏற்படுத்தப்பட்டன. துவைத மாகிய இரட்டைநிலை, ஆன்மாவையும், பரமனையும் வேறாகவே கருதி, ஜீவன் விடுதலை அடைந்த பின்னும் ஜீவான்மா பரமனின் தொண்டனாகவே நிற்பதாகக் கூறும் நிலை. அத்துவைதம், இதற்கு நேர் எதிர் நிலையை நாட்டுகிறது. இரண்டல்ல, ஒன்றே என்பது அதன் கொள்கை. பரமனல்லாதது இல்லை. வேறு தோற்றங் களெல்லாம், நிரந்தரமானவையல்ல. அவை உண்மையாகா. விசிஷ்டாத்துவைதம், பரமன் ஒருவரே என்றும், ஆனால் ஆன்மா, பரமனின் அம்சமென்றும், இயற்கை பரமனின் உடல் என்றும் பாவிக்கின்றது, **கீதையின் முடிவான நிலை, அத்துவைத நிலையேயானாலும், அது மற்ற நிலைகளுக்கும் இடங்கொடாமலில்லை.** மனிதன் தன் அறிவின் வளர்ச்சிக்கு உகந்தபடி தன் மதத்தை, அதாவது, பரமனுக்கும், தனக்குமுள்ள தொடர்பை உண்டாக்கிக் கொள்கிறான். அஞ்ஞானி யின் வேறுபாடு காணும் நிலைக்கும், துவைதமாகிய இரட்டை நிலைக் கும் தொடர்பே பில்லை. துவைதநிலை ஞானத்தில் உதித்ததே. பரமனும், பக்தனும் ஒன்றே யானாலும், பிரிந்து நிற்பதாகவே கருதும் நிலை. பரமனைப் போலவே, பரமனிடத்தில் பக்தியும் என்றென்றும் நிலைத்திருக்குமாதலால், பக்தன் வேறாக நிற்பது அவசியமாகிறது. இதை விழிப்பு நிலைக்கு ஒப்பிட்டுக் கூறுவது வழக்கம். நமது சொப்பன நிலையில் ஏற்படும் அனுபவங்கள், நம் மனத்திற்கு அப்பாற்பட்டவையல்ல, என்றாலும், அவைகள் வேறு நாம் வேறு என்றே நினைக்கின்றோம். ஆனால், விழித்தவுடன் உண்மை புலனாகி விடுகிறது. வேற்றுமை போலத் தென்பட்டு, ஆனால் உண்மையில் வேற்றுமையில்லாத நிலையே, விசிஷ்டாத் துவைத நிலையாம். சமாதி நிலையில், தான் வேறு, உலகம் வேறு, பரமன்வேறு என்ற வேற்றுமைகளெல்லாம் அகன்று, எல்லாம் ஒன்றே, யாவும் ஒன்றே, எனவாகின்றன. இதுவே அத்துவைத நிலை. இம்மூன்று உள் மதங்களும், பேருண்மையில், மூன்று நிலைகள் அல்லது படிகளெனலாம். ஒன்று, மற்றொன்றாகப் பரிண மிக்கும், ஒரே ஜீவனின் மூன்று மனோபாவங்களே இவை. மனித னுக்கு ஏற்பட்டிருக்கும் மூன்று நிலைகளாகிய, விழிப்பு, சொப்பனம், சமாதி நிலைகளைத் தழுவியே நிற்பவை. வேறுபட்ட நிலைகள் போல் காணப்பட்டாலும், முரண்பாடானவைகளல்ல. பக்தனாகிய ஆன்மா

வேறு, பரமன் வேறு என்று கூறும், துவைதநிலையிலும், (IX-29) (VI-30,31) அருள் வாக்கின்படி, பக்தனும் பரமனும் ஒன்றேயாகி, அன்னியபேதம் தவிர்த்து, அனன்ய பாவம் அடைவதை உறுதிப் படுத்துகிறது.

அத்துவைதம், துவைதம், விசிஷ்டாத்துவைதம் என்ற கொள்கைப் பிரிவினைகளெல்லாம், சத்து, அசத்து, இவற்றின் சம்பந்தத்தின் அடிப்படையிலே ஏற்பட்டவை. துவைதம் சத்தும், அசத்தும் வேறுபட்டுப் பிரிந்தே நிற்கும் என்ற சித்தாந்தத்தைக் கொண்டது. அத்துவைதத்தில், இவை ஒன்றே தான், வேறல்ல என்றும், மாயையின் கூற்றுலே ஏற்பட்ட அஞ்ஞானமே இவற்றைப் பிரித்துக் காட்டுவதாயும், அவ்வாறு பிரிந்தது போல் காணும் நிலை நிரந்தர மானதல்ல வென்றும், ஆதலால், அசத் என்பதை மறுக்க வேண்டு மென்ற கொள்கையைக் கடைபிடிக்கின்றது. விசிஷ்டாத்துவைதம், துவைதத்தையும், அத்துவைதத்தையும் இணைத்துக் கூறும் நிலையே. ஞானம் ஏற்பட்டு, அஞ்ஞானத்தை அழிக்காத வரையில், அசத்தும் பொருட்படுத்தப்பட வேண்டியது தான் என்று வாதிக் கின்றது. ஒரு சாதாரண உவமை மூலம் இந்நிலைகளின் உண் மையை விளக்கலாம். தண்ணீர் மூன்று நிலைகளில் நிற்பது யாவரும் அறிந்ததே. ரூபமில்லாத நீராவி நிலை, ரூபமுள்ள பனிக் கட்டிநிலை, தனக்கென ஒரு ரூபமில்லாமல், ஆனால் கொடுத்த வடிவத்தை ஏற்றுக்கொள்ளும் திரவநிலை. இம்மூன்று நிலைகளிலும் நிற்கும் பொருளாகிய தண்ணீர் ஒன்றே யாம். ஒரே சமயத்தில், இம்மூன்று நிலைகளிலும் தண்ணீரைக் காணலாம். அரூப நிலையை அத்துவைத்திற்கும், ரூபநிலையை துவைதத்திற்கும், திரவநிலையை விசிஷ்டாத்துவைத்திற்கும் ஒப்பிடலாம். ஒரு நிலை, மற்ற இருநிலை களை மறுப்பதாகவோ அல்லது, முரண்பட்டதாகவோ கருதுவது தவறு. எல்லா நிலைகளிலும் தண்ணீர் உபயோகத்திற்குள்ளா கின்றது. தவிர, ஒரு நிலையிலிருந்து மற்ற நிலைகளையடைவதும் எளிதேயாம்.

மனிதனுல் ஆசைகளை ஏன் அடக்க முடிவதில்லை? நம் ஆசைகளில் அநேகம் நமக்குக் கேட்டை விளைவிக்கின்றன என்று நம் அறிவுக்கு எட்டினுலும், அவைகளைத் தவிர்க்க முடிவதில்லை; ஏன்? மனஉறுதி, நிச்சிய புத்தி, இன்மையே காரணமென்பது முழுவிடை யாகாது. அறிவோ, மனமோ, ஏன் உறுதியடையாது, செய்த பிழைகளைத் திரும்பத் திரும்பச் செய்ய அனுமதிக்கின்றன? உதாரணங்கள்

ஒவ்வொருவர் அனுபவத்திலும் குவிந்து கிடக்கும். நம் உள்ளத்தின் கூற்றை விண்டு பார்க்குங்கால், அங்குள்ள நிலை இது தான். நம் வினைகளுக்கு மூலமாயுள்ள ரஜோகுணம், **நம் கீழியல்பில் மண்டிக் கிடக்கும் தமோ குணத்துடன் கூட்டுச் சேர்ந்து கொண்டு விபரீத வினைகளை ஆற்றுகின்றது.** நம் அறிவு இக்கூற்றை ஆதரிக்காவிட்டாலும், அதை முறியடிக்க போதுமான ஆற்றல் பெறவில்லை. இந்த இக்கட்டான நிலையினின்றும் வெளியேற, ஒரே வழி தான் உண்டு. அதாவது, நம் சத்துவ குணத்தை ஊக்குவிக்கவேண்டும். அப்பொழுது, மனமும், அறிவும், உறுதியை வளர்த்துக் கொள்ளும். **சத்துவ குணம், ஆன்ம பலத்தை** ஆதாரமாகப் பெற்று, அதையே நாடி **நிற்கிறது.** நம்மில் ஆன்ம வளர்ச்சி ஏற்பட்டாலே, சத்துவகுணம் மேலோங்கும். அந்த அளவுக்குத் தமோகுணம் குன்றிப்போய் பின் வாங்கும். ஆன்ம பலம் கிட்ட, யோகப் பயிற்சி, தியானம், பக்தியாகிய, முறைகளைக் கையாளவேண்டும், "கோவிந்தனை பஜி மனமே," என்று ஆதி சங்கரர் கட்டளையிடுகிறார். ஏதாவதொரு முறையைக் கையாண்டு ஆன்ம பலத்தை வளர்த்து, தமஸ், ரஜஸ் கூட்டாகிய கீழியல்பை யடக்கி ஒடுக்கினாலே, ஆசைகள் சமனப்பட்டு மேலியல்பு செயல்பட, சத்வரஜஸ் கூட்டை ஏற்படுத்தும். இதையே, கீதை, VI-5, 6-ல் பகர்கின்றது. சாவித்திரி, சத்யவான், மார்க்கண்டேயர் ஆகியோரின் சரித்திரத்தில் இவர்கள் விதியையே, இம்முறைகளால் வென்றார்கள் எனக் காண்கிறோம்.

பிறமதங்கள் ஒரே மார்க்கத்தையும், ஒரே கட்டுப்பாட்டையுமே வகுத்து, அவ்வழியைத் தவிர மற்றும் ஏனைய மார்க்கங்களெல்லாம் உண்மையல்ல வென்றும் வாதாடுகின்றன. அவைகளெல்லாம், மானிட வர்க்கத்தின் பல்லாயிரங்கோடி மக்களையும், ஒரு வார்ப்பில் உண்டாகும் நாணயங்கள் போல் பாவித்து நடத்துகின்றன **மனிதனின் சிறப்பு, அவன் தன் இனத்திலுங்கூடத் தனித்து நிற்பதே யாகும்.** கோடானு கோடி மனித ஜீவன்களில், ஒரு ஜீவன் மற்றொன்றை எல்லாவிதத்திலும் ஒத்திருப்பது கிடையாது. ஆனால், படைப்பின் கீழ் நிலைப்படிகளில் நிற்கும், ஒரே இனத்திலுள்ள தனி நபர்கள், ஒன்றுக்கொன்று அதிகம் வேற்றுமையடைவதில்லை. மனித வர்க்கத்திலோவென்றால், ஆன்ம வளர்ச்சியும், குணாதிசயங்களிலும், இன்னும், வெளி உருவத்திலுங்கூட, ஒரு தனிநபர் மற்றொரு நபரை ஒத்திருப்பது கிடையாது. இவ்வுண்மையை அனுசரித்துத் தனி மனிதனின் ஆன்ம வளர்ச்சிக்குத் தக்கபடி, அவன் ஆன்ம

சோதனையை நிகழ்த்த வழிவகுக்கின்றது கீதை. பாட்டை ஒன்றே யாயினும், அதைக் கடந்து செல்லும் வேகம் மனிதனுக்கு மனிதன் வேறு பாடாகலாம். மனவளர்ச்சி வேற்றுமையால், பரமனைப்பற்றிய மனோபாவம் வித்தியாசப்படும். அதேபோல், அவரவர்கள் குறைபாடு களையும், தேவைகளையும் ஒட்டியே, பரமனைக் கற்பனை செய்து கொள்வது நியாயமே யாகும். இவ்வாறான உண்மைகளுக்கு இடம் கொடுப்பது ஹிந்து மதமும், கீதையுமே.

ஹிந்துமதம் ஒரு அபௌர்ஷமத மாதலால், அது புருஷர்களால் ஸ்தாபிக்கப் பெற்ற மற்ற மதங்கள் போல் ஒரே ஆதாரத்தை உறுதி யான பற்றுக் கோடாகக் கொண்டதல்ல. பைபிள், குர்ஆன், புத்த மத தம்பதா சாத்திரம் போல், ஹிந்துமதக் கோட்பாடுகளும், விளக் கங்களும் அடங்கிய ஒரே சாத்திர நூல் இல்லை. என்றாலும், வேதங் களினின்றும், தெள்ளியெடுத்த உபநிடதங்களும், அவற்றின் போக்கை விளக்கி இயம்புவதுமாகிய பிரம்ம அல்லது வேதாந்த சூத்திரமும், இவற் றின் சாரத்தையெல்லாம் தெளிவுபடக் கூறும் கீதையுமே, முதற் காரணமான நூல்களென்று ஹிந்துக்களால் ஒப்புக்கொள்ளப்படு கிறது. பிரஸ்தானத் த்ரயம், என்ற இம்மூன்று ஹிந்துமத மூலங் களே, முடிவான பிரமாணமாக அமைந்தவை. இவைகளுள் கருத்து வேற்றுமை கிடையாது. இவற்றில் அடங்காத தத்துவ விளக்கம் வேறு எந்த ஹிந்து மத நூல்களிலுமில்லை. மற்ற ஹிந்துமத சாத்திர நூல்களெல்லாம், இம்மூன்றில் அடங்கியுள்ள கோட்பாடுகளுக்கு விளக்கமே யாம். ஹிந்து மதத்தின் உண்மையான கோட்பாடுகளை, கீதையிலே எளிதில் ஒருங்கே கண்டுகொள்ளலாம். கீதையைப் படிப் பதும், உபநிடதங்களைப் படிப்பதும் ஒன்றேயாம். கீதை மிகவும் சுருக்க மாகவும், யாவரும் புரிந்து கொள்ளும்படியான எளிய நடையிலும் அமைந்திருப்பதால், புகழ்வாய்ந்த கீதையே ஹிந்து மத சித்தாந்தங் களை அடக்கிய ஒரே நூலாகப் போற்றப்படுகிறது, கீதையை நன்கு புரிந்துகொள்ளாத ஹிந்து, ஹிந்துவல்ல. கீதையிடும் கட்டளையை வாழ்க்கையில் கடைப்பிடித்து நடக்காதவன் மானிடனல்ல.

கீதைக்கு வாய்ப்டளித்த மகா பாரதத்தின் படிப்பினை யாது? வாழ்க்கை சம்பந்தமாக எழும் ஒரு பெரிய கேள்விக்கு அது விடை பகர்கிறது. உலகத்தில் மற்றும் யாவையும் நமக்கு அனுகூலமாய் அமைந்தாலும், கடவுள் துணையோ, தொடர்போ அற்றுப்போனால், அவ்வனுகூலங்கள் நமக்கு ஒரு நன்மையும் பயக்கா. ஆனால், கடவுள் துணை நமக்குண்டாகுகையில், மற்றவை எவ்வளவு பிரதிகூலமான

லும், நமக்குச் சேட்டை உண்டாக்சா. **வாழ்க்கை என்பது ஒரு இடை யருத சோதனை;** கத்தி முனைமேல் நடக்கும் வித்தையே அது. நம்மில் ஒவ்வொருவருக்கும் மீளமுடியாத சோதனைகள் தோன்றிக்கொண்டே இருக்கின்றன. இவற்றினின்றும் மீள, வாழ்க்கையின் உண்மை மர்மம் தெரிந்தாக வேண்டுவது அவசியம். போர்க்களத்திற்குப் போகுமுன் துணிச்சல் கொண்ட அர்ஜுனன், வெஞ்சமரில் விளையும் பயனைக் கிளறிப் பார்த்தவுடன், தன்னால் மீள முடியாத ஒரு நெருக் கடியை எய்தினன். தன்னையும், தர்மத்தையும், நீதியையும், எதிர்க் கத் துணிந்தவர்கள், தன் பந்துக்களும், குருமார்களும் எனக் கண்ட வுடன், உள்ளச் சோர்வு அடைந்து, போரிலிருந்து புறங்காட்டி ஓடு வதென எண்ணலானன். ஆனாலும், இத்தீர்மானம் உசிதமான தென்று அவனுக்கே நிச்சயமாயில்லை. சந்தேகம் அவனை வாட்டி யது. **மனித வாழ்வில் இரண்டுவித இயல்புகள், ஜீவனைத் தமக்குச் சொந்த மாக்கிக்கொள்ள எப்பொழுதும் முயன்றுகொண்டேயிருக்கின்றன.** நம் கீழியல் புகள் உலகிலுள்ள வசதிகளையெல்லாம் நமக்கே உடமையாக்கிக் கொள்ள யத்தனிக்கின்றன. ஆனால், உலக இயற்கையின் கண் நிகழுவதெல்லாம், பரமனின் ஆணையாகிய தர்ம நியதிக்குட்பட்டே இயங்குகின்றன. நல்லோர்க்குப் பரமன் விளங்கி, அவர்கள் வாழ்வை ஒழுங்குபடுத்துகிருர். மற்றவர்களுக்கு, இது விளங்குவதில்லை. தீயோரைக் கொஞ்சம் அவர்கள் போக்குப்படியே விட்டுப் பிடித்து, தீமை அளவு கடந்து உலகத்தை யழிக்குமுன், தானே தீமையை அழிக்கத் தலைப்படுகிருர். (IV-7, 8)

கீதை, பிறந்தது, அல்லல் நிறைந்த போர்க்களத்தில். இதன் நியாயம், உலகத்தைச் சற்று உன்னிக் கவனித்தால் விளங்கிவிடும். **இந்த உலக வாழ்க்கை, ஜீவனுக்கு ஒரு முடிவில்லாத போராட்டமே. ஆனால், இந்த நிலைமை,** நம் **கீழ் இயல்பின் கூற்ருலே** சமைக்கப்பெற்ற **நிலை.** போராட் டமே கீழினப் படைப்பின் வாழ்க்கை முறை. இதையே ஆங்கில மேதாவி டார்வின், வாழ்க்கைப் போராட்ட விதியாக விளக்கியுள் ளார். **கீழியல்பின் ஆதிக்கத்திற்குட்பட்ட ஜீவன்கள், வெளிப்போராட்டத்தா லேயே உயிர் வாழ்கின்றன.** இங்கு வலிமைக்கே வாழ்க்கை. எளிமை செத்து மடிவதே விதி. எதை உடமையாக்கிக் கொள்ள வேண்டி னும், போரிட்டே அதைப் பெறவேண்டும். கடும்போட்டியும், பூச லுமே, இக் கீழியல்பாகிய இயற்கையின் நியதி. எந்த முன்னேற்ற மும், போராட்டத்தின் விளைவே. இங்கு வாசகர்கள் ஊன்றிக் கவ னிக்க வேண்டியது, முன்னேற்றமென்பது யாது? கீழியல்பின் அடிமை

யாகி வாழ்க்கையை வகுத்துக்கொள்பவர்களுக்கு முன்னேற்றமென்பது, உலேகாயதப் பொருள்களை ஈட்டுவதேயாம் இதில் ஏற்படுவது வெளிப் போராட்டமே. ஒரு ஜீவன் மற்ற ஜீவன்களைப் பகைத்தும், போட்டியிட்டும், தன்னலத்தைப் பேணும் இப்முறை, யாவர்க்கும் துன்பத்தையே விளைவிக்கும். என்றாலும், இந்த இழிவான, கீழ்த்தர, விலங்கின வாழ்க்கையிலும்கூட, **மானிடவர்க்கம் தன் உள் போராட்டத்தைத் தவிர்க்க முடியாது.** மனிதனின் மேலியல்பு, கீழியல்புடன் போராடியே நின்று, மனத்தில் அமைதியின்மையை ஏற்படுத்தி, துன்பத்தை அதிகரிக்கின்றது. கீழியல்பை அடக்கி, உலோகாயதப் பற்றை நீக்கிய ஜீவனுக்கு, வெளிப் போராட்டம் என்பதும் அற்றுப் போய், உலக ஜீவன்களுக்குத் தொண்டு புரிவதிலே மகிழ்ச்சியடைந்து, உள்போராட்டமும் ஏற்படாமல், மனம் துன்பத்தைத் தவிர்த்து, இன்பமாகிய உண்மை அமைதியை அடைகின்றது. இம்முறையில், ஜீவன் முன்னேற்றங்காணுவது ஆன்ம வளர்ச்சியிலும், ஆன்ம வலுவிலுமேயாம் ; உலோகாயதப் பொருளுடைமையிலல்ல. **கீழியல்பு தலை தூக்காமல், தார்மீக இயல்பின்படி வினை ஆற்றும் மானிடன், உள் முனையிலும், வெளி முனையிலும், போராட்டத்தைத் தவிர்த்து சுகமாக வாழ்க்கை நடத்துகிறான்.** ஆனால், கீழியல்பின் ஆசைகளுக்கும், சுயநலத்திற்கும் இடங்கொடுத்து வினையாற்றுபவன், இரு முனைகளிலும் போராட்டத்தை வலுப்பெறச் செய்து மனது ஓய்வு ஒழிவின்றி பீடிக்கப்பட்டு அவதிப்படுகிறான். அவனுக்கு வாழ்வு ஒரு பெரும் பாரமாகவே, துயரமாகவே அமைகின்றது. (VI-5, 6)

இயற்கையின் உலகை, நாம் வெளிப்படையாக நோக்கும் பொழுது, கடும்போட்டியும், பூசலுமே இயற்கையின் நியதி என்று அறிகின்றோம். பெரிய மீனுக்குச் சிறுமீன் இரை. புழுவுக்குப் புல் இரை. பறவைக்கு புழு இரை பூனைக்குப் புரு இரை. புலிக்கு மான் இரை. ஒரு உயிர் மடிந்தே மற்ற உயிரை வாழ்விக்கின்றது. பூமியுள்ளும், வானிலும், நீரிலும், இதே போர்நிலை தான் தெளிவாகிறது. **இயற்கையின் இயல்பு முழுதும் ஒரு முடிவில்லாத கொலைக்களமே.** அணு முதல் அண்டம் வரையில், எங்கும் நிறைந்திருப்பது உயிர் தத்துவமே. ஆனால், இவையாவும் ஒன்றையொன்று விழுங்கியே வாழவும், வளரவும் செய்கின்றன. இதுவே இயற்கையின் திட்டம். இயற்கையின் உலகை ஒரு கொலைக்களமாகவும் காண்போரே உண்மை கண்டோர். என்றாலும், இயற்கையின் இயல்புக்குக் கீழ்ப்படியும் மானிடர் பேடிகளே யாவார். **தார்மீக, ஆன்ம இயல்பு படைத்த அவர்கள் கீழான இவ்வியற்கை இயல்புக் அடிமையாகுவது அறிவீனமே.**

விலங்குகள்போல் மானிடன் நடப்பது பெருந்தவறே. இதை வலியுறுத்தவே கண்ணன் கீதை உபதேசத்தின் முதலடியிலேயே, இயற்கையாகிய முக்குணங்களைக் கடந்தோனுகுக என்று கட்டளையிடுகிறார் (II-45). முக்குணங்களுக்கு அடிமைப்பட்டுச் செயல்படுவதே, கீழியல்பான விலங்கினங்களின் வாழ்க்கை. அதைத் தவிர்க்க வேண்டியது, மானிடனின் கடமை. கீழியற்கையின் இயல்புக்கு, அதாவது, முக்குணங்களுக்கு அடிபணியாவிட்டால், போராட்டங்கள் தீர்ந்தேபோம். அன்பும், தொண்டும் தியாகமும் திகழும்.

படைப்பில், **ஆக்கல், அழித்தல், காத்தல்** என்ற முத்தொழில்களும் அடங்கியிருக்கின்றன. **இம் மூன்றும், ஒன்றுக்கொன்று பிணைந்து சுழலும் வட்டம்.** ஒன்றில்லாமல், மற்றவை நடைபெரு. உயிர் அடங்கப் பெற்றிருப்பதே உணவு. ஆதலால், அழித்தலில்லாமல், காத்தல் நடைபெருது. உடலைப் படைக்க, உடலை யழித்தல் தவிர்க்கவொண்ணுதது. ஒன்று மடிய ஒன்று உண்டாகின்றது. அது மடிய புதிய தொன்று ஏற்படுகிறது. இம் முச்செயல்களும் முடிவில்லாமல் நடைபெறுகின்றன. அழித்தலாகிய மரணத்தை யறிந்தாலே, மற்றவையின் உண்மை விளங்கும். வாழ்க்கையை வெற்றிகரமாக நடத்த, பாங்குடன் போர்புரிதல் ஜீவனின் கடமை என்று இயற்கை விதிக்கின்றது. இதனின்றும் தப்புதல் இயலாது. கொலை புரிதலும் கொலையுண்ணுதலும், இயற்கையின் பாடமேயாலுைம், **மானிட வாழ்க்கையின் குறிக்கோள் இயற்கைக்கு அடிபணிந்து, இன்று அடங்கும் மூச்சை (ஜீவனை) நாளைவரை காப்பதல்ல.** பிறந்த ஜீவன், மரிப்பது தவிர்க்க முடியாத உண்மையாதலால், வாழ்க்கையின் நோக்கம், உயிரை எவ்வாறேனும் காப்பதாக இருக்கமுடியாது. இதில் தோல்வி அடைவது கண்கூடான உண்மை. உயிர்கள் ஒன்றுக்கொன்று போரிட்டு மடிவது படைப்பின் நோக்கமல்ல. அவ்வாருஞல், படைப்பு ஒரு புல்லறிவாளனின் மடமைச் செயலே யாகும். ஆனல், படைப்பு அறிவின் ஆக்கம், அன்பின் சின்னம், மடமைக்கு அதில் இடமேயில்லை. பின், ஏன் இந்தப் போராட்டம்? ஆம், **போராட்டமென்பது அடிப்படையாகிய கீழ் இயற்கையின் இயல்பே.** அவ்வியல்பைக் கடந்தே முன்னேற்றங் காணவேணும். முன்னேற்றங்காணுத இயற்கைப் போர்ச் சுழலில் சிக்கி, இயற்கையின் கீழ் இயல்புக்கு அடிமையாகி வாழ்க்கை நடத்தும் மானிட ஜீவன், படைப்பின் நோக்கத்தைப் பாழாக்குகிறது. இத்தகைய மனித வாழ்க்கையே, அஞ்ஞான, அறிவில்லா, மாயை வாழ்க்கை எனப்படும். அதில் முன்னேற்றத்திற்கு இடமே இல்லை.

ஒவ்வொரு படைப்புப் பொருளும், இயற்கைக்குச் செலுத்த வேண்டிய காணிக்கையைச் செலுத்தியாகவேண்டும். இயற்கையின் வேகத்தைத் தடுக்க இயலாது (III-33). ஆனால், மானிடன் இயற்கைக்கு அடிமையாவது **தற்கொலை செய்துகொள்வதையே ஒக்கும்.** ஆகையால், கீதை III-34ல் கட்டளையிடுவது போல், ஒரு ஜீவனும் தன் புலன்களின் ஆதிக்கத்திற்கு உட்பட்டு விடக்கூடாது. இந்த ஆதிக்கம், விருப்பு, வெறுப்புகள் மூலமே ஏற்பட்டு, மனிதனின் லட்சியத்தை யடைய விடாமல் தடுக்கின்றது. வாழ்க்கைக்கான வெளிப் போராட்டத்தைத் தவிர்க்க நமது கீழ் இயற்கை இயல்புடன் போராடி அதை மட்டுப்படுத்தி அடக்கவேண்டும். இதுதான் கீதையில் போர் புரியுங் கடமையை வற்புறுத்தியதின் உண்மை. **அகப்போரில் வெற்றி கிட்டி ஜீவன் ஆன்ம வளர்ச்சியில் முன்னேற்றங்காணுவதே கீதையின் உபதேசம்.** (VI-5, 6) வாழ்க்கையின் தவிர்க்கமுடியாத போராட்டங்களை மூடி மறைத்துப் பேசுவது, தீக்கோழி தன் பகைவர்களிடமிருந்து தப்பத் தன் தலையை மட்டும் மணலில் புகுத்துக் கொள்வது போலாம். **செயலாகிய போரின் கதி, வாழ்க்கையின் குறிக்கோள், மரணத்தின் அவசியம், இவற்றின் உண்மையை கீதை விளக்குகிறது** மனிதத் தன்மை என்பது விலங்குத் தன்மைக்கும், தெய்வத் தன்மைக்கும் இடையிலுள்ள நிலை. இந்நிலையில் நலமும், கேடும், கலக்கப்பெற்றிருக்கின்றன. கேட்டைக் களைந்து, நலத்தையே நாடி, அதில் நின்று முக்தி பெறுவது நமது கடமை. ஆனால், உடல்பற்று நம்மை விடாத வரை, வெளிப் போராட்டமும், இயற்கையின் கொடூர இயல்புகளுமே நம்மை ஆட்கொள்ளும். விஞ்ஞானம், வெளிப் போரை வலுக்கச் செய்கிறது. ஆன்ம ஞானமும், விஞ்ஞான அறிவும், ஒரே பரம் பொருளின் தலையையும், வாலையும் முறையே கூறுபவன. வாலை மட்டும் கண்டு, மறைவாயிருக்கும் தலையை மறுப்பது நவீனத்தின் கூற்று.

நான்கு குருடர்களின் கதை எல்லோரும் அறிந்ததே. ஒரே ஜீவனாகிய யானையைத் தடவிப் பார்த்துக் காதைத் தொட்டவன் யானையை முறம் போன்றதென்றும், காலைத் தடவிப் பார்த்தவன், தூண் என்றும், துதிக்கையைத் தீண்டியவன் அதைப் பெரும் பாம்பென்றும், உடலை யணுகியவன் ஒரு மலையே என்றும், இப்படியாகப் பலவாறாகத் தத்தம் அனுபவத்திற்கு எட்டியதையே உண்மையென்று பகர்ந்தார்கள். **கண்ணில்லாதவனே அஞ்ஞானி,** அறிவிலி, இருள் சூழ்ந்தவன். **அவனுக்கு ஒன்றே பலவாகத் தோற்றமளிக்கும்.** அதனால், புத்தி பேதப்பட்டு, உண்மையை அறியான். விஞ்ஞானியும் அதேபோல்,

படைப்பின் ஒரு சிறிய படித்தரத்தை மட்டுமே அளந்துகண்டு, தன் சிற்றியல்புக்கு அப்பாலுள்ளதை மறுக்கத் துணிகின்ருன். மரணத்தை ஒரு முடிவாகவே கருதுகிருன். அது ஒரு உபாயம் என்ற எண்ணம் அவன் புல்லறிவுக்கு அப்பாற்பட்டு புலப்படாதது. மனிதன், தனக்கும் மிஞ்சிய ஒரு சக்தி உண்டென்று சாதாரணமாக ஒப்புக்கொள்ளுகிருன். இயற்கையின் வேகம் விஞ்ஞான மனிதனுக்கு அடங்கியதல்ல. இயற்கைக்கு இவ்வேகம் எங்கிருந்து கிடைக்கின்றது? இயற்கைச் சக்தியின் நிரந்தரமான சுபாவங்களை நோக்குங்கால், அவையெல்லாம், ஏதோ ஒரு மாருத ஆணைக்குக் கட்டுப்பட்டு செயல்படுகின்றன என்பது தெளிவு. தண்ணீரில்லாமல், தீயில்லாமல், காற்றில்லாமல் ஜீவன் இருக்கமுடியாது. உயிர் வாழ தண்ணீர் அவசியம் வேண்டும். தண்ணீரை அளவாக உபயோகித்தால், உயிரைக் காக்கும் ஆனுல், அது பெரும் வெள்ளமாக வந்தால், ஜீவனையும், அதன் உடமைகளையும் அழித்துவிடும். தீயும் மிதமான நிலையில் உயிரைக் காத்து, உணவையும் பக்குவப்படுத்துகிறது. ஆனுல் பெருந் தீயோ, உலகையே சுட்டெரித்துவிடும். காற்றும் அவ்வாறே. இவற்றை அளவுடன் உபயோகித்து அனுகூலமடையவே, இவை பரமனின் கருணையால் உண்டாக்கப்பெற்றவை. இயற்கையை அடக்கி ஆளுவதென்பது வீண் ஜம்பம். இயற்கையின் நியதிக்குக் கட்டுப்பட்டுப் பணிந்து நடத்தலே இயற்கையை அடக்கி ஆளும் முறை.

**இயற்கை கர்ம வடிவெடுத்தது.** ஆனுல், அதற்கு ஆதாரமாயிருக்கும் பரம்பொருளின்கண் தொழிலில்லை, என்பது கீதையின் பாடம். பிற மத நூல்களில், தொழிலை இரண்டு பாங்குடையவைகளாகப் பிரித்து உலக வாழ்வுக்கான லௌகீக கர்மமென்றும், பரவாழ்க்கைக்கான வைதீக கர்மமென்றும், சொல்லுவார்கள். கீதையோவெனில், **புரியும் கர்மமெல்லாம், இகபர வாழ்க்கைகளுக்குப் பொதுவாக உரியவைகளே** என்றும், செயலில் தாழ்ந்தது, உயர்ந்தது என்ற பாகுபாடு கிடையாதென்றும், ஆனுல், வாழத்தெரிந்தவன் எக்கர்மத்தையும் தூயதாக்கிக்கொண்டு ஈடேறுகிருன் என்றும், அறிவில்லாத மூடனே, மேலாம் கர்மத்தைக் கெடுத்து, தன்னை வினைத்தளைகளால் கட்டுப்படுத்திக்கொண்டு, அவதிப்படுகிருன் என்றும், இயம்புகிறது. **செயல்களையெல்லாம் தூயதாக்கும் முறையைக் கற்றுக்கொடுப்பது கீதை.** இதுவே அதன் தனிச் சிறப்பாம். எச்செயலிலிருந்தும், தீமையை அகற்றி நன்மையடைய வழிகாட்டியாகத் திகழ்வது கீதை. அதில், ஒரு சில

சமூக வாழ்க்கை சம்பந்தமான உண்மைகளும் காணப்படுகின்றன. ஆனால், அவற்றை அமுலாக்க வேண்டிய நடைமுறைக் கட்டுப்பாடுகளும், சட்டதிட்டங்களும், கீதையில் இடம்பெறவில்லை. ஏனென்றால், இக்கோட்பாடுகள், காலத்திற்கும், இடத்திற்கும், சந்தர்ப்பத்திற்கும், ஏற்ப மாறியமையும் இயல்புடையவை. திருத்தி அமையும் தன்மை கொண்ட சமூக நடைமுறை விதிகளே, சமூக நன்மையைக் காப்பாற்ற இயலும். கீதையின் அடிப்படை ஆன்மதத்துவமேயாயினும், அதற்கேற்ப சமுதாய அமைப்பு எத்தகையது என்பதையும், ஒரு சாசுவதமான தர்மமாகவே வடிவெடுக்கும்படி செய்து, அதன் உபபத்தியையும் கூறுகிறது. சமூக நடைமுறையில், எக்காலத்திற்கும் பொதுவான, நிரந்தரமான, கோட்பாடுகளையே கீதை விளக்குகிறது. மாறுபாடடையும் கட்டுப்பாடுகளைக் கையாளாமல், எக்காலத்திற்கும் எல்லா சமூகங்களும் பின்பற்றவேண்டிய விதிகளையே பகர்கிறது.

தோற்றத்திற்கு அப்பால் இருப்பது பூர்ணம். தோற்றத்திற்கு வந்திருப்பதும் பூர்ணம். பூர்ணமே எங்குமுள்ளது. இது எல்லா மதங்களின் வாக்குமூலம். முக்கியமாக, உபநிடதங்களின் உட்கருத்து இதுவே. இதையே கீதையும் கூறுகிறது. இயற்கையின் உடல் வலிமை சாசுவதமல்ல, உண்மையல்ல. ஆன்மவலிவே உண்மையானது. அதுவே நல்லறத்தையும், ஒழுக்கத்தையும் உண்டுபண்ணும். மனவலிமையும், உடல் வலிமையும் படைத்தவனே வாழ்க்கைக்குத் தகுந்தவன் என்பது இயற்கையின் கோட்பாடு. ஆனால், இவற்றின் மூலம் மனிதனுடைய அறிவு ஒரு குறுகிய துறையில், அதிவேகமாக விரிவடைந்தும், மற்றத் துறைகளில் குறுகிக் கொண்டும் போகிறது. வர, வர மனிதர் அறியவேண்டியது விரிந்து, தொடுவானம் போல், எட்டாது ஓடிக்கொண்டே இருக்கிறது. இந்த நிலையில், கீதை புகட்டும் ஆன்மவலிமையின் பாடம் அறிவின் அமிர்தமாகவே திகழ்கின்றது. எதையுணர்ந்தால், எல்லாம் உணர்ந்த பூர்ண அறிவாமோ, அதையே கீதை புகட்டுகிறது. எதை அடைந்த பின் வேறுயாதும் வேண்டப்படாதோ, அந் நிலையை விளக்குகிறது. கீதையிலும் உபபத்தி (Theory), அனுட்டானம் அல்லது செயல் முறை, என்ற இரண்டு பகுதிகள் உண்டு. அறிவாலும், யூகத்தாலும், முடிவுகட்டுவது உபபத்தி. நடைமுறையில் செய்துகாட்டுவது அனுட்டானம். ஆன்ம ஞானம், உபபத்தி நிலையில் நின்றுவிட்டால், அது வாய்ப் பேச்சேயாம்; வாழ்க்கைக்கு உரியதாகி உபகாரப்படாது.

கிட்டிய ஞானம், வாழ்க்கையில் செயல்பட்டாலே பலன் உண்டு. ஞானத்தைச் செயலாக மாற்றும் விதத்தையே, கீதை போதித்து, அதை யோகமென்ற பெயரால் போற்றுகிறது. யோகமே செயலில், திறமை வாய்க்கப்பெற்றது, என்பது கீதையின் உறுதிமொழி. சந்தேகம் அழிந்து, மனத்தளர்வு ஒழிந்து, ஆன்மவலிவு பெற்ருலே யோகம் கைகூடும். யோகமில்லாது, உலக வாழ்க்கை, விலங்கினங்களின் வாழ்க்கையே. புலனடக்கமும், தன்நலத் தியாகமும், மனம், வாக்கு, காயத்தால் தூய்மையான பற்றற்ற செயல்கள் புரிதலான தவமே, கீதை புகட்டும் யோகநிலை. அந்நிலையிலேதான், தோற்றத்திற்கு வந்த மனிதன் பூர்ணமாகிருன் ; தோன்ருத பூர்ணத்துடன் ஒன்றி விடுகிருன்.

உலக வாழ்க்கையில், ஜீவன் புண்படாது, பண்பட வழி ஒன்றே. ஆன்ம ஞானம் பெறுதலே அவ்வழி. ஆன்மா, தன் சன்னிதான விசேஷத்தால், இயற்கையின் கண் ஜீவநிலையை உண்டாக்கி, ஜீவனையும் இயற்கையையும் பிணைத்து உலக நாடகத்தை ஏற்படுத்துகிறது. உலக வாழ்க்கை என்பது ஜீவனுக்கு ஒரு பெருஞ் சோதனை. ஆன்மா, நாடக மேடையிலேயே சாட்சி போல் நிற்கின்றது. நாடகம் நடத்துவது இயற்கையும், அதன் கருவிகளும். மனம், புத்தி, மற்றும் உடல் உறுப்புக்கள், இயற்கையில் பிறந்தவையாதலால், இயற்கையின் வேகத்திற்கு அடிபணியுந் தன்மையுடையவை. புத்திக்கே முதன் முதலில் ஆன்ம ஒளி கிட்டுகிறது, என்ருலும், இதுவும் முக்குண ஆதிக்கத்தின் கீழ்வருவதால், மயக்கங்கொண்டு, உண்மையை உள்ளபடி அறியுந்தன்மையை இழந்து, அகங்காரத்திற்கு அடிமையாகி, சேவை புரிகின்றது. அகத்திற்கும், புத்திக்குமே ஆன்மத் தொடர்புண்டு. ஆனுல், இத்தொடர்பு நேரடியாயில்லாமல், மாயை என்ற இருள் திரை இடையில் நிற்பதால், புத்திக்கு விபரீதப் போக்கும், அகங்காரத்திற்கு, ஏமாற்றும் வாய்ப்பும், ஏற்படலாயிற்று. அஞ்ஞானம், அறிவின்மை, மயக்கம் என்பது முக்குணங்களின் ஆதிக்கத்தாலேயே உண்டாவது. புத்தி தன் விபரீதப் போக்கைத் தவிர்த்து, அகத்தின் செல்வாக்கை அகற்றி, செயல்படுமானுல், அந்நிலையில், முக்குண விபரீதங்களும் ஒழிந்து, ஆன்ம ஆதிக்கத்திற்கு ஜீவன் உட்படுகிறது. இதுவே ஞானம் பெறுவது. இந்நிலை கிட்டும் வரை, அகத்தின் கபட நாடகமே உலக வாழ்க்கையாகும். இதுவே துன்பநிலை. இதை தவிர்ப்பதே மானிடனின் குறிக்கோள். இதையடைய, கீதை வகுக்கும் வழி, நாம் ஆன்மாவே என்ற உறுதியான எண்ணம் உண்டாகி, பற்றற்றுச் செயல்புரிவதேயாம். பரமனை மறுக்கும் மனிதன், ஒளியைப் புறக்கணித்து, இருளைத்

தழுவுவதே யாகும். சமுதாய அமைப்பின் அடிப்படை ஆன்மீகமே. மதமே, மனிதனின் முதுகெலும்பு. இவற்றை ஒப்புக்கொள்ளாத நாகரீகம், மனிதனை துக்க யோனிகளாகிய கீழின மிருக வாழ்க்கையில் ஆழ்த்தி அவதிப்படச் செய்கிறது. நம் எல்லோரினுள்ளும் பரவி நிற்கும் ஆன்மா தெய்வீகமானதே. உள்ளும், புறமும், உள்ள இயற்கை இயல்புகளைக் கட்டுப்படுத்தி, இத்தெய்வீக, ஆன்மீக வலிவைப் பரிணமிக்கச் செய்வதே மானிட லட்சியம். உலக உயிர்களுக்கெல்லாம் பணிசெய்யும் தெய்வ வழிபாடும், தத்துவ விசாரம் செய்வதும், இவற்றின் மூலம் ஆன்ம வளர்ச்சியடைந்து விடுதலை பெற வழி வகுப்பதே மதம்.

புற உலகில், என்னென்ன புலன்நுகர்ச்சி இன்பங்கள் பெற முடியுமோ, அவைகளுக்கு ஒரு எல்லை, அமெரிக்கர்கள் கண்டு விட்டதாகவே சொல்லலாம். இருப்பினும், அவர்களில், பெரும் பான்மையோருக்கு இன்ப வாழ்வு உண்டா? மனம் கவலையால் கொந்தளிப்பில்லாது, சாந்திநிலை பெற இடமுண்டா? இல்லை, என்ற உண்மையை உலகம் பகிரங்கமாகவே ஒப்புக்கொள்ளுகிறது. அமெரிக்கர்கள் மட்டுமல்ல, மற்றதேசத்து மக்களிடம், ஏற்பட்டிருக்கும் இந்த மனமலர்ச்சியின் காரணமாகவே, **இன்று ஆன்மீகத்தில் ஒரு புது ஆர்வம் ஏற்பட்டிருக்கிறது.** மனத்தில் சொல்லொணுத ஏக்கம் குடிகொண்டு வாழ்க்கையில் நிறைவு காண இடமளிக்கவில்லை. மதத்தின் பெயரால் கொண்டாடப்படும் இயக்கங்களுக்கு, எளிதில் ஆதரவு தருவது, இன்று எங்கும் எதிர்ப்படும் காட்சியாகி விட்டது. புற உலக சுகபோகங்களால் மட்டும் வாழ்க்கையின் நிறைவு ஏற்பட்டுவிடாது என்ற புதிய உணர்ச்சி தான் இதற்குக் காரணம். **மனித வாழ்க்கை நிறைவு பெற, ஆன்மீக வளர்ச்சி அவசியம்** என்பதை மேலிட்ட வாரியாக ஒப்புக்கொள்கிறுர்களே அல்லாது, மனிதன், உள்ளத்துள் ஆழ்ந்து பதிந்து, செயல்படும் அளவுக்கு அவ்வுணர்ச்சி வலுவடையவில்லை. வெளிப்படையான ஒப்புதலும், அதற்கேற்ப, டாம்பீகமான புற நடவடிக்கைகளும், கையாளப்பட்டு, மனிதன் தன்னைத்தானே ஏமாற்றிக்கொள்கிறுன். உலகப் பற்றுக்களின் வேர்கள் மனத்தில் ஆழ்ந்து பதிந்து கிடக்கும் இந்நாளில், இவ்வெளி வேடங்களால் மன மாற்றங் காணுவது இயலாது. உலக விஷயங்களில் மனம் ஈடுபடுவதைக் கொஞ்சங் கொஞ்சமாகக் குறைத்துக் கொண்டு, **மனம் உலகப்பற்று அற்றநிலையை அடையச் செய்வதே ஆன்ம வளர்ச்சியாகும்.** உலக ஆசைகள் நீங்க, நீங்க ஆன்ம வலிவு ஏற்படும். இரண்டும், ஒன்றுக்கொன்று முரண்பாடானவை யாதலால், ஒரே

மனத்தில் இரண்டுக்கும் இடமேற்படாது. இதையே, பரமஹம்ஸர், "ஆசையுள்ள இடத்தில் ஆண்டவனுக்கு இடமில்லை. ஆண்டவன் வசிக்குமிடத்தில், ஆசைகள் தலைகாட்டா," என்கிறார். உண்மையை உணராது, மீசைக்கும் ஆசை, கூழுக்கும் ஆசை, என்றபடி, மனிதன் தன் பேராசையால் அவதியே அடைகிறான். உலக வாழ்க்கையில் கிட்டும் சுகபோகங்களை நாடினால், அவற்றுடன் தவிர்க்க வொண்ணாது பிணைக்கப்பட்ட, துன்பங்களையும் அனுபவித்தே தீர வேண்டும்; தப்புவ தென்பது கிடையாது.

நம் உலக வாழ்வின் சுகத்துக்கும், பரவாழ்வாகிய விடுதலைக்கும், தடையாய் நிற்பது, தமோ-ரஜக்கூட்டாகிய கீழியல்பின், இழி குணங்களே. இத்தீய இயல்புகளே, வாழ்க்கைப் போராட்டத்தின் கொடுமையை அதிகரிக்கச் செய்கின்றன. வாழ்க்கைப் போராட்டத்தைச் சமாளித்து, அதில் வெற்றி பெற, சுயநலம், பொறாமை, வஞ்சம், பொய், களவு, சூது, மோசடி, இவை மேலோங்குகின்றன. இவ்வாறே, இந்த நச்சுச் சுழல் இடையறாது, செயல்பட்டு, வாழ்க்கைப் போர் கடுமையாவதும், தீய குணங்கள் வலுவடைவதும், ஒன்றை யொன்று பலப்படுத்தி வளரச் செய்கின்றன. சிறப்பற்ற தனி மனிதனால், வெளியுலகைத் திருத்தியமைக்க இயலாது. ஆகையினால், தன் மன உலகைத் திருத்தி யமைத்துக் கொள்பவனே, வாழ்க்கையில் வெற்றி காண்பான். புற உலகம், கேடடைந்தாலும், தன் மனத்தை யடக்கி ஆளுபவனுக்குப் புற உலகம் கேடு செய்ய முடியாது. நம் நலனுக்குத் தடைகள், நம் இழிவான குணங்களே. மனத்தினின்றும் அவைகளை யகற்றி, ஈசன்பால் மனம் நின்றால், அப்பரது, வாழ்க்கை யனுபவம் போல், நாமும், நரகத்தில் இடர்ப் படோம்; நமக்கும் இன்பமே எந்நாளும், துன்பமில்லை.

ஸஞ்ஜயன் வாய்மொழியாக, கீதை, உலகுக்குக் கிடைத்தது. ஸஞ்ஜயன் என்னும் சொல்லுக்கு, ஓரம்சாராது, சமநோக்குடைய, விருப்பு வெறுப்பற்ற யோக யுக்தன் எனப் பொருள். அன்னாரின் புகழ் பெற்ற, பணிவு நயம் வாய்ந்த மதிப்பீட்டையே இங்கு விளக்கி, இந்த ஆய்வுக் கட்டுரைக்கு முத்தாய்ப்பளிப்போம்.

யத்ர, யோகேஸ்வர:, கிருஷ்ண:, யத்ர, பார்த்த:, தனுர்தர:,
த்தர, ஸ்ரீ:, விஜய:, பூதி:, த்ருவாநீதி:, மதி:, மம. (XVIII-78)

**"கண்ணன், யோகக் கடவுள், எங்குளன், வில்லினை யேந்திய விஜயன் தன்னுடும், எங்கு இந்த தர்மமயமான, இவர்களுடைய, சம்வாதம் (கீதை), படிக்கப்படுமோ, கேட்கப்படுமோ, பிரர்க்து**

எடுத்து விளக்கஞ் செய்யப்படுமோ, அங்கும், அதில் ஈடுபடுவோரிடத்தும், திருவும், ஆக்கமும், வெற்றியும், நிலைதவறாத நீதியும், நிற்கும்.” கண்கள் பார்த்துப் படிக்கலாம், செவிகள் கேட்கலாம், வாய் மொழியலாம், ஆனால், மனம் இச்செயல்களிலே குவிந்து; இந்த தர்மத்தைத் தனதாக்கி, அதை வாழ்க்கை நடைமுறை வினைகளில், கையாண்டு செயல்பட்டாலே, மேற் கூறிய பலன்கள், நிச்சயமாகக் கிட்டும். கீதா யக்ஞம், அநேகம் இடங்களில் அடிக்கடி ஆடம்பரத்துடன் ஏற்பாடாகி நடக்கின்றது. கீதையை, மேலோட்டமாகப் படிப்போரும் அநேகர். ஆனால், இவை, சிரத்தையுடன் நடத்தும் வினையென்று எண்ண இடமில்லை. மத சம்பந்தமான இதர வினைகள் போல், சம்பிரதாயமான, புற ஆசாரச் சடங்கு போல் செயல்படுகின்றனவே யல்லாது, ஓரளவாவது வாழ்க்கையின் வீண் ஆசைகளையும், டாம்பீகத் தேவைகளையும் பட்டுக்கட்டி, அதன் காரணமாக, உலக நடவடிக்கைகளில், பொய், களவு, வஞ்சம், ஏமாற்றம், குறைந்து, பிறரைச் சார்ந்து நிற்பதும், பிறர் மதிப்புக்காக வாழ்க்கை நடத்துவதும், தவிர்க்கப்பட்டாலே, கீதையால் பயன் அடைந்ததாகக் கொள்ள முடியும். ஆசையும், சுயநலமும் அற்ற தியாக வாழ்க்கையே “ கீதை வழி.”

கீதையின் தனிப்பெருமைக்குச் சான்றுகள் :—

(i) பூவுலக வாழ்க்கையில், இல்லற தர்மம், துறவறத்திலும், குறைந்ததல்ல வென்றுப், வாழ்க்கைத் தத்துவங்களை விண்டு காட்டி, ஆசையும், தன்னலமும் ஒழிந்து, பற்றற்ற, தியாக மனப்பான்மையே, இன்ப வாழ்க்கையின் அடிப்படை என்று புகட்டுகிறது.

(ii) அனைத்துக்கும் ஆதாரமாய் நின்று, படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழிலையும் கண்காணிப்பது பரமனே, என்று சந்தேகமற மொழிகின்றது. மானிடரும், மற்றும் உயிரினங்களும், அந்தப் பரமனின் அம்சமே யாதலால் அவை அழிவற்றவை யென்றும், ஜீவன்களுக்கு உருவளிக்கும் உடலே அழிந்து, மாற்றுருவம் ஏற்கும் தன்மையதென்ற உண்மை ஞானத்தைப் பறைசாற்றுகிறது.

(iii) இகத்துக்கு மட்டுமல்ல, பரமாகிய விடுதலைக்கும் மானிட வாழ்க்கை முறை ஒன்றே; அதுவே, பற்றற்ற, சமநோக்குடைய தியாக வாழ்க்கை என்றும், அதன் செயல் முறையையும் விவரித்துக் கூறுகிறது.

(iv) யோகியோ, போகியோ, துறவியோ, குடும்பியோ, எந்த தர்மத்தை மானிடன் பின்பற்றினாலும், இன்ப வாழ்க்கை நடத்தும் வழி ஒன்றே. அதுவே, ஆசையின் அடிப்படையிலுண்டாகும், ஆடம்பரத் தேவைகளைத் துறந்து, வாழ்க்கைப் போராட்டத்தின் கொடுமையைத் தணித்துக் கொள்வதாம்.

---

## II (a) கீதையும், அஹிம்சையும்

சமய சந்தர்ப்பத்தைப் புறக்கணித்து, கண்ணனின் உபதேசத்தை கொலை நூலாகக் கருதும் மேதாவிகளைப் பொருத்தவரை, துரதிஷ்ட வசமாக, அர்ஜுனன் உத்தம க்ஷத்திரியனாகவும், சந்தர்ப்பம் போர்க்களமாகவும், ஏற்பட்டு விட்டது. "செயலைத் தவிர்ப்பது இயலாது. கடமையைச் செய்தே தீர வேண்டும்", என்ற பேருண்மைகளையே கண்ணன் வற்புறுத்துகிறார். அர்ஜுனனின் கடமை, போர் புரிய வேண்டியதாக நேரிட்டது "போர் செய், போர் செய்", என்ற கட்டளையை, "கடமையைக் கைவிடாதே," என்ற பல்லவியாக மாற்றி அமைத்தாலும், அது, கீதையின் உபதேசத்தை எள்ளளவும் பாதிக்காது. அர்ஜுனன் தன் சுற்றத்தாரை எதிர்த்துப் போரிட்டு, அவர்களைக் கொல்ல நேரிடலாமென அஞ்சி, கடமையைச் செய்ய மறுத்து, செயலின்மையைப் பின்பற்ற எண்ணுகிறான். தான் கொல்லப்படுவதும் எதிரியைக் கொல்வதும், போரின் இயல்பேயாம். இது மிகவும் பயங்கரமானது, என்றாலும், கடமையைச் செய்வதிலிருந்து வழுவுவது, இதனின்றும் பன் மடங்கு கேட்டை விளைவிக்கும். இக் கருத்தையே கீதை, III-35-ல் அப்பட்டமாகவும், பின்னர் XVIII-45, 46, 47, 48-லும், விளக்குகிறது.

கீதை அஹிம்சையை ஆதரிக்கும் நூல் என்றால், அதன் லட்சிய புருஷர்களையும், அவர்களின் குணாதிசயங்களையும் கவனிப்போம். ஆன்ம வளர்ச்சி பெற்று சித்தி பெற, ஸ்திதப்பிரக்ஞன், குணாதீதன், யோகயுக்தன், பக்தன், "ஆகியோரையே தன் லட்சிய புருஷர்களாக கீதை வர்ணிக்கின்றது. இந்த நால்வரும் பெயரளவிலேதான் வேறுபட்டவர்கள். ஆனால் குணத்திலும், சுபாவத்திலும் முற்றிலும் ஒன்றிப் போனவர்களே யாம். ஸ்திதப்ரக்ஞன், உறுதியான ஒருமுகப்பட்ட அறிவை வளர்த்துத் தன் இலக்கை யடைகிறான். பக்தன் தன் உணர்ச்சியின் மூலம் கடைத் தேறுகிறான். குணாதீதன், கருமத்திலே கண்ணாயிருந்து உலகம் உய்யும் பொருட்டு வினையாற்றி வாழ்கிறான். இவர்கள் யாவரும் அடிப்படையாகக் கொண்ட மனப்பான்மையே யோகம். இவர்கள் சமநோக்குடையவர்கள். பிரபஞ்சத்தின் கண், வெளிப்படையாகத் தோன்றும் வேற்றுமைகளை விலக்கி, அடிப்படையான, ஆன்ம ஒருமைப்பாட்டைக் கடைப்பிடித்து நடப்பவர்கள். தன்னுயிர்க்கும் மேலாக, மன்னுயிரைக் காக்கும் ஆற்றல் படைத்தவர்கள். ஹிம்சையை அறவே ஒழித்தவர்கள். இவர்களை எடுத்துக் காட்டாகக் கொண்ட கீதையா, கொலை புரியத் தூண்டு கோலாகும்?

போர் குலதர்மமாயுள்ள, அக் காலத்து க்ஷத்திரிய வகுப்பில் பிறந்து, சமர் புரிய, வில் வித்தைகளை இளமையிலேயே நன்கு பயின்று எவ்வளவோ போரிட்டு, வெற்றியும் பெற்று, சமரில் தனக்கு இணையொருவருமில்லை எனப் புகழையும் அடைந்த பழுத்த, படை வீரன், அர்ஜுனன். யுத்தம் ஒரு ஹிம்சைச் செயலென்று, காருண்ய மூர்த்தியாகிய புத்த பிரானைப் போல், அர்ஜுனன் ஒரு பொழுதும் கருதியதில்லை. வாத்துக்கு நீர் போல், வீரனுக்கு யுத்தம், என்றே எண்ணியவன். குரு க்ஷேத்ரத்தில் இரு சாராரும், ஒருவரை யொருவர் எதிர்த்து யுத்தம் செய்யத் தயாரானதில், அர்ஜுனன் கொண்ட பங்கும், பொறுப்பும், மற்ற எல்லோரைக் காட்டிலும் மிக அதிகம். போர் மூண்டு, ஒருவரை யொருவர் தாக்கும் சமயத்தில், மதி மயக்கங் கொண்ட அர்ஜுனன், யாது செய்வதென்று தெரியாமல், தத்தளித்துத் தனக்குத் தேர்ப்பாகனாக உதவி புரியக் கேட்டுக் கொண்டதின் பேரில் வந்து பணியாற்றும் கண்ணனை அடி பணிந்து, வணங்கி, தன் மதிக் குறையை நீக்கவும், யாது செய்தால் நலங் கிட்டுமோ, அவ் வழியைப் பகரும்படியும் அர்ஜுனன் வேண்டிக் கொள்ளுகிறான். உலோகாயத தர்மத்தில் போர் புரிவது, கொலை பாதகமாகாதென்பது, உலகம், அன்றும், இன்றும் ஒப்புக் கொள்ளும் உண்மை. அர்ஜுனன், தன் உயிருக்காகப் பரிந்து பேசும் கோழை யல்ல. என்றாலும், போரிலிருந்து புறங் காட்டிப் போக நினைத்தான். ஆனால், அது சரியா, தவறா, என்ற சந்தேகம் அவனை வாட்டியது. இது காரணமாகவே, கண்ணனின் உபதேசத்தை நாடினான். அர்ஜுனன் போரை வெறுக்கவில்லை. அவன் தன் உற்றார், உறவினருடன் போர் செய்து அவர்களை மடிக்க, அவனது உணர்ச்சிகள் இடந் தர மறுத்தன. தன் சுற்றமல்லாதார்களை எதிர்த்துப் போர் செய்ய அவன் தயங்கியதில்லை. சுற்றம், உறவு, என்ற பாசம் அவனை மதி மயங்கச் செய்து விட்டது. தன் பந்துக்கள் வேறு, உலகம் வேறு, என்ற வேற்றுமை பாராட்டி, தன் இனத்தாரின் பால், தகாத கருணையும், 'அன்னியர்கள்' பால், கடும் நியாயத்தையும் கடைப் பிடித்தான். இதையே இழிவு செயல், தகாதது, என்று, கருதி, சம நோக்காகிய யோக சித்தாந்தத்தை கீதை பறை சாற்றுகிறது.

சுற்றம், பந்து, நண்பன், என்ற இத்தகைய ஏற்பாடுகள், உடலாலல்லாமல், ஆன்மாவால் ஏற்படும் நிலையா? இங்நிலையில், அர்ஜுனன் அஞ்ஞானம் வெளிப்படுகிறது. உண்மையான ஆன்ம ஞானம், அர்ஜுனனுக்கு ஏற்படாததினாலேயே, இந்த மதிமயக்கத்தை யடைந்தான். உடலால் ஏற்படுத்திக் கொள்ளும் உறவு, ஒரு நிரந்தர

மான உறவா? ஒருக்கால், நாமெல்லாம் இந்த உடலேதான், ஆன்மா என்பது வெறும் மாய வாதமே, என்று எண்ணி. பூஜ்ய புருஷர் களாகிய பீஷ்மர், துரோணர் போன்றவர்களை எவ்வாறு போரில் கொன்று அழிப்பேன் எனத் தயங்கினுன் போலும்! உடலழிந்ததும், நமக்கும், முடிவு காண்பதாகவே அவன் கருதுகிருன். இதைப்போல் இருள் சூழ்ந்த மதிமயக்கம் காணக்கிடைக்காது. சாக்காட்டின் உண்மையான மர்மம் அர்ஜுனனுக்குத் தெரிந்ததாக நினைக்க இடமில்லை. ஆகையினுலேயே கண்ணன் எடுத்த எடுப்பிலே, ஆன்மா, உடல், மரணம், இவைகளைப்பற்றி விபரமான விளக்கம் கூறுகிருர். கீதையின் சித்தாந்தத்தின் சிகரமாகிய ஆன்ம தத்துவ விளக்கத்துடனே கீதை ஆரம்பமாகிறது. 'ஆன்மா அழிவற்றது, ஜீவர்களாகிய நாம் ஆன்மாவே. இந்த உருவமுள்ள உடலே, மரணத்தால் அழிந்து போய், வேறு புதிய உடலை, ஆன்மா எடுத்துக் கொண்டு, ஜீவன் தன் குறிக்கோளையடைய உதவுகிறது." இந்த உடலுருவ மாற்றம் ஏற்பட வாய்ப்பாக உதவுவது சாக்காடு, என்ற உபதேசத்தை, ஆன்ம தத்துவத்தில் நம்பிக்கையற்றவர்களே ஏளனம் செய்ய முடியும்.

அழிவற்ற ஆன்மாவைப்பற்றிக் கவலை கொள்ளவேண்டாம். அழியும் உடலைப்பற்றி கவலை கொள்வதும் வீணே. இந்த உண்மையான ஞானம் படைத்தவர்கள், "இருப்போர்க்கேனும், இறப்போர்க்கேனும் துயருரூர்," என்ற கீதையின் முதலடியை, உலகில் எத்தனை பேர் நம்பி நடக்கின்ருர்கள்? உண்மை யாதெனில், நமக்கெல்லாம் ஆன்ம தத்துவத்தில் நம்பிக்கையில்லை. நம் உடலும், உடையும், உடமை களுமே, நம்மை ஆட்கொண்டு, நம் மனத்தையும், மதியையும், அடிமைகளாக்கி, அர்ஜுனனின் மயக்க நிலைமையிலேயே எக்காலும் நம்மை நாட்டி வைக்கின்றன. கண்ணன், அர்ஜுனனின் மயக் கத்தை நீக்கிவிட்டார். ஏன்? அர்ஜுனன் முழுமனதுடன் கண்ண னின் உபதேசத்தை நாடினுன். பின், அதைப் பணிவுடனும், பக்தி யுடனும் ஏற்றுச் செயல் புரிந்தான். நாமோ அவ்வுபதேசத்தைக் கடைப்பிடித்து நடக்கத் தயங்குகின்ருேம். ஆகையால், நம்மில் சிலர், கீதையைத் திரித்துக் கூறவும் துணிந்து விட்டார்கள். அக் கூட்டத்தார், ஜடமாகிய உடலையே தாமாகக் கருதி, சாவுக்குக் கதி கலங்கிப் போய், பயத்தால் எப்பொழுதும் மாண்டு கொண்டே, வாழ்வைத் தாழ்வாக்கிக் கொள்கிருர்கள். அம் மனப்பான்மை கொண்டோரிடத்தில் கீதைக்கு இடமில்லை. கீதாசாரியரும் அவர்

களுக்குக் கீதையை உபதேசஞ் செய்ய அணுகவேண்டாமென்று கேட்டுக் கொள்கிறார் (XVII-67). மரணத்தின் மர்மத்தையறியாத, அல்லது தவறாகப் புரிந்து கொண்டவர்கள், மரணபயத்தால் பீடிக்கப்பட்டு, கீதை ஹிம்சையை ஆதரிக்கின்றது என்று கூறுகிறார்கள். ஆகையால், கீதையின் அஹிம்ஸாவாதமானது, மரணத்தின் மர்மத்தை விளக்கினாலே, எடுபடுமென்று, கண்ணன் கீதை ஆரம்பத்திலேயே, மரண மென்பது யாது, என்று ஆணித்தரமாக விளக்கங் கொடுத்திருக்கிறார். என்றாலும், மரண பயத்தால் அருண்டவனுக்கு அவை புரிவதில்லை. காரணம், ஆன்ம தத்துவத்தில் நம்பிக்கையின்மையே.

அர்ஜுனனுக்கே எழுந்த சந்தேகத்தை எடுத்துக் கொள்வோம். அவன் தன் கடமையைப் புரிந்தால், பாவமே சம்பவிக்கு மென்று, சந்நியாசங் கொள்ள எண்ணினான். போருக்கு ஆயத்தம் பண்ணி, தானும் தயாராகி, போர்க்களத்தில் குதித்த பின், போர்புரிவது பாவமென நினைக்கத் தொடங்குகிறான். அவன் நினைப்பது போல் அவனை நடக்கவிட்டால், தர்மம் அழிந்து, அதர்மம் ஓங்கி, தலைவிரித்தாடி, உலகம் அவதிக்குள்ளாகும். அர்ஜுனனும் தன் கடமையில் தவறிய பாவத்திற்குள்ளாவான். உலக நாசம் ஏற்படும். இவைகளைத் தடுத்து, தர்மத்தை நிலை நாட்டுவதே, பரமனின் சங்கல்பம். அதற்காகவே உலகில் அவதரிக்கின்றார் (IV-7, 8). அர்ஜுனன் அஹிம்சா வாதம் செய்கிறான். அதைக் கேட்ட கண்ணன் ஆச்சரியமடைந்து, அர்ஜுனனின் முரண்பாட்டைச் சுட்டிக் காட்டுகிறார். "ஞானிகள் போல் உரை உரைக்கின்றாய்; ஆனால், செயலில் அவர்களைப் பின்பற்றாது நேர்மாறாக நடக்கின்றாய். அறிஞர்கள் இருப்போர்க்கேனும், இறப்போர்க்கேனும், துயர்ப்படார். நீயோ வீணாக வருந்துகிறாய்" (II-11). அர்ஜுனன், அஹிம்சா சுபாவம் படைத்தவனா? முன்னும், பின்னும், அவனுடைய செயல்களைக் கொண்டு தீர்மானித்தால், அவனுடைய வாதம், விதண்டாவாத மென்றே நிச்சயிக்கலாம். தர்மத்திற்காக, அவன் தன் உயிரைக் கொடுக்கவும், பிறஉயிரை வாங்கவும் துணிந்த மனம் படைத்த தீரன். யமனை அஞ்சாதவன். பின்னர் ஏன், அஹிம்சா வாதத்தைக் கையாண்டான்? (II-5).

அவனுடைய குழம்பிய மன நிலையை (II-30), ஒரு உபமானத்தால் விளக்கலாம். ஒரு பழுத்த உயர் நீதிபதி, நியாயம் வழங்க ஒரு போதும் திகைக்காதவரும், கொலை புரிந்தவனுக்குக் கொலையுண்ணும் தண்டனையைத் தயங்காது அளித்தவரும், படுகொலைக் குற்றம் செய்த தன் மகனையே கைதிக் கூட்டில் கண்டதும், தகாத

அன்பாலும், நெருங்கிய பாசத்தாலும், புத்தியைக் குழப்படித்துக் கொண்டு, நியாய நிலை தவறி, தன் மகனெனப் பட்சம் காட்டி, அவனை விடுவிக்க, அஹிம்சா வாதத்தை எடுத்துரைப்பதை யொக்கும். அர்ஜுனன் தன் உறவினரின் புகழ் வார்த்தைகளாலும், முகஸ்துதிகளாலும், உணவூட்டி, தன் தற்பெருமையையும், அகம்பாவத்தையும் வளர்த்து வந்தான். அவர்களைப் போரில் அழித்து விட்டால், பின் யாவர் புகழுரைகளால், தன் மமதையின் தாகம் தணியும்? (II-6). இதுதான் அர்ஜுனனின் சுயநல வாதம். தர்மம், அதர்மம், நல்லவர், கெட்டவர், உலகத்தின் க்ஷேமம், இவற்றை யெல்லாம் புறக்கணித்துத் தன் அகந்தையைத் திருப்தி செய்யவே எண்ணினான். பிறர் புகழ்ச்சி, இகழ்ச்சிகளிலே, மோகங் கொண்டு, வாழ்க்கை நடத்தத் துணிந்தான்.

அர்ஜுனனின் சுபாவத்தில் வேர் ஊன்றுத அஹிம்சா வாதத்தை அனுசரித்து, மேதாவிகளில் சிலர், **கீதை அஹிம்சையை ஆதரிக்கவில்லை என்று** தீர்மானிக்கின்றனர்கள். தன் சத்துருக்களைப் போரில் கொல்ல பிரியமில்லாத அர்ஜுனனை, கண்ணன் போரிடும்படி கூறுவதை ஆதாரமாகக் கொள்கிறார்கள். இந்த குற்றச் சாட்டுக்கு, கீதையே சமாதானமளிக்கின்றது. அர்ஜுனனே, தன் போர் செய்யாத் தீர்மானம் தவறு என்ற முடிவுக்கு வந்து, தன் கடமையை நிறைவேற்றுகிறான். என்றாலும், கீதையைக் குறை கூறுபவர்கள், அர்ஜுனன் மதி மயக்கங் கொண்டு கூறியதையே எடுத்துக் கொண்டு, அவனது பின் முடிவைப் புறக்கணிக்கின்றனர்கள். இவர்கள் ஆன்ம தத்துவத்திலோ, மறு பிறப்பிலோ, கர்ம விதியிலோ, தெய்வ நீதியிலோ, நம்பிக்கை யில்லாதவர்கள். அவர்களுக்கு, மரணம் ஒரு முடிவென்றே தோன்றுகிறது. மரணம் தங்களை அழித்து விடுகிற தென்றும், அதனால் அது மனிதனுக்குப் பெருங் கேட்டை விளைவிக்கிற தென்றும், கருத்துடையவர்களுடன் வாதாடுவது வீணே. உலக தர்மம் சரிவர நடக்கவும், ஜீவன் தனது குறிக்கோளை அடைய, புதிய, புதிய வாய்ப்புக்களைப் பயன்படுத்திக் கொண்டு, முன்னேற்ற மடையவும், மரணம் ஒரு இன்றியமையாத உபாயம். அது ஜீவன்களின் நலத்தையே கருதி, பரமனால் ஆன ஒரு ஏற்பாடு. பரமனே காலனாக வந்து (XI-32) இந்த ஏற்பாட்டை அமல் செய்கிறார். மரணத்தைப் பெருங் கேடு என்று எண்ணுவோர், பரமனை மறுப்பவர்களே. இவர்கள் கீதையில், பரமனின் கட்டளைக்குக் குறை கூறுமலிருந்தாலே, அது விந்தையிலும் விந்தையாகும். கீதைக்கு அடிப்படையான, சித்தாந்தங்களை எல்லாம் அடியோடு

மறுப்பவர்களுக்கு, கீதையின் உபதேசங்கள் முரண்பாடாகத் தோன்றுவதில் அதிசயம் ஒன்றுமில்லை.

"நமக்கு உருவம் கொடுக்கும் உடல் என்றைக்கும் அழிந்தே தீரும். ஆனால், நாம் ஆன்ம நிலையில் என்று மழியாமல் இருந்தே தீருவோம்." என்ற சித்தாந்தத்தை, கண்ணன் உரைத்தது, அர்ஜுனனின் ஐயத்தைப் போக்கவே. அவன் பயந்தது யாதெனில், தன் அம்புகளால் ஒரு வேளை பெரியோர்கள் அழிந்து விடுவார்கள் என்று நினைத்தான். அந்த, சந்தேகத்தையே, கண்ணன், நீக்கினார். இதனால் யாரும், யாருடைய உடலை அழிக்க, கீதை அனுமதி தருவதாகவோ, அல்லது அச் செயலைத் தூண்டுவதாகவோ, கருதுவது மூர்க்கத்தனமே. தன்னுடலையே தான் மாய்த்துக் கொள்ளக் கூடாதென்ற கட்டளையிருக்க, ஒருவன் பிற உடலை யழிக்க நியாயம் ஏது? சத்தியமும், அஹிம்சையும், ஹிந்து மதத்தின் தளர்த்த வொண்ணாத இரு ஆணி வேர்கள். எந்நிலையிலும், ஜீவ வதை கூடாதென்பதே அதன் கொள்கை. உடல் அழிந்தும், பீஷ்ம துரோணாதியர்கள் அழிந்துவிட மாட்டார்கள், என்ற உறுதியுடன், மற்றும் சில முக்கியமான விளக்கங்களும், கண்ணன் அளிக்கிறார். முதலாவதாக, VII-6-ல் "இந்தப் பிரபஞ்சம் முழுவதும், உற்பத்தியாவதற்கும், அழிவதற்கும் நானே காரணம்." X-20-ல், "என் ஆணைப்படியே, உயிர்கள் பிறக்கின்றன, வாழ்கின்றன, மரிக்கின்றன." XI-32, 33-ல், பீஷ்ம, துரோணாதிகளைக் குறித்து, 'இவர்கள் வாழ்வுக்கு, நானே முற்றுப் புள்ளி வைத்து விட்டேன். நீ, இவர்களின் உடலை யழிக்க வெறுங் கருவியாக மட்டும் செயல்படு. அவ்வாறு நீ, செயல்படா விட்டாலும், இவர்கள் வாழ்வு முடிவடைந்து விட்டது." எல்லாம் அறிந்த பரமன், நடக்கப் போகும் வருங்கால உண்மைகளையும் முன் கூட்டியே உரைக்கின்றார். இதில் வலுக் கட்டாயம் ஒன்றுமே யில்லை. XVIII-63-ல் "நான் கூறியவைகளைப் பற்றி, தீர, ஆலோசித்துப் பிறகு உன் விருப்பம் போல் செய்," என, அர்ஜுனனுக்கு முழுச் செயல் சுதந்திரமும் அளிக்கின்றார்.

தன்னுயிரையோ, பிற உயிரையோ, உடலையழித்துப் பிரிக்கச் செய்யலாகாது. ஏன்? பரமனின் ஆணையாலேயே ஜீவன்கள் வருவதும் இருப்பதும், பின் மறைவதும் ஏற்பாடாயிருக்க, ஒரு தனி மனிதன், தன் இஷ்டத்திற்கு உடலையழித்து உயிரைப் பிரிக்க எப்படி உரிமை கொள்வான்? படைக்கப்பட்ட ஒரு தனி ஜீவனின் ஆணைக்குட்பட்டதல்ல, இந்தப் பிரபஞ்சம். மனிதன் தன்னைத்

தானே ஆளக் கற்றுக் கொள்ளாமல், பிற உயிர்களையும், பிரபஞ்சத்தையும், தன் இஷ்டத்துக்கு அடிபணிய வைக்க நினைப்பது அசுரத் தன்மையே. பொறுமையே வடிவான இயற்கையும், கருணைக் கடலாகிய பரமனும், மமதைக்கு முடிவு கட்டுவது கண்கூடான அனுபவம். நமது பிறவியோ, மரணமோ, நம்மைக் கேட்டு நம் இஷ்டப்படியா நிகழ்கின்றன? நமது பெற்றோர், நம் பிறப்பிற்குக் கருவிகளாக மாத்திரமே இருக்கிறார்கள். வேறு ஒரு பொறுப்பும் நம்பால் அவர்களுக்கில்லை. பரமனே, நம் வளர்ச்சிக்கும் எண்ணங்களுக்கும், குணங்களுக்கும், ஏற்ப ஒரு புதிய உடலைத் தருந்த சூழ்நிலையில் ஏற்படுத்திக் கொடுக்கின்றார். (VIII-6). நாம் ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் பிறப்பது, நம் முன் வினைகளின் பயனே. அப்பயனைத் தீர்மானித்து அளிப்பதும் பரமனின் தர்ம நியதியே. பரமனே, நம் புவி வாழ்க்கைக்கு முடிவு கட்டுவதும். அவருடைய ஆணை, அமுலுக்கு வருமுன்னே, நம் இஷ்டப்படி நம் வாழ்க்கைக்கோ, பிறர் வாழ்க்கைக்கோ, நாமே முற்றுப் புள்ளி வைத்து முடிவு கட்டுவது, பரமனின் திட்டத்தைக் குலைத்ததாகும். அதனால், நமக்கும், உலகுக்கும், விபரீதமே ஏற்படும்.

மனித இனத்தைத் தவிர, படைப்பில் வேறு எந்த இனமும், தற்கொலை என்பதையே அறியா. அவை தங்கள் வாழ்க்கையைத் திருப்தியுடன் கழிக்கின்றன. அவைகளை யடக்கி ஆளவெண்ணி, வெறியும், இறுமாப்பும் படைத்த மனிதனே, தன்னைத் தானே வெறுத்துக் கொண்டு, மேலும், மேலும் வாழ்க்கையில் அதிருப்தியை வளர்த்துத் தன் கையாலேயே சில சமயம் தனக்கு முடிவு கட்டிக்கொள்கிறான். அதர்ம ஆசைகளை அடக்காமல், வளர விட்டு, அவற்றை நிறைவேற்றும் முயற்சியில், தவறான செயல்களையும் புரிந்து, அவ்வினைப் பயன்கள் வந்து தாக்கும் பொழுது தாங்க முடியாமல், அவற்றினின்றும் தப்ப, உயிரையே மாய்த்துக் கொள்கிறான். ஆனால், இயற்கையை இவ்வாறு ஏமாற்றி விடுவதென்பது பலிக்காது. மரணத்தால், வினைப் பயன்களைத் தடுத்துவிட முடியாது. ஒரு வினையின் பயன், அதை யனுபவித்துத் தீரும் வரை அது நம்மைப் பின்பற்றித் தொடர்ந்து கொண்டேதான் வரும். தவிர, இயற்கையா லல்லாத மரணத்தினால், தீமையே பெருகும். வாழ்க்கையில் நம் அனுபவங்களுக்கு, நம் வினைகளே காரண மென்பதை உறுதியாகக் கொண்டு, நம் செயல்களை நற்பயனளிக்கும் பணிகளாக ஆக்க வேண்டியதே நம் கடமை. அஃதல்லாது, தீவினையை விதைத்து, அவை வேண்

டாத பயனை அளிக்கும் பொழுது, தப்புவதென்பது அடாத எண்ணம். தன்னைத் தான் மாய்த்துக்கொள்பவன், வெறும் பயங்கொள்ளி, கோழை மனதுடையவன். நம் வாழ்க்கைக் காலம் முடிந்தவுடன், இயற்கை நம்மை வெளியேற்றத் தயாராக இருக்க, நாம் பயந்து முந்திக் கொள்வது நமது வினைகளின் தவற்றையே உணர்த்துகிறது. ஒரு மாபெரும் சக்திக்கு அடிபணிவது இவ்வுலகம். அந்த ஆணையை மீறுவது, கொடிய தவறான செயல்; பரமன் திட்டமிட்டு நடத்துவதில் குறுக்கிட்டதாகும். நம்மை இப்புவிக்கு அழைப்பதும், வெளியேற்றுவதும் பரமனது பொறுப்பே. நமது கடமை பொறுமையுடன் நல்வாழ்க்கை நடத்துவதே யாம்.

உலகத்தில் கொலை புரிகிறவர்கள், தங்கள் சுயநலத்திற்காகவும், வஞ்சந் தீர்த்துக் கொள்ளவும், அல்லது கோபாவேசத்தில் மதியிழந்து, தாங்கள் செய்வது இன்னதென்றே அறியாமல், அநியாயமான கொடியசெயல்களில் ஈடுபடுகிறார்கள். இது காரணமாகவே, கொலை, களவு, போன்ற பாதகச் செயல்கள் தடுக்கப்பட்டிருக்கின்றன. இச்சூழ்நிலையில், வாதத்திற்கு இடமான, XVIII-17, சுலோகத்தைக் கவனிக்கலாம். அதில், கண்ணன் கூறுவது, "எவனிடத்தில் 'நான்' என்ற அகங்கார உணர்ச்சி, அதாவது, சுயநல எண்ணங்கள் அடியோடு அகன்றனவோ, எவனுடைய புத்தியும், நோக்கமும், மாசற்றதாக இருக்கின்றனவோ, அவன் உலகத்தை யழித்தாலுங் கூட, பாவத்திற்கோ, பந்தத் தளைகளுக்கோ, இலக்காக மாட்டான்." இதில் வர்ணிக்கப் படுவது, ஒரு மகோன்னத லட்சிய புருஷன். ஜீவனின் குறிக்கோளாகிய, இவ்வரிய நிலையை ஒரு சாதாரண மானிடன் அடைந்தானுகில், அவன் பரமனுகி விடுகிறான். பரமனிடத்திலேதான், பற்றற்ற தன்மையும், மாசற்ற அறிவும் காணக் கூடும். ஆகையினாலே, தண்டிக்கும் தகுதியும், திறமையும், பரமன் ஒருவனுக்கே யுண்டு. மனிதனுக்கு எவரையும் தண்டிக்கும் தகுதி யில்லை. எனவே, இந்த சுலோகத்தைக் கொலை புரிய ஆதரவளிப்பதாகக் கருதுவது அறிவீனமே. மனிதன் அடைய வேண்டிய லட்சியத்தை, இங்கு கண்ணன் மொழிகின்றார். எனினும், இந்தக் குறிக்கோளை மானிடன் இவ்வுலகிலேயே அடைவதென்பது சாத்தியமல்ல. ஆகையினாலே, பரமனின் பொறுப்பை மனிதன் அபகரித்துத் தானே கையாளுவது பெறுந் தவறு. ஆனால், மனிதனுக்கு இட்ட, இந்தக் கட்டுப்பாடு, பரமனுக்கும் பொருந்துமெனத் தீர்மானிப்பது சரியல்ல, என்பதைத்தான் இந்த சுலோகம் ஊர்ஜி

தம் செய்து, பரமனின் உரிமையை உலகுக்குப் பறை சாற்றுகிறது. ஆகையால், கீதையில், கண்ணன் கூறுவதை விபரீத மெனக் கொள்வது, பிரபஞ்சத்தின் தவிர்க்க வொண்ணாத ஒரு அடிப்படைத் தர்மத்தையே, தகர்ப்பதாகும். மானிட சமூக வாழ்வுக்கு உகந்த விதியாகிய கொல்லாமை என்பது, மரணமென்ற தவிர்க்கவொண்ணு இயற்கை நியதிக்குத் தடை போடுவதாகக் கூறும் கூற்று, பித்தனின் பிதற்றலை யொக்கும். **கொல்லாமை என்பது உலோகாயத தர்மம். மரண மென்பது பரமனின் கருணைக் கட்டளை.** சமூக சக வாழ்க்கைக்காக ஏற்பட்ட உலக நியதியை, அவ்வாழ்வுக்கு முடிவு கட்ட வேண்டி, பரமன் இயற்றிய வேறு ஒரு ஏற்பாட்டுடன் குழப்பலாகாது. குறை காணுபவர்கள், பரமன் தன் கருணையால், ஜீவன்கள் முன்னேற்றமடையச் செய்த, நலம் பயக்கும் தர்ம ஏற்பாட்டையே பெருந் தவருகக் கருதி, கீதையைப் பழிக்கிறுர்கள். இந்த நாத்திகர் எழுப்பும் கூக் குரலைச் செவி மடுக்காது புறக்கணிப்பதே நன்மை பயக்கும்.

ஒரு நாட்டின் சட்டம், பொது நலனைக் கருதி ஏற்படுகிறது. அதை நியாயாதிபதி அமல் நடத்துகிறுர். அவருடைய கருவியாக அவர் அளித்த தண்டனையை நிறைவேற்றும் ஊழியன், பழியோ, பாவமோ, ஏற்க நியாயமில்லை. ஆனல், **நியாயாதிபதியிடம் உள்ள பொறுப்பை நாட்டு மக்களே, கையாளத் தலைப்பட்டு விட்டால்,** அச்சமூகத்தின் கதி எவ்வாருகும்? **குழப்பங்களுக்கு வரம்பே யில்லாது போம்.** அது போலவே, பரமனின் பொறுப்பாகிய மரணமளித்தலை, ஜீவன்களே தத்தம் இஷ்டம் போல் அமல் செய்வதென்ருல், உலக வாழ்க்கை ஸ்தம்பித்து நின்று, அழிந்தே போகும். இது காரணமாகவே, கொலை, களவு போன்றவைகளுக்குத் தடை விதித்து, மீறுபவர்களுக்குத் தண்டனையும் அளிக்கப்படுகிறது. மனிதன் மேல் விதிக்கப்பட்ட இந்த நியாயமான தடையை, மரணத்தை அமல் செய்ய வேண்டிய பரமனுக்கும் பொருந்தும் என்று வாதிப்பது, பிரபஞ்சத்தை சீர் குலைக்கும் நோக்கமே யாகும். பரமன் மரணத்தை ஏற்படுத்திப் பொறுப்பாக நின்று அமல் செய்வது, அவருடைய காருண்ய பாவத்துக்கு மாசு உண்டாக்குவதாகக் கருதுவது, நமது அறிவீனமே. கடலில் மீன் இனத்துக்கு அழிவில்லாமல் செய்திருந்தால், கடல் தாங்குமா? அழிவு அவசியம் என்ற காரணத்தாலே, மனிதன் மீனை ஆகாரமாக்கிக் கொண்டான். அதற்கு அவன் மதம் தடை கூறவில்லையென்று, அவனே கற்பனையும் செய்து கொண்டான்.

உடல் அழிந்தே, ஜீவன், கீழினங்களிலிருந்து மேலினத்தை யடைய வேண்டு மென்பது, பரிணாம வளர்ச்சியின் நியதி. பரமனின் காருண்யமே மரணம். ஆனால், அதை மனிதன், தன் சுயநலத்திற்காகக் கையாளுவது கொடிய பாபச் செயலென்று, உலக மதங்களெல்லாம், ஒரே குரலில் பறை சாற்றுகின்றன. உயிரினங்களில் மேல் படியை அடைந்த மனிதனுக்கு, இது பரமனின் கட்டளை; மற்ற உயிரினங்களுக்கல்ல. பூச்சி, புழுக்கள், விலங்குகள், இவற்றின் சுபாவம், மற்ற உயிரைக் கொன்று, தன்னுயிரைக் காப்பதே யாகும். இது தான், இயற்கையால் அவைகள் கட்டுண்டு செயல்படும் நிலை. அவைகளுக்கு இயற்கை, வேறு வழியை வகுத்துக் கொடுக்கவில்லை. ஆனால், மனிதனோ, இயற்கையை வெல்லும் ஆற்றல் படைத்தவன். "கொல்லாமை, கொன்று தின்னாமை," என்ற கட்டளையைக் கடைப் பிடித்து உயிர் வாழ மனிதனுக்கு இயற்கை, வழி வகை செய்திருக்கின்றது. மன உறுதியும், ஜீவகாருண்யமுந்தான் வேண்டும். எந்த உயிரையும் வதைக்காமல், மனிதன் சுகமாக உயிர் வாழலாம். பரமனின் பொறுப்பை அபகரித்து, பாவத் தளைகளை உண்டாக்கிக் கொள்ளத் தேவையே கிடையாது. தற்சமயம், யுத்தத்தில் மட்டுமல்ல, எல்லா நிலைகளிலும், மனிதனை மனிதன் அழிக்கத் தலைப்பட்டுவிட்டான். அரசியல் புரட்சிகளால் ஏற்படும் கொலைகள், கட்டுக் கடங்காது போய் விட்டன. தொன்று தொட்டே, யுத்தத்தில் பெருமளவு ஒருவரை யொருவர் மாய்த்துக் கொள்வது, வழக்கமாகவும், கடமையாகவும் கருதப்பட்டு வருகிறது. அநீதியும், அக்கிரமமும், காலனைக் கண்டு பயங் கொள்ள வேண்டும். தர்மமும், நீதியும், காலன் பால் அச்சங் கொள்ளாது. எது எவ்வாறாயினும், உயிரினம் காலனைத் தப்புவதென்பது கிடையாது. கீதையைப் பழிப்பது வீண்.

---

## II (b) மரணத்தின் மர்மம்

மரணபயமே, கீதையைக் கொலை நூலாகக் குற்றஞ் சாட்ட நேரிடுகிறதென்றும், ஆன்ம தத்துவத்தில் நம்பிக்கையற்றவர்களே மரணத்திற்கு அஞ்சுகிறார்களென்றும் கண்டோம். இப்பூத உடலே, " தான் " என்றும், இப்புவி வாழ்க்கையில், புலன் நுகர்ச்சிகளே ஆனந்தமென்றும், பொருளீட்டிக் குவிப்பதே, உடலெடுத்ததின் குறிக்கோளென்றும், தீர்மானித்துத் தன்னலம் பேணியே இழிதொழில் புரிவோர்களை, கீதை, அத்தியாயம் XVI-ல், அசுர சம்பத்தவர் என்று விரிவான விளக்கந்தருகிறது. மரணபயம் இவர்களை வாழ்நாள்

முழுதும் வாட்டி, சாந்தி அடையாது அடித்து விடுகிறது. மரணத்தை, இவர்கள், முற்றுப் புள்ளியாகக் கருதுவதால், அதை விட வாழ்க்கைக்கு, அதிகக் கொடியது, வேறில்லை, என எண்ணு கிறார்கள். என்றாலும், இவர்கள பிற உயிர்களை மாய்ப்பதில், ஈவு இரக்கமற்ற கல்நெஞ்சம் படைத்தவர்கள். உடலாலாகிய இன்ப துன்பங்களை யனுபவிக்க அரும்பெரும்பாடுபட்டு, சாக்காட்டை நோக்கியே விரைந்து செல்லுகிறார்கள். கீதையின் உபதேசத்தை, இவர்கள் விபரீதமாகக் கொள்வதில் ஆச்சரியமில்லை. வாதத்தால், நம்பிக்கையை மாற்றவோ, உண்டு பண்ணவோ இயலாது. ஆகையால், ஆன்ம சித்தாந்தத்தை, வாதித்து, நிலைநாட்ட, கீதை முயலவில்லை.

ஆன்மா அழிவற்றதால், மரணம், அழியுந்தன்மையுடைய உடலையே பாதிக்கின்றது. அத்துடன், ஆன்ம-உடல் கூட்டால் ஏற்பட்ட ஜீவன் (உயிர்), மறைந்து விடுகிறது. இந்த மறைந்து போகும் ஜீவனை, தன் பிறப்பிடமாகிய ஆன்மாவுடன் சேரும் பொழுது, தன் ஜீவிய கால அனுபவங்களாலும், எண்ணங்களாலும், செய்கைகளாலும் உண்டுபண்ணிக்கொண்ட தளைகளை, நாவினுல் சுட்டவடுவைப் போல், சம்ஸ்கார ரூபமாக, ஆன்மாவைத் தழுவிக்கொண்டு, ஆன்மாவை ஒரு புதிய உடலுடன் கூட்டுச் சேரவைக்கின்றது. பழைய சமஸ்காரங்களோடு கூடிய, அதே ஜீவன், புதிய உடலையடைந்து வாசஞ் செய்து, புது வாழ்க்கையை நடத்துகிறது. இவ்வாறாக, ஜீவன், புதிய புதிய உடல்களை நாடி, பரிணாம முறையில், ஆன்ம வளர்ச்சியும், முன்னேற்றமும் அடைந்து, தன் விடுதலையை நோக்கி ஏகுகிறது. இப்பிரபஞ்ச நாடகத்தில், ஆன்மா, மாறுபாடில்லாமல், உடலை மாறிக்கொண்டு வருகிறது. ஜீவனின் நிலையும், தன் வினைக்கேற்ப, உயர்வோ, தாழ்வோ, அடைகிறது. உடல் மாற்றமே, ஜீவனின் நிலையில், மாற்றத்தை யுண்டு பண்ணும் வாய்ப்பை அளிக்கிறது. இம்முறைக்கே, மரணம் எனப் பெயர் வழங்கலாயிற்று. இது தான் மரணத்தின் மர்மம், நைந்து போன உடையைக்களைந்து. புதிய உடை எடுத்துக் கொள்வது போலும், உடலுக்கு, குழந்தை, இளமை, காளை, மூப்பு ஆகிய பருவ மாறுதல்கள் போலும், மரணமும் ஒரு மாறுதலே என்று, கீதை, II-22-லும், 13-லும் முறையே, உவமைகளால் விளக்கந் தருகிறது. ஆன்ம வளர்ச்சி பெற்றவர்களுக்கு, மரணபயமில்லை. அசுர இயல்புடைய, நாத்திகருக்கு, மரணத்தைப் போலப் பயம் வெறில்லை.

மரணம், மனிதனுக்கு, எப்பொழுதும், ஒரு பெருங்கேடே என்று எண்ணுவதை, பல நிலைகளில், வாழ்க்கை பொய்யாக்கி விடுகிறது. தீராத நோய்களால், கடும் அவதிக்குள்ளானவர்கள், தங்கள் உயிரைப் போக்கிக் கொள்கிறார்கள்; மற்றும் பரிதவிக்கும் நிலைமைகளிலும், மரணத்தை மனதார விரும்புகிறார்கள். தவிர, மரணம், ஒரு விலக்கொண்ணாத நியதியாக ஏன் ஏற்படவேண்டும்? பிறந்த தெல்லாம், இறப்பதுறுதி, என்ற கட்டளை, அநீதமா? உயிர்கள் மரணமில்லாமல் ஒரே உடலில் வாழ முடியுமா? உடலின் அழிவு ஏற்படாவிட்டால், அதன் மாறுதல்களுக்கு இடமேது? வளர்ச்சியில்லாது, பிறந்த குழவியாகவே என்றும் ஜீவிப்பது திருப்தியளிக்குமா? மரணமேற்பட்டாலே பிறப்புக்கு வழி யுண்டு. மரணம் நீங்கினால், பிறப்பும் நின்றுவிடும். மாறுதலே, தன் அடிப்படையாகக் கொண்ட, இவ்வுலகத்தில், கற்பனைக்கு மெட்டாத, முற்றிலும் விபரீதமான நிலையே, மரணமற்ற நிலையாகும். மனிதன் மரணத்தை வெறுப்பதின் காரணம், சுயநலத்தால் தூண்டப்பெற்ற ஆசைகளே. ஓய்வு, ஒழிவு இல்லாத, தன் ஆசைகளை நிறைவேற்றிக் கொள்ள எண்ணுவதாலேயே மரணத்தைப் பகையாக, மனிதன் கருதுகிறான். ஒரு அரக்கன் தன் ஆசைகளைப் பூர்த்தி செய்து கொள்ள, உலக நியதி இடமளிக்குமானால், பின், மற்ற ஜீவன்களின் கதி எவ்வாறாகும்? பலவானே, வாழ உரிமையுள்ளவன், என்ற மேனாட்டு விஞ்ஞான விதி அமுலுக்கு வந்து, அதே சமயம், மரணத்தால் கிட்டும் விடுதலையும் எடுபட்டுப் போனால், பலமற்ற உயிர்ப் பிராணிகளின், அவதி நிலையைக் கற்பனையுஞ் செய்ய இயலுமோ? ஹிந்துப் புராணங்களில், கொடிய அசுரர்களின் ஆட்சியையும், அவற்றுக்கு முடிவுகட்ட பட்ட பாடுகளும், நமக்கு ஒரு படிப்பினை கற்பித்தால், அது, மரணத்தால் ஏற்படும் அனுகூலமே.

மரணத்தை, மனிதன் ஏற்படுத்தவில்லை. நவநாகரீக விஞ்ஞானிகள், அதை யொழிக்கப் படாதபாடு படுகிறார்கள். மறைவாய் நிற்கும், பரமனின் சக்தியால் அமல் செய்யப்பட்ட ஒரு ஏற்பாடு, மரணம். உயிர்கள் வாழ்வதற்கென்றே, எண்ணற்ற அனுகூலங்கள் அமைத்துக் கொடுத்த, அந்த சக்தி, மரணத்தை, உயிர்களுக்கு ஒரு பெருங்கேடு என்றால், அதைத் தடை செய்யாது வாளா நிற்குமா? மனிதனுக்கு உயிரையளிக்கும் சக்தியே, மரணத்தையும் ஒரு நன்மை பயக்கும் உபாயமாக அளித்திருக்கிறது. மனிதனுக்கு மட்டுமல்ல, எல்லா உயிரினங்களும், வாழ்க்கை நடத்தி, ஆன்ம வளர்ச்சியில் முன்னேற்றமடையவே இப்பிரபஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. உயிருக்குக் கெடுத

லாக, யாதொன்றும் இயற்கையில் நிகழ முடியாது. ஜீவன்களே, தங்கள் கேட்டையும் அழிவையும் ஏற்படுத்திக் கொள்ளுகின்றன. பிரபஞ்சத்தின், ஒழுங்கும் ஒருமைப்பாடும், நம் அறிவைத் திக்கு முக்கடிக்கச் செய்கின்றன. உயிரினங்கள், அதிலும், மனிதனே, இயற்கைக்கு மாருகச் செயல்பட்டுத் தனக்கு தானே கேடும், துன்பமும் விளைவித்துக் கொள்கிறுன். உலக வாழ்க்கையை, நல்ல முறையில் நடத்துவோருக்கும், சீர்கேடாக நடத்துவோருக்கும், பாரபட்சமில்லாத, தர்ம நியதியான மரணமானது, ஒரு புதிய வாய்ப்பை அளிக்கின்றது. அதன் ரகசியத்தை மனிதன் முழுவதும் அறிந்து கொள்ள முடியாது. என்ருலும் அது கேட்டை விளைவிப்பதாக எண்ணி, வாழ்க்கையில் செயல் படுவது, நமக்குக் கேட்டையே விளைவிக்கும்.

ஞானிகள் ஏன் மரணத்தைப் பகைக்காமல், அது கிட்டினுல், மகிழ்வுடன் தழுவுகிருர்கள்? பாமர மக்கள் போல், அவர்கள், உடலைப் பேணுவதிலேயே, கண்ணும் கருத்துமாகக் காலத்தை வீணுக்க மாட்டார்கள். புலனுசைகளாகிய, சுவைக்காக உண்ணுதல், மிதமாக உறங்குதல், ஆடை ஆபரணங்களால் சிங்காரித்துக்கொள்ளல், சிற்றின்பத்தில் லகித்தல், இவை எதிலும் ஆசை கொள்ளார். நோய்வாய்ப்பட அவகாசமின்றி, இந்த உடல்ச் சுமையை, ஒரு பாரமாகவே கருதுவார்கள். மூப்பு ஏற்பட்டால், உடலைப் பேணுதல், அதிகரிக்கின்றது. ஞானத்தை யடையும் முயற்சியில், இந்த உடல் ஒரு தடையே என்று அவர்கள், உணர்ந்தவர்கள். உடலின், உறுப்புக்கள் உண்மையைத் திரித்துக் காட்டும் இயல்புடையவை. அவற்றை நம்பினுல், தவறுதலான முடிவுக்கே கொண்டு விடும். விவேகம், ஐம்புல னடக்கத்தாலேயே கிட்டும். உடலை யொட்டிய, ஓயாத பிணிப் பணிகளே, ஆன்ம விசாரத்திற்கு இடந் தரா. உடலால் ஏற்படுத்திக் கொண்ட உறவினர்களின் பொருட்டு விரயஞ் செய்யும் நேரமும், படும் பாடுகளும், கவலைகளும், ஆன்ம வளர்ச்சிக்குக் குந்தகம் அளிப்பவை. ஆகையால், உடலுறவுகளை, ஞானிகள் பொருட்படுத்த மாட்டார்கள். அவர்களையே, கீதை தீரன் எனப் பகர்கிறது. (II-13). இந்த இலக்கணப்படி, உலகத்தில் பெரும்பாலோர் கோழைகளே யாவார். பிறப்பும், இறப்பும், ஒரு நாணயத்தின் இரு முகப்புகள் போலாம். இரண்டும் சேர்ந்ததே வாழ்க்கை. அவற்றில், ஒன்றை வரவேற்றுக் களிப்புறுவதும், தவிர்க்க வொண்ணுத மற்றது கிட்டியவுடன், ஓலமிடுவதும் ஏனே?

ஆன்மாவில் நம்பிக்கை கொள்வதும், கொள்ளாததும், மரணத்தைப் பற்றி நமக்குள்ள, நம்பிக்கையைப் பொருத்ததே. **சாவு என்பது பூதவுடல் படைத்த ஜீவன்களுக்குள்ள கடைசி முடிவா, அல்லது மறு பிறப்பு ஏற்படு முன் நிகழும் ஒரு மாறுதலா?** ஹிந்து, புத்த, மதஸ்தர்களைத் தவிர, மற்றெல்லோரும், **மறு பிறப்பில் நம்பிக்கை இல்லாதவர்கள்.** அவர்கள், **சாவை ஒரு முடிவாகவே கருதுகிறார்கள்.** இதனால், மரணம் எல்லோர் மனத்திலும் ஒரு பீதியை ஏற்படுத்துகிறது. சாவை எண்ணி அஞ்சாதவன், தீரன், என இலக்கணந் தருகிறார் கண்ணன் (II–13). ஆன்மா, உடல், மரணம், இவைகளைப் பற்றிய விளக்கத்துடனே, கீதை உபதேசம் ஆரம்பமாகிறது. சாவைப் பற்றிய நமது மனப்பான்மையை ஒட்டியே, வாழ்க்கையின் சுக துக்கங்கள் அமைகின்றன. சாவை எண்ணி நடுங்கும் பயங் கொள்ளி, ஒரு தடவை யல்ல, பல தடவை மடிகின்றான்.

சாவு நம்முள்ளே ஏற்படும் ஒரு நிலையா, அல்லது, வெளியே நின்று நம்மைத் தாக்கும் ஒரு சம்பவமா? பிறப்பு எடுத்ததுமே சாவு அத்துடன் கூடவே வருகிறது. சிலர், பிறந்ததும் மடிகின்றார்கள். சிலர் சொற்ப காலம் ஜீவித்து மரண மெய்துகிறார்கள். பிறவி எடுத்த எவர்க்கும் சாவு, தவிர்க்க வொண்ணாத நியதி. அதைக் குறித்து வருந்துவதால் பயனில்லை. அதினின்றும் தப்ப இயலுமா? **பிறப்பும், இறப்பும்,** ஒரு தடியின் இரு முனைகள் போல் **பிரிக்க இயலாதவை.** மரணத்திலிருந்து தப்பிய உடல் உண்டோ? **ஆன்மா உடலை நீத்துப் போவதே, உடலுக்குச் சாவு;** உடல் உணர்விழந்து, செயலற்று, அழிந்துபோன நிலை. இனி அவ்வுடலால் பிற உயிர்களுக்குத் தீங்கு ஏற்படா வண்ணம், அதைத் தீயிட்டுச் சாம்பராக்குவதே உத்தமம். பாழடைந்த வீட்டில் மனிதன் வசிக்க முடியாதது போல், நைந்த உடலில், ஆன்மா தங்காது. ஆன்மா வசிக்கத் தகுதி யற்றுப் போன உடலையே, சவம், பிணம் என்கிறோம். உருவத்தை யளித்து, வினைகளைச் செய்யுங் கருவியாக அமைந்த உடல், ஆன்மா குடியிருக்கும் போதே, மெலிவு, நலிவு, மூப்பு, நோய் அடைந்து, நாளடைவில், தகுதி யற்றதாகவும் போகின்றது. இந்த நியதியைத் தடுக்கவோ, மாற்றவோ இயலாது. பெரும்பான்மையோருக்கு, சாவு ஒரு விண்ண முடியாத புதிர். என்றாலும், **சாவை,** ஒரு பெருந் தீங்காகவே நிச்சயித்து விடுகிறார்கள். ஒன்றைப் பற்றி யாதுமே தெரியாத நிலையிலும், அது நமக்குப் பாதகம் விளைவிப்பதே என்று தீர்மானிப்பது அறிவீனமே. இந்த மடமையை, மானிட குலத்திற்குள்ள ஒரு பெருங் குறைபாடாக, கிரேக்க ஞானி சாக்ரதர் சுட்டிக் காட்டுகிறார்.

தெரியாத ஒன்றைப் பற்றித் தெரிந்ததாகப் பாவித்து, அதனால் வருத்த முறுவோரின் மடமையைக் கூற நாவில்லை என்கிறார். ஷேக்ஸ்பியரும், யக்ஷன் கேள்விகளுக்கு விடை யளித்த தருமபுத்திரரும், இந்த அறிவின்மையை விந்தையிலும் விந்தை என்று வர்ணிக்கிறார்கள். **நாம் அறியாததை, அறிந்ததாக எண்ணி, அவதியுறுவதேனோ?** சாக்ரதர், மேலும் வாதிக்கின்றார்; சாவு என்பது உணர்வு அற்றுப்போன நிலை என்றாலும், அதை ஒரு நெடுந் தூக்கமாகவே கருதுவதுதான் நியாயம்; அல்லது, ஆன்மாவானது இப்பூத வுடலைக் களைந்து, முன்னம், பெரியோர்கள் அடைந்த பதவியை அடைவதாகும். அவ்வாறாயினும், பெரியோர்கள் சங்கம் கிட்டும் பெரும் பாக்கியசாலிகளாவோம். சாவு ஒரு படுமோசமான நிலைக்கு இட்டுச் செல்வதாக, மனிதர்கள் எண்ணுகிறார்கள். ஆனால், சாகாதிருக்கும் நிலை கிட்டுவதா யிருந்தாலுங் கூட, அதை நம்மால் சகித்துச் சமாளிக்க முடியுமா என்பதைச் சிந்தனைக்கு எடுப்பதில்லை. எப்படி அகண்ட வெளி, காலம், இவைகள் நமக்குப் புறம்பானதல்லவோ, அதே போல், சாவும் நமக்குப் புறம்பானதல்ல. சாவை நோக்கி நாம் பேர்வதாகவோ, அல்லது, அது நம்மை நோக்கி அணுகுவதாகவோ ஏற்படும் பீதி, கோழையின் மனக் கோளாறே. **ஆன்மாவுக்கும், மரணத்திற்கும் தொடர்பில்லை.** ஒளி இருக்கு மிடத்தில் இருள் இல்லை. ஒளி மறைந்தால், இருளே உண்டு.

ஆன்மா உடலை விட்டுப் பிரிந்ததும், அது மறைந்து விடுவதாக எண்ணுவதும் தவறே. சூரியன் அஸ்தமனமாவதைப் போல், ஆன்மாவின் ஆட்சி நம் புலன்களுக் [கப்பால் ஆகி விடுகிறது. மேற்கு வானில் மறைந்த கதிரவன், என்றும் பிரகாசித்துக் கொண்டிருப்பது போல், **ஆன்மா எக்காலமும் உளது.** சாக்ரதர், விடமருந்தி, சாகப் போகும் தருவாயில், அவருடைய நெருங்கிய சீடரான, கிரிட்டோ என்பவர் வினவினார், "உங்கள் ஈமச் சடங்குகளை எவ்வண்ணம் நிறைவேற்ற வேண்டும்?" அதற்கு, அந்த ஞானி விடையளித்தது இதுவே. "நான் உங்களை விட்டு ஓடி விடாமல், செய்ய முடியுமானால், பின், உங்கள் இஷ்டம் போல் நிறைவேற்றுங்கள்". விடம் உடலுட் சென்றதும், அது உடலைப் பாழ் படுத்தி, ஆன்மா வசிக்கத் தகுதியற்ற தாக்கி விடும். ஆன்மாவும், அப் பழுதுபட்ட உடலை விட்டகன்று விடும். எஞ்சி நிற்பது பிணமே. அதை எப்பாடு படுத்தினாலும், ஆன்மாவைப் பாதிக்காது. பிணத்திற்கு மரியாதை காட்டும் வழக்கம்; ஓரளவோடு நிற்காமல், பணத்திற்கும், அதிகாரத்திற்கும், பெருமை யளிக்கும் பொருட்டு, மிதமிஞ்சிப் போய்க்கொண்

டிருக்கிறது. உயிர் உடலில் வாழும் பொழுது, அளிக்காத மரியாதைகளும், அன்பும், பிணத்தின் பால் வழங்குவது எதற்கோ? நமது உடல் ஒரு நகைப் பெட்டி. நகை உள்ள மட்டும், பெட்டியைக் காக்க வேண்டும். நகையை இழந்து விட்டால், பின் பெட்டி எதற்கு? மனிதன் எதிலும் நிதானத்தை கடைப் பிடியாது, மட்டு மீறிய நிலைகளையே பின்பற்றுவான். ஆனால், நடு நிலையே யோக நிலை, துன்பந் தவிர்த்த பொன் நிலையாம்.

**பிறந்தவன் சாவதுறுதி எனில், மடிந்தவன் பிறப்பதும் உறுதியே. (II-27).** இந்த சித்தாந்தத்தை, சாக்ரதர், ஒரு வாதத்தால், நிரூபிக்கின்றார். பிரபஞ்சத்தில், எதிர் மறைப் பொருள்களும், நிலைகளும், ஒன்று மற்றொன்றிலிருந்தே உண்டாகிறது. உதாரணமாக, பெரிது, சிறிது, பலவான், பலஹீனன், விழிப்பு, தூக்கம், இவை போன்ற எதிர் நிலை இரட்டைகள், ஒன்று மற்றதிலிருந்தே ஏற்பட வேண்டும். தூங்குபவர்கள் விழிப்படையா விட்டால் பிரபஞ்சத்தில் யாவும் உறக்கத்தில் ஆழ்ந்து, விழிப்பு என்ற எதிர் நிலை யற்றே போம். அதே போல், மரித்தவன், பிறவாது போனால், எல்லா உயிர்களும் மடிந்து போய், உலகம் உயிரற்ற நிலையை எய்திவிடும். ஆகையால், **பிறப்பு, இறப்பிலிருந்தே உண்டாக வேண்டும்.** மற்றும் ஒரு வாதத்தால், மறு பிறப்பை ஊர்ஜிதம் செய்கிறார். கற்றல் என்பது, நம்முள் படிந்து கிடக்கும், வாசனைகள், எண்ணங்கள், வெளியாகுவதேயாம். கற்றலுக்கு, உட்புகுத்தல், திணித்தல், ஊட்டுதல், என்ற பொருள் ஒவ்வாது. ஆகையால், **நமது அறிவுக்கு அடிப்படைக் காரணம் யாது?** எப்பொழுது ஏற்பட்டது? கோழிக் குஞ்சு முட்டையினின்றும் வெளி வந்ததுமே, தன் ஆகாரத்தைக் கொத்தித் தின்கிறது. வாத்துக் குஞ்சு, உடன் நீர் நிலையில் குதிக்கின்றது; ஆனால், கோழிக் குஞ்சு தண்ணீரைக் கண்டு அஞ்சுகிறது. காரணம் என்ன? **முன் பிறவியிலேயே,** ஏற்பட்ட அனுபவங்கள், இப்பொழுது வினை வடிவில் வெளியாகின்றன. மறு பிறவியை ஒப்புக்கொள்ளுபவர்கள், சாக்காடு ஒரு கெடுதலே என எண்ண மாட்டார்கள். மரண பயம், அவர்களிடம் இடம் பெறாது. ஆனால், நமக்கு ஒன்றிலும் உறுதியான நம்பிக்கை கிடையாது. எதிலும் சந்தேக நிலையிலேயே இருப்பதால், நற்பலன் ஒன்றுமே கிட்டாது, துன்பத்தையடைகிறோம். "சம்சய ஆத்மா வினச்யதி," சந்தேகங் கொண்டவன் அழிந்தே போகிறான். சந்தேகம் என்பது உறுதி யற்ற ஒரு இழிவு நிலை. அது யோக நிலையாகிய நடு நிலை யல்ல. யோக நிலை மன உறுதியால் உண்டாவது. சந்தேகம் எல்லா விதத்திலும்

கேட்டையே விளைவிக்கும். அது, சிதறிக் கிடக்கும் சித்தத்தில் உதிப்பது. நாத்திகத்துக்கும் கீழான நிலை, சந்தேக நிலை.

**படைப்பில் அழியாப் பொருள் உண்டோ?** பிரகிருதியின் பஞ்சபூதத் தத்துவங்களால் உருப் பெற்றவை, பிறந்து, வளர்ந்து, மெலிந்து, நலிந்து, அழிந்து, மறுபடியும் பஞ்ச பூத மூலங்களுடன் கலந்து விடுகின்றன. புல், பூண்டு முதல் எல்லா உயிரினங்களும், இந்த இயற்கை நியதிக் குட்பட்டவையே. **மனித உடலும் இவ்விதிக்கு விலக்கல்ல.** மரணத்திற்கும், மறு பிறப்புக்கு முள்ள இடை, ஒரு மர்மமான விளங்கா நிலையா யிருப்பதே, நம் பயத்திற்குக் காரணம். ஆன்ம நம்பிக்கையே, இந்த ஐயத்தை வேருடன் அகற்ற வல்லது. சாவு, நம் கடை முடிவானல், வாழ் நாளில் நாம் நினைத்த எண்ணங்கள், நாம் ஆற்றிய வினைகள், கற்ற கல்வி, ஞானம், கணக்கற்ற நம் ஆசைகள், மனக் கோட்டைகள் — இவற்றின் கதி என்ன? இவை யாவும் உடலுடன் அழிந்தா போம்? **சாவை, ஒரு பெருங் கேடு என்ருல், வாழ்க்கை ஒரு குறைவு மில்லாத நிறை நிலையா?** வாழ்க்கையே உயிர்களுக்கு உரிய தென்ருல், மரணத்தால் அதற்கு முடிவு கட்டுவது வீண் ஏற்பாடா? உலக வாழ்க்கை, நாம் எண்ணிய படியும், விரும்பிய படியும் இல்லை என்பது யாவரும் காணும் உண்மை. **மரணத்தைப் பகைப்பது, அதை ஏற்படுத்திய பரமனின் அறிவுக்கும், திறனுக்கும், மாசு கற்பிப்பதாகும்.** பிறப்பும், இறப்பும், வாழ்தலும் எல்லாம், அவன் ஆணைப் படியே நடக்கின்றன. (X-20). அவனது, நியதியைக் குறை கூறுபவர் சுயநலப் பித்தர்களே. இந்த உடல், நம் பிறப்புக்கு முன் இருந்ததில்லை. அதன் மரணத்திற்குப் பின்னும் இல்லாமற் போய்விடும். இடை நிலையில், தோன்றும், உடல், இயற்கையின் முக் முணங்களால் சமைக்கப் பட்டது (II-28). அந்த முக் குணச் சேட்டைகள் அடங்கியதும், உடல் அழிந்து போவது, எது போலென்ருல், மலங் காட்டில், மூங்கில்கள் ஒன்ருே டொன்று உராய்ந்து தீ மூட்டி, அக் காடு முழுவதும் எரிந்து போனதும், தீ, தானுக அடங்குவது போலவே, நம் உடல் வாழ்க்கை.

**மரணத்தைக் கொலைக்குச் சமமாகக் கருதுவது பெருந் தவறு.** எந்த, இடுக்கண்ணும், தீமையுடன் நன்மையும் பயக்கும். நன்மை கலவாத் தீமை யில்லை. அதே போல், தீமை சம்பந்தப்படாத நன்மையும் இப் பூவுலகில் இல்லை. ஞானிகள், தங்களுக்கு, ஏற்படும் இடையூறுகளைத் தங்களுக்கு அனுகூலமாகச் சமைத்து கொள்வார்கள். வியாதி எல்லோரையும் அணுகுவதுண்டு. வியாதி என்பது, இயற்

கையின் மருத்துவச் சிகிச்சையே. நம், தவறுகளால், நம் உடலில் ஏற்படும் கோளாறுகளை நீக்கி, உடலை நல்ல நிலை அடையச் செய்வது வியாதி, நோய். உடல் கோளாறுகள் குணங் காணுது போகும் நிலையை, மரண மென்கிறேம். அந்நிலையில், பழுதுபட்ட உடலை இயற்கை அழித்து விடுகிறது. ஆக, மரணமே, உடலில் ஏற்படும் தீராத வியாதிகளை எல்லாம் நீக்க வல்லது. கொடிய நோய்வாய்ப்பட்டவர்கள் மரணத்தை விரும்புவது ஏன்? தவிர, மரணம், படைப்பின் ஒரு முக்கியமான நோக்கத்திற்குத் துணை புரிவதாகவே ஏற்பாடானது. இயற்கை, இனப் பெருக்கத்திற்காக, மனிதனுக்குச் சிற்றின்ப சுகத்தைக் காட்டித் தன் எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்வதோடு, மரணத்தையும் ஏற்படுத்தி, ஜீவன், பரிணும முறையில், உயிரினத்தின் உயர் படியை யடைந்து, விடுதலைக்கு வழி காணுவதேயாம் உருவ மாற்றம் மூலமே, ஜீவன், பரிணும முறையில், ஒரு படியிலிருந்து வேறு படியடைய முடியும். இந்த உருவ மாற்றமளிக்க, இயற்கை கையாளும் உபாயமே, மரணம்.

இயற்கையின் போக்கெல்லாம், சுழல் வட்டமாகவே அமைந்திருக்கின்றன. மாறுதலே அதன் நடை முறை, உபாயம். சிசுவாகிப் பாலனுகி, யுவனுகி, காளையாகிக், கிழமாகி, மரணம் என்ற தெளிவற்ற மாறுதல் மூலம் மறுபடியும், சிசுவாகப் பிறக்கின்ருன் மானிடன். ஆனுல், இச்சுழல் வட்டத்தில், மரண மூலமான மாறுதல், நம் புலன்களுக்குத் தோன்ருது, மறைந்து செயல்படுகிறது. அந்நிலையில், இச் சங்கிலித் தொடர், அறுந்து விடுவதாக எண்ணுகிறேம். அதற்கு ஆதாரமில்லை. அந்த எண்ணம் தவறே. நிற்க, உருவங் கொண்ட யாவும், அழிவுக் குட்பட்டதே என்ருலும், அழிவது, உருவம் மட்டுமே; உருவத்தைத் தரிக்கும் மூலமல்ல. தங்கத்தால், வெவ்வேறு வடிவங்கொண்ட நகைகள் செய்கிறேம். அவ்வுருவங்களை யழித்து, வேறு உருவங்கொடுத்து, புதிய ஆபரணங்கள் செய்து அணிகிறேம். அழிவுபட்டது, உருவமே; தங்கம் அழிவதில்லை. அதே போல், மண்ணுக்கழிவில்லை; மண்ணுல் செய்யப்பட்டு, உருவமேற்று, பெயர் கொண்ட பானையே அழிகின்றது. மண் எக்காலும் அழிவில்லாதது. இப்பிரபஞ்சத்தை ஆதரித்து நிற்கும் பரம்பொருள் ஒன்றே. அது அழியாதது. ஆனுல், அது சமைத்துக்கொள்ளும் உருவங்கள், அழியுந்தன்மை படைத்தவை, குறைபாடுள்ளவை. இக்குறைகளால், அவ்வுருவங்கள், அழிவுபட்டே' தீரவேண்டும். அவைகளே அசத், நிலைத்திராதவை. சத்தாகிய பரம்பொருள், தன்னை நிரூபணஞ் செய்யவே, அசத்தாகிய வடிவங்களை மேற்கொண்டு, அவைகளை

அழிக்கின்றார். சத், உண்மையானது, அது ஒன்றே; அசத், உண்மையில்லாதது; அவை பல. சத் பாவத்தை நம்மால் காணவோ, அறியவோ இயலாது. ஏனென்றால், நிறை பொருள், நம் குறைபாடுள்ள ஐம்புலன்களுக்கு அடங்காதது, அப்பாற்பட்டது. அப் பரமனின் பேரொளியின் திவலை போன்ற ஓர் அம்சத்திலிருந்தே உண்டானது இப்பிரபஞ்சம். சத்தை முழுவதும் வர்ணிப்பது மானிட நாவுக்கு இயலாது (X-40, 41). சத்தானது, அசத்தின் உருமாற்ற அழியுந்தன்மையாலேயே, தன் உருவ மற்ற அழியா நிலையை ஓரளவு சூசகமாக நிலைநாட்டுகிறது. இயற்கையின் இயல்பு, பள்ளத்தால், மேட்டை நிலைநாட்டும். அழியுந்தன்மையே, அழியாத் தன்மையை, நமது அறிவுக்கு உணர்த்தக்கூடும். அசத்தின் அழிவாகிய மரணம், சத்தாகிய அழிவில்லாப் பரமனை, மானிடனுக்கு ஓரளவு அறிமுகஞ் செய்விக்கிறது.

என்றும் வந்தே தீரும் சாக்காட்டை, பொதுவாக, எல்லா ஜீவன்களும் வெறுக்கின்றன. மரணத்தைத் தார்க்காட்ட, அறிவு படைத்த மானிடன் எவ்வளவோ பாடுபட்டு முயற்சித்தாலும், அவன் தன் மடமையான செயல்களால், அதைத் துரிதப்படுத்திக் கொள்ளுகிறான். மரணத்தைக் காலன் என்றும், யமன் என்றும், உருவங்கொடுத்துப் பேசுவதுண்டு. தருமத்திற்குத் தலை சிறந்த எடுத்துக்காட்டு மரணமே. கிழவன், குழவி, அரசன், ஆண்டி, பணக்காரன், ஏழை, அதிகாரி, பாட்டாளி, ஆண், பெண் என்ற யாதொரு வேற்றுமையும் பாராட்டாது, மரணம் தழுவும். எதையும் பொருட்படுத்தாத மரணத்தைக் கண்டு பயப்படாதார் இல்லை. மரணம் எக்காலமும் கற்பித்துக் கொண்டிருக்கும் படிப்பினையை உலக மக்கள் உணர்வதேயில்லை. மனிதன் தன் பிறப்பிலிருந்து, உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளுகிறான்; பணம், பதவி, புகழ், இவைகளைத் தேடி அடைகிறான். ஆனால், அழியும் உடலாலான, இவை யாவும், மரணத்தால் ஒரே நொடியில் அற்றுப் போகின்றன இந்த, விலக்கே இல்லாத உண்மையை, நாள்தோறும், நிமிடந்தோறும், கண்ணாரக்கண்டும், மயக்கத்தால் மதியிழந்து, இடுப்பு ஒடிய, பொதி சுமக்கும் கழுதை போல், தனக்கில்லாதவற்றை, வாழ்நாளை வீணாக்கித் தேடி வைத்து, சுமை தாங்கி போல் சுமந்து நின்று, மரணம் அச்சுமைகளை இறக்கும் வரை, சுமந்து அவதிப்படுகிறான். மரணம் நம்மைக் கேட்டு வருவதில்லை, அது, தன்னிச்சைபோல், எவரை வேண்டுமானாலும், முன்னவர், பிந்தியவர் என்று கருணை காட்டாமல், எடுத்துச் செல்லும், மரணத்தை, நல்லதென்றோ, கெட்டதென்றோ, சொல்வதற்

கிடமில்லை. **பிறப்பதற்கும், இறப்பதற்கும், நாம் பொறுப்பல்ல** என்பதைத் திடமாகக் கொண்டு, நிம்மதியான மனத்துடன், விடைபெற வேண்டும். பிறப்பு, நம்மேல் உலகப் பளுக்களைச் சுமத்துகின்றது; ஆனால், மரணம், அப்பளுக்களை அகற்றி விடுகிறது. இன்பம் துன்பம், பசிப்பிணி, மானம், அவமானம், வெற்றி, தோல்வி, என்ற எதிர்நிலைகள் இணைபிரியாது, நம்மை வாட்டும், **இப்புவி வாழ்க்கையா, என்றும் விரும்பத்தக்கது?** இதைக் காட்டிலும், நல்லதொருநிலை கிடையாதென்று எண்ணுவது விவேகமாகுமா? இப்புவி வாழ்க்கையிலிருந்து விடுபடும் பொழுது, துக்கப்படுவது ஏன்? பிறப்பைச் சந்தோஷமாக ஏற்கும் நாம், இறப்பை அழுது புரண்டு வெறுப்பதேனோ? உடலில் கட்டுப்பட்ட ஜீவன், பிறக்கும் பொழுது கதறுகின்றது; ஆனால் உடலைவிட்டுப் பிரியும் போது, மௌனமாகவே மறைந்துவிடுகிறது. எவர் செயல் சரியானது? இப்பூவுல வாழ்க்கையின் உண்மையை உள்ளபடி யறிந்து நடப்போன் அரிதிலும் அரிது. **ஆன்ம நம்பிக்கையுடன், நடப்பவனுக்கு ஒருக்காலும் துன்பமில்லை, அழிவில்லை.** (VI-40; IX-31).

நம்மைப் படைத்தது, யார்? நமக்குக் காரணம் யார்? நமது பெற்றோரா? அல்லது, இயற்கையா, இவ்வுலகமா, நமது கர்மாவா? ஒன்றுமில்லை. இவை யாவும், கருவியாகவும், சூழ்நிலையாகவும் ஏற்படுகின்றன. **ஜீவன்களின் பிறப்புக்கும், அழிவுக்கும் பொறுப்பு, பரமனே** (VII-6; X-20; XI-32-33). படைக்கப்பட்டன வெல்லாம், கேவலம் கருவிகளே. படைத்தல், காத்தல், அழித்தல் என்ற முச்செயல்களுக்கும், பரமனே பொறுப்பு என்பதை, ஹிந்து மதம் மட்டுமே கூறுகிறது. இதை, அப்பட்டமாக, மற்ற மதங்கள் ஒப்புக்கொள்ளவில்லை. ஏன்? படைத்துக்காக்கும் தொழில், கருணை கூர்ந்தவை. ஆனால், அழிக்குஞ்செயல், எவ்வாறு அன்பின் கூற்ருகும்? மரணத்தை, ஒரு கேடாகவே கருதுபவர்கள், ஜீவவதை செய்து, பிற உயிரைப் போக்கிப் பிணத்தை உணவாக்கிக் கொள்வது, போன்ற செயல்களுக்குத் தடையே போடுவதில்லை. சில மதச்சடங்குகளுக்கு, ஜீவவதை அவசிய மென்று கூட ஏற்படுத்திக் கொண்டிருக்கிருர்கள். இக்கொடிய முரண்பாட்டிற்கு, சமாதானமாக, உயிர்களில், மேலினம், கீழினம், என்றும், மனிதனுக்காகவே மற்ற ஜீவன்கள் படைக்கப்பட்டன வென்ற சுயநலக் கொள்கைகளைத் தாங்களே வகுத்துக் கொள்கிருர்கள். “மிருக பலமே, நியாயம்”, என்ற வனவிலங்குகளின் சட்டத்தை, மனிதனும் பின்பற்றத் தடைபோடாது, சம்மதிக்கும் மதங்களும் கூட,

கடவுள் கருணைக்கடலாதலால், மரணத்திற்கு, அவர் பொறுப்பேற்கார் என்றமுடிவு கட்டி, மரணத்தை, மனிதனே, அல்லது கடவுளின் எதிரியோ, ஏற்பாடு செய்வதாகக் கூறுகின்றன. இவ்வாறு நினைப்பது தவறு. மரணம், மனிதனுக்குக் கேடு விளைவிக்காமல், நன்மை பயக்கும் உபாயமாகக் கருதுவது, ஹிந்து மதம் ஒன்றே. மறுபிறப்பிலும், வினைப்பயனிலும், நம்பிக்கை கொண்டு, மரண பயத்தை நீக்க, ஹிந்து மதம் வழிவகை செய்கிறது. மரணமில்லாமல், ஜீவன் முன்னேற்றங் காணமுடியாதென்பதினாலேயே, அது, கடவுளால் ஏற்படுத்தப்பட்ட ஒரு தர்மநியதி என்று ஹிந்து மதம் கற்பிக்கின்றது. கடவுளை, இதற்காகக் குறை கூறுவதோ, அவர் அன்பிலும், கருணையிலும் சந்தேகங்கொள்ளுவதோ, பெருந்தவறு.

ஹிந்து புராணக்கதைகள் நமக்கு என்ன படிப்பினை அளிக்கின்றன? சில, தவறுகளால் சாபத்திற்குள்ளாகிப் பின்னும், தப்பான வழிகளில் செயல்புரிந்து, பிறகு, சாபவிமோசனம் கிட்டுங்கால், கடவுளாலேயே அழிக்கப்பட்டு, நல்லகதியடைந்தார்கள் என்பதே. அவர்களுக்கு மரணமேற்படாவிட்டால், அவர்களின் கதிதான் என்ன? உலகத்தின் நிலைதான் எவ்வாருகும்? அநீதிக்கு முடிவு கட்டவேண்டும். அதேபோல், ஜீவன்களின் பெருங்குறைகளுக்கும், குற்றங்களுக்கும் முடிவு கட்ட, மரணமே ஒரு சஞ்சீவி. மரணத்தால், குணப்படுத்த முடியாத துயரில்லை. வாழ்நாளில், சில சமயத்தில், அதுவரை ஏற்பட்ட முக்கியமான, பழைய நிகழ்ச்சிகளைக் குறித்து, நாம் பெருமிதமோ, அல்லது வருத்தமோ அடைந்து, நமக்கு மற்றுமொரு வாய்ப்பளித்தால், தவறுகளைத் தவிர்த்து, வாழ்க்கையைச், சீரும் சிறப்பும் பெறச் செய்ய முடியுமே, என்று, ஏங்கித் தவிப்பது இல்லையா ? காலம், பின் செல்லாது. ஆனால், மறு பிறவி மூலம் இந்த ஏக்கந்தீர வழி ஏன் ஏற்படமுடியாது? மரணமே நமக்கு வாழ்க்கை மறுவாய்ப்பு அளிக்கும் உபாயம். VI-42, 45-ல் கீதை இதை ஊர்ஜிதம் செய்கிறது.

ஒரு சிலரே, தமக்கு எப்படியும் மரணம் உண்டு என்ற எண்ணத்தை மறவாமல், தங்கள் வாழ்க்கை முறையை வகுத்துக் கொள்ளுகிறார்கள். பெரும்பாலோர், மரணத்திற்குத் தயாராகவே இருப்பதில்லை. பெரும்நோய்வாய்ப்பட்டாலுங்கூட, மரணத்தைத் தடுத்து விடலாமென்றே, எண்ணுகிறார்கள். என்றும் வருவது தானே, மரணம்; அது இன்று வந்தா லென்ன, என்ற மன நிம்மதியைக் கொள்ளமாட்டார்கள். அவர்கள் கட்டும் மனக்கோட்டைகளும், அவற்றுக்கான முயற்சிகளும், என்றென்றும், அவர்களை, மரணத்

திற்கு ஆயத்தமில்லாதவர்களாகவே, செய்கின்றன அவர்களின் தொழிலெடுப்புக்கான சங்கல்பங்களுக்கும், செயல்களுக்கும் ஒரு நாளும் முடிவில்லை. மரணமே, அவைகளுக்கு முற்றுப்புள்ளி இடும். இதனால், அவர்கள் வாழ்வில், அதிர்ச்சியும், சீர்குலைவும் ஏற்படுவது நியாயமே. ஆசைகளுக்கு இடமளித்து, வீணான முயற்சிகளில் ஈடுபடுவதினின்றும், மனிதன் மரணத்தால் எச்சரிக்கப்படுகிறான். ஆசைகளே, மரணபயத்தை அதிகப்படுத்துகின்றன. ஆசையை அறவே யொழித்தவனுக்கு, இருப்பும், இறப்பும், ஒன்றேயாம். மரண பயமே, மனிதனை "நான் யார்", என்ற வினாவுக்கு விடை காணத் தூண்டவேண்டும்.

ஹிந்து புராணங்களில், ஹிரண்யன், பத்மாசுரன், வாலி, ராவணன் போன்றவர்கள் கடுந்தவத்தின் மூலம், பெரும் பலம் பெற்றதுடன், தங்கள் மரணத்தையும் கடும் அசாதாரணமான நிபந்தனைகளால், எளிதில் ஏற்படாவண்ணம் செய்துகொண்டு, இது காரணங்களாலே, இறுமாப்படைந்து, உலகோருக்குப் பெருந்துன்பத்தை யளித்து வந்தார்கள். அவர்கள் நினைத்தபடி, மரணத்தையே அடையாமல், அவர்களைச் சிரஞ்சீவிகளாக வாழவிட்டால், உலகிலுள்ள மற்ற ஜீவன்களின் கதி எவ்வாறாகும்? அவர்களின் சரித்திரமே போதும், நமக்கு மரணம் கொடுமையை அழிக்கும் திறமையான சஞ்சீவி என்று நிலைநாட்ட. மரணமே, நம்மில் அநேகரைக் கொடிய செயல்களினின்றும் காப்பாற்றுகிறது. "வாழும் உயிரினை வாங்கிவிடல், இந்த மண்ணில் எவர்க்கும் எளிதாகும். வீழும் உடலை எழுப்புதலோ, ஒரு வேந்தன், நினைககிலும் ஆகாதைய்யா." ஆகையினால், கொலை, ஜீவவதை, அடியோடு தடுக்கப் பெற்றன. உடல் எடுத்ததின் நோக்கம், இப்புவி வாழ்க்கைக்கே என்ற குறுகிய தவறான குறிக்கோளை மறுதலிக்க, மரணம் ஒன்றே போதும்.

மரணம் ஒரு இயற்கைச் சம்பவம். அது, இப்புவி வாழ்வுக்குத் தடையாகிறதென்று நாமெல்லோரும் கருதினாலும், உண்மையில், மரணமே நமது குறிக்கோளை அடைய வாய்ப்பளிக்கின்றது. நமது ஜீவனுக்கு ஏற்பட்ட புவி வாழ்க்கையின் காலத்தை, நாம், குறைக்கவோ, கூட்டவோ, ஏன் விரும்பவேண்டும்? குறுகிய காலம் வாழ்ந்தாலும் சரி, நெடிது ஜீவித்திருந்தாலும் சரி, நம், கவனத்திற்குரியது, வாழ்நாட்களின் அளவையல்ல; வாழ்க்கையின் தன்மையும், தரமுமே. வாழ்நாட்களின் அளவையைத் தீர்மானிப்பது நாமல்ல. ஆனால், வாழ்க்கையின் தரத்தையும், தன்மையையும் நாமே சமைத்துக்

272904 R65,6:9 31[MOJ·2

கொள்கிறோம். அவை, நாம் நினைத்து முயன்றால், நம் கட்டுப் பாட்டிற்குட்பட்டவையே. வாழ்க்கையை மேம்படச் செய்வது நமது கடமை. மரணத்தைக் குறித்துக் கவலை கொள்வது மடமை. தவிர்க்கக்கூடாத மரணம் வருங்காலம் வரட்டும்; கிடைத்த நாட்களை, நன்னாட்களாக்க முயல்வோமாக. மரண பயம் ஒழிந்தாலே, வாழ்க்கையை, இனிதாக்க முடியும். வாழ்க்கையின் இனிப்பு, அதை எளிய தாக்கும் தன்மையைத் தழுவி நிற்பது. டாம்பீக வாழ்வே துன்பத்தின் கருவூலம். மரணத்தின் மர்மததையுணர்ந்து, பயத்தை நீக்கி, நற்றொண்டுகளைத் தாமதியாமல் செய்து முடிக்கவேண்டும். மரணம், நம் சௌகரியத்திற்காகக் காத்து நிற்காது.

விஞ்ஞான ரீதியில் மரணமென்பது யாது? பரிணும முறையில், ஜீவன்களின் அடிப்படி, ஒரு ஸெல்லாலாகிய உயிரிகளே. ஸெல் என்பது உயிர்த்தொகுதியின் அணு எனலாம். ஸெல்லின் மையத்தில், ஒரு கருவும், அதைச் சுற்றி, ஜவ்வு போன்ற பொருள் சுவராகவும் அமைந்திருக்கிறது. ஸெல் வளர்ச்சி பெற்றதும், தானுகவே, இரண்டாகப் பிளவு பட்டு, இரண்டு பாகமும், இரண்டு புதிய, முழு ஸெல்களாகின்றன. மரண மென்பதை இவை அறியா. ஏனென்றால், இவற்றின் இனப்பெருக்கம், இந்தப் பிளவு ரீதியில் ஏற்பட்டு, புதிய உறுப்புக்கள் ஒவ்வொன்றும், மூல ஸெல் போலவே காணும். அழிவுக்கு இடமேயில்லை. இந்த ஒரு ஸெல் இனத்துக்கு நேர் மாறானவை, பல ஸெல் தொகுதிகளால் ஆகும் மற்ற உயிரினங்கள்.

ஒரு ஜீவனில், பல ஸெல்கள், கூட்டங் கூட்டமாக ஏற்பட்டு, ஒவ்வொரு கூட்டமும், அதற்கென ஏற்படுத்திக்கொண்ட வேலையை மட்டுமே செய்கிறது. ஒரு ஸெல்கூட்டம், உணவு சேகரிக்கவும், மற்றொன்று, உணவை ஜீரணிக்கவும், வேறு ஒரு ஸெல் கூட்டம் பாதுகாப்பு வேலையிலும், சில சலனமேற்படுத்தவும், இம்மாதிரியான, தனித்தனி வாழ்க்கைத்துறை வினைகளை மேற்கொள்ளுகின்றன. குறிப்பிட்ட வேலையைச் செய்யும் ஸெல் கூட்டங்கள், தங்கள் தங்கள் வேலையை ஆற்றுவதாலேயே, தேய்ந்தும், பின், மாய்ந்தும் போய்விடுகின்றன இக்கூட்டங்களால் இனப்பெருக்கம் ஏற்படுவதில்லை. ஜீவனின், உடல் உறுப்புக்கள் இவைகளாலானவையே. உடலின் உட்புறத்தில், வேறு ஸெல் கூட்டங்கள் அமைந்திருக்கின்றன. அவைகளே இனவிருத்திக்கான வேலைகளை மேற் கொள்ளுகின்றன. இந்த உட்புற ஸெல்கள், விருத்தியாகிப் பெருகும் முறை, முன் கண்ட ஒரு ஸெல் உறுப்புப்போல், பிளவுபடுவதால் அல்ல. இவை தங்களு

டைய கருவை, பெருக்கிக்கொண்டு, ஒரே தொகுதியாகவே, அமை கின்றன. இவைகள், இரண்டு முக்கிய வேலைகள் புரிகின்றன. ஒன்று, வெளிப்புறமாயுள்ள பாட்டாளி ஸெல் கூட்டங்கள் வேலை செய்து, தேய்ந்து, மாய்ந்து போகும் பொழுது அவ்வுறுப்புக்களின், தேய் மானத்திற்கும், மராமத்துகளுக்கும், வளர்ச்சிக்கும், தேவையான புது ஸெல் கூட்டங்களை யளித்தல்; இரண்டாவதாக, தங்களில் ஒரு பகுதியை, இனவிருத்திக்கான தொழிலில் ஈடுபடுத்துவதாகும்.

பல ஸெல் கூட்ட ஜீவன்கள், இவ்வாறு, உடலைப்பெற்ற காரணத் தால், அவ்வுடலின் வளர்ச்சிக்கும், பாதுகாப்புக்கும், மற்றும் வேலை கள் செய்வதால் ஏற்படும் தேய்மானத்திற்கும், ஈடுகட்ட நேரிடுவ துடன், இனவிருத்திக்காகவும், ஸெல் கூட்டங்களை விரயஞ்செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் அடைந்தன. காலப்போக்கில், உடல் தேய்ந்து, பின் அழிந்தும் போகின்றது. இந்த அழிவிலிருந்து, உடலைக்காப்பது முடியாது. என்றாலும், உடலில் உயிருள்ள மட்டும், அதன் போஷாக்குக்காக உண்ணும் உணவிலிருந்து, போதிய பாட்டாளி ஸெல் கூட்டங்களையும் உண்டுபண்ணுவதுடன், இன விருத்திக்கான ஸெல் கூட்டங்களையும் நாம் உட்கொள்ளும், அதே ஆகாரத்திலிருந்தே பெறவேண்டும். இவ்வாறு, ஆகாரம், இரண்டுவித வேலைகளுக்கு ஆதாரமாக இருக்கிறது — ஒன்று, நம் உடலைப் பேணிக்காக்க வும், மற்றது, வேறு புதிய உடலை உற்பத்தி செய்யவும். முன்னது, தனி ஜீவனின் சுய நலனுக்காக வேண்டுவது ; இரண்டாவது, பிரபஞ்சம் நிலைக்க, இயற்கையின் நியதியாக ஏற்பட்டது. இந்த இரண்டும், ஒன்றுக்கொன்று, ஓரளவு, முரண்பட்டதாக அமைந்திருக்கின்றன. இன உற்பத்திக்காகப் பெருமளவு ஸெல்களைச் செலவு செய்தால், ஜீவனின் உடல் நலம் பாதிக்கப்பட்டு, ஜீவன் சீக்கிரமே மரண மெய்தும்.

இது காரணமாகவே, பிரம்மச்சரியத்தை, வெகுவாகப் போற்று கிறார்கள். பிரம்மசரிய மென்பது (இந்த சந்தர்ப்பத்தைப் பொருத்த மட்டில்) இன உற்பத்திக்கான ஸெல் கூட்டங்களை, எவ்வித உபாயத் தினாலும், வெளியாக்கிவிரயஞ்செய்யாமல்காப்பதே. இந்திரிய நஷ்டமே, பிரம்மச்சரிய நஷ்டம். இக்கட்டுப்பாட்டை மேற்கொண்ட ஜீவன், தன் உடல் நலத்தையும், வலுவையும் அடைய முடியுமென்றாலும், உடலை மரணத்தினின்றும் தப்புவிக்க இயலாது. ஹனுமான் போன்றவர் களின் சிரஞ்சீவித்தன்மை பிரம்மச்சரியத்தால் மட்டுமே கிட்டியதாகக் கருதமுடியாது. ஆன்ம வளர்ச்சியில் அவர்கள் எட்டிய உச்ச

நிலையே முக்கிய காரணமாக இருக்கலாம். பிரம்மச்சரியத்தால் வாழ்க்கையை நீடிப்பதுடன், நிச்சயமாக அநேகம் உடல்பிணிகளைத் தடுத்து வாழ்க்கையை துன்பமற்றதாகச் செய்யலாம். முதன் முதலாக, மனம், புத்தி, இவை வலுப்பெற்று, ஜீவனை மேம்படச் செய்யும். இனவிருத்தி ஸெல்களை வீண்விரயஞ் செய்பவர்களின், புத்தியும், மனமும், க்ஷீணித்து, வலுவற்றதாகிவிடும்; உடலும், அதுபோல, சக்தியற்றதாகிவிடும். ஜீவிப்பதே ஒரு பெரும் பாரமாகத் தோன்றும். பிரம்மச்சரிய நஷ்டத்தால் மட்டுமே மக்கட்பேறு கிட்டி விடாது. அதற்கும் தெய்வானுகூலமும் வேண்டும். **இந்திரிய விரயம், மக்கட்பேற்றை யளித்தாலும், அளிக்காவிட்டாலும், அது மரணத்தை விரைவில் அடையச் செய்யும்.** இந்த உண்மையை யறிந்த மானிடன் எவனும், நவீன விஞ்ஞானக் கருவியான குடும்பக் கட்டுப்பாட்டு முறைகளைத் தற்கொலையாகவே கருதுவான். இனப் பெருக்கத்தைத் தவிர்க்க பிரம்மச்சரியத்தை மேற்கொள்ளப் போதிய ஆன்ம வளர்ச்சியை உண்டாக்கிக் கொள்ளாமல், இயற்கை, எப்பயனின் காரணமாக பால்உணர்ச்சியைத் தூண்டுகிறதோ, அவ்வனுகூலமான பலனைப் பிரதிகூலமெனக்கருதி பலாத்காரமாகத் தடை செய்து, தவிர்க்க முடியாத, நம் மரணத்தை, குடும்பக்கட்டுப்பாடுக் கருவிகள் மூலம், விரைவில் தழுவுகிறோம். இயற்கையின் நியதியையும் வீணடித்து, நம்மையும் பலவீனப்படுத்தி, நம் வாழ்க்கையைப் பாழ்படுத்தும் இந்த நவநாகரீக முறைகளுக்கு, ஏழைப் பொதுமக்களின் பணம் கோடானுகோடி விரயமாவது நமது போதாத காலமே. **மரணம் ஏற்படக்காரணம், நாம் உடல் பெற்றதினாலே தான்.** உடல் அழியுந் தன்மையது. உடலின்றேல் மரணமில்லை. இரண்டாவது காரணம், இனப்பெருக்கச் செயலுக்காக ஏற்பட்ட பாலுணர்ச்சிக்கு இடங் கொடுத்தல், மரணத்திற்கு இடங்கொடுப்பதேயாம். எவ்வகையிலும், உடலுக்கு மரணம் தவிர்க்கவொண்ணாதது. அதற்கு, அஞ்சுவதில் பயனுண்டோ ?

மரணத்தின் மர்ம விளக்கம் வாழ்க்கை முறையின் உயிர் நிலையாம். ஆன்ம நம்பிக்கையே, இவ்விளக்கத்தின் அடிப்படை. ஆன்மா மறுக்கவொண்ணாத தென்று, நம் பகுத்தறிவுக்குப் புலப்படச் செய்வது மரணம். இவ்விளக்கத்தின் உண்மையை உணராதவர்கள் கீதையையோ, மற்றும் எந்த மத நூலையோ, நன்கு புரிந்து கொள்ள இயலாது அவர்களின் வாழ்க்கை முறை ஒழுங்குக்கும் தர்மத்திற்கும் முரண்பட்டதாகவே அமையும்.

---

# III. சாங்கியமும், கீதையும்

கபிலமுனிவர் இயற்றியதாகக் கூறப்படும் **சாங்கிய சாத்திரம், பிரபஞ்சத்தின் அமைப்பைப்பற்றிய கோட்பாடுகளைக் கூறுகிறது.** பிரகிருதி தத்துவங்களைப்பற்றிய விளக்கங்களுக்கு இந்த சாத்திரமே முடிவான பிரமாணம். குணங்களின் பாகுபாடுகள், கீழ் பிரகிருதியின் தத்துவங்களெல்லாம் இந்நூலினின்றே அறிந்து கொள்ள வேண்டும். இம்முறையில், பிரபஞ்சத்தின் அமைப்பு இரண்டு மூலங்களால் ஆக்கப் பெற்றது. ஒன்று, பிரகிருதி, மற்றது, கணக்கற்ற புருஷர்கள். **பிரகிருதி** அல்லது இயற்கையின் அமைப்பு, மூன்று, ஏற்றத் தாழ்வில்லாத **குணங்களை அடிப்படையாகக் கொண்டது.** இக் குணங்களை மூலப்பிரகிருதி என்றும் சொல்வதுண்டு. இந்த முக் குணங்களின் பெயர், சத்வன், ரஜஸ். தமஸ், எனப்படும். இவை எத்தன்மையானவை என்பதே ஒரு ரகசியம். ஜடமுமல்ல, சக்தியுமல்ல. ஆனுல் இவை ஊடுருவாத பொருள், இப்படைப்பில் கிடையாது. இவற்றின் அடிப்படையிலே மற்ற பிரகிருதி தத்துவங்கள் ஏற்பட்டன. இருபத்தி நான்கு, பிரகிருதி தத்துவங்களில், குணங்களே முதல் தத்துவமாம். இக்குணங்கள், ஏற்றத் தாழ்வையடைவதினுலேயே, பிரபஞ்சம் உண்டாகின்றது. முதன்மையும், முக்கியத்துவமும் வாய்ந்த, இக்குணங்கள், பிரகிருதியாகிய, மாலைக்கு, நூல் போல் அமைந்திருக்கின்றன. வாழ்வையோ, தாழ்வையோ, செயலையோ, செயலின்மையையோ, இக்குணங்களே ஏற்படுத்துகின்றன. இவை மூன்றும், இணைந்து ஒருங்கே நிற்கின்றனவென்றுலும், அவைகளுள், ஒன்றுமேலோங்கும் சமயம், மற்றவை தணியும். ஆனுல், இவற்றில், ஒன்றையாவது வேறுடன் அகற்றிவிட இயலாது. படைப்பில், மூன்று குணங்களும் இருந்தே தீரும். தொடக்கத்தில், இக்குணங்கள், சமநிலையில், அதாவது செயலற்ற நிலையில், இருப்பவையாம். இவற்றின் சமநிலை குலையும்பொழுது, இதர பிரகிருதி தத்துவங்கள், விரிந்து கொடுத்து, பிரபஞ்சம் ஏற்படுகிறது. இவ்வாறு, **குணங்களின் சமநிலையைக்** குலைப்பதும், அதனுல், **பிரபஞ்சம் உண்டாவதும்,** பிரகிருதியைச் சாருத, புருஷனுலே, என சாங்கிய முறை கூறுகிறது.

புருஷனுக்கும், பிரகிருதிக்குமுள்ள தொடர்பு எத்தன்மையது, என்பது யாரும் அறியக்கூடாத புதிர். புருஷனுடைய சம்மதம் இல்லாமல், பிரகிருதி வளர்ச்சிபெற இயலாது. ஆனுல், பிரகிருதி வளர்ந்து, செயல்பட்டு, பிரபஞ்சத்தை யுண்டாக்குவதில், புருஷனின்

நோக்கமென்ன, என்பது விண்ணமுடியாத ரகசியமே. புருஷன், பிரகிருதி, இவை இரண்டுமே, நிரந்தரமானவை, அழிவற்றவை ஆனால், புருஷன்; பிரகிருதிக்கு முற்றிலும், மாறான இயல்புடையது. புருஷ தத்துவம், செயலற்றது என்றாலும், பிரகிருதியை செயல்படச் செய்யும், வல்லமையளிப்பது, புருஷனே. கபில சாங்கியத்தில், புருஷ தத்துவத்திற்குக் கணக்கில்லை. பிரகிருதியின் ஒவ்வொரு படைப்புக்கும் ஒரு புருஷ தத்துவம் உண்டு. ஆதியும், அந்தமுமில்லாத, சுதந்திரமான, இரண்டு வெவ்வேறு, சித்தாந்தங்களாகிய, புருஷனும், பிரகிருதியும், பிரபஞ்சம் ஏற்பட, நெருங்கிய தொடர்பு கொள்ளுகின்றன. குணங்களின் சமநிலை, இத்தொடர்பால் குலைந்து போய், குணங்கள் செயலற்ற நிலையி லிருந்து, சுருசுருப்படைந்து செயல்பட்டு, படைப்பு ஏற்படுகிறது. பிரபஞ்சத்திலுள்ள பொருள்களில். எல்லையின்றி, வேற்றுமைகள், உண்டாவதற்குக் காரணம், முக்குணங்கள், பல்வேறு அளவில், படைப்புப் பொருள்களில் அமைவதே. புருஷன், பிரகிருதியின் பல்வேறு வளர்ச்சிகளுக்கு சம்மதந்தந்து, இந்த ஒத்துழைப்பினாலேயே பிரபஞ்சம் நடைபெறுகிறது. புருஷ தத்துவங்களெல்லாம், ஒன்றை யொன்று, எவ்வகையிலும் ஒத்திருப்பினும், பிரகிருதியின் நானாவிதப் படைப்புக்களில் ஒத்துழைக்கும் பொழுது, பல்வேறு படைப்புக் களின் பல்வேறு செயல்களையும், நிலைகளையும் முக்குணங்கள் தங்கள் வேறுபாட்டால், ஏற்படுத்தும் காரணமாக, ஒவ்வொரு படைப்பிலும் ஒரு புருஷ தத்துவம், வேறுபட்டுத் தனித்தே நின்று செயல்பட வேண்டியதாகிறது. இவ்வாறு, பிரகிருதியின் படைப்பில் சம்பந்தப்பட்ட புருஷனுக்கு விடுதலை யளிக்கவே பிரகிருதி ஒரு நிலையற்ற பிரபஞ்ச நாடகத்தை நடத்துவதாகக் கூறப்படுகிறது. புருஷன், தான் கட்டுண்டு, இருப்பதாக எண்ணுவதாகவும், அதனால், மயக்கத்தில் ஆழ்ந்திருப்பதாகக் கூறுவதும். பின் அந்த பந்தத்தி லிருந்து விடுதலை பெறுவதாகச் சொல்லுவதும், விந்தையாகவே தோன்றுகின்றன. இது இரட்டையாட்சி சாங்கிய முறை.

பிரகிருதி, சுயமாகவே, உணர்வற்ற ஜடநிலைமை வகிக்கின்றது. அது உயிரற்றது. ஆகையால், அது படைக்கும் ஆற்றல் பெறவோ, அல்லது படைத்த பொருள்கள் உயிருடன் செயல்படவோ, இன்ப துன்பங்களை யுணர்ந்து, அனுபவிக்கவோ, முடியாது. புருஷனே, உயிரையும், அதாவது, செயல்படத் திறமையையும், உணர்வையும் ஊட்டுகின்றான். என்றாலும் புருஷனிடத்தில் துன்ப இன்பங்கள், அனுபவிக்க, உறுப்புக்கள் இல்லை. புருஷனும், பிரகிருதியும், இணைந்திருக்கும் பொழுது தான், ஜீவன், இன்பத்தையும், துன்பத்

தையும், செயல்கள் மூலம் அனுபவிக்க நேரிடுகிறது. புருஷன், பிரகிருதி இவை இரண்டும் இணைந்ததே ஜீவநிலை. ஜீவன், புருஷனின் அளிப்பாலும், பிரகிருதியின் உறுப்புககளில்லாது, செயல்பட இயலாது. புருஷன் வேறு, ஜீவன் வேறு. இவற்றை ஒன்றாக எண்ணிக் குழப்புவது, பெருந்தவறு. இதுவே வாசகர்கள் மனதில், கீதையின் ஆன்ம தத்துவத்தை பதிய வொட்டாமல் செய்து, அவர்களைச் சந்தேக வாதிகளாக ஆக்கிவிடுகிறது. புருஷன் அல்லது ஆன்மா, எள்ளளவும் குற்றம் குறைவு அற்ற, மாறுதலே அடையாத ஒரு தத்துவம். ஆனால், ஜீவனுடைய நிலை, வளர்ச்சி பெற்றோ, குன்றியோ, மாறுபாடடையும் நிலையாம். ஒரு தனி ஜீவனின் நிலையுடன், அதற்கு மூலாதாரமான புருஷனைக் குழப்பி, ஜீவன் அனுபவிப்பதை, புருஷன் அனுபவிப்பதாகக் கொள்வது நியாயமற்றது, உண்மைக்குப் புறம்பானது. ஆன்மாவுக்கேது அனுபவம் ?

இவ்வுலக வாழ்க்கையின் அர்த்த மற்ற சம்பவங்களுக்கும் சுயநல நோக்கங்களுக்கும் காரணமான ஜீவன், புருஷனின் திரிபேயாம். பிரகிருதியின் குணங்களால் பாதிக்கப்படாத, அதாவது குணங்களுக்கு அடிமையாகாத ஜீவன், ஒரு குற்றம், குறையற்ற மனநிலை. இந்நிலையில் ஜீவன் தன் புருஷனை உணர்ந்து நிற்கின்றது. ஆனால், குணங்களால் திரிபு ஏற்பட்ட ஜீவன், குணங்களின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு, தன் புருஷனுடன், ஐக்கியமாவதைத் தன் குறிக்கோளாகக் கொள்ளுகிறது. காரணம், ஒவ்வொரு ஜீவதத்துவத்திலும் ஆன்மா குடிகொண்டிருக்கிறது. உலக அமைப்பில், புருஷனும், பிரகிருதியும் ஒன்றையொன்று எதிர்த்து, நிற்கவில்லை. ஆனாலும், கீழான குணங்களுக்கு ஆதிக்கங் கொடுத்தால், அவை ஜீவனை, ஆன்ம உணர்ச்சியிலிருந்து வெகு தொலைவுக்கப்பாலே கொண்டு போய்விடும். உலக நாடகம் முடிவடையாது நீடிக்கும். ஆன்மாவாகிய புருஷன் என்றென்றும், தூய்மையான, அப்பழுக்கற்ற, தன்மையது. உலக வாழ்க்கையில் ஏற்படும் போராட்டங்களாலும், இடையூறுகளாலும், ஆன்மா பாதிக்கப்படாதது. அது, அமைதிக்கும், சாந்திக்கும், பேரானந்தத்திற்கும், செயலின்மைக்கும் இருப்பிடம். முரண்பாடுகள், இன்ப துன்பங்கள், போட்டி, பொறாமை, இவற்றை யெல்லாம் தன்னகத்தே கொண்டவை, பிரகிருதியும், அதில் சிக்கிய ஜீவனுமே. கபில சாங்கியத்தில் கடவுளோ, பரம்பொருளோ, கிடையாது. அதை ஒரு நாத்திகக் கொள்கை யென்றும் கூறலாம். அதில் புருஷனும் பிரகிருதியும், சம அந்தஸ்து பெற்று, பிரபஞ்ச நாடகத்தை நடிக்க, தற்காலிகமாக, கூட்டுச் சேருகின்றன போலும்.

கபில சாங்கியத்தின் இந்த இரட்டை ஆட்சியையும், நாத்திகத்தையும் கீதை வேறுடன் கிள்ளி எரிந்துவிட்டு, ஆதாரங்களுக்கெல்லாம் ஆதாரமான பரம்பொருள் ஒன்றே என்றும், பிரகிருதி, அப்பரமனுக்குக் கீழ்ப்பட்ட அவரது சக்தியே என்றும், அவரது, ஆணையாகிய தர்மத்தையே, பிரகிருதி தனது நியதியாகக் கொண்டு, அவர் இஷ்டத்திற்காகவே செயல்படுகிறதென்ற சித்தாந்தத்தை நிலைநாட்டுகிறது. எல்லாம் பரமன் மயமே. அவனின்றி வேறொன்றும் கிடையாது. எல்லா ஜீவன்களின் இறுதி லட்சியம், பரமனை யணுகி, அவரில் ஐக்கியமாவதேயாம். பிரபஞ்சத்திலுள்ள யாவும், ஆன்ம வளர்ச்சி பெற்று, முன்னேறி வருகின்றன. கபில முறையில், ஆன்மாவுக்கும், பிரகிருதிக்கும் இடையேயுள்ள இணைக்க முடியாத பிளவை, கீதை இணைத்திருக்கின்றது. பிரகிருதி தத்துவங்களின் மூலமும், பரம்பொருளான தெய்வீகமே என்றும், ஜடஉலகுக்கு அடிப்படை பரமனே என்றும் ஊர்ஜிதப்படுத்துகிறது. பிரகிருதிக்குத் தனி சுதந்தரமளிக்காமல், புருஷ தத்துவத்திற்கு வசப்படுத்தி, பரம்பொருள் ஒன்றே, அதுவே எல்லாம், யாவும், என்ற தீவிர அத்துவைத சித்தாந்தத்தை கீதை நிலைநாட்டுகின்றது. இரட்டை நிலையில் ஏற்படும் பல சிக்கல்கள், அத்துவைதத்தில் தலைகாட்டா; என்றாலும், கபில சாங்கியத்தின் கணக்கற்ற புருஷ தத்துவங்களுக்கு அவசிய மேற்படுவதை யனுசரித்து, முழுமுதற் பொருளாகிய பரமனுக்கு மூன்று நிலைகள் உள எனக் கற்பித்துக் கொண்டு, நிலைமையை ஒழுங்கு படுத்துகின்றது கீதை. புருஷோத்தமர், அக்ஷரம், க்ஷரம் என்ற மூன்று நிலையும் பரமனதே. XV-16-ல் கூறுவது போல், அக்ஷரனும், க்ஷரனும் இரண்டு புருஷர்கள். உருவம், வடிவங்கொண்ட பிரபஞ்சத்தில் ஈடுபடுவது, க்ஷர புருஷன். இவன் அழியுந்தன்மையுடைய பிரபஞ்சத்துடன் சம்பந்தங் கொள்வதாலே க்ஷரன் அல்லது, நிலையில்லாதிருப்பவன் எனப் பெயர் கொண்டான். அக்ஷரன், க்ஷரனின் எதிர்நிலை ; என்றும் அழியாது, மாறாது நிலைத்திருக்கும் தன்மையது. இவ்விரண்டு புருஷ நிலைகளையும் அடக்கி, அவற்றைக் கடந்து, யாவற்றுக்கும், மேலாக நிற்பவரே, பரமான்மா என்ற புருஷோத்தமர்.

பரமன் அக்ஷரன், க்ஷரன், பரபிரகிருதி, அபரபிரகிருதி, க்ஷேத்திரம், க்ஷேத்திரக்ஞன், பிரம்மன், ஆன்மா இச்சொற்களெல்லாம், கீதையில் மிக முக்கியத்வம் வாய்ந்தவை. இவற்றின் பொருள்களை குழப்பத்திற்கிடமில்லாமல் தெரிந்து கொள்வது அவசியம். பரமன் அல்லது புருஷோத்தமன் என்பது முழுமுதற் பொருள். அதுவே யாவற்றையும் அடக்கியுள்ளது. எல்லா நிலைகளும், அதைச் சார்ந்தவையே.

சத்தும், அசத்தும் அதுவே. (IX-19). ஆனால் XIII-12-ல் தன்னை ஆதியில்லாத பரப்பிரம்மம் என்று வர்ணித்து, மேலும், தன்னை இருப்பதாகவும் (சத்), இல்லாததாகவும் (அசத்), கூற இயலாதென்று, முன்பு IX-19-ல் பகர்ந்ததை, மறுப்பதுபோல் காண்கிறது. உண்மை யாதெனில், எல்லா நிலைகளையும், ரூபத்தையும், அரூபத்தையும், அடக்கியவருதலின், முரண்பாடுகள்போல் தோன்றுபவை எல்லாம் பரமனிடத்தே, சந்தித்து சமமாகி, ஒன்றி விடுகின்றன. நல்லதும் அவரே. அது அல்லாததும் அவரே. இதையே விச்வரூப தர்சனம் ஊர்ஜிதப்படுத்துகிறது. அக்ஷரம், க்ஷரம், மேலான, கீழான, இரண்டு பிரகிருதிகள் யாவும், அவருள்ளே அடங்கியவை. ஆகையினாலேயே அவர் புருஷோத்தமர். மானிடனின் பாஷை ஒரு எல்லைக்குட்பட்டது. பரம்பொருளை நாம் நம் மொழியில், வர்ணிக்க முயலும் பொழுது, அவரை நாம் எல்லைக்குட்படுத்தி விடுகிறோம். எல்லையில்லாததை நாம் வர்ணிப்பது என்பது இயலாது. ஆகையினால், முரண்பாடுகள் தோன்றுகின்றன.

அக்ஷரம் என்பது க்ஷரநிலையின் எதிர்நிலை என்றோம். இந்த அரூப நிலையை பிரம்மன் என்றும், பகர்வதுண்டு. இதே சொல், வேதாந்தத்தில், பரமநிலை என்று வர்ணிக்கப்பட்டிருக்கிறது. மிகவும் செல்வாக்குள்ள வேதாந்தத்தின் முடிவு, பிரம்ம நிலைக்கு மேலில்லை என்பதே. ஆனால்; கீதை, அக்ஷரப் பிரம்மத்திற்கும், மேலானது புருஷோத்தம பாவமே என்று முடிவுகட்டுகிறது. என்றாலும், சில இடங்களில், இதற்கு முரண்பாடு தோன்றுவதாகக் கொள்ளுகிறார்கள். உதாரணமாக VII-24-ல் தன்னை உருவ மற்றவரென்றும், ஆனால், அறிவில்லாதவர்கள் உருவமுள்ளவராக, தவறாக எண்ணுகிறார்கள் என்றும் மொழிகிறார். இதற்கு, சமாதானப்படுத்தி விளக்கம் தருபவர்கள் கூறுவதாவது :— பரமன் ஒருவர் தான் என்று நம்பி, அவரை மட்டுமே தொழாமல், பல தெய்வங்களை, தவறான எண்ணத்துடன் வழிபடுகிறார்கள், பகுத்தறிவில்லாதார். கடவுள் ஒருவரே, என்ற கொள்கையை இது தெளிவாக்குகிறது. தவிர VIII-21-ல், இந்திரியங்களுக்கு எட்டாததும், அதாவது, தோன்றா நிலையிலுள்ளதும், அக்ஷரம் என்ற பழுது படாத நிலையையே, பரம நிலை என்றும், அதை ஜீவன்கள் அடைவதே மேலான லட்சியமாகுமென்றும், அதுவே தன் பரமபதம் என்றும் கூறுகிறார். அடுத்து உடன் மொழிவதாவது :— "எதில் எல்லா உயிர்களும் வாழ்கின்றனவோ, எதனால் யாவும் வியாபிக்கப்பட்டிருக்கின்றனவோ, அந்தப் பரம்பொருளை, பிரிதிடம் செல்லாத ஆழ்ந்த பக்தியால்

அடையலாம்." (இது முற்றிலும் வேதாந்த முறைக்குப் புறம்பானது.) ஆகவே, அழிவற்ற, புலன்களுக்குத் தோன்ருத நிலை என்பதும், தெய்வம் ஒன்றே என்ற அத்துவைதக் கொள்கையையே நிலை நாட்டுவதாகக் கொள்ளவேண்டும். அக்ஷர பாவம், க்ஷர பாவத்துக்கு விமோசன மளிக்கும் நிலை என்பது தெளிவு. பிரகிருதியின் சேர்க்கையிலிருந்து விடுதலையடையும் ஜீவன், அக்ஷர நிலையையடைந்தே தீரவேண்டும்.

க்ஷரநிலையே **ஆன்மா** என்றும் பகர்வது வழக்கம்; இதுவே பிரபஞ்சம் ஏற்படுவதில், பங்கெடுத்துக்கொண்டு, பரபிரகிருதி, அதாவது, மேலான பிரகிருதியாகின்றது (VII-5). **இதுவே**, கீழான பிரகிருதிக்கு **ஜீவபோதம் அளிப்பது.** பரமனின் க்ஷரபாவம், ஒவ்வொரு படைப்பிலும், பிரிந்து நின்று ஜீவபோதத்தை யளிப்பதால், நிலையற்ற, மாறுதலுள்ள, அழிவுற்ற, என்ற அடைமொழிகளைப் பெற்றது. ஆனல், ஆன்மாவுக்கு இவை பொருந்தா. சேர்க்கை தோஷத்தால், தவருக, வழக்கத்தில் வந்த இந்த உபாதைகள், பிரகிருதி பாகத்துக்கே உரித்தாகும். **க்ஷர ஆன்மாவுக்கும், பரமனுக்குமுள்ள தொடர்பு, நதிக்கும், கடலுக்குமுள்ளது போல்**, என்பதை பின்னல் விளக்குவோம். கீழான, அபரபிரகிருதியைப்பற்றி சந்தேகம் ஏற்பட இடமே யில்லை. VII-4-ல் தெளிவாக, **கீழான பிரக்ருதியின்** அமைப்பை வர்ணித்திருக்கிருர். இந்த அபரபிரகிருதியே **உடல்** என்றும், க்ஷேத்திரம், என்றும் XIII-1லும் 5, 6லும். விளக்கப்படுகிறது. இந்த சரீரமாகிய க்ஷேத்திரத்தை அறிபவன் **க்ஷேத்திரக்ஞன்.** இந்த, அறிபவன் **பரமனே**, என்று திட்டவட்டமாக XIII-2-ல் மொழிகிருர். அதையே, சுலோகம் 13லிருந்து 22 வரையும், பின் 31லும் தரும் வர்ணனையிலும், அத்யாயம் XI-ல் அருளிய விசுவரூப பரமனையும் நினைவுபடுத்தி, எல்லா உடலிலும், அறிவின் ரூபமாக நின்று, அறிபவன் பரமனே என்று ஊர்ஜிதப்படுத்துகின்றன. ஆன்மா, என்ற பதம், க்ஷரத்தைக் குறிக்கின்றது. முக்கியமாக, பரபிரகிருதியில் அது உடலைத் தாங்கி நிற்கிறது. இச்சொல், சில இடங்களில், குறிப்பாக V1-5, 6-ல், கீழான பிரகிருதிக்கும் வழங்கப்படுகிறது,

**பிரகிருதியின் 24 தத்துவங்களைப் பற்றிய கீதையின் விளக்கம்** கபில சாங்கியத்தையே தழுவுகிறது. **ஆகாயம், காற்று, தீ, தண்ணீர், பூமி**, இவைகளை பஞ்சபூதங்கள் என்ற ஐந்து மூலபொருள்களாக காண்கிறோம். ஆனல், விஞ்ஞான ரீதியில், இவை மூலப்பொருள் எனக் கூறமுடியாது என்ருலும்; பூதவுடல் அமைப்பில் இவை பங்கு

கொள்கின்றன என்பதில் தவறில்லை. பிரகிருதியின் முதல் தத்துவம், முக்குணங்களென்று மேலே கண்டோம். அவை செயல் அடையும்போது, **புத்தி, அகங்காரம், மனது,** என்ற இம்மூன்று தத்துவங்களே முதலில் ஏற்படுகின்றன. இவற்றுடன் முன்கூறிய பஞ்ச பூதமூலங்களும், ஆக ஒன்பது தத்துவங்களே, கீழான பிரகிருதி எனப்படுகிறது. (VII-4). **மனத்தின் கீழ் செயல்படும், பதினைந்து தத்துவங்கள்:** (a) ஐந்து அறிவுசக்திகள்; (1) பார்த்தல் (2) கேட்டல் (3) ஸ்பரிசித்தல் (4) மோப்பல் (5) ருசித்தல். (b) **ஐந்து ஞானக் கருவிகள்:-** (1) கண்கள் (2) காதுகள் (3) உடல் (4) மூக்கு (5) நாக்கு. (c) **ஐந்து வினையாற்றும் கருவிகள்:-** (1) கைகள் (2) கால்கள் (3) வாய் (4) குதம் (5) ஜனனேந்திரியம். இந்த மூன்று வகையான பஞ்சேந்திரியங்கள் ஒன்றுக்கொன்று ஆதாரமாக இருக்கின்றன. ஒவ்வொரு புலனும், அதற்கென ஆதிக்கம் செலுத்தும் ஒரே துறையுண்டு. ஒரு புலன் மற்றப் புலன்களின் துறையில் செயல்பட இயலாது. **இந்த 24 தத்துவங்களும்,** கீழ் பிரகிருதி எனவும் பெயர் கொண்டு, உடலாகிய க்ஷேத்திரத்தை உண்டுபண்ணி, க்ஷரபுருஷ தத்துவமாகிய, **ஆன்மா** அல்லது மேலான பிரகிருதியின் சந்நிதான விசேஷத்தால், உயிரும், உணர்வும், புத்திக்கு ஒளியும், பெற்று, பிரபஞ்ச நாடகத்தை நடத்துகின்றன. ஆனாலும், பரமான்மாவே **பிரபஞ்சம் தோன்றவும், அழியவும் காரணமாயிருக்கிறார்.** (VII-6). பிரகிருதியின் இயல்பாகிய குணங்கள் சுறுசுறுப்படையும்பொழுது, அஹங்காரமென்ற தத்துவம், பெரிதும் புருஷனைப்போல் நடிக்கின்றது. இது கீழான பிரகிருதியில் தலைமைப் பதவியை வகித்து, மேல் பிரகிருதியாகிய ஆன்மாவுடன் போட்டி போடுகின்றது. இந்த போலிப் புருஷனுக்கும், உண்மையான புருஷனாகிய ஆன்மாவுக்குமிடையே, புத்தியானது செயல்படுகிறது. வாழ்க்கை நாடகத்தில், கீழ்பிரகிருதியின் போலியாகிய, அஹங்காரத்திற்கு ஆதிக்கமா, உண்மையான ஆன்மாவுக்கா, என்பது மிகவும் முக்கியமானது. இதற்கு விடை, பெரிதும் **புத்தியின் தன்மையையே பொருத்திருக்கின்றது.** புத்தி, சாத்வீக குணத்துடன் இணைத்துக்கொண்டால், மேலான பிரகிருதியிலிருந்து தனக்கு ஒளிதரும் உண்மையான ஆன்மாவின் ஆதிக்கமே வாழ்க்கையில் ஏற்படும்படி செய்யும். அஃதல்லாது, போலி அஹங்காரத்தின் அதிகாரத்திற்கு இடந்தருமாயின்,ஜீவனின் வாழ்க்கை, கீழ்நோக்கடைந்து, மேலும் சிக்கலாகிவிடும். இந்தச்சீர்கேடான வாழ்க்கை நிலையில் ஆன்மபாகம், புத்திக்குப் புலப்படாது, மறைவுபட்டு, பிரகிருதி பாகமே, மேலேங்கி நின்று, அஹத்

தையே ஒளிதரும் புருஷனாக நம்பி, மயங்கி, பிறப்பு இறப்புச்சுழலில், முடிவில்லாமல், ஜீவனை வீழ்த்திவிடுகிறது.

இத்துன்ப நிலைக்கு முடிவுகாண வேண்டுமாயின், புத்தியும், மனமும் உறுதியாகி, மட்டரக குணங்களாகிய ரஜஸ், தமஸ், இவற்றை தலையெடுக்க வொட்டாமல், அதாவது, ஆசை, துவேஷம், சிற்றின்பமோகம் போன்ற உணர்ச்சிகளுக்கு மனம் வசப்படாமல், அவைகளை கட்டுப்படுத்தி, அகத்தையடக்கி, ஜீவனுக்கும் ஆன்மாவுக்குமுள்ள ஐக்கிய பாவத்தை நிலைநாட்ட வேண்டும். ஒவ்வொரு ஜீவனும், தன் தெய்வீகத் தன்மையையும், தன் மூலமாகிய ஆன்மாவையும் உணர்ந்து வாழ்க்கையை தர்மரீதியில் செயல்படச் செய்ய, போலி அஹந்துடன் போராடி வருகிறது. இந்தப் போராட்டத்தில் ஆன்ம ஒளிபெறும், புத்தி எக்கட்சியைச் சார்கின்றதோ, அக்கட்சியே மேலோங்கி, வாழ்க்கையை நடத்துகிறது. ஜீவனின் விடுதலைக்குப்பெரிதும் காரணமாயிருப்பது, புத்தியின் போக்கே. நம்புத்தி நம்மைத் தாழ்த்தவோ, உயர்த்தவோ, செயல்படக்கூடும். இது காரணம் பற்றியே, அறிவை, அன்றும், இன்றும், பராட்டிவரும் நோக்கத்தில், ஞான மார்க்கம் என்று பெயர்பெற்ற, துறவறத்தை, விடுதலைக்கு வழியாக, மிகைப்பட வற்புறுத்தப் படுகிறது. நாம் ஆன்மாவே, நாம்பிரகிருதியின் பாகமாகிய ஜட உடலல்ல என்ற எண்ணத்தை, முழுமண உறுதியுடன், நமக்கு அளிக்கவேண்டியது நம் புத்தியே. இந்த உண்மைஞானம் நம்மில் ஏற்பட்டு, அதை அடிப்படையாகக் கொண்டு, நம் வாழ்க்கையில் செயல்படவேண்டிய பெரும் பொறுப்பு புத்திக்கேயுண்டு. அவ்வாறு செயல்படாமல், நம் அஹங்தைக்கு இடமளித்து, புலன்களின் களியாட்டத்தில் ஜீவனை வசப்படச் செய்யுமானால், அந்த புத்தி, நம் அடிமைத் தளைகளை வலிவுறச் செய்யும். நம் அறிவே நமக்கு உண்மையாம் நிலையை உணர்த்தவேண்டும். அந்த ஞானத்தின் அடிப்படையில், பற்றற்ற, தன்னலமற்ற வாழ்க்கை நடத்தி, வினைகள் ஆற்றி, ஜீவன் தன் அடிமைத்தளைகளையகற்றி, ஆன்ம ஐக்கியம் அடையவேண்டும். இதுவே விடுதலை என்று கீதை விடாப்பிடியாக அறைகூவுகிறது. இவ்வழியே இப்பூவுலகிலும், நல்வாழ்வுக்குத் துறவுகோல், வேறில்லை.

# IV. பரமனின் அறிகுறிகள்.

மனிதனின் உள்ளத்தில், கடவுளின் நம்பிக்கை குறைந்து கொண்டே வருகிறது. ஆனால், மதவிஷயமான, வெளி ஆர்ப் பாட்டங்கள் நாளுக்கு நாள் அதிகரிக்கின்றன. இவ்வாறு, மனிதன் தன்னைத் தானே ஏமாற்றிக்கொள்கிறான். கடவுளிடம், அன்பும், பக்தியும், இருந்தால், மனிதன், இழிசெயல்களையும், எண்ணங்களையும் துணிந்து மேற்கொள்வானா ? உலகில் கணிசமான பகுதி கடவுளைப் பகிரங்கமாக மறுக்கிறது. எஞ்சியவர்களும், கடவுளில்லாதது போலவே, செயல் படுகிறார்கள். கடவுளை நம்மால் காணமுடியவில்லை. அவர் குரலைக் கேட்க முடியவில்லை. அவரை அறியவும் முடிகிறதில்லை, பின், அவரிடத்தில் நம்பிக்கை குன்றுவது இயல்பே. விஞ்ஞான ரீதியாகக் காணமுடியாததையும், கேட்கவோ, ஸ்பரிசிக்கவோ, நுகரவோ, அளக்கவோ, நிறுக்கவோ முடியாத ஒன்றை, இல்லை என்று மறுப்பதுதான், நியாயமாகும். நம் பூதக்கண்களால் காண இயலாத பூதப் பொருள்களை, பூதக்கண்ணாடியின் உதவியால் காணமுடி கிறது. ஆனால், கடவுள் ஜடப்பொருள் அல்லவே, இம்முறைகளால் காண்பதற்கு. அவர் அணுவிலும் அணுவானவர்; அளவிலும் அடங்காதவர்; நம்புலன்களுக்கும் அப்பாற்பட்டவர். நம் புலன்கள், அளவிலடங்கும் பூதப்பொருட்களையே நுகரவல்லவை. அந்தமே இல்லாத, அநந்தத்தை எப்படி அவை அளக்க முடியும்? அறிய முடியும்? பாம்பு தன் வாயைத் திறந்து, அதில் தன் வாலை நுழைத்துத் தன்னையே விழுங்க இயலுமா ? இதே போல்தான் கடவுளைப் பற்றிய நம் எண்ணம். நம் கருவிகள் அற்ப சக்தி படைத்தவை. அவற்றால் பரமனை அறிய முடியாவிட்டாலும், அவர் மகிமைகளை, நம் புலன்கள் எந்த நேரமும் அனுபவியாமலில்லை. அனுபவித்தும், அவரது நினைவு வராமல், அவரை மறந்து, அவரை மறுக்கவும் துணிகின்றன.

இப் பிரபஞ்சத்திலுள்ள, மிகவும் அற்பமான படைப்பு யாதா கிலும் ஒன்று போதாதா, பரமனின் மகிமையையும், திறமையையும், நமக்கு எடுத்துணர்த்த ? இயற்கையில் என்ன ஒழுங்கு, ஒருமைப்பாடு, நியதி, லாவாண்யம், வனப்பு, வண்ணங்கள்! ரோஜா என்று நினைத் தாலே, பரமனின் எண்ணம், நம் உள்ளத்தில் வெள்ளம் போல் பாய்ந்தோட வேண்டாமா ? அவர் கருணைக்கு அவரே ஈடு. பிரமாண்டமான ஆலமரத்தின் நிழலில், ஜீவன்கள் வந்து தங்கு மெனக் கருதி, கடுகுபோல் ஒரு கனியும், நிழலே தராத பனைக்குப் பருத்த காய்களும் அளித்த அறிவல்லவா ? சாதாரணமாக, பரமனின்

ஆணை நிரந்தரமானதே. எங்கும் எப்பொழுதும், ஒரே ரீதியில் செயல்படுவது, அது. வெப்பம், கூடக் கூடக், பொருள்கள், தங்கள் பரிமாணத்தை அதிகரித்துக் கொள்ளும். வெப்பங் குறையக் குறைய அவற்றின் பரிமாணம் சுருங்கும். உலகில் பெருமளவானதும், உயிர்கள் தவிர்க்கவொண்ணாததுமான தண்ணீரின் ஒருநிலையில், இவ்விதிக்கு விலக்களித்து, நீரில் வாழும் கோடானுகோடி ஜீவன்களைக் குளிர்காலத்தில் அழிந்து போகாமல் காக்க, கருணைக்கடல், இப்பொது விதிக்கு விலக்களித்திருக்கின்றார். நீர், தன் வெப்பத்தையிழந்து, உறை நிலையை அடையும் சற்றுமுன்னரே, அதாவது 4°C. வந்ததும், மேலும் வெப்பத்தையிழந்தால், பொது விதிப்படி சுருங்காமல், பரிமாணத்தில் விரிவடைந்து, இலேசாகி, பனிக்கட்டியாக உறைந்து, மேலேயே நின்று விடுகிறது. இவ்வாறு, மிதக்கும் பனிக்கட்டியால், அடியிலுள்ள நீர், தன் வெப்பத்தை இழக்க இடமில்லாமல், உறை நிலையை அடையாது, நீராகவே நின்று, நீரில் வாழும் உயிரினங்களை காக்கின்றது. இந்த விதிவிலக்களிக்காவிடில், 4°C. நிலையடைந்ததும், நீர், வழக்கம்போல் சுருங்கி, பளுவடைந்து, பனிக்கட்டியாகி, அடியில் போய்த் தங்கும். மேலுள்ள நீரும், அதே போல் உறைந்து, கீழே தாழ்ந்து, இவ்வாறு கடல் நீரெல்லாம், ஒரு பனிப் பாறையாகி, நீரில்வாழும் ஜீவன்களையழித்து விடும். ஒவ்வொரு குளிர்ப்பருவத்திலும், இவ்வாறே நடந்து, நீர்வாழ் இனத்தையே இல்லாமல் செய்து விடும். இவ்வுலகத்தை, உயிரினங்கள் வாழ்வதற்கென்றே படைத்த பரமனை நினைத்து வணங்காத மனம் என்ன மனம்? வாழ்த்தாத நாவென்ன நாவு?

இவ்வாறு, உயிரைக் காக்க கண்ணும் கருத்தும் கொண்ட கருணைக் கடல், கீழின ஜீவன்கள், ஒன்றையொன்று கொன்றே, வாழ வேண்டிய நியதியை, ஏற்படுத்தியது ஏன்? ஆக்கல், காத்தல், அழித்தல், என்ற படைப்பின் முத்தொழில்களும், ஒன்றைவிட்டொன்று பிரிந்து, தனித்து நிற்கா. மரணத்தின் மர்மத்தை நாம் முழுதும் அறியோம். என்றாலும், அது, பரமனின் ஆணை என்ற காரணத்தாலே, நன்மைபயக்குமே தவிர, உயிர்களுக்குக் கேடு விளைவிக்காதென்ற நம்பிக்கை, துணிந்து கொள்ளலாம். நம்மை அணைக்கும் தாயின் அன்புக் கரங்களே, நமது நன்மைக்காக, ஒருவேளை "அடிக்கவும்" செய்யும். அதுபோல் மரணம் நம்சிற்றறிவுக்குத் தண்டனையாகவே தோன்றினாலும், நமது நன்மைக்கே, என்ற எண்ணத்தைக்கொள்வது நமது அறிவின் சிறப்பாகும். அத்துடன், மரணம் நம்முடிவல்ல, மறுபிறவிக்கு வழி கோலே, என்ற கீதையின் உறுதியைப் பூண்டால், பின்,

மரணத்தை எண்ணி பயங்கொள்ளாமல், இவ்வாய்ப்பு அளித்த பரமனை வாழ்த்துவோம். மரணம் உயிர்களுக்கு நன்மையே பயக்கு மென்றால், கொலை செய்வதைப் பாதகமெனப் பழிப்பதேன்? நாம் மிகவும் கவனத்துடன் இதை ஆராய்ந்தால், **பிறவியின் நோக்கம், வாழமட்டுமல்ல,** வேறு ஒரு முக்கியமான குறிக்கோளையடைய என்பது தெளிவாகும்.

உயிர்கள் பிறவி எடுப்பது வாழ்வதற்கே, வேறு நோக்கம் கிடையாதென்றால், பின், மரணத்தையும் ஏற்படுத்தி, அவ்வாழ்வுக்கு முற்றுப் புள்ளி இடுவானேன்? படைப்பவன், பிறவியை வாழ்வதற் கென்ற நோக்குடன் ஏற்படுத்தவில்லை என்பது நிச்சயமாகிறது. இக் குறுகிய நோக்கு நவ நாகரீக மனிதன், தானாகவே கற்பனை செய்துகொண்டதேயாம். **மரணம்,** ஜீவனுக்குத் **தவிர்க்கவொண்ணாத தாக ஏற்பட்டபடியால் பிறப்பு வாழ்வதற்கல்ல என்பது** தெளிவு **தவிர,** எந்த நேரத்திலும் முடிவடையும் வாழ்வு, பிறந்தவுடன் முடிந்தா லென்ன, சில காலஞ்சென்று முடிவடைந்தாலென்ன? எவர் கையால், மரணம் கிட்டினாலென்ன? பின் கொலையைப் பாதகமாகக் கருதக் காரணம் யாது? பிறப்பதால் கிட்டும் பலன், மரணமே என்றால், பிறப்பானேன்? பின், மரிப்பானேன்? படைப்பு ஒரு கேலிக்கூத்தா? எதற்காகப் படைப்பில், அபாரமான ஒழுங்கும், நியதியும், அற்புதங் களும், அதிசயங்களும்! **படைப்பின் நோக்கம், ஜீவன், ஆன்ம வளர்ச்சி பெற்று, விடுதலை யடைவதற்கே.** பின் ஒரு அத்தியாத்தில், மனிதனை, மற்ற உயிரினங்களுடன் ஒப்பிட்டு, படைப்பின் நோக்கை ஒருவாறு தெளிவாக்குவோம். உயிர் என்பது, ஜீவன், விடுதலையடைய வேண்டிய முயற்சிக்கு ஒரு வாய்ப்பு. உயிரைக் கொலை செய்தால், அப்பாதகச் செயல், இவ்வாய்ப்புக்கு முற்றுப் புள்ளிவைத்து விடுகிறது. **கொலையின் குறுக்கீட்டால், பரமனின் திட்டம் தடைப்படுகிறது.** இதனாலேயே, கொலைபுரிவது கண்டிப்பாகத் தடை செய்யப் பட்டது. இத்தடை, தற்கொலைக்கும் பொருந்தும்.

விஞ்ஞானம், இயற்கையை வென்றதாகப் பெருமையடித்துக் கொள்ளும் இக் காலத்திலும், நெருப்பு நம்மைச் சுட்டுப் பொசுக் காமலில்லை; தண்ணீர், நம்மை மூழ்க்கடித்து மாய்க்காமலில்லை; மின்சாரம், நம் உயிரை உறிஞ்சி விடாமலில்லை. வெளி இயற்கையின் நடத்தையில், சிறிதளவும் மாற்றங்காணோம். ராமாயணத்தில், ராவணனைக் கொன்று, சீதா தேவியை மீட்டியவுடன், ராகவன் விருப்பப்படி, சீதாதேவி, தீக்குளித்தலாகிய, அக்னிப் பிரவேசம்

செய்து, தன் தூய்மையை நிரூபித்தாரென்று காண்கிறோம். அவர் தன் ஆன்ம வலிமையால், இயற்கை சக்தியாகிய அக்னியின் இயல்பை வென்று, தன்னளவிலேனும், அதன் இயல்பான குணத்தை மாற்றச் செய்தார். **ஆன்ம வலிமையே, இயற்கையை வெல்லக்கூடும்.** ஒரு இயற்கை சக்தி, மற்றொன்றை வென்று, ஆதிக்கம் செலுத்த முடியாது. மனிதன் வெளி இயற்கை சக்திகளுக்கு, இன்றும் பணிந்தே நடக்கிறான். விஞ்ஞானம், இயற்கை சக்திகளைப் புதுப் பாதைகளில் இட்டுக் கையாண்டு, மனிதனுக்குச் சில வழிகளில் பயன்படும்படி செய்திருக்கின்றது. என்றாலும், **மனிதனின் உள்ளத்திலே குமுறியெழும் தீய இயல்புகளையும், மட்டரக உணர்ச்சிகளையும் கட்டியடக்க முடியாதவரை, விஞ்ஞான அறிவின் பயன்கள்,** பெரும்பான்மையோருக்கு **நன்மை யளிக்கமுடியாது.** பழுத்து பண்படாத இளம் மனங்களை, விஞ்ஞான அறிவின் அரைகுறை வளர்ச்சி, நாத்திக நாட்டங்கொள்ளத் தூண்டுகிறது. மானிட வர்க்கத்திற்கு இது ஒரு பெருங்கேடே. விஞ்ஞானம் ஜடப் பொருள்களின் பூதநிலையை மட்டுமே ஆராய்ந்து, நிறை, பரிமாணம் போன்ற அளவைகளுக்குட்பட்ட கோணங்களிலிருந்து, சில சித்தாந்தங்களும், விதிகளும், கோட்பாடுகளும் ஏற்படுத்தி, உலகபோக வாழ்க்கைக்கு உதவி புரிந்து, பலனும் அடைந்து வருகிறது. இந்தக் குறுகிய குறிக்கோளில், விஞ்ஞானம் கண்ட வெற்றி, மனிதனை மதிமயங்கச் செய்ததுடன், பிரபஞ்சத்திலுள்ள உணர்ச்சிகளாகிய, இன்ப துன்பம், சத்தியம், நியாயம், அன்பு, காருண்யம், தியாகம், இவை யாவும், நீட்டல்,நிறுத்தலளவைக்குட்படாததால், பொருளற்றவையே என்று விஞ்ஞானஉலகம் கருதும்,படுமோசமான **நிலை ஏற்பட்டுவிட்டது.**

ஆனால், சத்தியம், அன்பு போன்ற உணர்ச்சிகளற்ற உலகில், ஜீவன், ஒரு விநாடியேனும் வசிக்க இயலாதென்பது, யாவரும், ஒப்புக்கொள்ளும் உண்மை. என்றாலும், நவீன விஞ்ஞானத்தின், விபரீதக் கூற்றை, மறுக்கமாட்டாது, மானிடன் மருகுகிறான். விஞ்ஞானிக்கு, வைரம், கேவலம், மரக்கரியே. அதை எரித்தால், உண்டாகும் காற்று ஊர்வனவற்றின் உயிரைப் போக்கும் கரியமல வாயுவே. வைரத்தின் சோபையோ ஜ்வலிக்கும் காந்தியோ, மனத்தைக் கவரும் வண்ணங்களோ, விஞ்ஞானியின் கருத்திற்கு எட்டாதவை. அழகு, அன்பு, **உண்மை, அற்ற உலகம், உலகமாகுமா?** என்றாலும்,விஞ்ஞானியின்,உலகில் இவையொன்றுக்கும் இடமில்லை. விஞ்ஞானத்தின் பிரசாரத்திற்கு, உலகம் செவிமடுத்து, சிறுகச் சிறுக, மேலான மானிட நற்பண்புகள், உணர்ச்சிகள், குணங்கள்,

யாவும், குன்றிப்போய்க் கொண்டிருக்கின்றன. விஞ்ஞானம், நம் தேவைகளைப் பன்மடங்கு பெருக்கி ஆசைகளை வளர்த்து, தன்னலத்தை மேலோங்கவிட்டு, நம் தெய்வீக இயல்பைத் தலைதூக்காது அடித்துவிடுகிறது. ஆன்ம நம்பிக்கை, மனிதன் இரத்தத்தில் ஊன்றிக் கிடப்பதால், நாம் அதை மறுக்க முடியாவிட்டாலும், வாழ்க்கையில், அந் நம்பிக்கையை இழந்தது போலவே செயல் படுகிறோம். உள்ளொன்று நினைத்துப் புறம் ஒன்று பேசுவதே, நாகரிகப் பாங்காகிவிட்டது. இந்த அவலமான நிலைக்குக் காரணம் நவீன வாழ்க்கையின் கடும் போராட்டமென்று எல்லோரும் அறிந்ததே; என்றாலும், அதைத் திருத்தத் துணிவார் ஒருவருமில்லை.

பரமனைப்பற்றிய நம் மனோபாவம் என்ன? ஒவ்வொரு மதத்திலும், கடவுளைப்பற்றிய சித்தாந்தங்கள் உண்டு. ஆதிமனிதன் இயற்கையின் அளவுகடந்த சக்திகளைக் கண்டு, முதலில், பயமும், பின்னர், பக்தியுங்கொண்டான். அவைகளை வணங்கலானான். அவற்றின், உதவியாலே, தன் வாழ்க்கை, பெருமளவு நடக்கவேண்டியிருப்பதால், இயற்கையைத் தெய்வமாகப் பாவித்து நடந்தது நியாயமே. இயற்கையின் கதியை, இயந்திரசாதனங்களே இல்லாது, அவன் கணக்கிட்டதை கவனித்தால், அவன் திறமைக்கு அஞ்சலி செய்வோம். என்றாலும், இக்காலத்தவரைப்போல், விளக்கம்கூற இயலாமல், மூடபக்திகொண்டு, ஏதேதோ சமாதானம் கண்டான். உதாரணமாக, வானத்தில் சஞ்சாரம் செய்யும் க்ரஹங்கள், நக்ஷத்திரங்கள், இவற்றின் சலன கதியை, இம்மியும் பிசகாது கணக்கிட்ட போதிலும், இடி, மின்னல், கிருஹணங்கள், வானவில் போன்ற இயற்கைச் சம்பவங்களுக்கு கற்பனை செய்து விளக்கம் கண்டான். உண்மை யாதெனில், ஆதிமனிதன், வெளியுலக சக்தியாகிய இயற்கையைக் கட்டி ஆள 'யத்தனிக்காமல், அங்கு ஏற்படும் சம்பவங்களை, ஒப்புக்கொண்டு, பணிந்து, வாழ்க்கை நடத்தலானான். மேலும், தன் உள்ளத்தில் ஏற்படும் நிகழ்ச்சிகளே, தன் வாழ்க்கையை அதிகமாகப் பாதிப்பவை எனக் கண்டு கொண்டு, அவைகளையே, தன் கட்டுப்பாட்டிற்குள் அடக்கி, தன் உணர்ச்சிகளையும், எண்ணங்களையுமே, கட்டுப்படுத்தப் பயிற்சிபெற முயன்றான். இயற்கை, வெளியுலகம், தன் புறவாழ்க்கை, இவை யாவும், தன் அகவாழ்க்கைக்குத் துணையாயிருப்பவையே என்று, முன்னவைகளைப் பெரிதுபடுத்தாமல், ஆன்ம வளர்ச்சியிலேயே கண்ணும் கருத்தும் கொண்டு, அத்துறையில், இன்றும், அதிசயிக்கத்தக்க முன்னேற்றமும் கண்டான்.

**வெளியுலக சமூகவாழ்க்கை ஒரு துணைக்கருவியே.** இதை ஆமோதிப்பவர்கள், புறவாழ்க்கையில் மோகங்கொண்டு, தங்கள் முழு முயற்சிகளேயும், சக்திகளேயும், அதிலேயே விரயஞ்செய்து, வீணடிக்கமாட்டார்கள். தவிர, ஒரு தனிமனிதனுடைய, அகவாழ்க்கை முற்றிலும், அவனது பொறுப்பேயாம் ஆனல், புறவாழ்க்கையில், அவன், சமூகத்திற்கு கட்டுப்பட்டே நடக்கவேண்டும். இச்சமூக ஆதிக்கம், அகவாழ்க்கையை எட்டாது செயல்படத்தனி மனிதனுக்கு இயலும். ஆனல் **நவநாகரீக நிலையில், அகவாழ்க்கைக்கு இடையூருக, புறவாழ்க்கை செயல்படுகிறது.** முதன் முதலாக, வாழ்க்கைப் போராட்டத்தைக் கடுமையாக்கித் தனிமனிதனின், முழு நேரமும், சக்திகளும், புறவாழ்க்கை நடத்துவதிலேயே, விரயமாகி விடுகின்றன. இதனல், அகவாழ்க்கை, புறக்கணிக்கப் படுகிறது இரண்டாவதாக, புறவாழ்க்கையில், மனிதனின் கீழியல்புகள் ஆதிக்கம் பெற்று, மனித சுபாவத்தையே மாற்றிவிடுகின்றன. **புறவாழ்க்கைத் தேவைகளேக் குறைத்துக் கொண்டாலே, அகவாழ்க்கைக்கு வாய்ப்புண்டு.** படைப்பில் வேறு ஒரு உயிரினத்திற்கும், சுதந்திரமாகச் செயல்படும் ஆற்றலும், பகுத்தறிவும் கிட்டவில்லே. கிடைத்தற்கரிய, மானிடப் பிறவியை வீணடிப்பது, துர்ப்பாக்கியமே. புறவாழ்க்கை, எல்லா உயிரினங்களுக்கும் பொதுவானது. அதை, மனிதன் எளிதாக்கித், தன் முழுவல்லமையையும் அகவாழ்வான ஆன்ம முன்னேற்றங்காணச் சிலவிடுவதே அவன் கடமை. இவ்வாறு, அகவாழ்வையும், புறவாழ்வையும், பிரித்துக் காணுவதால், அவை இரண்டுக்கும் தொடர்பில்லே என்று எண்ணுவது தவறு. மானிடவாழ்க்கை என்பது ஒன்றே. ஆனல், அதைச் செயலாற்றும் பான்மை, வெவ்வேருகலாம். **அகவாழ்க்கை என்பது, புறவாழ்க்கைத் தேவைகளே எளிதாக்கி, எஞ்சிய சக்திகளேயும், முயற்சிகளேயும், உலக நன்மையின் பொருட்டு, அர்ப்பணம் செய்து வாழ்வதேயாம்.** இதனல், அகவாழ்க்கை என்பது, புறவாழ்க்கையில், நாம் கடைப்பிடிக்கும் மனப்பான்மையைத் தழுவியது எனத் தெளிவாகிறது. அஹங்கையாலும், சுயநலத்தாலும், புறவாழ்க்கையில், பிறஜீவன்களே வாழவொட்டமல் இடையூறு செய்யும் நோக்கமே, நம்மை உயர் மானிட நிலேயினின்றும் தாழ்த்தி விடுகிறது. இந்த இழிவான போக்குக்கு, விஞ்ஞானம் துணைபுரிகிறதென்பதே, இன்றைய உலகின் பரிதாப நிலேக்குக் காரணம்.

நம்மைப் படைத்த சக்தியே எல்லா ஜீவன்களேயும் படைத்தது, என்ற நம்பிக்கை ஏன் ஏற்படுவதில்லே? நம் குழந்தைகள் மட்டும்,

வாழவேண்டும்; பிறர் குழந்தைகள் வாடவேண்டுமெனச் செயல் படுவதின் காரணம் யாது? அஞ்ஞானமாகிய, ஆன்ம அறிவின்மையே, எல்லா ஜீவன்களும் ஒன்றே என்ற உண்மை நமக்குப் புலனாகாததின் முதல் காரணம். இரண்டாவதாக வாழ்க்கையின், தேவைகளை அபரிமித மாகப் பெருக்கிக்கொண்டு, போட்டியையும், போரையும் ஏற்படுத்தி, மனத்தைக் கடுமைபாக்கிக் கொண்டது. இயந்திர சாதனங்கள் மூலம் பொருள்களின் பெருக்கத்தைபடைய விஞ்ஞானம் துணைபுரி வதால், மனிதன், பேராசையையும், அஹத்தையும் வளர்த்துக் கொள்கிருன். விஞ்ஞானம், உழைப்பினுல், உறுமாற்றம் ஏற்படுத் தக்கூடுமேயல்லாது, உலகப் பொருள்களைக் கூட்டவோ, குறைக் கவோ இயலாது. ஆன்மவலிவு பெற்ற இயற்கையே, அதே உரு மாற்றம் மூலம், ஒன்றைப் பலவாகச் செய்யக்கூடும். கீழினங்களி லும், தாவரவர்க்கத்திலும், ஒரே கருவின் மூலம், பல்லாயிரம் ஜீவன் கள் உண்டாகின்றன. இவற்றில், பெரும்பாகம் உடனே உணவாக் கப்படுகின்றது. உடல் உணவாகவும், உணவையுட்கொள்ளும் உறுப்பாகவும், இருவிதத்திலும் செயல்படுகிறதென்பதை, பஞ்ச கோசத்தலைப்பில் விளக்குவோம். தாவரங்களின், அளவுகடந்த இனப் பெருக்கம், மேலினங்களுக்கு உணவாகி, அவைகளின், உணவுத் தேவை யை எளிதில் தீர்த்துக்கொள்ள உதவுகிறது. இதனுல், மேலினங் கள், முக்கியமாக மானிடன், தங்கள், புறவாழ்க்கைப் போராட்டத்தைக் குறைத்து, அகவாழ்க்கையில் அதிகம் ஈடுபட வாய்ப்பு அளிக்கப்படுகிற தென்பது புலனுகின்றது. இத்தெய்வத் திட்டத்தை மனிதன், தனக்கு அனுகூலமாக்கிக் கொள்ளாது, விபரீத ஆசைகளில் ஈடுபட்டால், அவன் அவதிப்படுவதில் ஆச்சரியமில்லை.

தெய்வம், ஏன், தீய செயல்களைத் தடை செய்யாமல், வாளா நிற்கின்றது? உலகில், தீமைகள் ஏன் ஏற்பட வேண்டும்? கடவுள், வினை யற்றவர். மானிடனுக்கு ஓரளவு செயல் சுதந்திரமளித்து, தன் நிரந்தர ஆணைகளையும் ஏற்படுத்தி, சாக்ஷியாகவே நிற்பவர். ஒளி இல்லாததே, இருள். அதே போல், தர்ம நியதியற்ற செயலே தீய செயல். ஜீவன்களே அதனதன் வினைகளுக்குப் பொறுப்பு. நல் வினை நல்ல குணங்களாலும், தீய வினை தீய குணங்களாலும் உண்டா கின்றன. கத்தியை, ரண வைத்தியர், உபயோகித்து, உயிரைக் காப் பாற்றுகிருர்; கொலையாளி, உயிரைப் போக்க அதே கருவியைப் பயன் படுத்துகிருன். நன்மையும், தீமையும், எண்ணங்களாக, நம், உள்ளத்தில் உதித்துப் பின் செயலாக வெளிப்படுகின்றன. தீய செயல் தண்டிக்கப்படாது தப்புவதில்லை. தீய செயலின் தண்டனை,

வினையாற்றியவனின், உள் வாழ்வில் உடன் பிறந்து, அவனைத் தாக்குகிறது. ஆனால், இதை வெளியுலகம் காண முடிவதில்லை; வீணாகத் தெய்வத்தைப் பழிக்கின்றது. குற்றஞ் செய்தவனின் வெளி வாழ்விலும் அவன் தண்டனையடைகிறான். இத்தண்டனை, எடுக்கும் வடிவம், அவன் குடும்பத்தில் ஏற்படும் பொருள் நஷ்டம், வியாதி, அவமானம், மரணம், போன்றவையாகலாம். இவை, உலகோரால் காணக் கூடுமாயினும், தாமதித்து ஏற்படும் காரணத்தால், இவற்றுக்கும், முன் ஆற்றிய தீய வினைக்குமுள்ள தொடர்பை உலகம் கண்டு கொள்வதில்லை. மனிதன், காரணமின்றிப் பல அவதிகளுக்குள்ளாகிறான். ஏன்? அவை யெல்லாம், அவன் ஆற்றிய தீய வினைகளுக்கு அவன் அடையும் தண்டனைகளாம். நாம், "விதி" என்று, நொந்து கொள்வது, தர்ம நியதியின் வழுவாத கூற்றே. அதே, போல், அதிர்ஷ்டம், யோகம், எல்லாம், நாம் முன் ஆற்றிய நற்செயல்களின் பலனேயாம்.

ஒரு திருடன், ஒரு கோவிலினுள் புகுந்து, பூசைக்குரிய பொருள்களைக் களவாடித், தப்பித்தும் கொள்கிறான். அவனை அக்கோவிலில் குடியிருக்கும் கடவுள், ஏன் தடுத்துத் தண்டிக்கவில்லை? நாத்திகன் விடும் இச்சவாலுக்கு விடை காணுவது உசிதமாகும். கோவிலும், கோவிலிலுள்ள பொருள்களும், யாருடைய உடமைகள்? கடவுள்பால், நமக்கு நம்பிக்கை யுண்டானால், அவரையும் நமது உடமையாகப் பாவித்து, மற்றப் பொருள்களுடன் பூட்டி வைப்பதேன்? அவர் அருபி. அவருக்கேது உடமை? மனிதன், தன் மடமையினாலும், மமதையினாலும், உலகையே, தன் தனியுடமையாக்கிக் கொள்ளப் பெரும் முயற்சி எடுக்கின்றான். படைக்கப் பெற்ற பொருள்களைத் தன் தனி உடமையென்று, எவன் கொண்டாடி, உரிமை கோருகிறானோ, அப் பொருள்களைக் காப்பது, அவனது பொறுப்பே. பாரபட்சமற்ற பரமன், ஏன், இந்த அஹம் பிடித்த அறிவிலிக்குத் துணை புரிந்து, அதர்மத்தையும், அஞ்ஞானத்தையும், வளர்க்க வேண்டும்? திருடனும் கடவுளை வேண்டிக்கொள்கிறான். பணம் படைத்தவனும், கடவுளை நாடுகிறான். இருவரும், கடவுளின் தர்ம நியதிக்குமுன், இருவிதத் திருடர்களே. பரமன், எக்கட்சிக்கு உதவ முடியும்? கடவுள் ஒருபொழுதும், தானே நேரில், பங்கெடுத்து வினையாற்றுவதில்லை, என்பது கீதையில் திரும்பத் திரும்ப வற்புறுத்தப்படுகிறது. வினையாற்றிய ஜீவன், வினையின் பயனை நிச்சயமாக அடைகிறான். தர்மம் இதில் தவறுவதேயில்லை. ஆன்ம

**அறிவின்மையும், உலகப் பொருள்களில் மோகமுமே, தீய வினைகளுக்குக் காரணம்.** இவற்றை நீக்கினால், உலகில் தீமை குன்றிவிடும்.

**கடவுளைப் பற்றிய மனோபாவம்,** பிறமதங்களில், ஒரே பாங்கில், அம்மதஸ்தாபகராலோ, அல்லது அவர் வழிவந்த குருமார்களாலோ, உலகோருக்கெல்லாம், ஒரே பாவனையாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், ஹிந்து மதத்தில், **கடவுளின் பாவனை, தனிமனிதனின் ஆன்ம மன வளர்ச்சிக்குத் தக்கதாக ஏற்படுகிறது.** இதைப் பிற மதஸ்தர்கள், ஒரு பெருங்குறையாக எண்ணி, ஹிந்து மதத்தை தூஷிக்கின்றார்கள். ஹிந்துக்களுக்கு ஒரே தெய்வமல்ல, பல தெய்வங்களை வழிபடுபவர்கள் என்று ஒரு ஏச்சாகவே கூறப்படுகிறது. இதில், உண்மையுமுண்டு, உண்மையுமில்லை. தனிமனிதன், தன் ஆன்ம நிலைக்கு உகந்தவாறு, கடவுளை ஒரு பாவத்தில் வணங்குகிறான். அவனுக்குப் பல தெய்வங்கள் இல்லை. வேறு ஒரு மனிதன், தன் வேறுபட்ட ஆன்ம நிலைக்குத் தகுந்தபடி, வேறு ஒரு பாவனையில் கடவுளை வழிபடுகிறான். பல்வேறு ஆன்ம வளர்ச்சிக்கு ஏற்ப, பல்வேறு பாவங்களில் கடவுளை எண்ணி வணங்குவது குற்றமாகாது. ஒரு தாய், தன் பல மக்களுக்கு, அவர்களின் உடல் நிலைகளுக்குத் தகுந்த உணவை யளித்து, உயிர்களைக் காக்கின்றாள். தன் இளங் குழவிக்குப் பாலூட்டுகிறாள். காளைப் பருவ மகனுக்கு, புஷ்டியான ஆகாரமளிக்கிறாள். வியாதியால் வருந்தும் புதல்வனுக்குக் கஞ்சி கொடுக்கின்றாள். அதேபோல், ஆன்ம உணவாகிய **தெய்வ பாவனை, மனோநிலைக்குத் தக்கபடி மாறி நிற்பதில் உண்மையுண்டு.** அதைப் பழிப்பது, அறிவீனமே. கடவுளின் உண்மை ரூபத்தை, அல்லது ரூபமின்மையை, யாரும் உறுதியாகக் கூற இயலாது. மனிதன் கடவுளை, ஒரு சக்தி வாய்ந்த மனிதனாகவே பாவிப்பது, எல்லா மதங்களிலும், சகஜமாகி விட்டாலும், எந்த மதத்தின் தீர்க்கதரிசிகளும், அந்நிலையே, கடவுளின் ஒரே பாவமென்று கூறவில்லை.

**தெய்வத்தைப் பல வித மனோபாவத்தில் அணுகுவது,** ஹிந்து மதத்**தின் சிறப்பின் சிகரமெனலாம்.** இதை மிகவும் தெளிவாகவும், ஆணித்தரமாகவும், கீதை விளக்குகிறது. அத்தியாயங்கள் IX,X,XI-லும், வேறு பலவிடங்களிலும், தன் மகிமைகளில் சிலவற்றைக் கூறி, IV-11-ல் பகர்வதாவது:- "மனிதர்கள், எந்த பாவத்தில் என்னை நாடினாலும், அதே பாவத்தில், அவர்களுக்கு நான் அருள்புரிகின்றேன். எவ்விதத்திலானாலும், மனிதர்கள் பின்பற்றுவது, என்னையேயாகும்". VII-20-ல், "பல்வேறு ஆசைகளின் காரணமாக, உண்மை ஞானத்தை இழந்தவர்கள், அவ்வாசைகள்

நிறைவேற, சடங்குகளைச் செய்து, என்னையின்றி, வேறு தெய்வங்களை வழிபடுகின்றனர்". VII-21-ல், "நம்பிக்கையுடனும், பக்தியுடனும், எந்த வடிவத்தை மனிதன் தொழுதாலும், அதே வடிவத்தில், அவனது நம்பிக்கையை உறுதியாகும்படி நான் செய்கிறேன்". பரமனே, எல்லாம், யாவும், என்பதால் ஏற்படும் தொடர் பயனே, மேலே கூறியவை. பரமன் எல்லா பாவங்களையும் அடக்கியவர். அன்னுருக்கென்ற தனிப்பாவம் யாதொன்றுமில்லை. அவரை நேரடியாகத்தொழ, பாவமின்மையோ, அல்லது எல்லா பாவங்களிலுமோ, அவரை வணங்கவேண்டும். இதுவே XVIII-62-ல், பகர்வது. ஒரு குறிப்பிட்ட (பரமனின்) பாவத்தைத் தொழும் ஜீவன், ஒரு தனிப்பட்ட தேவையையடையவே அவ்வாறு வழிபடுவதால், அது பரமபதமாகிய விடுதலையைப்பெற தகுதியற்றதாகிவிடுகிறது. பரமனின் நிலையைத் தவிர, மற்றெல்லா நிலைகளும், அழியுந்தன்மையுடையவை. சொத்து, சம்பத்து, மக்கட்பேறு, உலகபோகங்கள், வேண்டுவோர் வழிபடும் தெய்வபாவத்தில், பரமனே நின்று, அவர்கள் விரும்புவதை யளிக்கின்றுர். (VII–22). பலனை வேண்டி, பிறதெய்வங்களைத் தொழுவோர், அப்பயன்களை அனுபவிக்க பிறப்பு, இறப்புச் சுழலில் திரும்பத் திரும்ப வருகிருர்கள். ஆசையே, உடலெடுப்பதற்கு வித்து. மனிதன், எந்த தெய்வ பாவத்தில் ஈடுபட்டாலும், அது பரமனின் ஓர் அம்சமானதால், பரமனையே வணங்குகிருன். (IX–23)

**பிற மதங்களில், கடவுள் வேறு, அவர் படைத்த படைப்புவேறு, என்ற கொள்கை வழங்குகிறது.** மனிதனுங்கூட, கடவுளின் உருவிலே படைக்கப்பட்டவன்; அதாவது படைக்கப்பட்ட பொருள்களிலோ, ஜீவன்களிலோ, தெய்வீக உருக்காணலாம்; தெய்வீகத் தன்மை இல்லை. **ஆனல், ஹிந்து மதத்தில்**, தெய்வீகத் தன்மையற்ற படைப்பே, கிடையாது, என்ற சித்தாந்தம் வலுப்பெற்றதுமல்லாமல், அம்மதத்தின் உயர்நிலையைக் குறிக்கும், வேதாந்தம், "மனிதனே, நீ, கடவுள்" என்று துணிந்து பறைசாற்றுகிறது. "நீ, அதுவேதான்", என்ற மகாவாக்கியம் அத்துவைதத்தின் தாரக மந்திரம். புல்லானுலும், கல்லானுலும், தெய்வத்தன்மையுடையதே. XIII-26 ல்,"இந்த உலகத்தில், கல், மண், மரம் போன்ற, நிலைத்திணைப்பொருள்களானுலும் சரி, இயங்குதிணை ஜீவர்களானுலும் சரி, ஆன்ம பிரகிருதி சேர்க்கையாலானவையே". அவ்வாருயின், மரத்திற்கும், மனிதனுக்குமுள்ள வேற்றுமை யாது? இந்த அளவுகடந்த வேற்றுமையைப் பின் ஒரு தலைப்பில் விளக்குவோம். படைப்பிலுள்ள யாவும், ஆன்ம பாகம்,

பிரகிருதி பாகம், என இரண்டு பாகங்களாலானவை. அவ்விரண்டு பாகங்களும், வளர்ச்சியடைகின்றன. இவ்வளர்ச்சி நிலைகளின் வித்தியாசமே, ஒரு இனத்தை மற்றொரு படைப்பினத்தினின்றும் பிரித்துக் காட்டுகிறது. மானிட இனத்தில், ஒவ்வொரு தனி மனிதனிடத்திலும், பிரகிருதி பாகத்தின் வளர்ச்சியில், அதிகம் வேற்றுமையில்லாவிட்டாலும், ஆன்ம பாகத்தின் வளர்ச்சியில், ஏற்றத்தாழ்வுகள் காணப்படுகின்றன.

ஆன்ம வளர்ச்சியில், கீழ்ப்படியில் நிற்போர், சூரியனையும், சந்திரனையும், கடலையும், நதியையும், பாம்பையும், பசுவையும், வணங்கினார்களானால், அவர்கள் தொழுகை, அவர்களின் ஆன்ம நிலைக்கு ஒத்ததேயாகும். **தொழுகையில், வழிபடும் சின்னம் முக்கியமல்ல; தொழும் நோக்கமும், மனத்தின் உறுதியான நம்பிக்கையுமே பிரதானமானவை.** "ஒருவன், எதில், தன் முழு மனத்தையும் செலுத்துகிறானோ, அவன், அந்தப் பொருளாகவே ஆகிறான்". இது மனதத்துவ சம்பந்தமான ஒரு மாபெரும் உண்மை. இதுவே, உண்மையான பக்திக்கு ஆதாரம். இக்கருத்தை, IX-25-ல் காண்கிறோம். மனிதன் ஒரு கல்லினிடம், அதை எவ்வாறு பாவித்து, அன்பு காட்டுகிறானோ, அக்கல், அவனுக்கு அந்த பாவத்தை அடைந்து விடுகிறது. ஆலயங்களில் தொழுகைக்காக அமைக்கப்பட்ட சின்னங்களை, கல் என்றும், செம்பு என்றும், நினைப்பவர்களுக்கு, அவை, கல்லும், செம்புந்தான். ஆனால், அச்சிலைகளைப் பரமனின் வடிவங்களில் ஒன்றாகப் பாவிப்பவர்களுக்கு, அச்சின்னங்கள், பரமனின் வடிவங்களாகவே, ஏன், பரமனாகவே திகழ்கின்றன.

ஒரு மூர்க்கன், தொழுகைக்குரிய சின்னங்களை உடைத்தாலும், அவமதித்தாலும், அவை, அவன் மட்டில், கல்லேயாகும். அதைக் கண்டு, ஆஸ்திகர்கள் புண்படுவதில் பொருளில்லை. மார்க்கஸ் அரீலியஸ் உபதேசிப்பது போல், முரடன் செயலுக்கு நாம் பொறுப்பல்ல. அதைக் குறித்து வருத்தம் தெரிவித்தால், அம்மூர்க்கனின் நோக்கம் நிறைவேறி விடுகிறது. அவன் உடைப்பது, நாம் முன்பு தொழுத புனித சின்னமானாலும், (இதற்கு மகமதியர் படையெடுப்புக்களில் உதாரணங்கள் பலஉள),நாம் அச்சின்னத்தில் முன்புகொண்ட நம் மனோபாவத்தை ஏன், அகற்றிவிடக் கூடாது? **நம் மனபாவமே, அச்சிலையைப் புனிதமாக்கவும், கல்லாக்கவும் செய்கிறது.** இந்த நம் மனோநிலையை, நாம் மாற்றிக் கொள்ள இயலாவிட்டால், நாம் அவதிப்படுவது நியாயமே. தன்மனத்தை தன் இஷ்டம் போல், அடக்கியாளப்

பயிலாதவன், மனிதனல்ல என்றே கொள்ள வேண்டும். விக்ரக ஆராதனையைத் தூஷிப்பவர்கள், பள்ளிவாசல்களையும், வேதக் கோயில்களையும், புனிதமான இடங்களென்றும், அவைகளுக்கென ஒரு தனிப்பட்ட உருவமும் அளிப்பது ஏனோ? **மனிதனுக்குச் சின்னங்கள், ஒரு இயற்கையான தேவை.** அவற்றைக் குறை கூறுவது, மனிதப் பண்பற்றவர்களாலேயே இயலும். பல்வேறு ஆன்மப் படிகளில், பல்வேறு மனிதர்கள் நிற்பதால், பல்வேறு சின்னங்களும், பாவங்களும் தேவைப்படுகின்றன. பிறமதங்களை எடுத்துக் கொண்டாலும், அவற்றிலும், அவரவர்கள் **தேவைக்குத் தகுந்த மனோபாவத்தையே, கடவுளின் பாவமாகச் சமைத்துக் கொண்டிருப்பதைக் காண்கிறோம்.** கருணைக்கடலாகிய புத்தர் பிரான், உலகில் ஜீவன்கள் அவதிப்படுவது ஜீவகாருண்யமற்ற ஆசைகளாலும், அவற்றால் ஏற்படும் கொடுஞ் செயல்களாலுமே எனக்கண்டு, **மனிதன் கடைத்தேற, ஒரே, வழி, ஜீவகாருண்யமே என்று உபதேசித்தார்.** எபிரேயர்கள் (Hebrews), தங்களுடைய ஒழுக்கம் குன்றிப்போன நிலையை நினைத்துக் கடுமையும், கண்டிப்புமுள்ள பரமபுருஷனை தங்கள் தெய்வமாக்கிக் கொண்டார்கள். **யூதர்களும், மகம்மதியர்களும்**, தங்கள் மனச்சாட்சிக்கு முக்கியத்துவம் கொடுத்து, தங்கள் பரமனை, ராஜாதி ராஜனாகப் பாவித்து விடுதலையடைய நாட்டங் கொண்டார்கள். **கிறிஸ்தவர்களில் ஒரு சாரார்**, தங்கள் பாவச் செயல்களைக் கண்டு அஞ்சி, அதினின்றும் விமோசனமடைய, பரமனின் கருணையும், மன்னிப்பும் தேவை என்று கருதி, அன்பையே தெய்வமாகக் கொண்டாடினார்கள். கிறிஸ்தவ **கத்தோலிக்கர்கள்**, ஹிந்து சக்தி உபாசகர்கள் போல், சக்தி தேவியாகிய மாதாவை, முக்தியடைய நாடினார்கள். இவ்வாறே, பரமனின் பாவமானது, மானிடத் தேவைக்கு ஏற்றபடி சமைத்துக் கொள்ளப் பட்டது. பொதுவாக தர்மநெறியை அடிப்படையாகக் கொண்டு, தனக்கும் பரமனுக்குமுள்ள உறவையோ, தொடர்பையோ, காண, மனிதன், பரமனுக்கு ரூபத்தையளித்தான். ஆனால், தத்துவ ரீதியாக நோக்கும் பொழுது, பரமனை அரூபியாக பாவிக்கின்றான். பரமன் ரூபியுந்தான், அரூபியுந்தான். அரூப நிலையில், அவரைப் பாவனை செய்து தியானிப்பது கடினம். ஒரு சிலருக்கே அது சாத்தியப்படும். (XII-5). **ஹிந்து மதத்தை பலதெய்வ மதம் என்று இகழ்வது சரியல்ல:** தீவிரமான அத்வைத சித்தாந்தத்தை நிலை நாட்டுவது, ஹிந்துமத வேதாந்தமே.

சாம வேதத்தின் மகா வாக்கியமாகிய, ''தத் த்வம் அஸி'' நீ, அதுவே ஆம்'', என்பதின் பொருளைக் கூறுவது இயலாது. கீதையின்

பதினெண் அத்தியாயங்களும் அதன் விளக்கமே. ஹிந்து மத தீர்க்க தரிசிகள், கடைசியாகக் கண்ட முடிவு, இதுவே. தெய்வம்வேறு, மனிதன் வேறு அல்ல. பரமனுக்கும், நமக்குமுள்ள ஐக்கிய பாவமானது, நம்மை ஆன்மாவாகக் கூறும் உண்மை ஞானத்தின் அடிப்படை. எந்த ஆன்மாவுக்கும், பரமான்மாவுக்கும், வேறுபாடென்பது உண்மையாகக் கிடையாது; சங்கேதமாகப் பிரித்துக் கூறும் பழக்கமேயாம். பரமன் தன் க்ஷரபாவத்தில், பிரகிருதியுடன் உறவாடிப் படைப்பை ஏற்படுத்தும் பொழுது, ஆன்மா என அழைக்கப்படுகிருர். இந்த சம்பந்தத்தை கவி தாகூர், ஒரு மிகவும் அருமையான உபமானத்தால், உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளக்குகிருர். பரமனைக் கடல் நீராகவும், ஆன்மாவை, கடலில் வந்து, முடிவில் ஒன்றிப்போகும் நதியாகவும் முறையே ஒப்பிட்டு, பரமன்-ஆன்மத் தொடர்பு, ஒரு கணமும் அற்றுப்போவதில்லை என்பதைத் தெளிவாக்குகிருர். ஆரம்பத்தில், கடல் நீர் ஆவியாகமாறி, மேகமாக வானத்தில் சஞ்சரித்துப் பின் மழையாகப் பொழிந்து, முதலில், சிறு, சிறு, ஓடைகளாகவும், பின்னர் பிரவாகத்தை யடக்கும் நதியாகவும், மலைகளையும், காடுகளையும் கடந்து, நாடு, நகரங்கள் வழியாக, உலகுடன் பற்பல வகைகளில் உறவாடிக் கொண்டு, அங்கும் மிங்கும் அலைந்து திரிந்தாலும், எப்பொழுதும், தன் உண்மை நிலையாகிய கடல் நீருடன், ஐக்கியமாவதையே, குறிக்கோளாகக் கொண்டு, அந்நிலையை அடைய விரைந்தோடி, உலக பந்தங்களை களைத்தெறிந்து, எப்படிக் கடல் நீருடன் நதி, ஐக்கிய பாவத்தை யடைகின்றதோ அதேபோல், ஆன்மாவும், இடையில் ஏற்படுத்திக் கொள்ளும் உலகப் படைப்பில், ஒன்றிப் போய், பரமனின் தொடர்பற்றதாகக் காணப்பட்டாலும், பரமான்ம இணைப்பு ஒருகணமும் அற்றுப்போகாது, ஆன்ம-பரமான்ம ஐக்கியத்தை நிலைநாட்டுகிறது. ஆற்று நீரின் மூலத்தை யறிந்தவன், ஆறு வேறு, கடல் நீர் வேறு என வாதாட முடியாததுபோல், ஆன்ம மூலத்தை யறிந்தவன், ஆன்மா வேறு, பரமான்மா வேறு எனக் கொள்ளான். ஆன்ம, பரமான்ம ஐக்கியம் ஏற்பட்டாலே, ஜீவனின் உலக நாடகம் முற்றுப்பெறும்.

**ஜீவன் என்பது ஆன்ம-பிரகிருதி கூட்டு நிலை.** பரமனைப் போலவே, ஆன்மாவும், சத், சித், ஆனந்த மயமானது. மாயை, ஆன்மாவைத் தீண்டி, மயக்கமுற அடிக்கவோ, அல்லது ஆன்ம ஒளியைக் குன்றச் செய்யவோ இயலாது. மதிமயக்கமும், இருள் சூழ்வதும், இவ்வுடலைச்சார்ந்த, மனம், புத்தி, அகங்காரம், புலன்கள், ஆகியவற்றையே. இவைகளுக்கும் ஆன்மாவுக்குமிடையே, மாயை, ஒரு இருள்த்திரையிட்டு,

மயக்குகிறது. நாம் உபயோகிக்கும் குடை, நமக்கும், சூரியனுக்கு மிடையேநின்று, நம்மைக்கதிரவன் ஒளி வந்து அடையாது அடித்து விடுகிறது. குடை சூரியனின் ஒளியை அழிக்க முடியாது. நமது ஆன்மா, கதிரவனைப் போல், எக்காலும் களங்கப்படாது, பிரகாசித்துக் கொண்டே இருக்கிறது. (XIII-23) அஞ்ஞான இருளாகிய மாயத்திரை, ஆசைகளாலும், அஹங்காரத்தாலுமே, திண்ணமடைகிறது. உண்மை ஞானமென்பது, நமது புத்தியும், மனமும், இந்த மாயத்திரையாகிய அஹங்காரத்தையும், அதன் ஆசைகளையும் அடியோடு அகற்றுவதால் கிட்டும் நிலையாம். அந்நிலையில், நமது அறிவும், மனமும், ஆன்ம ஒளியை நேரடியாகப் பெற்று, ஜீவனை ஆன்ம பாவத்தில் ஐக்கியமாக்கிவிடும். அப்பொழுது, உலகம் வேறு, நாம் வேறு, பரமன் வேறு, என்ற வேற்றுமைப் பாவம் அழிந்து, யாவும் பரமனாகவே நிற்கும். "சிவோகம்", நாம் சிவம், என்ற உண்மையை அனுபவிக்க மாயையால் பாதிக்கப்படும் நமது அறிவும், மனமும், சூன்ய நிலையை அடைய வேண்டும். அச்செயலற்ற நிலையே, சமாதி நிலை.

நம் மனமும், புத்தியும், உலக வாழ்க்கையில், வினையாற்ற வல்ல கருவிகளே. நாமம் (பெயர்), ரூபம் (உருவம்) உள்ள பொருள்களையே அவை அறியக் கூடும். நாம, ரூபமில்லாத பரமன், அவைகளுக்கு அப்பாற்பட்டவர். புத்தியாகிய பகுத்தறிவு செயல்படுவது, அஹங்காரத்துடனேயே. இவை இரண்டும் சேர்ந்ததே, விஞ்ஞானமய கோசம் எனப்படுகிறது. பகுத்தறிவு, மனிதன் விழித்திருக்கும் ஒரு நிலையில் மட்டுமே ஆதிக்கம் செலுத்துகிறது. மற்ற நிலைகளாகிய, கனவு, தூக்கம், இவைகளில் பகுத்தறிவு செயல்படவில்லை. தவிர, கீழினங்களில், பகுத்தறிவு, ஏற்படாமலே இயற்கை யறிவுக்கு இடங் கொடுத்து விடுகிறது. மனிதன் சமாதி நிலையை அடையும் பொழுதும், பகுத்தறிவு செயல்படாமல், ஆன்ம அறிவு (Intuition) உதித்துச் செயல்படுகிறது. இவ்வாறுகப் பகுத்தறிவின் ஆதிக்கம், ஒரு குறுகிய இடை நிலையில் மட்டுமே ஏற்படுகிறது. மேலும், அதன் ஆற்றலும் நிராதீனமானதல்ல; பகுத்தறிவு, வேற்றுமை காணும் விவேகமே யல்லாது, உண்மையை உள்ளபடி அறிய இயலாதது. உதாரணமாக, 30°, 40°, 60° வெப்ப நிலைகளிலுள்ள மூன்று தொட்டி நீரில், ஒருவன் முதலில் 30° தொட்டியிலும், பின், 40° தொட்டியிலும், நீரின் வெப்ப நிலையைச் சோதித்தால், 40° நீர் வெப்பமுள்ளதாக உணர்வான். ஆனால், அவன் முதலில், 60° தொட்டியிலும், பின்னர் 40° தொட்டியிலும் முறையே கையை வைத்தால், இப்பொது, 40° தொட்டி நீர் குளிர்ந்த நீராகவே உணர்ச்சியளிக்கும். முன் அனுபவ வேற்றுமையால், 40°

நீர், ஒரு சமயம் வெப்ப நீராகவும், வேறு சமயம் குளிர் நீராகவும், அவன் பகுத்தறிவு உணர்த்துகிறது.

உண்மை, நம் பகுத்தறிவுக்கு அப்பாற்பட்டது. இதுவே மானிடனுக்குள்ள பெருங் குறைபாடு. நமது மனமும், புலன்களும், இவ்வாறே, அதனதன், துறைகளில், நமக்கு உண்மையை உள்ளபடி அறிவிக்க முடியவில்லை. மனிதனுக்கு ஏற்பட்ட கருவிகள் யாவும், குறைபாடுள்ளவைகளே. அவைகளின் மூலம், குறைவே அற்ற பரமனைக் காண்கவோ, அறியவோ இயலாது. ஆகையால், பரம்பொருளில்லை என்று வாதிப்பது, விதண்டா வாதமே ஆகும். நம் கருவிகளின் குறைபாடுகளை நாம் எண்ணுது செயல் படுவதும், உணராது முடிவு கட்டுவதும், நம்மைப் பெருந் தவருன நிலைகளில் கொண்டு சேர்க்கின்றன. எதிர்பாராத கஷ்ட நஷ்டங்கள் விளைவதும் இதனுலே. கீழினங்களில், இயற்கை யறிவு (Instinct) செயல்படுவதாகக் கூறினேம். அவ்வுயிர்கள், அவ்வியல்புக்கு அடிமைகளாகி, ஆற்ற வேண்டிய வினைகளை, மாற்றி யமைத்துக் கொள்ளும் சக்தி யற்றவைகளா யிருக்கின்றன. நன்மை யானுலும், கேடானுலும், இயற்கை இட்ட வழியே, அவை ஏக வேண்டிய நிர்ப்பந்தத்திற் குள்ளானவை ஆனல், மானிடனுக்கு, அவன் விழித்துச் செயல் படும் ஒரு நிலையிலாவது, பகுத்தறிவு செயல் படுவதால், அவன் தனக்கு அனுகூலமாயுள்ள செயலைத் தெரிந் தெடுக்கும் ஆற்றல் படைத்தவனு யிருக்கிருன். என்ருலும், கீதையின் துவக்கத்தில், அர்ஜுனனின் போக்குப் போல், தமோ குண உணர்ச்சிகளுக்கு வசப் பட்டு, பகுத்தறிவைப் புறக்கணித்துச் செயலாற்றி, தவறுதல்களுக்கும், பெருந் தீமைகளுக்கும் உள்ளாகிருன்.

மனிதனின் புலன் கருவிகள் யாதானுலும், அவற்றின் ஆற்றலுக்கு எல்லை யுண்டு. அவைகளின் சக்தி, திறமை, வீச்சு, ஒரு வரையறைக்குட் பட்டதே. உதாரணமாக, கண்கள் ஒளியையும், காதுகள் ஒலியையும் நுகர்கின்றன. இந்த ஒளியும், ஒலியும், ஒரு எல்லைக்கு மேற்பட்ட அளவை யடைந்தால், கண்கள் குருடாகிவிடும், காதுகள் செவிடாகிவிடும். அதிக ஒளியும், ஒலியும் மனிதனின் புலன்கள் ஏற்க முடியாது. அதே போல், ஒளியும், ஒலியும் மிகவும் கம்மிப் பட்டாலும் கண்கள் பார்வையையும், காதுகள் கேட்பதையும் இழந்து விடுகின்றன. ஒரு குறுகிய இடை வீச்சிலே, இவை செயல்பட இயலும். ஒரு பொருளை, சமீபத்திலிருந்து கண்டால், அது பெரிய உருவுள்ளதாகவும், தொலைவிலிருந்து நோக்கினுல், உருவம் குறுகியும் காண்கிருேம்.

நம், நிலைகளில் மாற்றம் ஏற்பட்டால், நம் புலன்களாலாகும் அனுபவங்களும் மாறி விடுகின்றன. உண்மையை உள்ளபடி, நமக்கு அறிவிக்க, நம் கருவிகளுக்கு முடிவதில்லை. தனி மனிதர்களின் அனுபவங்கள், இக்காரணங்களாலேயே, வித்தியாசப்படுகின்றன. ஒரே சம்பவத்தைக் குறித்து, பல தனி நபர்கள் சாட்சியம் அளித்தால், அவை ஒன்றுக் கொன்று முற்றிலும் ஒத்துப் போகா.

பகுத்தறிவு, நம் விழிப்பு நிலை ஒன்றில் மட்டும் செயல் படுகிறது. ஆனால், அது, அஹங்காரத்தின் கூட்டுறவால், நம் கீழியல்பான சுயநல எண்ணங்களையே வலுப் பெறச் செய்கிறது. ஆசையின் அவதாரமாகிய, நம் அகந்தை, நமது தார்மீக மேலியல்பைத் தடுத்து விடுகிறது. பகுத்தறிவு மேலோங்கினல், பொதுவாக, உணர்ச்சிகள் — நல்லவையும், கெட்டவையும் — குன்றிப் போகின்றன. ஏட்டுப் படிப்பினால், ஆகும் வறட்டுப் பகுத்தறிவு, உலகில் பொருளீட்ட உதவலாம்; ஆனால், ஆன்ம வளர்ச்சிக்குப் பிரயோசனமற்றது, என்று ஆதி சங்கரர், தம் பஜகோவிந்தம் முதல் பாட்டிலே எச்சரிக்கை விடுக்கிறார். விஞ்ஞானத்தின் ஒரே கருவியாகிய, பகுத்தறிவு, பெருங் குறைபாடுகளுக் குட்பட்டதே. இதை மனதில் கொள்ளாமல், விஞ்ஞானம் கட்டும் முடிவுகளை, வேத வாக்குக்கும் மேலான உண்மைகளென்று நம்பி, அடைதற்கரிய மானிடப் பண்புகளைப் பாழ்படுத்திக் கொள்ளுகிறான் மானிடன். மனிதனின் உலக அனுபவங்களும், உலக ஞானமும் கூட, புலன் நுகர்ச்சிகளாலே மாத்திரம் உண்டானவையல்ல. அவன் சிந்தனை சக்தியாலும், கற்பனை சக்தியாலும், மிக முக்கியத்துவம் வாய்ந்த அனுபவங்களும், ஞானமும் பெறுகிறான். சிலர் சமாதி நிலை கிட்டி, ஆன்ம ஞானமும் அடைகிறார்கள். இவை யாவும், புலனுகர்ச்சிக்கு அப்பாற்பட்டவை. கணித சாத்திரத்தைக் கவனித்தால், அதில் கூறப்படும் அடிப்படை உண்மைகள், புலன்களாலல்லாது, பரிசுத்தமான உள் உணர்வறிவால் கண்டவையே.

நமது ஆன்ம நிலையும், தெய்வீகமான மேலியல்பும், பகுத்தறிவுக்கு அப்பாற்பட்டவை. அப்பட்டமாக, சுயநலம் கோரி, மனிதன் செயல்படத் தயங்குவானேன்? கருணை காட்டாது, பிற உயிர்கள் பால், கொடுமையாகவே எப்பொழுதும் நடந்துகொண்டா லென்ன? மனிதனை மனிதன் ஏன் நேசிக்க வேண்டும்? வெறுத்தா லென்ன? சுயநலமே, தனி மனிதனுக்கு, அனுகூலத்தை அளிக்குமானல், உலகம் அதற்குத் தடை போடுவதேன்? இவை போன்ற வினக்களுக்குப் பகுத்தறிவு விடையளிக்க இயலாது. இவைகளுக்கு விடை, நம் உள்

ளத்திலே, நம் தெய்வீக இயல்பால், நாம் பிறக்கும் பொழுதே, அளிக்கப்பட்டு விடுகிறது. **நமது தெய்வீக இயல்பின் தன்மை, சுயநல மற்றதே.** உலக நன்மையும், உயிர்களின் நல்வாழ்வும், இந்த உயரிய தர்ம உணர்ச்சிகள் செயல்படுவதினுலேயே ஏற்படுவதாம். போட்டியும், பொருமையும், பகையும், சுயநல ஆசைகளால், விஷம் போல் தலைக்கேறிய, இக்காலத்தில், பிற ஜீவன்கள் வாழ்ந்தாலே நாமும் வாழ முடியும் என்ற சித்தாந்தத்தில், மனிதனுக்கு நம்பிக்கை குன்றி வருகிறது. **அகங்காரத்தின் கூட்டில் வளரும் பகுத்தறிவு, மனிதனைச் சுயநலப் பித்துக் கொண்ட பொருளீட்டும் யந்திரமாக்கி விட்டது.** பகுத்தறிவு, விதண்டா வாதத்தின் கருவி. பகுத்தறிவால், அடிப்படைத் தத்துவங்களை, ஆராய்ந்து முடிவு கட்ட இயலாது. கடவுள் இருக்கிறரா, இல்லையா, என்பதை வழக்காடி விடை காண இயலாது. இதே போல், அகண்ட வெளி (Space), காலம் (Time), இவைகளும், பகுத்தறிவுக்கு அப்பாற்பட்டவை. காலம், அகண்ட வெளி, இவற்றின், தன்மை, இயல்பு, யாவும் பகுத்தறிவால், விண்டு காண முடியாதவை. காலத்திற்கும், அகண்ட வெளிக்கும், ஆரம்பமோ, முடிவோ, உண்டா என்ற வினக்களுக்கு, பகுத்தறிவு விடை பகர்தல் இயலாது.

இந்த வறட்டுப் பகுத்தறிவு, வெற்றி பெறும் விஞ்ஞானத்தின் அரிய கருவியாதலால், விஞ்ஞானம் அடைந்த செல்வாக்கைத் தானும் பெற்று, உலகோரால், இவ்வுணர்ச்சி யற்ற பகுத்தறிவு, பெரிதும் புகழ்ந்து பாராட்டப் படுகிறது. அதைப் பெறவே நம் பள்ளிகளும், கல்லூரிகளும், பெரும் பாடுபட்டு, பொருளும் சிலவு செய்து, பயிற்சி யளிக்கின்றன. விஞ்ஞானம், இன்று, சில அபூர்வமான வேடிக்கைகள், நிகழ்த்துகிறது. அதில், சாதாரண மனிதன், மயங்கி மோகங் கொள்கிறுன். ஆழ்ந்த சிந்தனையாளர் எவரும், விஞ்ஞானமே, நமக்கு விமோசன மளிக்கு மென்று நம்பி, ஏமாற்றமடைய மாட்டார்கள். **பகுத்தறிவும், விஞ்ஞானமும், உலோகாயத வாழ்க்கை நடத்த ஏற்பட்ட கருவிகளே.** அக்கருவிகளுக்கு, மானிடன் அடிமையாகி நடப்பது, அவன் அழிவுக்கே வழி கோலாகும். நாம், ஒரு அநீதி செய்தால், நம் மனம் நம்மைத் துன்புறுத்துவதேன் ? நம் பகுத்தறிவு, நம் தீய வினைக்கு சம்மதம் தந்தாலும், நம் ஆன்ம அறிவு என்ற நம் மனச் சாட்சி, நம்மைச் சுட்டே தீர்க்கும். நம் சுய நலமும், ஆசைகளும் நம்மை இட்டுச் செல்லும். தவறன பாட்டையினின்றும், நம்மை விலகச் செய்து, தர்ம வழியே ஏகத் தூண்டும், **தெய்வீகக் குரலே, நமது மனச் சாட்சி என்பது.** இதுவே, நம்மை, விலங்

கினத்தி னின்றும் பிரித்து, உயர்த்துவது. சுயநலம் காக்கும் பகுத்தறிவால், உலக வாழ்க்கையில், பொருளீட்டலாம், பதவி யடையலாம். எதிர் பாராது, அழியும் இவைகளால், துன்பமே என்பதைப் பகுத்தறிவால் உணர இயலாது. பகுத்தறிவின் பித்தலாட்டத்தை விளக்க ஒரு சம்பவத்தைக் கூறி, அதையே, வளர்க்கும் மானிடன், ஆன்ம அறிவை யிழந்து, இயந்திரமாகி விடுவது நிச்சயம், என எச்சரிப்போம். ஒரு கடற்கரை வாசி, தனவான், கடலில் மூழ்கி மாண்டார். அவர் சடலம் ஒரு மீனவன் வலையில் சிக்கி, அவன் வசமாயிற்று. அதைப் பெற, ஒரு சிறு தொகை கொடுக்க முன் வந்தார்கள். ஆனால், மீனவன் அதிகம் விரும்பினான். அண்டை நகரிலுள்ள புகழ் பெற்ற வழக்கறிஞரிடம், இரு தரப்பாரும் சென்று, அவர் யோசனையை நாடினார்கள். இரு பக்கமும் தனது ஊதியத்தைப் பெற்றுக் கொண்டு, அப் பகுத்தறிவு மேதாவி, கூறியது இதுவே. "உங்களைத் தவிர, இந்தச் சடலத்தைப் பொருள் கொடுத்து யாரும் பெறப் போவதில்லை. ஆதலால், மீனவன் உங்கள் தொகைக்குச் சம்மதம் கொடுத்தே ஆக வேண்டும்" என்று, மாண்ட தனவானின் உறவினர்களுக்குத் தைரிய மூட்டி விட்டு, மீனவனைப் பார்த்தும், "உன்னிடமிருந் தல்லாது, வேறு வழியில், இச் சடலத்தை அவர்கள் பெற இயலாது. உன் தொகையை அவர்கள் கொடுத்தே தீர வேண்டும்," என்று உறுதி யளித்தார். இதுவே, சுயநலம் தாண்டவமாடும் உலோகாயதத்தின் விபரீதப் போக்கு.

நமது உடல் பல, உறுப்புக்களடங்கிய ஒரு பெரிய கருவி. நாம் ஏன் நடக்கின்றோம்? தசைகளாலும், எலும்புகளாலுமான கால்கள் இருப்பதாலேயா? இல்லை. கால்கள், நடப்பதற்கு ஒரு கருவிதான். கால்களில்லாமல் நடக்க முடியாது. ஆனால், அச்செயலுக்குக் கருவியாகிய கால்கள், அதற்குக் காரணமுமாகா. கால்கள் இருப்பதால், சதாசர்வ காலமும் நடந்து கொண்டேயா யிருக்கிறோம்? **கருவிகள் இல்லாது செயல் நடைபெறாது, என்றாலும், செயல்களுக்குக் காரணம் கருவிகளல்ல.** நமது உடல் ஒரு வண்டிக்குச் சமானமானது. அதையோட்டும் வண்டிக்காரன் யார்? புத்தியென்ன, மனமென்ன, ஞான கர்மேந்திரியங்களென்ன, நம் இச்சையின்றிச் செயல்படும் பிராணன், ரத்த ஓட்டம், உணவு ஜீரணமாதல், மலஜலங் கழித்தல் இவை, யாவும், ஒரு விதமான குழப்பமின்றி, ஒழுங்காகவும், அந்நியோன்யமாகவும், ஒற்றுமையுடன் செயல்படுவது எங்ஙனம்? இவைகளை ஆளுபவன் இல்லை என்றால், மரணநிலையில், இக்கருவிகள் செயல்படாது அழிந்து போவதேன்? நம் உடலில் சிலவினைகளைத் தவிர, தன்னிச்சையாகச்

செயல்படுவதென்பது கிடையாது? **நம் உடலுறுப்புக்களை, முறையாக வினை ஆற்றச் செய்வது, நமது ஆன்மாவே.** உடலுக்கு உயிரும், உணர்வும் கொடுத்து, எல்லா உறுப்புக்களும், தத்தம் வினையை யாற்ற வைப்பது ஆன்மாவே. ஆகையால், எச்செயலுக்கும், ஆதி காரணமாக நிற்கும் இந்த ஆன்மாவை, அதனால் செயல் படுத்தப்படும் கருவிகளால் அறியமுடியாது. தவிர, ஆன்மாவுக்கு ருபமோ, குணங்களோ கிடையாது. பின், நம் புலன்கள் எதை நுகர்ந்து, நமக்கு அறிவிக்கக் கூடும்? ஆன்மாவே, இவ்வுடலையும், மற்றும் கோசங்களையும், செயல்பட வைக்கின்றது நம் கைகளுக்கும், கால்களுக்கும், அறிவு கிடையது. நம் விரல் நம் கண்ணைக் குத்திவிடுகிறது. நம் பற்கள் நம் நாக்கைக் கடித்துவிடுகின்றன. ஆன்மாவின் கருவிகளுக்கு ஆன்மாவையறியும் வலிமையில்லை.

ஆன்மாவே, நம் ஜீவனுக்கு உயிர், உணர்வு அளித்து, இவற்றின்மூலம் உலக வாழ்க்கையை ஏற்படுத்துகிறது. **ஆன்மாயில்லாது அறிவோ, உணர்வோ இல்லை.** பின் ஆன்மாவை அறிவதெங்ஙனம்? ஆன்மாவை அறிபவர் யார்? ஆன்மா அல்லாத வேறு ஒரு அறிபவர் ஏற்பட்டாலே, அவர் ஆன்மாவை அறிவது கூடும். ஆன்மாவைத்தவிர, வேறு, அறிபவர் இல்லையென்றால் ஆன்மாவை அறிவதென்பது பொருளற்ற வாதம். பிரபஞ்சத்தில் அறிபவன், அறியப்படு பொருள், அறிவு, என்ற மூன்றும் சேர்ந்து செயல்பட்டாலே, விஷயஞானம் ஏற்படும். இம்மூன்றில், எப்பொழுதும், அறிபவன் **ஆன்மாவே.** அது ஒருபொழுதும், **அறியப்படு** பொருளாவதில்லை. ஏனென்றால், **அறியப்படு பொருள்களுக்கு,** ருபமும், **நாமமும், குணங்களும் உண்டு.** மேலும், அவைகள், நிலைத்து நிற்காமல், மாற்றத்தால், அழியுந் தன்மையுடையவை. பிறப்பு, இருப்பு, வளர்தல், மாற்றமடைதல், தேய்தல், மாய்தல், ஆகிய அறுவகை நிலைகளுக்கு அறியப்படு பொருள்கள் உட்பட்டவை. ஆனால், ஆன்மாவோ, பிறப்பு, இறப்பற்றான், மாறுதலற்றான். அவனது ஒளியாலேயே, நம் அறிவு செயல்படுவதால், அறியப்படும் உலகத்தை, நம் அறிவு அறியும் பொழுது, நாம் ஆன்மாவுடன் ஒன்றிவிடுகிறோம். இந்த ஒருமைப்பாட்டை, அஞ்ஞானத்தால் நாம் மறுக்கிறோம். நாம்வேறு, ஆன்மா வேறு என்று நம்புகிறோம். இதுவே, மாயை என்று ஆதிசங்கரர் கூறுகிறார். இந்த மாயை நிலையில், அறியப்படு பொருளாகிய இப்பிரபஞ்சம், நமக்கு அந்நியமாகவே நின்று செயல்படுகிறது. ஆனால், நாம் ஆன்மாவே என்ற உண்மை ஞானம், ஏற்பட்டகணமே, இந்தப்

பிரபஞ்சம், நமக்கு வெளியே தோன்ருமல், நம்முடன், நம் உள் ஒன்றிப்போய், அறியப்படு பொருள் என்ற வேற்றுமையழிந்து, யாவும் ஆன்ம மயம் என்ற உண்மை நிலையை ஏற்படுத்துகிறது. அறிபவன் வேறு, அறியப்படு பொருள் வேறு என்பது அஞ்ஞான நிலை, மாயை நிலை.

ஆன்மாவை, அறிவதென்பது, நம்மை நாமே அறிந்து கொள்வதேயாம். அஞ்ஞான நிலையில், நம்மை நம்உடலுடன் இணைத்து, உடலென்றே நம்புகிருேம். இயற்கையின் தத்துவமாகிய, அஹங்காரமே தமோ குணக்கூட்டால் நம்மை இவ்வாறு மாயையின் மயக்கத்தில் ஆழ்த்தி விடுகிறது. இப்பொய்யான நம்பிக்கைக்கு, நம் பகுத்தறிவும் துணையாய் நின்று, இந்த இருள் நாடகத்தை நீடிக்கச் செய்கிறது. நாம், நமது வாழ்க்கையில், அஹங்காரத்தையும், அதற்கு ஒத்துழைக்கும் பகுத்தறிவையும், மேலோங்க விடாமல், அஹத்தையடக்கி, ஆன்ம அறிவை வளரச் செய்தால், அது, நம்மை ஆன்மாவென்று கருதியே வாழச் செய்யும். நம் பகுத்தறிவு, தன்ஞல் உண்மையை உள்ளபடி முழுதும் அறிய இயலாததால், உண்மையைத் துண்டு போட்டு, மாயை நிலையை ஏற்படுத்துகிறது. பிரபஞ்சத்தில், எப்பொருளும், மற்றெல்லாப் பொருள்களுடனும், நெருங்கிய தொடர்பு கொண்டதே, என்ருலும், நம் பகுத்தறிவு, ஒவ்வொரு பொருளேயும், பிரித்துக் காட்டுகிறது. இதேபோல், காலம் என்பதும், துண்டுபோடக்கூடாத ஒரே தொடர்ச்சியான நிகழ்ச்சி. ஆனுல், நம் பகுத்தறிவு, இந்தக் காலத்தையும் துண்டுபோட்டே நமக்கு அறிவிக்கின்றது. இவ்வாறு. நம் பகுத்தறிவும், மனமும், உண்மையை மாருட்டம் செய்தே நமக்கு அளிக்கின்றன. மாருட்ட மடைந்ததையே, உண்மை என நாம் நம்பி, அஞ்ஞானத்தில் ஆழ்ந்து தவிக்கிருேம். நம் உலக அனுபவங்களெல்லாம் உண்மையின் திரிபே. இதையறிந்த ஞானிகள், உலகத் தோற்றங்களும், அனுபவங்களும், உண்மைக்கு மாருனவை என்று எச்சரித்து, உலகப்பற்று, நமக்கு நன்மை பயக்காததால், மரணம் கிட்டும்வரை காத்திராமல், முன்னரே, உலகைத் துறக்க வெண்ணி, நான்கு ஆச்ரம தர்மத்தை வகுத்தளித்தார்கள்.

பரமனின் சக்தியே, எங்கும் செயல்படுகிற தென்ருலும், இச்சக்தியின் அளவு, ஜீவனுக்கு ஜீவன், மாறுபடுகிறது. இந்த வேற்றுமையை, ஜீவன்கள், தங்கள் முயற்சியாலும். தகுதியாலுமே, ஏற்படுத்திக் கொள்ளுகின்றன. அரும் பெரும் சாதனைகளாலும், கடுந்தவத்தாலும், விசுவாமித்திரர், ராவணன், போன்றவர்கள், அபாரமான,

அசாதாரண திறமைகள் பெற்றூர்கள். அடைந்த பின், அச்சக்தி களை, நல்ல முறையிலோ, தீயவழியிலோ, கையாளுவது, ஜீவனின் பொறுப்பேயாம், பரமனுக்கு அதில் அக்கரையில்லை. பரமனின் வற்ருக் களஞ்சியத்தினின்றும், நமக்குக் கிட்டும் சக்தி, நாம் அதை ஏற்க உண்டாக்கிக்கொண்ட தகுதியைத் தழுவியதே. மின்சார பல்புகளில், ஒவ் வொன்றும், தன் ஏற்கும் அளவைக்குத் தக்கபடி, மின்சாரம் பெறு கிறது. ஐந்து வாட் பல்பும் உண்டு, ஆயிரம் வாட் பல்பும் உண்டு. அதேபோல்,ஜீவன்களிலும்,மற்றும் படைக்கப்பட்ட பொருள்களிலும், பரமனின் சக்தியின் அளவை, வித்தியசப்பட்டு நிற்கிறது. இவ் வித்தி யாசங்களுக்கு, ஜீவனின் முன் கர்ம வினைகளே பொறுப்பென்று, கர்ம விதி விளக்குகிறது. அவரவர் முன் வினைப் பயனாலேயே, இப்பிறப்பின் சூழ்நிலையும், தரமும் நிர்ணயிக்கப் படுகின்றன என்பதே கர்ம விதி.

ஆன்மா, ஒரு பொழுதும் நேரடியாகச் செயல்பட வில்லை, என்பதைக் கூறுவதுடன், ஆன்மாவைக் கர்த்தா, அதாவது வினையாற்றுபவர் என்று நினைக்கும் ஜீவன், அறிவிலி என்றும், அவன் விடுதலைக்கு அருகனில்லை, என்றும் கீதை பல விடங்களில் பறைசாற்றுகிறது. பிரகிருதிக்குப் போதுமான சக்தியை அளித்து, உலக நியதியையும் ஏற்படுத்தி, வினையும், வினைப் பயனும் தவிர்க்க முடியாதவை, என ஆணையையும் பிறப்பித்து, தன் கண்காணிப்பில், பிரபஞ்சம் இய லும்படி ஏற்பாடு செய்திருக்கிறூர் பரமன். வினையாற்றுவது பிரகிருதி யாகிய குணங்களே. இக்காரணத்தாலேயே, உலகில், நன்மையுடன், தீமை யும் ஏற்பட்டது. பரமனே நேரடியாக வினையாற்றினால், பின் தீமைக்கு இடமேது? அவனின்றி ஓர் அணுவும் அசையாது, எல்லாம் அவன் செயலே, என்ற வேதாந்தமொழிகளை அடிக்கடி கேள்விப்படுகிறோம். என்றாலும், வினையாற்றுவதில், மானிடனின் முழுப் பொறுப்பையு ணர்ந்து, பலனளிப்பது பரமனின் தர்மத்தீர்ப்பு என்பதை மறவாது, செயல்பட வேண்டும். ஜீவப் பிரகிருதிக்கு வல்லமை அளித்து, செயல்படவும் அனுமதி கொடுத்ததின் காரணமாக, வினை என்பது, முக்குண அடிப்படையிலான, அஹங்காரம், புத்தி, மனம், புலன் கள், இவைகளின் கூற்றே. மானிடன், தர்ம முறையிலோ, அதர்ம முறை யிலோ, செயல்பட சுதந்திரம் பெற்றிருக்கிறன். சுயநல ஆசைகளின் தூண்டுதலால், தீய வினைகளாற்றினால், பொறுப்பு ஜீவனதேயாம். அதர்மம் ஓங்கி, தர்மத்தையழிக்கத் தலைப்பட்டால், சாட்சியாகநிற்கும் பரமன், வாளா இராமல், தன் தர்ம ஆணையை நிலைநாட்ட, தானே பிரகிருதியின் உடை தரித்து:அவதாரம் செய்து அதர்மத்தையழித்து,

தர்மத்தை ஓங்கச் செய்யத் தயங்குவதில்லை. (IV-7, 8). மானிடன், தன் இச்சைபோல் செயல்பட்டாலும், அவ்வினைகளின் பயன்கள், தர்மத் தீர்ப்புக்குட்பட்டவை; அவன் தன் இச்சைபோல், நினைத்த பயனை யடைய முடியாது.

படைப்பின் தரங்கள், யாவற்றிலும், தெய்வத்தன்மையுண்டு. ஆனால், கீழினங்களில், இத் தெய்வீகம், வழங்காத, புதைபட்ட நிலையில் நிற்கும். படைப்பின் தரம், உயர உயர, தெய்வசக்தி வெளிக்காட்டத் தலைப்படும். உயர்ப்படி ஏறிய, மனிதனிடத்தில், இச்சக்தி பிரபல்யம் அடைகிறது. இது ஒரு அன்பளிப்பேயானாலும், மனிதன், தன் பெரும் முயற்சியாலே, அதையடையத் தகுதியாக்கிக் கொண்டு, இவ்வரிய பொக்கிஷத்தைப் பெறுகிறான். இனியும் அதைப்போற்றி வளர்த்து, மேலாம் நிலையாகிய, பரமனின் பதத்தையடைவதே அவன் கடமை; அவன் பிறவி எடுப்பதின் குறிக்கோள். அல்லாது, வினையாற்றும் சுதந்திரம் பெற்றதின் விளைவாக, இச்சீல நிதியை, உலகச் சோதனைகளில் வீணாக்கிக், கீழின விலங்குகள் போல், ஆசைகளுக்கு அடிமையாகிச் செயல்பட்டால், துன்பங் கிட்டுவதுடன், மறுபிறவியில், விலங்கினங் களில் தள்ளவும் படுவாவன். (XVI-20). நம் உள்ளும், புறமும், பரமன் வசித்தாலும், அவரது நிரந்திரமான தர்ம ஆணையின்படி, வாழ்க்கை நடத்துவது, நம் பொறுப்பு. பரமன், பார்வையாளராக நிற்பார். இவ்வுடலாகிய, பிரதேசத்திற்கு, ராஜா, பரமான்மாவே. ஆனால், உடலையாளும் பொறுப்பை, சிலதர்மவிதிகளுக் குட்படுத்தி, ஆட்சியை, பிரகிருதிக்கே அளித்து, தன் கண்காணிப்பை, மனச்சாட்சி மூலம்,நடத்துகிறார். யாவற்றுக்கும் வித்து பரமனே; சக்தியும் அவரதே என்றாலும், அதிகாரமும், போதிய வலிமையும் பெற்ற பிரகிருதியின் ஆதிக்க மானது, ஜீவனின் வாழ்க்கையில், அதிகஅளவு பங்குபெற்று, அதே சமயத்தில், பிரகிருதியின் படைப்பாகிய, அஹங்காரம், அதிகார மோகங்கொண்டு, ஜீவனின் தெய்வச் சார்பை, பரிவர்த்தனஞ் செய்ய சுழற்சி செய்து வெற்றியுமடையுமானால், அஜ்ஜீவனின் வாழ்வு, தாழ்வாகி விடுகிறது. புத்தியும், அஹமும், பிரகிருதியின் தத்துவங்கள்; ஒரே கோசத்திலடங்கியவை யானாலும், ஒன்றுக்கொன்று, மாற்று இயல்பு களுடையவை. புத்தி, அஹங்காரத்திற்குப் பணியாத நிலையில், இவ் வேறுபாடுள்ள தன்மைகள், போட்டியாகப் பரிணமித்து, ஜீவனின் நலனுக்கே ஏற்படுகிறது. அஹம், சுயநலதின் கூற்றால், உலகப் பற்றை யுண்டாக்கி, ஜீவனை உலக வாழ்க்கையில் சிக்க வைக்கின்றது. புத்தியோ வெனில் ஆன்ம ஒளி பெறுங் காரணத்தால், உலகப்பற்றை நீக்கி, ஜீவனின் விடுதலைக்குப் பாடுபட; மனத்தை யடக்கிஆள முயலுகிறது. இவ்வாறு,

தர்ம முறையில், புத்தி செயல்பட, அதைத் தர்மவழியில் நாட்டங் கொள்ள பயிற்சி அளிக்கவேண்டும். நல்லெண்ணங்களும், நல்லோர் கூட்டுமே, புத்தியை நல்வழி திருப்பும், வலுவும் ஊட்டும். புத்தி, உறுதியுடன் செயல்பட்டாலே, அஹத்தையும், மனத்தையும், அடக்கியாள இயலும். தார்மீக புத்தியே, விடுதலையின் திறவுகோல். தர்ம உணர்ச்சிகளுக்கு இடமே கொடாத விஞ்ஞான விஷய அறிவும், ஜீவனத் திற்காகப் பயிலும் வறட்டுப்பகுத்தறிவும், உலகச் சேற்றிலே ஜீவனை என்றும் அழுந்தச் செய்யும்.

எல்லா ஜீவன்களிடத்தும், " நான் " என்ற உணர்வு ஏற்படுகிறது. இது, நம் உடலில் எவ்வகை மாற்றங்கள் ஏற்பட்டபோதிலும், நம் முள், விசேஷகுண பேதங்கள் உண்டானாலும், பிறவி முதல் இறப்பு வரை, ஒரு மாருத நிலையில் நிற்கும் உணர்வாகவே இருக்கின்றது. இதனாலேயே, நாமும், மற்று முலகத்தோறும், ஒரு ஜீவனை அடை யாளங்கண்டு கொள்ள உதவுகிறது. இந்த ' நான்," என்பது, ஆன்மாவா? அல்லது, உடலின் ஒரு துடிப்பா? பின்னதாக இருந்தால், நாம் அயர்ந்து தூங்கும் பொழுது, அது எங்கு நிற்கின்றது? நாம், கனவு காணும் பொழுதும், இதன்கதி என்ன? மனிதன், விழிப்புற்றும், உறங்கியும், கனவு கண்டும், இம்மூன்று நிலைகளை, மாறி மாறி யடைகிருன். இந்த வேறுபடும் நிலைகளில் ஒன்ருகிய, விழிப்பு நிலையில், " நான் " என்பது, பூதவுடலைத் தாங்குகிறது. ஆனால் கனவு காணும் நிலை யில், இப்பூதவுடலைக் களைந்து, வேறு கனவு உடலை ஏற்றுத் தாங்கு கிறது. அயர்ந்து தூங்கும் பொழுதும் இப்பூதவுடலின் நினைவே அற்றுப்போகிறது. ஆகையால், " நான் " என்பது, இப்பூதவுடல் சம்பந்தப்பட்டிருந்தால், இந்த நிலைமாறுபாடுகளில், அது அடிபட்டே தீரும்; நிலைத்து நிற்காது. ஆனால், நம் அனுபவத்தில், " நான் " என்ற உணர்வு, எந்த நிலையிலும், அழியாமலும், மாறுபாடடையாமலும் இருப்ப தோடு, எல்லா நிலைகளையும் தாங்கி, தானே உணரவும் செய்கின்றது. ஆகையால், அது உடலுக்கு அப்பாற்பட்டதே. அதுவே, ஆன்மா எனப்புகழ் பெற்றது. நம்முடைய, இப்பிறவியில் மட்டுமல்ல, எல்லாப் பிறவிகளிலும், அஃதொன்றே, அழிவில்லாது, மாருது நின்று, நம், பல பிறவிகளையும் இணைத்து, நம் ஜீவனின் ஆன்ம முன்னேற்றத்தைத் தாங்கி நிற்கின்றது. ஆன்ம அடிப்படை இல்லாது, படைப்பே இல்லை. மனிதன், தன்னுள்ளும், புறமும், சுற்றிலும், பிரகிருதியின் படைப்புக்கள், இடைவிடாது மாறி, அழிந்து கொண்டிருப்பதைக் காணவோ, அறியவோ, உணரவோ, முடிவது, அவனுள் நிற்கும், ஒரு மாருநிலையினாலே தான். இடை

விடாது மாறும், உள், வெளி, இரு உலகங்களிலும், அது மாறுத லின்றி உறுதியாக நிலைத்திருப்பதால், அவ்விரு உலகங்களும் அழியும் பொழுதும், அது அழியாது நிற்கும். வேற்றுமையை உணர்வதே அடிப்படையாகக்கொண்ட நம் அறிவு, வேறுபாடற்ற ஒன்றை உணர இயலாது. நம் ஆன்மா, நம் அறிவுக் கெட்டாதது. மாறும் உலகமும், அழியும் உடலும், மாருத அழிவில்லாத தொன்றை உணர்த்துகின்றன, உறுதிப்படுத்துகின்றன.

கர்மவிதி செயல்பட, ஆன்மாவே ஆதாரம். மறுபிறப்பிற்கும் ஆன்மாவே மூலம் உடல் தத்துவங்கள், மரணத்தில் அழிந்து, மூலப்பொருள் களாக மாறிவிடுகின்றன. ஜீவன், தன் குணகர்மவினைகளை, சுவடு நிலையில், ஆன்மாவால் தாங்கப்பெற்று, மறு உடல் ஏற்பாடான தும், அதனுட் புகுந்து, புதிய வாழ்க்கை நடத்துகிறது. ஆன்மாவை மறுத்தால், நமது முன்வினைப்பயன்கள், குணங்கள், நம்மைப் புதிய பிறவியில் தொடர்வதெங்ஙனம் கூடும்? நம் பல பிறவிகளுள், ஒன்றுக்கொன்று, ஒட்டோ தொடர்போ, எவ்வாறு நிகழும்? நமது வினைப்பயன்கள், எவ்வாறு ஆன்மாவுடன் இணைக்கப்பட்டு, புதுப் பிறவியை அடைகின்றன என்பது, நமக்குத் தெளிவு படாததால், கர்மவிதியையும், மறுபிறப்பையும், மறுப்பது தவறு. ஆன்மா இல்லாது நம் எண்ணங்களும், செயல்களும், திறமைகளும், (உடல்) மரணத்தால் அடிபட்டேபோம். நன்மையும், தீமையும், வேற்றுமை யின்றி, ஒரே சாம்பராகிவிடும். ஆனல், இவை உண்மையாகா வென்று, நம் உள் உணர்வு; பறைசாற்றுகிறது; உலக அனுபவங் கள் உறுதிப்படுத்துகின்றன. ஜீவன்கள், பிரபஞ்சத்தில், பல்வேறு நிலைகளில் பிறப்பதும், இருப்பதும், பல்வேறு திறமை பெற்றிருப் பதும், பல்வேறு அனுபவங்கள் அடைவதும், அவரவர் செய்த வினைப்பயன்களாலானவை. இக்கொள்கைகள், நம் பகுத்தறிவிற்கு உகந்தவையாயினும், பிறமதக்கோட்பாடுகள், இவைகளை மறுத்து, பகுத்தறிவாளிகளின் எதிர்ப்பையும் ஏற்படுத்திக்கொள்கின்றன.

இந்த உடலும், இந்த உலகமும், அநித்தியம், அழிவுள்ளவை. ஆனல், இவற்றைத் தாங்கி, இவைகளைச் செயல்பட வைக்கும் அடிப்படை, என்று மழியாத, மாருத, ஆன்மாவே என்பது, மனிதனின் மூன்று நிலைகளாகிய, விழிப்பு, கனவு, உறக்கம், இவைகளை விண்டு பார்த்தால் விளங்கும். மனிதனின் உடல், உயிர் பெற்றிருக்கும் காலத்தை, மாறி மாறி வரும் இம்மூன்று நிலைகளிலே, கழிக்கின்றது. இம் மூன்றில், ஒன்ருவது, நிலைத்திருக்கும் தன்மை பெறவில்லை. மூன்றுமே,

மாற்றத்தால், அழிந்து போவதே. விழிப்பு நிலையை விண்டுபார்த்தால், அதில் மனத்தாலும், பூதவுடல் கருவிகளாலும், வினையாற்றுகிறோம். இவற்றை, நம்முள், ஏதோ ஒன்று உணரவும் செய்கிறது. இந்த, இரட்டை யுணர்ச்சி, நிலையற்றதே; அதைத் தவிர்ப்பதே விடுதலை. விழிப்பு நிலையில், நம் அனுபவங்களெல்லாம், அநேகமாக வெளி யுலகைப்பற்றியவை. இந்த நிலையில், ஒன்றும் மாறாது, நிலைத் திருப்பதாகக் காணப்படவில்லை — மாற்றமும், அழிவுமே, நம் அறி வுக்கு விழித்திருக்கும் நிலையில் எட்டுபவை, உலகத்தை, உள்ளபடி அறிய இயலாத நமக்குக் கிட்டுவதெல்லாம், நம் மனத்தால் சமைக்கப் பட்டவையே. நம், மனத்தின் குறுக்கீட்டாலே, உண்மையை நாம் அறிய முடியவில்லை. உண்மையின் இலக்கணம், என்றும் எக் காலும், மாறாது, அழியாது நிற்பதே. ஆகையால், நம் விழிப்பு நிலை உண்மை நிலையாகாது. நாம அந்நிலையில் அனுபவிப்பது உண்மையின் திரிபேயாம்.

கனவு நிலையை விண்டு பார்த்தால், அங்கு நமது மனம், தன் கற்பனை சக்தியால், நமக்கு ஒரு விசித்திரக் காட்சியை அளிக்கிறது. வெளி யுலகுக்கும், கனவுலகுக்கும், ஓரளவு தொடர்பு கண்டாலும், கனவு நிகழ்வது, நம் மன வுலகிலேதான். விழிப்பு நிலையிலும், நம் அனு பவங்க ளெல்லாம், நம் மனத்தின் கூற்றே யானாலும், அந் நிலையில், நமது புலன்கள், வெளி யுலகுடன் தொடர்பு கொள்ளுகின்றன. கனவு நிலையில், வெளி யுலகத் தொடர்பே இல்லை. நமது, மனம் ஒரு கனவு உலகத்தையே படைத்து, நமக்கு ஒரு கனவு உடலையும், தந்து, கனவிலே செயல் படவும் செய்கிறது. நம் கனவை நாம் அனுபவிக் கிறோம். அக்கனவு அனுபவங்களை, நம்மில் ஏதோ ஒன்று உணர்ந்து விழிப்பு நிலை யடைந்ததும், உணர்த்துகின்றது. கனவு நிலையும், மாறு தலால் அழியுந் தன்மை பெற்றதால், உண்மையாக இருக்க முடியாது

நல்ல தூக்க நிலையை கவனித்தால், அங்கு நம், உடல், புலன் கள், மனமும் கூட, செயலற்றுப் போகின்றன. ஆனால், சுவாசித் தல், ரத்த ஓட்டம், ஜீரண வேலைகள், இடை விடாது, தடைப் படா மல், நடந்து கொண்டே இருக்கின்றன. மற்ற இரு நிலைகளிலும், மும் முரமாகச் செயல்படும் அஹங்காரம், தூக்கத்தில் செயல் படாது நிற்கிறது. அயர்ந்த தூககத்தில், ஆசைகள் கூட அடங்கி ஒடுங்கி விடுகின்றன அறி வும் செயல் படாது, வாளா நின்றாலும், நம்முள் ஏதோ ஒன்று இந்த நிலையையும், உணர்ந்து, நமக்கு அறிவிக்கிறது. மனமும், அறிவும், மற்றும் உறுப்புக்களும், நிம்மதியான ஓய்வு எடுத்துக் கொள்வதால்,

மற்ற இரு நிலைகளில் ஏற்பட்ட களைப்புத் தீர்ந்து, உடல், மனம், யாவும், வலுப் பெறுகின்றன. நல்ல ஆழ்ந்த உறக்கத்தைப் போல், உடல் கேடு, மனக் கேடுகளுக்கு குணந் தரும் மருந்து வேறில்லை. இம் மூன்று நிலைகளும், மாறுபட்டு அழிவதால், உண்மையாகா வெனினும், அவற்றைப் பொய் என்று பகர்வது தவறு. பொய்க்கு இருப்பே கிடையாது. ஒரு குடிகாரன், புத்தி பேதத்தால், ஏதேதோ காணுவதாகக் கூறுவான். அவைகளுக்கு அடிப்படையே கிடை யாததால், அவை பொய்யே. ஆனால், மனிதனின் மூன்று நிலைகளாகிய இவ்வுலகம் பொய்யல்ல; அவை யாவும், உண்மையின் திரிபே. உண்மை யைத் திரித்துக் காட்டும் ஆற்றலே மாயை என வழங்குகிறது. மாயை என்பது பொய்யல்ல, உண்மையு மல்ல. மாய நிலையில் பிறக்கும். மானிடன், அதினின்றும் விடுபட்டு, உண்மை நிலையை எய்துவதே, அவன் குறிக்கோள்.

உண்மையை ஆதாரமாகக் கொள்ளாது, உண்மையின் திரிபாகிய மாய நிலை ஏற்பட முடியாது. அழிந்து, மாறுபாடடையும் மூன்று மனித நிலைகளுக்கும், அடிப்படையாக ஒரு உண்மை நிலை இருந்தே தீரும். அந்நிலையே, ஆன்ம நிலை. இதுதான் மாறுபாடடையாமல், மாறு பட்டு அழியும் மூன்று மனித நிலைகளிலும் ஏற்படும் அனுபவங்களை யுணர்ந்து, அவற்றை இணைத்து, ஒரே ஜீவனுக் குரியவை, என்று நிரூபிக்கின்றது. ஆன்மாவே, ஒவ்வொரு நிலையிலும், உணர்வை யளித்து, அனுபவம் ஏற்படச் செய்கிறது. அஃதல்லாது, ஒரு நிலை யில் ஏற்படும் சம்பவங்கள், மறு நிலைகளை யடையும் ஜீவனுக்குப் புலப்படாது. இந்த நிரந்தரமான ஆன்ம நிலையே, நமது உண்மை நிலை. துரிய நிலை என்றும் பகர்வார்கள். சமாதி என்பது, துரிய நிலையை அடைவதே. சமாதி கலைந்ததும், ஜீவன், மறுபடியும், மாறுபடும் மூன்று நிலைகளைப் பெறுகிறான். துரிய நிலையே, மற்ற மூன்று நிலைகளையும் தாங்கும் நிலை, உணரும் நிலை, அறியும் நிலை; மாறு படும் மூன்று நிலைகளும், அறியப்படும் நிலைகள். நமக்குள் ஏற்படும் "நான்" என்ற பாவம், துரிய நிலைக்குரியது. இந்நிலை, அடிப்படையாக இல்லாது போவதே, மரணம். துரிய நிலையே, சுய உணர்வு நிலை, சுய ஒளி நிலை, பரமானந்த நிலை. அது தன் சுய உணர்வு, ஒளி, ஆனந் தம், இவைகளாலே, ஜீவனுக்கு, மற்ற மூன்று நிலைகளிலும், ஒளி, உணர்வு, அளித்து, அனுபவம் ஏற்படச் செய்கிறது; தானும் சாக்ஷியாக நிற்கிறது.

மனிதனின் மூன்று நிலைகளாலானது, இந்த வெளியுலகம். விழிப்பு நிலையிலும், கனவு நிலையிலும், இவ்வுலகம் வேறு, நாம்வேறு என்ற, பிரிவுபட்ட எண்ணம் ஏற்படுகிறது. நமது, அஹங்காரம், ஆசையின் காரணமாக, உலகப் பொருள்களில் மோகங்கொண்டு, அவற்றைத் தன் உடமையாக்க யத்தனித்துப் படாதபாடும் படுகிறது. நல்ல தூக்கத்தில், இவ்வேறுபாடான உணர்ச்சி ஏற்படவில்லை. ஏன்? ஆசையும், அஹமும், செயல்படவில்லை. நாம் வேறு, உலகம் வேறு என்ற எண்ணம் உண்மையின் திரிபே. இது, விழிப்பு நிலையில் அதிகமாகவும், கனவில் மட்டுப்பட்டும், நல்ல தூக்கத்தில் செயலற்றும், சுத்தத் துரியநிலையில் அழிந்தும் போய்விடுகிறது. விழிப்பு நிலையில், ஆசையும், அஹமும், வலுவடைந்து, ஜீவனை ஆன்ம போதத்திலிருந்து, அப்பால் இழுத்துச் செல்லுகின்றன. மாயை திண்ணமடைந்து, அதர்ம வினைகளிலே, மனத்தை நாட்டங் கொள்ளச் செய்கிறது. மாயை, குணமற்றதை குணமுள்ளதாகவும், பிரதிகூலமானதை, அனுகூலமாகவும், திரித்துத் தோற்மளிக்கச் செய்யப் பகுத்தறிவை மயககுகிறது. குருடன் கண்களை இழந்ததால், சூரிய ஒளியை அடையவில்லை; அதேபோல், அஞ்ஞானி, உண்மையைக் காணுவதில்லை. ஆன்மஞானமே, உண்மையைக் காட்டும் ஒளி. விஞ்ஞானத்தின் குறுகிய நோக்கையும், சிற்றெல்லையையும், குறைபாடான ஆற்றலையும் உணராது, ஆன்மாவை மறுப்பது, மானிட வர்க்கத்தின் துர்ப்பாக்கியமே.

பிரபஞ்சத்தில், ஒன்றே, பலவாகத் தோற்றமளிக்கின்றது. இதன் உண்மை எளிதில் புலப்படாது. இதுவே மாயையின் திரித்துணர்த்தும் கூற்று. ஒரே சர்க்கரைப் பாகால் செய்த பல உருவ மிட்டாய்களை, வெவ்வேருகவே கருதி, இளம் மனம் யாவற்றையும் அடைய விரும்பும் பாங்கில், ஆன்மஞானம் அற்ற நாம், படைப்பில் காணும் வெளிவேற்றுமைகளைப் பெரிதாக்கி, ஒற்றுமையை மறந்து, சுயநலம் காரணமாக, வாழ்க்கையில், அதர்ம முறைகளைக் கையாளத் தயங்குவதில்லை. ஆன்ம அறிவு உண்டானுலே, வெளிவேற்றுமைகள் மறைந்து, உண்மை அடிப்படையான ஒற்றுமையை யுணர்ந்து, சுயநலமற்று, தர்மநீதியில் வாழ்க்கையில் செயலாற்றுவோம். இன்று உலகோர் கொண்டாடும், விஞ்ஞானம், ஜடப் பொருள்களை விண்டு ஆராய்ந்து, அவற்றின் ஒரே மூலத்தைக் காணப் பாடுபடுகிறது. உலகப் பொருள்கள் யாவும், நூறு வெவ்வேறு, மூலப் பொருள்களால் ஆனவை என்று, விஞ்ஞானம், ஆரம்பத்தில், ஒரு சித்தாந்தத்தை ஏற்படுத்தி, பின்னுல், இந்த மூலங்களை விண்டுபார்க்க முடிந்ததும்,

அவை யாவும் அணுக்களாலானவைகள் என்று கண்டார்கள். இவ்வணுக்களையும், சில சோதனைகளில் பிளந்துகாண முடிந்து, அணுக்கள், பரமாணுக்களாகிய, எலக்டிரான், புரோட்டான், இவற்ருல் ஆகியவைகள் என்று ஊகிக்கலானுர்கள். பரமாணுக்களாகிய எலெக்டிரான், எதிர்மின்சார அணுவைத் தாங்கி நிற்பதாயும், புரோட்டான், நேர்மின்சார அணுவை வகிப்பதாயும், கூறுகிருர்கள். ஆனுல், மின்சாரம், ஏதாவது ஒரு பொருளால் தாங்கப்பெற்றே நிற்கமுடியும்; தனித்து நிற்க இயலாது. எலெக்டிரான் என்ற எதிர்மின்சாரத்தைத் தாங்கும் அல்லது தரிக்கும் அடிப்படையாது? ஒருவரும் இதையறியார். என்ருலும், அளவுகடந்த வேறுபாடு களையும், தொடர்பே இல்லாதது போல் வெளித் தோற்றமளிக்கும் ஜடப்பொருள்கள் யாவும், மின்சாரத்தை அடிப்படையாகக் கொண்டவையே, என்ற விஞ்ஞானத்தின் இன்றைய சித்தாந்தம், நாம் மேலே கூறிய, ஒன்றே பலவாகத் தோற்றமளிக்கின்றது, என்ற, நம் மறைகளின் உண்மையை அடைகிறது. விஞ்ஞான பரமாணுக்களுக்குப், பொருள்திணிவும், பரிமாணமும் காணுவதால், அவை ஜடப் பொருளே. இங்கு, அதிசயிக்கத் தக்கது யாதெனில், இப் பரமாணுக்கள், சில சமயம், ஜடத்தன்மையை இழந்து, அலைகளின் அதிர்வு போலான தன்மையை யடைகின்றன. இப்பாங்கு, மற்றுமொரு புதிய விஞ்ஞான சிததாந்தமாகிய, ஜடப்பொருள் சக்தியாகவும், சக்தி ஜடப்பொருளாகவும், மாற்றமடையலா மென்பதை, ஊர்ஜிதம் செய்கிறது. பிரபஞ்சத்தின் அடிப்படை, ஜடப்பொருள் அல்ல; சக்தியாக இருக்கலாம் என்ற முடிவுக்கு, விஞ்ஞானமும் கிட்டுகிறது. ஆனுல் சக்திக்கு ஆதாரம் யாது? விஞ்ஞானம் இதற்கு விடை பகராமல், ஜடநிலையே, உலகின் அடிப்படையென்று சாதிக்கின்றது.

பிரபஞ்சம், பல்வேறு வெளித் தோற்றமளிக்கும், கணக்கற்ற பொருள்களால் ஆனுலும், அவை யாவற்றையும் ஆக்கிய மூலப்பொருள் "ஒன்றே" என்ற கோட்பாட்டை கீதை வற்புறுத்துகிறது. அந்த 'ஒன்றே" பரம்பொருளாகிய பரமன் அல்லது ஆன்மா வென்றும், பிரகிருதி என்பது, பரமனின் சக்தி என்றும், சக்தியே, ஜடப்பொருள்களுக்கு மூலம் என்றும் நிலைநாட்டுகிறது. சக்தியாகிய, பிரகிருதியின் தத்துவங்களே, ஆன்ம வலிமையால், இப்பிரபஞ்சத்தை ஏற்படுத்தின. இவ்வுலகில், உணர்ச்சிகளே, பிரதானமெனச், சில மேதாவிகள் நம்புகின்றனர். **எண்ணங்களும், உணர்ச்சிகளும், இப் பிரபஞ்ச வடிவெடுத்திருக்கின்றன.** கீதை இதை அனுமதிக்கின்றது. X-6-ல், "மகரிஷிகள் ஏழ்வரும், ஆதி மனுக்கள் நால்வரும், என்

மனத்திலே, உதித்தவர்கள். அவர்களின் மூலமாகவே, உலகிலுள்ள உயிர்கள் யாவும் வந்தவைகள்." முதல் படைப்புக்கள், பரமனின் எண்ணத்தாலானவை. எண்ணமே, சக்தியாகவும், ஜடமாகவும் பரிணமிக்கு மென்பது இதனுல் தெளிவாகின்றது பரமனின், மானசக் காட்சியே, இப்பிரபஞ்சம். எண்ணமும், கருத்துமே, புதுப் புதுப் படைப்புகளுக்கு ஆதாரமாகின்றன. எண்ணத்தின் மகிமையும், சக்தியும் அளவற்றவை. மதஸ்தாபகர்களாகிய, புத்தர், இயேசு நாதர், மகம்மதுநபி, இவர்களின் கருத்துக்கள், இன்றும் கோடிக் கணக்கான மக்களின் மனத்தைக் கவர்ந்து நிற்கின்றன. வறட்டு விஞ்ஞானி, இந்த உண்மையைக் கண்மூடித்தனமாக மறுக்கின்ருன். எண்ணம், ஜடப்பொருளல்லவே? ஜடப்பொருளை, எண்ணம் எவ்வாறு தாக்கும்? எவ்வாறு, எண்ணத்தால், எதிர்த்தாக்குதல் ஏற்படும்? விஞ்ஞானியின் உலகம், உயிரற்ற, உணர்ச்சியற்ற, வரண்ட ஜடப் பொருளாலானது. ஆனுல், நாம் வசிக்கும் பிரபஞ்சம், உயிரினங்களாலே யானது. உயிர்கள், ஜடப்பொருளாலான போர்வையை அணிந்திருந்தாலும், ஆன்ம வலிவையும், உணர்ச்சிகளையுமே ஆதாரமாகக் கொண்டு,வாழ்க்கை நடத்தவும்,செயல்படவும் செய்கின்றன. உயிர்ச் சத்தைப் புறக்கணித்துச் சக்கையை உண்ணுபவர்களின் கூற்று எவ்வாறு உண்மையாகும்?

மனிதனின் உடல், ஜடப்பொருளால் ஆக்கப்பட்டதாலுைம், மனிதனுக்கு எண்ணங்களும், உணர்ச்சிகளும் மிகவும் முக்கியமானவை. இவற்றை வெவ்வேருக்கிக் கூறுபோடுவது, உண்மையைத்திரித்து விடும். ஆனுல், பகுத்தறிவால், இத்துண்டு போடும் முறையையே கையாள முடிகிறது. அகண்டவெளி (Space) என்பது ஒன்றே. நிற்காமல் ஓடிக்கொண்டே போம், காலமும் ஒன்றே. இவைகள், நம், மனநிலை, அல்லது மனக்கூற்றே யல்லாது, வெளி நிலைகளல்ல. இவற்றை, உண்மை நிலையில், கையாளத் திறனற்ற பகுத்தறிவும், மனமும், இவைகளைத் துண்டுபோட்டு, இவைகளுக்கு உண்மைக்கு நேர்மாருன, விளக்கங்கள் தருகின்றன. அதேபோல், மனித ஜீவனையும், அதன் நோக்கம், அவா, அன்பு மற்றும் உணர்ச்சிகளை விலக்கிவிட்டு, சடலமாகிய உடலைமட்டும், ஜடப்பொருளாக விளக்கமளிக்கின்றது விஞ்ஞானம். ஒரு யந்திரத்தின் கதியைக் கணக்கிடலாம். அக்கணக்கின்படி, அதைச் செயல்பட வைக்கலாம். இவ்வாறு, கணக்கிட்டே, இன்று ராக்கெட்டுகளை, சுக்கிரனுக்கும் சந்திரனுக்கும் அனுப்பவும், பூமியைச் சுற்றவும் செய்கிருர்கள். ஆனுல், ஜீவனின் கதியை, எவ்வாறு கணக்கிலடக்க முடியும்? அது,

யந்திரங்களுக்கில்லாத, செயல் சுதந்திரம், உணர்ச்சிகள், ஆசை, நோக்கம் பெற்றதாயிற்றே? இவைகள் ஒரு கணக்கிலும் கட்டுப் படாதவை. இவைகளைக் கட்டுக்கடங்கச் செய்யும் மனிதனே, தன்னைக்கட்டிய உயர் மனிதனாகின்றான்.

**விஞ்ஞானம், உண்மையின் திரிபே.** என்றாலும், அது, யந்திரப் பாங்குடைய ஜட உலகத்திற்கு மிகவும் பொருத்தமாய் அமைந்திருக் கிறது. ஏன்? உண்மையின் திரிபாகிய, இப்பிரபஞ்சத்தில், அதே யளவு திரிபுடைய ஒரு முறை, பொருத்தமாவதில், ஆச்சரியமில்லை. இப்பொருத்தம், நமது பகுத்தறிவுக்கும், கணித சாத்திரத்திற்கும் உள்ள ஒற்றுமையேயாம். ஜட உலகில் நம் பகுத்தறிவு கண்டறி யும் நியதிகள் யாவும், கணித சாத்திரத்தின் விதிகளாகவே அமைந் திருக்கின்றன. சமீபத்தில், விஞ்ஞானம் கண்ட முன்னேற்றத்தின் வேகம், வெகுவாகக் கணித சாத்திரத்தின் முன் அறிவிப்புகளே. கடவுளை ஒரு கணித சாஸ்திரி என்றே ப்ளேடோ முதல் இக்காலத்து மேதாவிகள் பலர் கருதுகிறார்கள். கணிதத்தில் இன்பினிடி, (Infinity) என்ற கோட்பாடுண்டு. இது, ஒரு முடிவற்ற பாவம் அதன் தன்மை ஒரு விந்தையே. அதினின்றும் எடுக்க எடுக்கக் குறையாது; கூட்டக் கூட்டக்கூடாது. இக்கணிதக் கொள்கையை, பிரபஞ்சத்தில், எத்துறைக்கும், எல்லாப் பாங்குகளுக்கும், விஸ்தரித் தால், அது ஒருவாறு, ஆன்ம நிலையை நமக்கு விளக்கும்.

**சொல் என்பது, எண்ணம் அல்லது கருத்தின் வெளிப்படை நிலை.** நாம் எண்ணுவது பிறர் செவிக்கு எட்டாது. ஆனால், சொல், அவ் வெண்ணத்தைப பிறர்கேட்டு, அறியும்படி செய்யும். **எண்ணமும், சொல்லும், மனித குலத்தின் சக்திவாய்ந்த உடமை.** எண்ணமில்லாது, சொல் இல்லை; சொல்லில் கருத்துப் பொதிந்து கிடக்கும். இதேபோல் சொல்லும், வடிவமும்; அல்லது, நாமமும், ரூபமும். ரூபம், வடிவம், என்பது, ஜடமாகவோ, மானசீகமாகவோ ஏற்படலாம். இவை இணைபிரியாதவை. படைப்பு ஏற்படுவதற்கு முன், நாம — ரூபங் கள், அதாவது, எண்ணமும், அதன்வடிவங்களும், பரமனின் மனத்தில் நிலைகொண்டிருக்கலாம். ஏன் கூடாது? சூரியன் ஒளி தருகின்றது. உலகமேயில்லாது, சூரியன் இருந்தால், ஒளியை ஏற்கப் பொருளில்லையே என்ற காரணத்தால், சூரியன் தன் சுபாவத்தை யடக்கி, ஒளிதராது, வாளா நிற்கவேண்டுமா? பரமனின் சிந்தனை யில், இப்படைப்பு, முதலில், அவ்வியக்தமாகிய தோன்றா நிலையில் இருந்து, பின் வியக்தமாகிய இப்பிரபஞ்சமாகத் தோன்றும் நிலையை

அடையலாம். எவ்வாறாயினும், படைப்பு என்பது, குயவன் சட்டி பானை வனைதல் போலல்ல, என்பது உறுதி. சிந்தனையே, எதையும் உண்டாக்க வல்லது. விசுவாமித்திரா, தன் அபார தபோ சக்திகளை, ஒரு போட்டியில், வேறு புதிய உலகையே படைக்க விரயம் செய்ததாகக் காண்கிறோம். ஆன்ம வலிமை பெற்ற எண்ணம் வீண் போகாது. அது எதையும் படைக்க வல்லது. ஹனுமான் ஒருவரே, தன் ஆன்ம வலிமை கொண்டு, இலங்கையை அடைய, இடையில் நின்ற கடலை, ஒரே தாவில் தாண்டினார் எனப்படிக்கிறோம். ராமாயணத்தில் மற்றுமொரு சம்பவமாகிய புஷ்பக விமானம், இக்காலத்து, ஆகாய விமானங்களை, அந்த நாளிலேயே, ஒரு சிலர் கையாண்டதாக நம்ப இடமளிக்கின்றது. ஆனால், அவைகள், ஆன்ம பலத்தால், மனிதன் அடைந்த சக்திகளும், கருவிகளுமாம். நம்முன்னோர்கள், ஆன்ம வலிமையால், நினைத்ததும் நடத்திய சாதனைகளை, இக்காலத்தில், கோடிக்கணக்கான மக்களை வாட வைத்து, பெரும் முயற்சி எடுத்து, ஒரு சில வாணவேடிக்கைகள் செய்து காட்டுகிறார்கள். இதுவே, ஆன்ம சக்திக்கும், இயந்திர சக்திக்குமுள்ள, அபார வேற்றுமை.

**எண்ணத்தைப்போல், சொல் சக்தியும், அளவிலடங்காததே.** ஆனால், அச்சொல் உண்மையை மொழிவதாய், ஆன்ம வலிவு பெற்று, உணர்ச்சி ததும்பும் கருத்துப் பொதிந்ததாக இருத்தல் வேண்டும். சாதாரணமாக, நம் மனத்திலுதிக்கும் எண்ணங்களைப் பிறர் அறிந்து கொள்ள முடிவதில்லை. இககாரணமாகவே, இப்புவியில், பொய்யும், ஏமாற்றமும் எளிதில் ஏற்படுகிறது. என்றாலும், ஒரு சிலர், தங்கள் மனோவலிமையால், பிறர் மனத்தை யடக்கி ஆளவும், அங்கு நிகழ்வதை யறிந்து கொள்ளவும் இயலுமென்று பகர்வதுடன், செயலாற்றியும் நிரூபிக்கின்றார்கள். ஒரு திவலை ஆன்ம பலம் பெற்றதால், இச்சக்தி மனிதனுக்கு உண்டாகுமானால், பரமனின் வல்லமை எவ்வாறாம்? பரமன் ஒருவரே, நம் எண்ணங்களை யெல்லாம் உடனுக்குடன், நம்மனத்திலுதித்தபடியே, அறியவல்லவர்; அறியவும் செய்கிறார். பரமனுக்கும், அவர் படைப்பாகிய இப்பிரபஞ்சத்திற்கும், நேரடித்தொடர்பு, நம் எண்ணங்கள் மூலமும், சொற்கள் மூலமும் ஏற்படுகிறது. நம், சொற்கள் பிழன்றாலும், நம் எண்ணம், நம்மை அவர் புரிந்து கொள்ளச் செய்யும்.

இவ்வுலகில், **கருத்தையும், சொற்களையும் உண்டாக்கி, பேசும் திறமையையும்,** மானிடனுக்குமட்டும் அளித்திருக்கின்றார். பாரபட்சமில்லாத

பரமன், ஏன் மனிதனுக்கு இவ்வரிய சலுகைகளை அளிக்கிருர்? ஆன்ம வளர்ச்சியிலே முன்னேறி, ஒரு தகுதியுள்ள நிலையை அடைந்தாலல்லாது, அச்சிறப்புற்ற பாக்கியம் ஜீவனுக்கு கிட்டாது. இவ்வரிய சக்திகளைக் கையாண்டு, செயலாற்றும் திறமை, மானிட வர்க்கத்திற்கே யுண்டு. நம் ஆன்ம வளர்ச்சி மேலும் வலுவடைந்து, நம்மைப் பரமனுடன் நேரடித் தொடர்பு கொள்ளும் முறையாக, நமக்கு அளித்திருக்கிருர். இந்த உயர் நோக்கு நிறைவேருது, நமக்குக்கிடைத்த திறமைகளை, மட்டரகமான வசை மொழிகளிலும், பொய் பேசுவதிலும், வம்பு அளப்பதிலும், அதர்மப் பிரசாரம் செய்வதிலும் வீணுக்கிஞல், நமக்குப் பெரும் பாதகத்தை விளைவிக்கும். தியானம், ஜபம், மந்திரம் ஓதுதல், நாம சங்கீர்த்தனம், இவைகளின் மகிமையும், மர்மமும், இப்பொழுது நமக்குப் புரியலாம். நாம் எந்த மொழியைக் கையாண்டாலும், அதைப் பரமன் அறிந்து கொள்வார். ஆஞல், நமக்கே புரியாத ஒரு மொழியில், நாம் அவருடன் தொடர்பு கொள்ள எண்ணுவது, கிளிப்பிள்ளையோ, கிராமாபோஞே மொழிவது போலாகும். மனம் சொல்லுடன் ஒன்றிப்போகாமல் மொழிவது, பொருளற்றதே. என்ருலும், தேர்ந்த மொழிகளில், அரும்பெருங் கருத்தடங்கிய பாக்களை, அர்த்தத்துடன், பாடம் பண்ணி, அவர் தொடர்பை நாடுவது எளிதாகும். பரமனைத்தொழ, வார்த்தைகள் எதற்கு? மனம் நிறைந்த நிலையில், உணர்ச்சிகள், நம் சொற்களைத்தடுத்து விடும். இது ஒரு பேருண்மை. பரமனை நம் உள்ளத்தில் இருத்தி, நம் நல்லெண்ணங்களாலும், நல்வினைகளாலும் அர்ச்சித்துப் பூசை செய்வதைவிட, வேறு, நல்ல வழிபாடு ஏது? திரும்பத்திரும்ப, கீதை பகர்வது, "பரமனை நம்பு, அவர் எண்ணமாகவே, செயலாற்று, அவரைச் சரண்புகு; அவர் உன்னைக் கைவிடார்" என்பதே.

"ஓம்" என்ற ஒரு பதச் சொல்லின் மகிமையை வேறு இடத்திலும் விளக்கியுள்ளோம். இங்கும் கூறுவது பொருத்தமாகும். இதை ஏகாக்ஷரம், ஒரே எழுத்தாகவும் கொள்வதுண்டு. இந்த ஓம்காரத்தின் மகிமை, இதன் அமைப்பில் அடங்கியது. எந்த மொழியாஞலும், அகரமே, அதன் முதலெழுத்தாம். அதாவது, நாம் பேச, நம், வாயைத் திறந்ததும், எழும் ஒலி அ. இது எந்த மொழிக்கும் உண்மை. அதேபோல், நாம் பேச்சை முடிக்க, வாயை மூடியதும், ம் என்ற மகர சப்தம் ஒலிக்கின்றது. இவ்விரு நிகழ்ச்சிகளுக்கு மிடையில், அதாவது, வாயைத்திறந்து, மூடுவதற்கு இடையில் ஏற்படும் ஒலி, உ என்பது. ஆக, அ, உ, ம், என்ற மூன்று ஒலிகளும், நாம் வாயைத் திறந்து. மூடும் செயலிலே ஒலித்து விடுகின்றன. இதுவே புகழ்

பெற்ற ஓம்காரநாதம். **எந்த மொழியானாலும், பேசும் வினை, வாயைத் திறந்தும் மூடியுமே நிகழ்கின்றது.** நாம் பேசும் போதெல்லாம் ஓம், ஒலித்துக்கொண்டே இருக்கிறது. இது எல்லா மொழிகளுக்கும் பொதுவானதே. இதை வடமொழிச் சொல் என்று பகர்வது சரியல்ல. பேச்சு என்பது, **ஒங்காரத்தினாலானது** என்பது விளங்கும். ஓம் என்ற ஒலி, எல்லா மொழிகளிலுமுள்ள எல்லாச் சொற்களையும் ஒலித்ததற்கு ஒப்பாகும். எம்மொழியிலும் உண்டாகக்கூடிய சொற்களை எல்லாம் அடக்கிய ஒரே சொல் ஓம். ஒவ்வொரு சொல்லும் ஒரு பொருளைக் குறிப்பதால், அம்மொழியின் சொற்களெல்லாமாக, இப்பிரபஞ்சத்தையும் அதிலடங்கிய யாவற்றையும், அதாவது, பரமனையும் குறிக்கின்றன. இவ்வாறு, ஓம், படைப்பையும், அதனால் பரமனையும் குறிக்கின்றது. **ஓம் என்ற ஒலிக்குப் பொருள் பரமனே.** அதைப் பொருள்பட ஒலித்தால், அது, பரமனை நம் மனத்தில் இருத்திவிடும். உச்சரிப்பில், இதைப் போல் எளிதான சொல் கிடையாது. பரமனை வழிபட, இதுவே சிறந்த முறை. ஓம் ஒரு புனிதமான விபப்புச் சொல். அதை பாவத்தோடு எங்கு ஒலித்தாலும், அது பரிசுத்தத் தன்மையைப் பரப்புகிறது.

உருவம் பெற்ற மனிதன், உருவில்லாத பாவத்தை உணர்வது கூடாது போகின்றது. பரமனை உருக்கொண்ட ஒரு புருஷராகக் கருதினால், பின், அவரை, அளவிலடங்காதவர் என்றோ, பிறவாதவர், இறவாதவர், அழிவில்லாதவர் என்றோ எவ்வாறு கூற இயலும்? உருவத்துக்கு அழிவுண்டு; அதனாலேயே, அதற்கு பிறப்பும், இறப்பும் ஏற்படுகிறது; அதனாலேயே, அது அளவிலடங்கும்; அதில் குறைபாடுகள் தோன்றுகின்றன. எல்லா மதங்களும் கடவுளை உருக்கொடுத்தே வர்ணிக்கின்றன. ஏன்? ஒரு சில தீர்க்கதரிசிகளைத் தவிர, பாமர மக்களுக்கு உருவமற்ற பாவத்தைப் புரிந்துகொளளும் ஆற்றல் இல்லாததாலும், பரமனின் உண்மை நிலையாகிய உருவற்ற நிலைக்குப்பதில், உருவங்கொண்ட புண்ணிய புருஷராகத் தெய்வத்தை எல்லா மதங்களும் கொண்டாடுகின்றன. இச்சித்தாந்தத்தில், குறைபாடுகள் நிறைந்திருப்பதினால், மதத்துக்கு மதம் வேற்றுமைகள் ஏற்பட்டன. காந்திஜி, வற்புறுத்திக் கூறியது போல், சத்தியமே தெய்வம், அன்பாகிய அஹிம்சையே தெய்வம் எனக்கொள்வது, உண்மையை ஒட்டிய நிலையாகும். இவ்விரண்டு சுபாவங்களைப் பெற்ற நிலையே பரமநிலை. சத்தியத்தையும், அன்பையும் தொழுது, அதாவது, வாழ்க்கை நடைமுறையில், கடைப்பிடித்து, நடக்கும் ஜீவனே தெய்வமாம்.

## V. பஞ்சகோசங்கள்

சாங்கிய முறையை வகுத்த முனிவர், தம் உள்ளத்தையே ஆராய்ச்சி செய்து, அதன் பயனாக, உலகத்தின் மூலங்கள், ஒன்று, ஜடப்பொருள் என்றும், மற்றது, உயிர் என்றும் நிச்சயித்தார். அவைகளை முறையே, பிரகிருதி, புருஷன் என்றும் பகர்ந்தார். பொருள், உயிர் என்ற இரட்டைக் கொள்கையின் அடிப்படையிலே, பிரபஞ்சம் இயங்குவதாக ஸ்தாபித்தார். இக்காலத்து விஞ்ஞானிகளோவெனில், தம் உள்ளத்தைப் புறக்கணித்து, வெளியுலகை மட்டுமே அலசி, பூத ஆராய்ச்சியில் முன்னேற்றங்கண்டார்கள். இருதரத்தாரும், உலகில் யாவும் வளர்ச்சி பெறும் தன்மை வாய்ந்தன வென்பதை ஊர்ஜிதம் செய் தார்கள். விஞ்ஞானி, வாழ்க்கையின் வெளிப் போராட்டத்தைக் கண்டார். ஆனால், ஞானி, வாழ்க்கையின் உள்போராட்டத்தையும் உணர்ந்தார். வெளியே உயிர்கள் உடலுக்காகப் போராடின. அவை, தத்தம், உடலின் வேற்றுமைகளையே கண்டு, ஒன்றுக்கொன்று போட்டியிட்டு, "பலம் படைத்தவனுக்கே புவிவாழ்க்கை" எனத் தீர்மானித்து, விரோதத்தைப் பெருக்கி, இன்பத்தைப் போக்கி, துன்பத்தை மிகைப் படச் செய்தன. இப்போக்கு, விஞ்ஞானியைப் பல துறைகளிலும், திக்குமுக்காடச் செய்தது. முக்கியமாக, மனமானது, ஜடப்பொருள்களின் விதிகளுக்கு அடங்காது, செயல்பட்ட காரணத்தால், விஞ்ஞானிகளில், ஒரு சார்பினர், மனத்தையே மறுத்து, எல்லாம் ஜடப்பொருளே என்று வாதிக்கலானார்கள். பின்னர், ஜடப்பொருளை விண்டு கண்டதும், அணுவே மூலப்பொருள் எனத் தீர்மானித்தார்கள். அணுவையும் விண்டு பார்க்க முடிந்ததும், ஜடப்பொருளின் மூலாதாரம், ஜடத்தன்மையையே இழப்பதை அறிந்து, தோன்றும் ஜடப்பொருள், தோன்றாப் பொருளை அடிப்படையாகக் கொண்டிருப்பதை யுணர்ந்தார்கள். என்றாலும், அம்மூலாதாரத்தின் தன்மை ஜடத்தன்மையானதே என்று வாதித்தார்கள்.

ஞானிகளோவெனில், வெளிவேற்றுமையில், உள் ஒற்றுமையை ஊகித்து, ஜடம், உயிர், மனம், ஆகியவற்றின் மூலாதாரம், பரம் பொருளே என்று அறிந்து, அதன் தன்மையை ஆராய்ச்சி செய்து, அப்பரம்பொருளே எங்கும் வியாபித்து, யாவற்றையும் தாங்கி, ஆதாரமாக நிற்பதாக, முடிவு கட்டினார்கள். பரமனே, தன்னை ஐந்து போர்வைகளால், அல்லது கவசங்களால், போற்றிக்கொண்டு, பிரபஞ்ச வடிவாகத் தோற்றமளிக்கின்றார். வெப்பம், இரும்பில் ஊடுருவியிருப்பது போல், இந்த ஐந்து கோசங்களும், ஒன்றை ஒன்று ஊடுருவியிருக்

கின்றன. இவற்றை மூன்று வகுப்புகளாகப் பிரிக்கலாம். முதல் வகுப்பில், பூதவுடல் ஒன்றே காணுகிறது. இரண்டாம் வகுப்பைத் தோற்றமளிக்காத சூக்கும, அல்லது லிங்க உடல் என்று அழைக்கிருர்கள். இதில், அடங்கியிருப்பது, இரண்டாவது, மூன்ருவது கோசங்கள் — முறையே, பிராணமயகோசம், மனேன்மயகோசம் எனப் பெயர் படைத்தவை. மூன்ரும் வகுப்பில், நாலாவது, ஐந்தாவது கோசங்கள் இடம் வகிக்கின்றன. இவற்றுக்கு முறையே, விஞ்ஞான மயகோசம், ஆனந்த மயகோசம் எனப் பெயரிட்டு அழைக்கிருர்கள். இவ்வகுப்பை காரண உடல் என்றும் சொல்லுவதுண்டு. ஏனென்ருல், மறுபிறப்பில் இதிலடங்கிய இரண்டு கோசங்களே பங்கு கொள்கின்றன. மற்றவை, பூதவுடலுடன் மரணத்தில் அழிந்து போகின்றன.

முதல் கோசமாகிய அன்னமயகோசமே, இப்பூதவுடல் அது ஜடப், பொருளாலானது; நமக்கு உருவும், தோற்றமும், பெயரும் அளிக்கிறது. பரமனையும் புறக்கணித்து, மற்ற நான்கு கோசங்களையும் பொருட்படுத்தாது, இப்பூத உடலே நாம், என்று தவருகக் கொள்வது, பொதுவாக, மானிட சுபாவமாகிவிட்டது. இந்த அடிப்படைத் தவருலேயே, பெருங்கேடுகள் மனிதனுக்கு உண்டாகின்றன. இத் தவருன எண்ணமே, அஞ்ஞானம், அறிவீனம், இருள், மயக்கம், மாயை என்பதாம். இதுவே, மானிட வர்க்கத்தின் அவதிகளுக்கெல்லாம் அடிப்படை; கஷ்டங்களுக்கெல்லாம், கருவூலம். இந்த மயக்கம் நீங்குவதே ஞானம். நாம் இந்தப் பூதவுடலல்ல; நாம் ஆன்மாவே, என்ற திடநம்பிக்கை ஏற்பட்டாலே, நம் வினைகளெல்லாம் உண்மையான அடிப்படையில் உதித்து, நமக்கும் உலகுக்கும் ஆனந்தத்தையும், சுகத்தையும் அளிக்கும். இஃதல்லாது, இந்த அழியும் உடலையே நாமாகக் கருதி வினையாற்றினுல், அல்லல்களும், துன்பங்களுமே நம் வாழ்க்கையைப் பாழ்படுத்தும். ஆகையால், இந்தக் கோசத்தை விளக்கும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, மனிதன் வாழ்க்கையின் குறைகளை விரிவாக எடுத்துக் கூறி அவைகளை அகற்ற வாய்ப்புப் பெற முயலுவோம்.

முதல் கோசமாகிய உடல் இருவகையாக உபயோகப்படுகிறது. உடல், உணவை எடுத்துக் கொள்ளும்; அது, தானே உணவாகவும் ஆகும். இவ்வாறு, உடலைச் செயல்படச் செய்வது, இரண்டாவது கோசமாகிய பிராணனே. உடல் உண்ட உணவு, இருவகையாகப் பயனளிக்கின்றது. ஒரு பாகம், உடலை வளர்க்கவும், மற்றது,

உடலுறுப்புக்கள் வேலை செய்யத் தேவையான சக்தியாக மாறவும் பயன்படுகிறது. இவ்விரண்டு மாற்றங்களையும் செய்வது பிராணனே, பிராணன் இல்லாமல், உடல் வளர்ச்சி பெறவோ, அல்லது உழைக்கவோ இயலாது. ஆகாரமாக எடுக்கப்பட்ட உடல்ப் பொருள்களை, பிராணன் எரித்து, சக்தியாக மாற்றுகிறது. ஆகாரமில்லாமல், பிராணன் ஜீவனைக் காப்பாற்றமுடியாது. எனவே, பிராணனும், உடலும், ஒன்றையொன்று அண்டியே நிற்கின்றன. இவை இரண்டுமில்லாமல், ஆன்மா உடலில் தங்காது. பிராணனின் உதவியால், நமது உடல் உணவாகவும், உண்ணும் உறுப்பாகவும் ஏற்பட்டிருக்கிறது. என்றாலும், ஜீவனைககாக்க, அதாவது, உயிரை உடலில் நிற்கச் செய்ய, உயிருள்ள உடல்களை யழித்துப் பிணமாக்கி உணவாக்குவது, பரமனின் படைப்பின் நோக்கத்தை முறியடிப்பதாகும்; அவர் கட்டளையை மீறிய செயலாகும். ஜீவன் விடுதலை யடைவதற்கும், இப்புவியில் நல்வாழ்வு வாழ்வதற்கும், உடல் இன்றியமையாத கருவி. எனவே, ஜீவவதையும், தற்கொலையும், கொடிய பாதகச் செயல்களாகின்றன.

உடலானது, ஆன்மாவின் கோவில். உடல் வலிவுள்ளதாயும், பரிசுத்தமாயுமிருந்து, வாழத் தகுதியுள்ளவரை, ஆன்மா அதில் தங்கும். உடலை யழித்தால், ஆன்மா அகன்று விடும். அது தான் மரணம். பரமனே இந்த ஐந்து கோசங்களாகப் பரிணமித்திருப்பதால், கோசங்கள் ஒன்றுக்கொன்று துணைபுரியுமே அல்லாது, கேடு பயக்கா. உடலை யழிப்பதென்பது, உயிரை அழிப்பதாகவும் ஏற்படுவதால், அச்செயலும், அழிக்கப்பட்ட உடலை யுண்ணுவதும், பரமனுக்குத் துரோகமான வினைகளே. அதைத் தடுப்பதே, அஹிம்சா தர்மம், அல்லது, அபயதான மெனப்படும். உடல் அழியுந் தன்மையது. அது தன்படியே அழிந்து, உபகாரமற்றுப் போகாமல், சில நிலைகளில் உணவாக ஏற்படுகிறது. ஆனால், ஜீவனுள்ள வரை, உடலைக் கோயிலாகக் கருதிக் கையாளவேண்டும். சுகவீனமடைந்த உடல், ஜீவனின் சிறைக்கூடம். ஜீவனுக்கு உடல் ஒரு கருவியாதலால், கருவியினிடத்தில், அளவுக்கு மிஞ்சிய பற்றுதலோ, அல்லது, அதைக் கொடுமைப்படுத்துமளவு, வெறுப்போ ஏற்படுவது தகாது. உடலை ஒரு அருமையான சாதனம் என்ற அளவிலே மதியாது, அதன் மேல் பெரும் மோகங்கொண்டு, அதுவே யாவுமென்று கொண்டாடுவதும், அல்லது, சில பைராகிகளும், தபசிகளும், உடலையடக்க, அதைச் சித்திரவதை போன்ற கொடுமை

களுக்குட்படுத்துவதும், மடமையே. இவ்வாறுன, அசுரச் செயல்களை, கீதை XVII-5, 6-ல் வன்மையாகக் கண்டிக்கின்றது.

புத்தபிரானும், இம்மாதிரியான துறவிகளைக்கண்டு, ஆறுத பரிதாபத்துடன் வினவுகிறுர். "இயற்கையாலே, பசி, பிணி, மூப்பு போன்ற கொடுமைகளுக்குட்பட்ட இவ்வுடலுக்கு அவை போதாவென்றே. மனிதனும் வேறு கொடுமைகள் புரியவேண்டும்? அதிலும், ஆன்ம வளர்ச்சியடையவே, இக்கொடுமைகளுக்கு உடலையுட்படுத்துவதென்பது. குதிரை சவாரி செய்யும் ஒருவன், தன்னைப் பணிவுடன் சுமந்து செல்லும் குதிரை, இருளடையுமுன், வீடு ஏகவேண்டுமென்ற தாகத்தால், தானுகவே, விரைந்து ஓடும் பொழுது, அதைத்தன் குதி முள்ளால் குத்திக் காயப்படுத்தி, இடை வழியில் வீழ்த்தும் தன்மையதாகும். முன் பிறவிகளில், பல துன்பங்களுக்குள்ளாகி, பெரும் அவதியடைந்த பின்னர் கிடைத்த பாக்கியமே, இவ்வுடலாலாகிய வீடு. அதன் உதவியாலேயே, நம் ஜீவன், தன் இருளைப் போக்க, அதை ஒளிகிட்டும் சாளரமாகக் கொண்டு, விடுதலையடைய முடியும். ஆன்மாவின் பெயரால், அது தங்கும் கோயிலை அழிக்க முயலுவது முழு மதியீனமே. மனிதனைத் தவிர, படைப்பில் வேறு எந்த இனமும், தன்னைத் தான் வெறுக்கவோ, தன்னுடலைக் கொடுமைக்குள்ளாக்கவோ செய்வதாகக் காணவில்லை. ஆனுல், படைப்பில் தலை சிறந்தவனுயிருந்தும், தன்னைக்கட்டியடக்கிக் கொள்ளாமல், பிற உயிரினங்கள் யாவையும் அடக்கி ஆள முயன்று, அவற்றை வதை செய்வதில் ஈடுபடும் மனிதன், சில நிலைமையில் தன்னுடைய அவசியத் தேவைகளைக்கூட மறுத்தும், தன்னைத்தானே கொடுமைப் படுத்திக்கொள்கிறுன். பிற ஜீவன்களுக்குத் தீங்கு இழைத்து அனுபவப்பட்ட அவன் அறிவு, அவன் மார்பிலும் ஈட்டிபோல் பாய்கின்றது போலும்!" வாழ்க்கையின் உண்மையான தன்மை, ஒரு வீணையில் மதுரகானம் எழுப்புவதை யொக்கும். வீணையின் தந்திக் கம்பிகளைத் தளரவிட்டால், நாதம் எழாது, கானம் மடிந்துபோம். ஆனுல், தந்திகளை அளவுக்கு மிதமாக இழுத்துக்கட்ட முயன்றுலோ, அவை அறுந்துவிடும். மிதமிஞ்சிய கட்டுப்பாடும், நமது அழிவுக்கே இட்டுச்செல்லும். அதே போல், ஓரளவாவது, கட்டுப்பாட்டிற்குட்படுத்தாதிருப்பதும், வாழ்வைத் தாழ்வாக்கும். நடுநிலையே உத்தம நிலை. அதுவே, கீதையின் புகழ் பெற்ற யோகநிலை.

ஹிந்துக்களுக்கு, அன்னதானமென்பது புராதன வழக்கத்திலுண்டான தருமம். அன்னத்தை (உணவை) ஆண்டவனுக்கென்று

அர்ப்பணித்த பின்னரே, அதைப் பரமனது அன்பளிப்பாகவே கருதி, அருந்தவேண்டும். இதன் அடிப்படைக் கருத்து, நமது ஆழ்ந்த சிந்தனைக்குரியது. உணவானது, பரிசுத்தமானதாயும், வேண்டும் பொழுது தயார் செய்ததாயும், இருத்தல் வேண்டும் தவிர, உண்பவர், உணவைத் தனது உடமையென்றும், அது தனக்கு மட்டுமே என்ற உரிமை யாடாமல், பிறர்க்கும் அதைப் பங்கிட்டு உண்ண வேண்டும். கீதை III-12-13-ல். "தனக்கென்றே உணவு தேடி உண்ணும் பாவிகள், பாவத்தையே உண்ணுகிறார்கள். பரமனால் அளிக்கப்பட்டது, உணவுப் பொருள்கள். அதில் பிற ஜீவன்களுக்கும் பங்கு கொடாமல், தானே யாவற்றையும் உண்பவன் கள்வனே யாவான்." சுயநலம் என்பது, தானும் தன்னைச் சார்ந்தவர்களும் தவிர, பிற ஜீவன்கள் வாழச் சகிக்காத மனநிலையே. III-14-ல் "உணவினால் உயிர்கள் உண்டாகின்றன; உணவை, மழை உற்பத்தி செய்கிறது; மழை, யக்ஞமாகிய உடலுழைப்பினால் பொழிகின்றது. யக்ஞம், உழைப்பின் பலனேயாம்." இங்கு உழைப்பு என்பது, உடலுழைப்பையே குறிக்க முடியும். இயற்கை, தெய்வம், இவற்றின் அனுகூலங்களோடு, போதிய அளவு உடல் உழைப்பும் கூடினாலே, பொருள்கள் உற்பத்தியாகும். உணவே, உயிருக்குப் பிரதானமானதால், எந்த ஜீவனும், தன் உடலுழைப்பின் மூலமே உணவுப் பண்டங்களைப் பெருக்கி சமூகத்திற்கு உண்மையான தொண்டு புரிய முடியும். காந்திஜியின் அபிப்பிராயப்படி, ஒரு ஜீவன், சமூகத்திற்குத் தன் கடமையைச் செய்து முடித்ததாகக் கருத, மன உழைப்புமட்டும் போதாது; உடலுழைப்பே உபகாரமான, உண்மையான தொண்டாகும். அறிவை அடிப்படையாகக் கொண்டு ஜீவனம் கழிப்பவர்களும், தங்கள் உடலின் தேவைகளை யாவது, தங்கள் உடலுழைப்பாலே, நிறைவேற்றிக் கொள்ள வேண்டும். அஃதல்லாது, உடலுழைப்பைக் கேவலமாகக் கருதி, அதைத் தவிர்ப்பவர்கள், சமூகத்தொண்டு புரிந்தவர்களாகமாட்டார்கள். "நெற்றி வியர்வை, நிலத்தில் விழ உழைத்துச் சாப்பிடு," என்ற பைபிளின் கட்டளை, ஒருவருக்கும் விலக்கன்னியில் இடப்பட்டது. தவிர, திரேக உழைப்பால், நோய்களும், பிணிகளும் குறையும்.

யக்ஞம் என்ற சொல்லுக்கு விரிவான பொருள் உண்டு. இப்பிரபஞ்சத்தில் வாழும் எல்லா ஜீவன்களுக்கும் வேற்றுமையின்றித் தொண்டுபுரிவதே யக்ஞம். பரமனே யாவற்றிலும் வியாபித்து, அவற்றைத் தாங்குவதால், எந்த யக்ஞமும் பரமனையே அடையும். விவேகானந்தர் கூறியது போல், நடமாடும் உயிரினங்களாகிய, அப்பட்டமான கடவுள்களைக் கொடுமைப்படுத்தியோ, அல்லது,

... PUBLIC LIB...

புறக்கணித்தோ, கண்காணுத பரம்பொருளுக்குப் பணி செய்வதாகப் பாவனை செய்வது கேலிக்கூத்தே. யக்ஞம் என்பது வினை. இதில், மனம், வாக்கு, உடல், இம் மூன்றும் செயல்படுவது அடங்கி இருக்கிறது. உயிர்ப்பலி யக்ஞமாகாது. புத்தர், பிம்பிசாரனுக்கு மொழிந்தது போல், "மைந்தருள், ஊமை மகனை ஒரு மகன் வாளால் அரிந்து, கறி சமைத்தால், தந்தையும் உண்டுகளிப்பதுண்டோ?" ஒரு உயிருக்கும் கஷ்டமில்லாது, பெருவாரியான ஜீவன்களுக்கு நன்மை பயக்கும் வினையே யக்ஞம். அச்செயலே, பந்தத்தை வளர்க்காது; பிற வினைகளெல்லாம், தளையுண்டுபண்ணுபவையே (III-9) இந்த உடல் நமக்கு அளிக்கப்பட்டது, சேவைபுரியவே, என்பது நம் உடலமைப்பின் கூற்றிலிருந்து நிச்சயமாக்க முடியும். பரமனுக்கும், இயற்கைக்கும், உலகுக்கும், நாம் பிறந்த கணத்திலிருந்தே, கடன் பட்டவர்களாகவே இருக்கிறோம் இக்கடனை, கடமையாகக் கருதி, தொண்டு செய்தே தீர்க்கவேண்டும். அஃதல்லாது, தனக்கென்றே பாடுபடுவது, பாவத்தை அதிகரிக்கும். யக்ஞம் தியாகச் செயல்களையே குறிக்கின்றது. தியாகத்தினுலே, மனித வர்க்கம் வாழ்ந்து முன்னேறு கிறது. III-11-ல், "யக்ஞமாகிய தியாகத்தின் மூலமே நீங்கள் பிற உத்தம உயிர்களைப் பராமரியுங்கள். அவர்கள் உங்களைப் பராமரிப்பார்கள். இங்ஙனம், ஒருவரையொருவர், பராமரிப்பதின் மூலம், நீங்கள் மகோன்னதமான நிலையையும், நன்மையையும் அடைவீர்கள்." மூலத்தில், தேவர்கள் என்ற சொல்லுக்கு உத்தம உயிர்கள் என்ற விரிவான பொருள் கொடுத்தோம்.

III-14-ல் கண்ட உணவுச் சுழல் வட்டத்தை, விஞ்ஞான, ரீதியிலும் விளக்கலாம். படைக்கப்பட்டன யாவும் ஒன்றுக்கொன்று ஆகாரத்தின் மூலம், நெருங்கிய தொடர்பால் பிணைக்கப்பட்டிருக்கின்றன. தாவரங்கள், இயற்கையின் சக்தியால், தங்களுக்குத் தேவையான உணவை, நேரிடையாகப் பெறவோ, அல்லது தயாரித்துக் கொள்ளவோ, வாய்புடையவை. அவைகளுக்கும், ஊரும் ஜீவன்களுக்குமுள்ள, அடிப்படை வேறுபாடு, ஆகாரவகையைப் பொறுத்ததே யொழிய, வேறில்லை. தாவரங்களுக்கும், விலங்குகளுக்கும், தங்கள் உடல் வளர்ப்புக்காக, கரி (கார்பன்), ஜலவாயு, உப்பு வாயு, பிராண வாயு, இவை தேவைப்படுகின்றன. இத்தேவைகளை எல்லாம், தாவரங்கள், எளிய முறைகளில் நேரடியாகவே அவற்றின் மூல பொருள்களிலிருந்தே எடுத்துக் கொள்ளுகின்றன. இவ்வாறு, உண்டு, அவை உண்டாக்குவது, மிகச் சிக்கலான தாவர உடல்கள். ஆனுல், விலங்குகள், தங்கள் உணவுத் தேவைகளை மூலப்பொருள்களிலிருந்து,

நேரடியாகப் பெற இயலாமல், சிக்கலான தாவர உடற்பொருள்களையே உண்டு, வாழவேண்டியிருக்கிறது. தாவரங்கள் தங்கள் உணவை தண்ணீரி லிருந்தும் காற்றிலிருந்தும் நேரடியாகப் பெற்றுக் கொள்வதற் காகவே, அவைகளுக்கு இலைகளும், வேர்களும், அமோகமான வாய் களாக அளிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், விலங்கினங்களுக்கு, ஒரே வாய், உணவை உட்கொள்ள ஏற்பட்டிருக்கிறது. விலங்குகள், தயாராகிய, உடனடியாகச் சாப்பிடக்கூடிய, பொருள்களையே. உணவாக்கிக் கொள்கின்றன. மனிதன் இந்த விதிக்குட்பட்டவனாக இருந்தாலும், அவன், உருசியை வளர்த்து, தன் கேட்டைத் தேடிக் கொண்டு, இயற்கையால் தயாரிக்கப்பட்ட ஆகாரத்தை, வெகு பிரயாசை எடுத்துப் பக்குவப்படுத்தும் முறைகளில், அவற்றின் சத்தைக் குறைத்து,தன் உடல் நலத்தையும் கெடுத்துக் கொள்கிறான். தாவரங்களில்லாமல், ஒரு உயிரும் வாழ முடியாது. ஆகாரத்தின் மூலம் பிரபஞ்சத்திலுள்ள எல்லா இனங்களும், ஒருமைப்பட்டவையே என்று ஊர்ஜிதமாகிறது.

உணவு உள்ள இடத்தில் உயிர் உண்டாவது உண்மையே. பிராணனும், உணவும், படைப்பில் இணைபிரியாதவை. ஒன்றை ஒன்று சார்ந்தே நிற்பவை. இது காரணத்தாலே, அன்னதானத்தை வெகு வாக, நம் முன்னோர்கள் கொண்டாடினார்கள். ஒரு உயிருக்கு அன்ன மளிப்பது, படைப்புக்கு உற்ற துணை வினையாகும். உணவை, தானமாக அளிக்கவேண்டுமே யல்லாது, விற்பனை செய்யலாகா தென்பது. புராதன தர்மவிதி. பணமே, தெய்வ மென்ற நவநாக ரீகத்தில், பெரும்பான்மையோர், விலையாடிய உண்டியைப் பெரிதும் மதித்து, ஏற்கும் பழக்கம் பரவிக்கொண்டு வருகிறது. வீதியில் விலைக்கு விற்கும் தின்பண்டத்துடன், விலையாடாத விபாதியையும் ஏற்கிறோ மென்பதை, ஒரு சிலரே உணர்ந்து, அவற்றைப் பகிஷ்கரிக் கின்றார்கள். உலக மக்களிடத்தில், நாளுக்கு நாள் சுகவீனம் பெருகுவதும், பலவீனம் ஏற்படுவதும், மறுக்கவொண்ணாத அனு பவமாகிவிட்டது. தவிர, விலையாடும் மூல உணவுப் பொருள்களும், அவற்றின் அளவு கடந்த விலை ஏற்றத்தினால், கட்டுக்கரையற்ற கலப்படங்களுக்குள்ளாகி, அவற்றின் போஷாக்கு சக்தி குறைந்து, உயிரை வளர்க்காது, அழிக்கவே செய்கின்றன. இந்த நிலையில், உணவுத் தேவைகளைக் குறைத்துக் கொள்ளாமல், நாகரீகம் என்ற பெயரால், தேவைகளை விரித்துக்கொள்வது மதியிழந்த செயலே யாகும். உணவுப் பொருள்களில் கலப்படஞ் செய்வது, மகாபாதகச்

செயல் என்பதை, பணத்தால் கிட்டும் பதவியும், பெருமையும் மூடி மறைத்து விடுகின்றன. வியாபாரிகளின் சுதர்மம், சுத்தமான பண்டங்களை நியாயமான விலைக்கு, தேவைப்படும் இடங்களில் கிடைக்கச் செய்தலே. இக்கர்மம், உயிர்களை வளர்க்க உதவும். அஃதல்லாது, கொள்ளை லாப நோக்கில், கலப்படம் செய்து, கையாளும் வாணிபத் தொழில் பரதர்மமேயாம். உயிரைக் காக்கவேண்டிய வினை, உயிரை அழிக்கின்றது. இதன் விளைவு பயங்கரமானதே, என்று கீதை III-35-ல், வன்மையாகக் கண்டிக்கின்றது. அமிதமான உணவும், அளவு கடந்த உருசி வேண்டலும், தீமையையே பயக்கும். நாக்குக்கு இடம் கொடுத்துச், சீராட்டுபவன், உண்பதற்கே உயிர் வாழ்கிறான். ஆனால் தன்னடக்கம் கொண்டு, தன் நாவைக் கட்டியவன், வாழ்வதற்கென உண்ணுகிறான்.

பசி, தாகம், பாலுணர்ச்சி, இவை இயற்கையால், எல்லா உயிரினங்களுக்கும் ஏற்பட்ட, பிணிகளென்றே கருதவேண்டும். பசியும், தாகமும், உடல் வளர்ச்சிக்கும், உழைப்புக்கும், பாலுணர்ச்சி இன விருத்திக்கும், தேவைப்படுகின்றன. உருசியை அனுபவிப்பதற்கென, பசிதாகம் ஏற்படவில்லை. அதேபோல், பாலுணர்ச்சி, சிற்றின்ப சுகத்தை அடிக்கடி நுகர்வதற்காக அல்ல. என்றாலும், உயிரினங்களில், மானிடன் மாத்திரமே, இயற்கைத் தேவைகளைச் சாக்குப் போக்காகக் காட்டி, நாக்கையடக்குவதற்குப்பதில், நாவை வளர்த்து, உண்டு களிப்பதே வாழ்க்கையின் நோக்கமென நிலைநாட்டுகிறான். அதேபோல், சிற்றின்ப நுகர்ச்சியைக் கட்டுக்கடங்காமல் விட்டு, அதன் அடிமையாகி, மாள்கிறான். தாகத்தைத் தணிக்க, தண்ணீரை இயற்கை படைத்திருக்க, மனிதன், ஏனோ, நீரில், போதை யளிக்கும் பொருள்களைக் கலப்படஞ்செய்தே, தனது பானமாக அருந்துகிறான். சிலர், லாகிரிப்பண்டங்களை, வரையறையின்றி உண்டு, இயற்கை யுணவை வெறுக்கின்றார்கள். அன்னத்தைக் காட்டிலும், புகையிலையின் தேவை, அவர்களை ஆட்கொண்டு விடுகிறது. போதைப் பொருள், இயற்கைத் தேவைக்கு விரோதமாக, அதையே நாடும்படி செய்து, ஜீவனை ஆட்கொண்டு, அடிமையாக்கிவிடுகிறது. இவை உணவாக ஏற்கத் தகுதியற்றவை, என்றாலும், அவற்றைத் தவிர்க்க முடியாத அவாவை ஏற்படுத்தி, ஜீவனின் ஆன்ம வளர்ச்சியைத் தடுப்பதோடு, உடலையும், பாழாக்கிவிடுகின்றன.

நவநாகரீகத்தின் பெயரால், மனிதன் தனக்கு அனுகூலமெனக் கொள்ளும் வினைகளில், அநேகம் இயற்கைக்கு விரோதமானதே. எமர்சன் என்ற அமெரிக்க ஞானி கூறுவதாவது, "நாகரீக மனிதன்

படைத்துக் கொண்ட துரித வாகனங்கள், அவன் கால்களின் சக்தியைப் பறித்து விட்டன. புத்தகங்களும், நூல் நிலயங்களும், அவனுடைய ஞாபக சக்தியை அபகரித்துக்கொண்டன. மிதமிஞ்சிய ஒளிக்கருவிகள், அவன் பார்வையைக் குன்றச் செய்தன. அதிகம் பக்குவப்படுத்திய ஆகார வகைகள், அவன் ஜீரணக் கருவிகளின் திறமையைப் போக்கடித்து விட்டன. மனிதன் தன் மனத்தைப் பாழடித்துக் கொண்டது, நவநாகரீகத்தாலேயே." புது வெள்ளம், பழைய நீரையும் அடித்துக் கொண்டு போனது போல், எந்தப் புதிய அனுகூலமும் பழைய ஏற்பாட்டின் நலனை பாதிக்காமலில்லை. சமூகம் முன்னேறுவதாகக் கூறுவது, கடல் நீர், அலைகளால் முன்னேறுவதாகத் தோற்றமளிப்பது போலேயாம். மனித சுபாவம் மாறுவதேயில்லை. புதுக்கலைகளும், கருவிகளும், மானிடனின் வெளித்தோற்றத்தையே பாதிக்கின்றன. இயற்கைத் முற்றிலும் முரண்பட்ட இந்நிலையை, மனிதர்கள், தங்கள் கெட்ட பழக்கத்தால் அடைந்தாலும், அக்கொடிய பழக்க வழக்கங்கள், இயற்கையிலேயே, தாங்கள் பெற்றதாகச் சாதிக்கின்றார்கள். இதைப்போல், பொய்யை மெய்யெனக் கொள்ளும் தவறு வேறு இருக்க முடியாது. பழக்கம் இயற்கை சுபாவமல்ல. பழக்கம் முற்ற, முற்ற அது இயற்கை சுபாவம் போல், அவ்வளவு வலுவடைந்து விடுகிறது, ஆகையால், கெட்ட பழக்கங்களை முளையிலே கிள்ளிவிடவேண்டும். தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்.

ஒவ்வொரு மானிடனிடத்திலும், தன் இயற்கை சுபாவத்தோடு, மற்றோர் உயர் இயல்பும் பிறந்திருக்கிறது. அது தான் தார்மீக இயல்பு. இந்த உயர் இயல்பு மற்ற உயிரினங்களுக்கில்லை. ஆகையால், அவை, சுபாவத்தை யடக்க முடியாமல், இயற்கையின் போக்குப்படியே செயல்புரிகின்றன. மனிதன், தன் கட்டுப்பாட்டில். அடக்கக் கூடியவற்றை அடக்கி ஆள்வதே, அவனை மனிதனாக்கும். பசி, தாகம், காமம் இப்பிணிகளை முற்றிலும் அகற்றிவிட முடியாது. அம்மாதிரி முயற்சிப்பதும் சரியல்ல வென்று கீதை III-33லும், புத்தரின் எச்சரிக்கையிலும் கண்டோம். என்றாலும், அவைகளை கட்டுக்கடங்காது விடுபவன் கயவனே. விலங்கினங்களில் ஒவ்வொரு இனமும், ஒருவிதமான ஆகாரத்தையே, இயல்பாகக் கொண்டு வாழ்கிறது புலி, புல்லைத் தீண்டாது; அது மாமிச பக்ஷிணி. பசு, புல்லையே உண்ணும். ஆனால்; மனிதன், எதையும் உண்ணப்பழகிக் கொள்கிறான். இத்தகைய சுபாவத்தைத் தனக்கு ஒரு அனுகூலமாக்கிக் கொண்டு, எந்த உணவு தனக்கு எளிதில், பெரு முயற்சி

யின்றிக் கிட்டுகிறதோ, அந்த உணவை மட்டுமே எடுத்துக் கொண்டு வாழ்க்கைப் போராட்டத்தை, எளிதாக்கிக் கொள்ளாமல், ஒவ்வொரு நேர உணவுக்கும், விதவிதமான பண்டங்களை, அரும்பாடுபட்டுத் தேடி, சேகரித்தும், சமைத்தும், பக்குவப்படுத்தியும், உணவாக்கிக் கொள்ள வீண்பாடுபடுகிறான். இதில், செலவழிக்கும் நேரமும், சக்தியும் அறிவும், பொருளும், வீணுவதுடன், கேட்டையும் விளைவிக்கின்றன. உணவுப் பண்டங்களின் வகைகள் அதிகரிக்க, அவற்றை அமிதமாக உண்டு, அஜீரணம் ஏற்படுவது நிச்சயம். ஒரே கதம்ப உணவே (Mono Diet) உடலுக்கு இதமளிக்கும்.

புலனடக்க விஷயத்திலும், மனிதன், தன் இயல்பைத் திரித்து, கேட்டைத் தழுவுகிறான். விலங்குகள், சாதாரணமாகத் தங்கள் அழிவை, ஏதாவதொரு புலனின் ஆதிக்கத்திற்குட்பட்டதனால் தேடிக்கொள்ளுகின்றன. மீன், தூண்டிலிலுள்ள ஆகாரத்தின் சுவைக்காக உயிரையிழக்கின்றது. விட்டில் பூச்சி, ஒளிக்கு மதிமயங்கிப் பொசுங்கி மாய்கிறது. யானை, ஸ்பரிச உணர்ச்சிக்காக ஏமாந்து அடிமையாகிறது. மான், ஒலியால் கவரப்பட்டுப் பிடிபடுகிறது. வண்டுகள் வாசனையால் இழுக்கப்பட்டு மடிகின்றன. ஆனால், மனிதனோவெனில், ஐம்புலன்களுக்கும் அடிமையாகி, அவற்றின் ஆதிக்கத்தில் அழிந்து போகிறான். மனிதன், தன், தார்மீக இயல்பை வளர்த்து, அதன் ஆதிக்கத்தில், இயற்கை இயல்பைக்கட்டுப்படுத்தி வாழ்க்கை நடத்தவேண்டும். இந்த பூவுலகம், இன்பமும், துன்பமும், நல்லவையும், அதல்லாதவையும் பிரிக்கவொண்ணாது, இணைந்து நிற்கும் இயல்புடையது. இந்த இரட்டை நிலை, மனிதனின் திறமைக்கும் அறிவுக்கும் ஒரு பெரிய சவாலாக அமைந்திருக்கிறது. படைப்பில் மற்ற இனங்களுக்கில்லாத, இயற்கையை வெல்லப் போதிய அளவு அறிவும், திறனும் மனிதனுள் பொதிந்து மறைந்து கிடக்கின்றன. இந்த இயற்கையை வெல்லும் சக்தி, இயற்கையால் அளிக்கப்பட்டிருக்க முடியாது; இயற்கைக்கும் மேலான பரம்பொருளே மனிதனுக்கு அறிவும், திறனும் கொடுத்திருக்கிறது. அவ்வலிமையைக் கொண்டே, பொய்யிலிருந்து மெய்யைப் பிரித்துக்காண இயலும். இந்த ஆன்ம அறிவைப் பேணாத மனிதன், மிருகமே யாவான். அதை யடைந்தால், பின், மனிதன், நீரை விலக்கி, கலப்படமது பானங்களைத் தேடமாட்டான்; உணவை வெறுத்துப் போதைப் பொருள்களை நாடமாட்டான்; எளிய வாழ்க்கையை விடுத்து, டாம்

பீகத்தில் ஆசை கொள்ளமாட்டான்; உயிர்களைக் காப்பான்; உயிர்களை யழிக்கான்; பொய் பேசான்; கொலை, களவு புரியான்; தன்னலம் பேணுன். அவனது புத்தி ஒருமுகப்பட்டு, நிலைத்து உறுதி கொண்டதாகும். மனத்தை யடக்கி ஆளும் திறமை யுண்டாகும். அந்த, அசைக்க வொண்ணுத அறிவு படைத்தவனை கீதை, "ஸ்திதப்பிரச்ஞன்" எனப் புகழ்கிறது.

**இவ்வுலகம் இயற்கையின் கூற்றல்ல.** இயற்கையும், பரமனின் ஆணைக்குட்பட்டே செயல் படுகிறது. படைக்கப்பட்ட பொருள்கள், தங்கள் சுபாவமாகவே, நல்லதென்றே, கெட்டதென்றே, ஆகா. நன்மையும், தீமையும் அப்பொருள்களை உபயோகிக்கும் விதத்திலும், உபயோகிப்பவரின் மனப்பான்மை, நோக்கம், இவைகளுள் அமைந்திருக்கின்றன. உலகில், இது ஏன் படைக்கப்பட்டது என்று, வினவி, அதற்குச் சமாதானம் கூறுமளவுக்கு அறிவு படைத்த மானிடன் இல்லை. நம் மடமையே, நம் சந்தேகங்களைத் தீர்த்து வைக்க முடியவில்லை. "கள், ஏன் படைக்கப்பட்டது? அதை நான் அருந்தவே செய்வேன்," என்று முரடன் கூறுகிருன். தென்னை, பனை, இவைகள், தங்கள் வளர்ச்சிக்கும், இனவிருத்திக்கும் பெற்ற மதுரமான ரசத்தை, மனிதன் பலவந்தமாகக் களவாடிப் புளிக்க வைத்து, போதை தரும் நிலையை அடையச் செய்து, அதைத் தான் அருந்தி, போதையடைந்து, அறிவையிழந்து, செயலற்ற நிலையை அடைந்தால், இதற்குப் பொறுப்பு யார்? **படைப்பின் முழு மர்மத்தையும் அறிய வல்ல மானிடன் இருக்க முடியாது.** இக்கருத்தையே, கீதை X-40, 42-ல் உணர்த்துகிறது. **மனிதன், அவனவன் அறிவுக்கு எட்டிய அளவு தான், பிரபஞ்சத்தை அறிய முடியும்.** படைப்பைப் பூர்ணமாக அறியவேண்டிய தேவையும் இல்லை. கங்கை நதியில் நீராடிப் புனித மடைய, அதன் உற்பத்தியாகிய கங்கோத்திரியிலிருந்து, கங்கா சங்கமம் வரை, ஒவ்வொரு இடத்திலும் நீராடவேண்டியதில்லை. ஏதாவது ஒரு கட்டத்தில் குளித்ததினுலே, கங்கையில் நீராடிய பலனையடையலாம். படைப்பில் ஒவ்வொன்றும், பரமனின் திவ்விய வடிவமே. அவை, பரமனது மகிமையைப் பறைசாற்றுகின்றன. யாவற்றையும் நமது சிற்றறிவுக்குள் அடக்கிவிட முடியாது. விஞ்ஞானம், தங்கத்திற்கு, நிறம் பசும் மஞ்சள் என்றும், பொருள் திணிவு 19 என்றும் கணக்கிட்டுக் கூறுமே யல்லாது, ஏன் இவ்வாறு ஏற்பட்டன என்று பகர முடியுமா?

ஒழுக்க முறை, ஒழுங்கற்ற முறை, எனப் பெரியோர்கள் பாகுபாடு செய்திருக்கிருர்கள். மானிட வாழ்க்கையை மேம்படுத்தவே, இவ்வாறு வகுத்து, ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்கவும், ஒழுங்கற்றதை நீக்கவும் கட்டளேயிட்டார்கள். கொலே, களவு, பொய், இவை ஏன், நடுக்கப்பட்டன? சமூகம் இன்புற்று, அல்லல் படாமல் செயல்பட வேண்டுமாளுல், இப் பாதகச் செயல்களே, முளேயிலே கிள்ளி விடவேண்டும். சமூகத்தில், எல்லோரும், பொய்யே பேசுவதென்று திட்டமிட்டுச் செயல்பட்டால், ஒருவரை யொருவர் நம்பவே மாட்டார்கள். அந் நிலேயில், பொய் பேசுவதால் யாதொரு பயனுமில்லாது போய்விடும். இன்று ஒரு சிலரே (அவர்கள் கூட்டம் பெருகிக் கொண்டே போகிறது) பொய் சொல்லுவதாலும், மற்றவர்கள் உண்மை யுரைப்பதாலும், பொய் பேசுபவரையும், சாதாரணமாக, நம்புகிருர்கள். இதளுல், பொய் பேசுபவர் சில சமயம் பொருளீட்டவும், மற்றவர் பொருள் நஷ்டமடையவும் வாய்ப்பு உண்டாகிறது. சபல புத்தி யுடையோர், பேராசையால், இத்தீய முறையைக் கையாளத் தூண்டப்படுகிருர்கள். அதே போல், கொலேயும். எல்லோரும் கொலே புரியத் தலேப்பட்டால், பின், உலகில் உயிருடன் வாழ்பவர் யார்? கடை நிலேயில், எல்லோரும் கொலேயுண்டு, ஜீவ உலகமே இல்லாது ஆகிவிடும். எல்லா மதங்களும், சமூகங்களும், அரசாங்கங்களும், இப்பாதகச் செயல்களுக்குத் தடை விதித்து, மீறுபவர்களேக் கொடிய தண்டனேக்குள்ளாக்குகின்றன. என்ருலும், கொலே, களவு, விபசாரம், அதிகரித்துக் கொண்டே வருகின்றன. இந்த அவல நிலேக்கு சமூகமே முக்கியப் பொறுப்பாகும். பொருளே, தெய்வம், என்ற கொள்கையை வலுப்படுத்தும் சமூகத்தில், தெய்வ பயம் நீங்கி, மனிதன் அடாது எதுவும் செய்யத் துணிந்து விட்டான். தன் விண தன்னேச் சுடும். மனித சமூகம், தன் வாழ்வைத் தானே பாழ்பண்ணிக் கொள்ளுகிறது. காரணம், உண்மை அடிப்படையான ஆன்மாவை மறுப்பதுதான்.

அளவுக்கு மிஞ்சினுல், அமிர்தமும் நஞ்சாகும். இவ்வுண்மையே யோக நிலேயின் அடிப்படை. மனத்தைக் கைத் திராசின் பெரிய முள்ளுக்கும், கடவுளே சிறிய முள்ளுக்கும் ஒப்பிட்டு, திராசின் விட்டம், சம நிலேயை யடையும் பொழுது, இப்பெரிய முள், இப்பக்கமோ, அப்பக்கமோ சரியாமல், நேராக, மேலேயுள்ள, சிறிய முள்ளே யணுகிகிற்கும், நிலேயை, யோக நிலே யென்று ராமகிருஷ்ண பரமஹம்சர் வர்ணிக்கிருர்: அப்பொழுது, கடவுளுடன் (சிறிய முள்) ஜீவன், தன் ஐக்கியத்தை உணரும் தருணமாம். மனம் கடவுள் பால், லயித்து, பரம

ணயே எண்ணிய வண்ணமா யிருக்கும் நிலையில், உலோகாயத ஆசைகள் தலையிடா. ஆனால், திராசின் ஒரு தட்டில், மண், பொன், பெண்ணாசைகள் வந்து குவிந்தால், விட்டத்தின் நடு நிலை பாதிக்கப்பட்டு, அத்தட்டும் கீழே சென்று, அத்துடன் பெரிய முள், (மனம்), சிறிய முள் (கடவுள்) பால் நிலை பெறாது, வெகு தூலைவுக்கு அகன்று விடும். உலகப் பொருள்களுக்கும், ஆசைகளுக்கும் எந்த மனத்தில் இடமுண்டோ, அம்மனம் கடவுளின் நினைவுக்கு இடந் தராது. எங்கு தெய்வத்திற் கிடமுண்டோ, அங்கு ஆசைகள் தலை காட்டா. **உலக ஆசைகளே, கடவுளை விட்டு நம்மைப் பிரித்து வைக்கின்றன.** ஆசைகள் நிறைவேறச் செய்யும் வழிபாடுகள் உண்மைத் தெய்வ வழிபாடல்ல.

**யோகியின் நிலையை** பரமஹம்சர், ஒரு ஒப்பற்ற உவமானத்தால் **விளக்குகிறார்.** **பாலையும், நீரையும், முறையே, மனத்திற்கும்,** உலகுக்கும் **உவமையாகக் கொண்டு,** இவை இரண்டும், மிக எளிதில், பேதம் காட்டாது கலந்துவிடக் கூடுமென்றும், அதனால், பாலின் தரம் மிகவும் குறையவும், தண்ணீருக்குப் போலி உயர்வு ஏற்படவும் செய்கிறது. இது போல், அனுபவத்தாலோ, பயிற்சியாலோ பக்குவப்படாத மனம், உலக விஷயங்களில் ஈடுபாடு கொண்டால், அதன் தரம் குறைந்து, பாழ்படவும் நேரிடும். ஆகையால், பாலைக் காயவைத்து, உறை மோரிட்டு, அசைவற்ற அமைதி நிலையில் ஒரு பொழுது வைத்துப் பின் அதை நன்றாகக் கடைந்தால், உறைந்த பாலினின்றும், வெண்ணெய் திரண்டு வரும். இந்த வெண்ணெய் பக்குவமடைந்த மனத்துக்கு ஒப்பாம். வெண்ணெய்யை, நீரில் இட்டால், ஒன்றுக்கொன்று கலவாது, நிற்கும். **மனம் பக்குவமடைவதென்பது,** அதை **நடு நிலையாகிய, யோக நிலையில் நிற்கச் செய்வதேயாம்.** யோக நிலையில் உறுதி பூண்டவனை, உலகம் பாதிக்காது. அமிதமாக உண்ணுபவன்; அமிதமாக உறங்குபவன், மிதமிஞ்சித் தன் தேவைகளை யடக்குபவன், இரவு பகலை ஒன்றாக்கி விழித்திருப்பவன், இவர்கள் ஒருவருக்கும் யோக நிலை கிட்டாது. (VI-16). எதிலும், மிதமாக, நடு நிலை வகிப்போனே; யோகத்திற்குரியவனாவான். மனத்தின் சம நிலையைக் குலைப்பது ஆசையே. **ஆசைகளை யொழிக்கவே யோகப் பயிற்சி; தெய்வ வழிபாடு.** ஆனால், ஆசைகளைப் பெருக்கி, நிறைவேற்றிக் கொள்ளவே தெய்வ வழிபாடென்று நாம் திரித்து, அமைத்துக் கொண்டோம். மனிதனின் விபரீத எண்ணங்களுக்கும், செயல்களுக்கும் எல்லையே யில்லை!

வாழ்க்கையின் அத்தியாவசியத் தேவைகள் ஒரு சிலவே. ஆனால், ஆசைகளின் காரணத்தால், அவசியமென ஏற்படுத்திக் கொண்டவையே அநேகம். மனிதன், புலனடக்கமில்லாது, வெளியுலகுக்கு அடிமையாக, ஆக, கங்கு கரையின்றி ஆசைகளால், தேவையைப் பெருக்கிக் கொண்டு, அவதிப்படுகிறான். ஆன்ம நம்பிக்கையே பற்றுக்களையும், தேவைகளையும், குறைத்துக் கொண்டு, வாழ்க்கையை எளிதாக்கிக் கொள்ளும். நவ நாகரீகத்தால், பாதிக்கப்படாத, ஒருவனுக்கு இயற்கைத் தேவைகளுக்கப்பால், அவன் ஆசை செல்வதில்லை. ஊண், உறக்கம், தோழி, இவைகளே அவன் வேண்டுவன. ஆனால், நாகரீக மனிதன், உலகையே தன் ஆசைக்கு அடிமைப் படுத்தப் படாத பாடு பட்டுத் தன் உடலையும், மனத்தையும் வாட்டிக் கொள்ளுகிறான். எவன் தன் மனத்திலிருந்து, தன் உடலைப் பற்றிய வீண் கவலைகளையும், தேவைகளையும், அகற்றி விடுகிறானோ, அவனிடமிருந்து, மானிடனைத் தற்சமயம், அடிமையாக்கும் டாம்பீக வாழ்க்கைக் குரிய, பகட்டு உடைகள், இருக்கை, பிறர் துதிகள், மற்றும் நாடக மேடைப் போலி நிறுவன அலங்காரத் தேவைகள் யாவும் பறந்து போம். (II-59).

சினிமாப் பாணியைத் தழுவி, உடல் அலங்காரங்கள், இன்று அளவு கடந்து போய் விட்டன. இரும்பைக் காட்டிலும், பல மடங்கு அதிகப் பளுவான தங்கத்தால், ஒரு பெண், தன்னையே மூடி மறைத்துக் கொள்கிறாள். இப் பெண் பிறவி எடுத்தது, சுமை தாங்கியாகவா? ஒரு கப்பல், சமுத்திரத்தில் மூழ்கும் பொழுது, ஒரு கொள்ளைக் கூட்டத்தாரின் தலைவனும், அதில் அகப்பட்டுக் கொண்டான். தான் அதுவரை கொள்ளையடித்த தங்கத்தை அவன் தன் இடுப்பைச் சுற்றிக் கட்டி வைத்திருந்தான். அவன் ஆழ் கடலில் மூழ்கி மாளும் பொழுது, தன் கொடிய பளுவால், அவனைத் தண்ணீருக்குள் இழுத்து, மீள வொட்டாமல் தடுத்த, தங்கத்தை, அவனது உடமை யென்று சொல்வதா, அல்லது, அவன் அத் தங்கத்தின் உடமையாகி, அத்துடன், கடலினடியில் சேர்ந்தானா? உயிர்களின் வளர்ச்சிக்கு உபகாரமாகப் பயன் படுவதே உடமை. அப்பொருள்களுக்கே மதிப்பும், விலையும் உண்டு. மற்றவை, குப்பையும், கூளமுமே. செருக்கு, இறுமாப்பு, தற்பெருமைக்கு உணவளிக்கும் ஆடம்பரப் பொருள்கள், பல விதத்திலும் தீங்கிழைப்பவை. நம் உடல் ஒரு கருவியே. அது, நமது பணியாளாகவே செயல்பட வேண்டும். அந்நிலையில், வாழ்க்கைப் போராட்டம், நம் முழு மனத்தையும், சக்திகளையும், ஆயுளையும் கவர்ந்து விடாது. உடலுக்காகப் பிறவியல்ல, என்பதுதான், ஆன்ம

தத்துவத்தின் முதல் தேற்றம். உடலின் துணை கொண்டு, வாழ்க்கைப் பாடுகளை எளிதில் முடித்து, ஆன்ம வளர்ச்சியில் ஈடுபடுவதே மானிடனின் குறிக்கோள். சாதாரண அறிவு படைத்த மக்கள், வாழ்க்கைப் போராட்டத்தைக் கடினமாக்கிக் கொண்டு, அச்சுழலில் சிக்கி, மீள முடியாமல், ஆன்ம வளர்ச்சிக்கான வாய்ப்புகள் தடைப்பட்டு, நாளடைவில், ஆன்மாவையும் மறந்து, உடலே எல்லாம் என்ற எண்ணமே நிலைத்து நின்று, உடலின் அடிமையாகப் பணியாற்றுகிறார்கள். உடல், உடமை, உறவினர், இவற்றில் எவன் ஆசாபாசங்கள் கொள்கின்றானோ, அவனுக்கு இவ்வுலகம் 'நர—கம்', ஆகவே திகழ்கின்றது. அதாவது, அவன் நிறை மனிதனாகாமல், நர — மானிட வர்க்கத்தினின்றும், கம் — குறைவாயுள்ள விலங்கின வாழ்க்கை நடத்துகிறான்.

ஐந்து கோசங்களாலாகிய மானிடன், அவற்றில், ஒன்றான, இவ்வுடலைப் பற்றிய தவறான எண்ணங்களாலே, வீழ்த்தப்படுகிறான். அழிந்து போகும் இவ்வுடலை, "நான்" என்பது, மண் குதிரையை நம்பி, வெள்ளத்தைக் கடக்கத் துணிவு கொள்ளும் மடமையை யொக்கும். இவ்வுடலுக்கு உயிர் அளித்து, அதற்குச் சில காலமாவது, யௌவனம், அழகு, பலம், அளிப்பது, நம்முள் குடிகொண்டிக்கும் ஆன்மாவே. என்றாலும், அழியும் இயல்புடையதால், உடல், நம் விருப்பம் போல் என்றும் எழிலும், வனப்பும், வசீகரமும் உள்ளதாக நிற்க இயலாமல், மூப்படைந்து மரணமெய்துகிறது. அதையே "நான்", என்று வாதிப்பவர்களின் சிற்றறிவை எவ்வாறு போற்றமுடியும்? கேவலம் கருவிகளாகிய: புலன்களையும், அவற்றைப் பின்பற்றும் கோழை மனத்தையும், அத்துடன் ஒத்தூதும், உறுதியற்றுச் சிதறிக்கிடக்கும் சிற்றறிவையும், கட்டுப்படுத்தாது, அவை தம் இஷ்டம் போல் செயல்புரிய விடுதலே, மிருக வாழ்க்கையாம். விலங்கினங்கள், இயற்கையால் தூண்டப் பெற்ற ஆசைகளை யடக்கும் திறன் பெறவில்லை. என்றாலும், அவைகளுக்கு செயற்கை ஆசைகளே தெரியாது. ஆனால் மனிதன், தன் இயற்கை இயல்பால் ஏற்படக் கூடிய ஆசைகளைக் கட்டுப்படுத்தப் போதிய அறிவும், ஆற்றலும், அவனுக்கு ஆன்மா அளித்திருக்க, அவ்வறிவையும், வலிமையையும் வளர்த்துக் கொள்ளாமல், மழுங்கவிட்டு, இயற்கை ஆசைகளுக்கு அடிமையாவதுடன் நிற்காமல், தன் பிற்போக்கான சிற்றறிவைக் கொண்டு, விபரீதமான செயற்கைப் புலன் இன்பங்களைத் தானே படைத்துக் கொண்டு, அழிவாகிய பாதையிலே விரைந்து ஏகுகிறான். பரமன் நரகத்தைப் படைக்கவில்லை. மனிதனின் விபரீதக் கொடுமைகளே, நரகபாதைகளாக இவ்வுலகைப்

பீடிக்கின்றன. முதல் கோசமாகிய, இவ்வுடலால் மானிடன் மயக்க முற்று தவறான பாதைகளைப் பின்பற்றுவதினின்றும், மேலே அளித்த எச்சரிக்கைகள் அவன் சிந்தனையைத் தூண்டும் என்ற நம்பிக்கையுடன், மற்றும் கோசங்களையும் விளக்குவோம்.

இரண்டாவது கோசமாகிய பிராணமய கோசமும், அடுத்த மூன்று கோசங்களும், உடலைப்போலான ஜடப்பொருள்களல்ல. அவை களுக்கு, ரூபமோ, பரிமாணமோ, தோற்றமோ, கிடையாது ஆனால், அவை யாவும், உடலில் எல்லாப் பாகங்களிலும் ஊடுருவி, வியாபித்து நிற் கின்றன. பிராணன் என்பது சக்தியான உயிரே. ஆன்மா, தான், உடலில் வசிக்கும் பொழுது, சக்திவடிவான உயிராகச் செயல் படு கிறது. பிறப்பு, இருப்பு, இறப்பு, இம் மூன்றுக்கும் உயிரே ஆதா ரமாகும். பிராணன், அலைகளின் அசைவையொத்தது. இது, புத்தி, மனம், வாக்கு, உடல் இவைகளுக்கு வினையாற்ற வேண்டிய சக் தியை அளிக்கின்றது. பிரபஞ்சத்திலுள்ள எவ்வகை சக்தியும், பிராண சக்தியாலேயே உண்டாக்கப்படுகிறது. மின்சாரமோ, காந் தமோ, ஒலியோ ஒளியோ, ஆகர்ஷணசக்தியோ, யாவும், பிராணனின் திரி பேயாம். ஆனால் இச்சக்தி ஜடப்பொருளைச்சாராது, தனித்து நிற் காது. ஜடப்பொருளே அதற்கு ஆகாரமாகவும், ஆதாரமாகவும் அமைகிறது. பிராணனுக்கும் உடலுடன் முடிவு ஏற்படுவதால், ஜடப்பொருளைப்போல், இதுவும், நித்தியமான பரம்பொருளாகா தென்று கொள்ளவேண்டும். உணவு உண்டாகும் இடத்தில், உயிர் உண்டாகும் என்பதை நாம் எளிதில் காணலாம். ஆகாரமும், உயிரும், நெருங்கிய தொடர்புள்ளவை என்று முதல் கோசத்தில் விளக்கினோம். என்றாலும், விஞ்ஞானம் கூறும் கூற்றுக்கு இட மில்லை, உயிர் ஜடப்பொருளின் திரிபே என்ற அஃதன் கொள்கை உண்மையாகாது. சில, அனுகூலமான சூழ்நிலையில், ஜடப்பொருள் தானாகவே உயிர் படைத்துக் கொள்ளுகிறதென்ற விஞ்ஞானத்தின் வாதம் விதண்டாவாதமே.

மூன்றாவது கோசம், மனோன்மயகோச மென்ற, மனத்தையும் அத் துடன் செயல்படும், பதினைந்து இந்திரிய தத்துவங்களையும் அடக் கியது. ஸ்தூல செயல்கள் அல்லாத, சூக்கும வினைகள் நடக்கும் களமே, மனம். இந்திரிய ஞானம், எண்ணம், சிந்தனை, கல்பனை, விசாரம், தியானம், உணர்வு, சங்கல்பம், தீர்மானம், யோசனை, கருத்து, இவைகளுக்கெல்லாம் நிலைக்களமாக நிற்பது மனம். ஐந்து ஞானேந்திரியங்கள், ஐந்து கர்மேந்திரியங்கள், ஐந்து புலன்களும் மனத்தின் கீழ் செயல்

படுகின்றன. மனம், பூதவுடல் முழுவதும் வியாபித்திருக்கிறது மனத்திற்கு சுயமாக உணர்வு கிடையாது; இது ஆன்மாவாலேயே அளிக்கப்படுகிறது. மனம் ஈடுபடாமல், வாழ்க்கை யில்லை: என்றாலும், மனத்தைக் கட்டவல்ல ஆற்றல் படைத்தது, புத்தி. மனம் புத்தியின் கீழாவது, அகத்தின் கீழாவது செயல்படும். ஆகையால், மனமானது முழுமுதற் பொருளாகிய பரமனுகாது. மனம், உடலுடன் அழிந்துபோம்.

நான்காவது கோசம், புத்தியும், அஹங்காரமும் அடங்கிய விஞ்ஞான மய கோச மெனப் பெயர் கொண்டது. ஐந்து கோசங்களில் முதல் நான்கும் கீழ் பிரகிருதியாலானவை. ஐந்தாவது கோசம், மேல் பிரகிருதியாலான, ஆன்மா. கீழ் பிரகிருதியாலான கோசங்கள் நாலும் மரணத்தால் அழிந்து போனுலும், நான்காவது கோசமாகிய புத்தியும், அஹமும் சம்ஸ்கார வடிவில் மறு பிறவிகளுக்குக் காரண உடலாக நின்று, புதுப்பிறவியில் பங்குகொள்கின்றன. இவ்வாறே, ஒரு தனி ஜீவன், தன் தனித் தன்மையை, தான் எடுக்கும் பிறவிகளிலெல்லாம் வகிக்க இயலுகிறது. இதற்குத் துணைபுரிவது அழியாத ஆன்மாவே. ஆன்மா இன்றி, ஒரு ஜீவனின் கர்மா அதன் பல பிறவிகளிலும் தொடர்புகொள்ள இயலாது. ஆன்மாக்கள் ஒன்றுக்கொன்று வேறுபாடின்றி இருந்தாலும், தனி ஜீவனின் கர்ம சம்ஸ்காரங்கள், அந்தந்த ஜீவனின் ஆன்மா மூலமே, அதன் பல பிறவிகளையும் அடைவதால், ஜீவான்மாக்களும் தனித்தன்மை ஏற்கின்றன. இதனுலேயே க்ஷர ஆன்மா, பரம்பொருளாகாது என்று பின்னுல் கூறுவோம். ஜீவனின் பலபிறவிகளில், அதன் தனித்தன்மையை நிலைநாட்டுவது புத்தியும் அஹங்காரமுமே. இதுவே, இவைகளின் முக்கியத்துவத்துக்குக் காரணம். ஜீவனின் விடுதலைவரை, இவை இரண்டும், விண்ணமுடியாத நிலையில் நின்று, பிறவிகளைப் பாதிக்கின்றன. விடுதலைக்குத் தடையாக ஏற்படுவது அஹங்காரம். ஜீவனின் பிரகிருதி பாகங்களுக்கு இதுவே தலைமை வகிக்கின்றது. இது புத்தியையும் அடிமைப் படுத்திக் கொண்டு விட்டால் பின், அந்த ஜீவன், தன் அசுர இயல்புகளையே வளர்த்துக் கொண்டு, கொடுமைகளையே பரவச்செய்கிறது. ஆனுல், புத்தி, அஹத்தை அடக்கி, ஒடுக்கிச் செயல்பட வல்லமை படைத்துக் கொண்டால், அந்த ஜீவனின் வாழ்க்கையில், சுயநலமும், ஆசைகளும், அசுரத் தன்மைகளும் குறைந்து, தேவ சம்பத்துக்கள் மேலோங்கி, எங்கும் இன்பத்தையே பரவச்செய்யும். இந்த நான்காவது, விஞ்ஞானமய கோசத்தின் சிறப்பும், மதிப்பும் இப்பொழுது விளங்கும். வாழ்க்

கையின், — ஒரு பிறவியில் மட்டுமல்ல, எடுக்கும் பிறவிகளிலெல்லாம் — வாழ்க்கையின் ஜீவநாடிகள், புத்தியும், அஹமுமேயாம். **அஹந்தையழித்து, புத்தியை வளர்ப்பதே நல்வாழ்வின் மர்மம்.** ஆன்மாவுடன் நேரடித் தொடர்புள்ளவை இவை இரண்டுமே; என்றாலும், புத்தியானது பலகணிபோல் ஆன்ம ஒளியைப்பெற இடமளிக்கிறது. ஆனால், அஹம், மாயத்திரையாக அமைந்து ஆன்ம ஒளியைத் தடைசெய்து தடுத்து விடுகிறது. விவேகமுள்ள மானிடன், ஏன் புத்தியை வளர்த்து, அஹத்தை யொழிக்க வேண்டியதின் காரணம் இப்பொழுது தெளிவாகும்.

பகுத்தறிவுக்கும், மன உறுதிக்கும் இருப்பிடம் புத்தி. அதுவே ஆன்மாவுக்கும் மனத்துக்கு மிடையேயுள்ள சாளரம். இதன் மூலமே **ஆன்மஒளி ஜீவனையடைகிறது.** இந்த ஒளியைப்பெற்று புத்தியானது தர்மவழியைப் பின்பற்றி மேல் நோக்குடன், ஜீவனைச் செயல்படத் தூண்டுமானால், அதுவே, ஜீவனின் விடுதலைக்கான ராஜபாட்டை; வாழ்க்கையிலும் இன்பமளிக்கும். அஃதல்லாது, தனக்கு ஒளிதரும் ஆன்மாவையறிந்து கொள்ளாது, அஹங்காரத்திற்கு அடிபணிந்து, புலன் நுகர்ச்சிகளிலே வாழ்வை விரயஞ் செய்ய, புத்தி ஒத்துழைத்தால், அந்த ஜீவன், மேலும் மேலும், இருளில் அழுந்தி, புத்தியும் குன்றிப்போய், தன் ஆன்ம ஒளியையும் இழக்க நேரிடும். வாழ்க்கை **நாடகத்தில், புத்தி, கதாநாயகத் தலைவனாகவும், அஹம், வில்லன், ஆகவும் திகழ்கின்றன.** புத்தி, ஆன்ம ஒளிப் பெருக்கால் வலுவடைந்து, அஹத்தின் போலி ஆதிக்கத்தை மறுத்து, அதை அகற்றி, ஜீவன், ஆன்மாவிலே களிப்புறச் செய்யும் பொறுப்பு, புத்தியைச் சார்ந்தது. வாழ்க்கைப் போர், வெளியுலகில் மட்டுமல்ல. தனி மனிதனின், உள் (மன) உலகிலும், போர் மூண்டுகொண்டே இருக்கிறது. மனிதனின், அஹங்காரத்தைத் தலைமையாகக் கொண்ட சிற்றியல்புக்கும், பேரியல்புக்கும், கீழ் பிரகிருதிக்கும் மேல் பிரகிருதிக்கும், அசுரசம்பத்துக்கும், தேவசம்பத்துக்கும், போட்டியும் போராட்டமும், இடைவிடாது நடக்கின்றன. ஆன்மாவை மறுப்பவர்கள், மனத்யையும் மறுத்து, இவ்வுட்போரையும் மறுக்கின்றார்கள். மனித வாழ்க்கையைப் பெருமளவு பாதிப்பது உட்போரே; இது அப்பட்டமான அனுபவம், என்றாலும், உண்மையை மறுப்பவர்களுக்குப், பொய் பகர்வதைத்தவிர வேறு புகலேது?

இந்த உள்முனைப்போரில், புத்தி எப்பக்கம் சார்ந்து நிற்கிறதோ, அவ்வியல்பே பலம் அடைந்து, வாழ்க்கை நடத்துகிறது. தார்மீக

இயல்பின் தலைவன், ஆன்மாவே யானாலும், அது நேரில் செயல்படுவதில்லை. தனது தர்ம ஆணையை, மனச்சாட்சி ரூபமாகவே தெரிவிக்கும். கீழியல்பின் தலைவன் அஹங்காரமே. புத்தி மேலியல்பைத் தாங்கி நின்றால், இன்ப வாழ்க்கை கிட்டி, விடுதலையும் சீக்கிரமே அடையலாம். அல்லாது, புத்தி அஹத்துடன் ஒத்து நடந்தால், இந்தப் பொய் வாழ்க்கையான உலக நாடகம் முடிவடையாது நீடிக்கும். அஹம் ஒழிந்தாலே பரம் கிட்டும். புத்தியும். அஹமும், முன்வினைச் சுவடுகளுடன், சம்ஸ்கார நிலையில் ஆன்மாவுடன் கூடி, புதிய உடலில் வந்து சேருகின்றன. இவைகளின் வளர்ச்சிநிலை, நோக்கம், இயல்புகளுக்குத் தக்கதொரு புதிய உடலையும், சூழ்நிலையையும், ஆன்மா ஏற்பாடு செய்து, ஜீவன் மறுபிறப் பெய்தக்காரணமாகின்றன. (VIII–6).

கடைசியாக, ஐந்தாவது கோசம், ஆன்மகோசம் அல்லது ஆனந்தமயகோசம் எனப்படுகிறது. இதில் பிரகிருதி சம்பந்தம் கிடையாததால், இது அழிவற்றது. படைப்பில் பங்கு கொள்ளும் பரமனின் அம்சமாகிய க்ஷர புருஷனே, மேல் பிரகிருதியாகி, ஒருதனி ஜீவனின் பொருட்டு மட்டும் நின்று உலக நாடகத்தை ஏற்படுத்துகிறது. அழிவே இல்லாத இந்த க்ஷர புருஷனின் காரணமாகவே, நாம் ஆன்மாவென்றும், நமக்கு அழிவில்லை என்ற சித்தாந்தம் உண்மையாகிறது. ஜீவனின் பல்வேறு பிறவிகளுக்கும் இணையாக நின்று, அவற்றை ஏற்பாடு செய்வதும் இந்த ஆன்மாவே. இதன் சந்நிதான விசேஷத்தாலேயே, உடலுக்கு, உயிரும், உணர்வும் உண்டாகி, ஜீவநிலை அடைகிறது. ஜீவன் நடத்தும் நாடகத்தில், இந்த ஆன்மா சாக்ஷியாகவே நின்று, யாதொரு பங்கும் கொள்வதில்லை. வாழ்க்கையில் ஏற்படும் இன்பமோ, துன்பமோ, ஆன்மாவை பாதிக்கா. ஆன்மா, சத், சித், ஆனந்தமயமானது, அதுவே ஞானச்சுடர். நான்காவது கோசமாகிய விஞ்ஞானமய கோசம், பிரகிருதி சம்பந்தத்தின் காரணமாக, உலோகாயத அறிவையே இயல்பாக அடைய முடியும். இது உலக வாழ்வுக்கே ஓரளவு உதவும். அவ்வாழ்க்கை, ஆசையின் அடிப்படையிலேதான் அமையும். இதுதான், தனிமனிதன், தன் முயற்சியின்றிப் பெறும் கீழின வாழ்க்கையாம். பெரும்பாலோருக்குக் கிட்டும், துன்ப வாழ்க்கை இதுவே. இங்கு, புத்தி, ஆன்ம அறிவு அடையவில்லை; வாழ்க்கைத் தரம், விலங்கினத்திற்கு ஒப்ப ஏற்படுகிறது. இவ்வறிவையே, உலகம் வளர்க்கிறது. இந்த விஞ்ஞான அறிவினால், ஜீவன் உண்மை சுகம் பெறவோ, விடுதலையடையவோ முடியாது. புத்தி, ஆன்ம ஒளி மூலம், ஆன்ம அறிவு

பெற்ருலே, முக்தியுண்டு. ஆன்ம அறிவென்பது, ஆன்மாவைத் தலைவனாக ஒப்புக் கொள்வதே. உண்மை புலப்பட்டால், பின் தவறுகளுக்கு இடமேற்படாது; வழிதப்பி இருளில் அகப்பட்டுத் திண்டாடித் தவிக்க மாட்டோம்.

இந்த ஆன்ம கோசத்தை மற்ற நான்கு கோசங்களிலிருந்தும் பிரித்து வைப்பது, மாயை என்ற ஒரு திரை. இத்திரை, அஞ்ஞானம், அறிவின்மை, மடமை, இருள், பேதபுத்தி, தடித்த அஹங்காரம், மட்டமான ஆசைகள், இவற்ருலே ஆகியது. மாயத் திரையின் இயல்பு, உண்மையை மறைத்துத் திரித்து, அதை உண்மைக்கு மாருனதாகத் தோன்றும்படி செய்வதாகும். இப்பிரபஞ்சம் நமக்கு அளிக்கும் தோற்றம் அதன் உண்மைத் தோற்றமல்ல. இந்த மாயைத்திரையைப் போக்குவதே மனிதனின் குறிக்கோள். இத்திரையின் வலுவும், திண்மையும், புத்தி, அஹம், இவற்றின் செயல்களைப் பொறுத்ததே. புத்தி, படைப்பின் உண்மையான ஒருமைப்பாட்டை யுணராமல், வெளிப்படையாகத் தோன்றும் வேறுபாடுகளையே உண்மையென நம்பி, அஹத்தை வளரச் செய்து, புலன் நுகர்ச்சி வாழ்க்கையில் ஜீவன் களிப்பெய்துமானுல், மாயத்திரை வலுவடைந்து, திண்ணமாகி, ஆன்ம ஒளியை முற்றிலும் தடுத்துவிடும். உண்மை சுகமும், விடுதலையும் எட்டாத்துலைக்கு ஏகிவிடும். அஹந்தை அடக்கினுலே ஆசை ஒழியும்; புத்தியும் ஒருமனப்பட்டு, ஆன்ம ஒளியை அதிகமாக அடையும். மாயத்திரை, சூரியனைக் கண்ட பனிபோல் மறைந்துவிடும். அதுவே விடுதலை. ஆன்மாவில் முழுதிடநம்பிக்கையும், அஹமாகிய ஆசையைச் சூன்யமாக்குவதும், புத்தியாலேயே ஏற்படவேண்டும்.

க்ஷர ஆன்மா, பிரகிருதி தொடர்பு கொண்டதால், தனிப்பட்ட ஒரே ஜீவனுடன் பிணைந்துகொண்டு, பரமான்ம நிலையினின்றும் பேதப்பட்டிருக்கிறது. பரமனே படைப்புக் கெல்லாம் ஆதாரம்; ஆனுல் க்ஷர ஆன்மா, ஒரே ஜீவனுக்கு மட்டும் ஆதாரமாக நிற்கிறது. பரமன் எல்லா ஜீவன்களுடனும் தொடர்பு கொண்டவர். இவ்வாறு, ஐந்து கோசங்களாலான, நாம், கேவலம் உடல் மாத்திரமே என்று பகர்வது, மாயையின் கூற்றே. வியாதி இன்னதென்று தெரிந்து கொள்ளாமல், சிகிச்சை செய்து குணமடைய முடியாது. நாம் ஆன்மாவே, நம்மை இழிவு படுத்துவது, நம் ஆசைகளும், அஹங்காரமுமே. இவைகளையடக்கினுல், நமது குறிக்கோளை அடைவது நிச்சயம். அஹமும், ஆசையும், குறையக் குறைய துன்பங்கள்

குறையும். காமமே நம் கீழ்இயற்கை இயல்பின் சின்னம்; அஹமே ஆசைக்கு அரசன். ஆசையைக் குறைப்பவனே உண்மைத் துறவி. துறவி பற்று அற்றவன். பரமனும் பற்று அற்றவர். துன்பங்களைத் தவிர்க்க வழி வேறில்லை; அதுவே, தேவைகளைக் குறைப்பதேயாம். ஆசையால் ஏற்படும் தேவைகள், உண்மையான உடல்த் தேவைகளல்ல. மனிதன் துன்பங்களை மிகுதியாக அனுபவித்தாலும், அவனுக்கு படிப்பினை உண்டாவதில்லை. ஒட்டகங்களுக்கு முட்செடிகளை உண்ண ஆசை அதிகம்; அவைகளை உண்ண உண்ண, வாயின் வழியாக ரத்தம் வெள்ளமாக வழிந்தோடினாலும், ஒட்டகம் முட்செடியைத் தின்பதை விடுவதில்லை. அசுர இயல்பே துன்பமளிக்கும் ஆசைகளில் பெருமை கொள்ளும். இவ்வியல்பை XVI-13,14,15-ல் வர்ணிக்கின்றார் கண்ணன். "இன்று இன்ன லாபமடைந்தேன். இன்ன மனோரதத்தை இனி எய்துவேன். இதையுடையேன்; இன்ன பொருளை இனிப் பெருவேன். நான் செல்வன்; இனப்பெருக்கமுடையோன். எனக்கு நிகர் யாருளர்? நான் ஆளுபவன்; இன்பத்தை அனுபவிப்பவன். நான் பலவான்; கொடையளிப்பேன், மகிழ்வேன்." சாதாரண மானிட இயல்பு இத்தன்மையதாகிக் கொண்டு வருவது, துன்பமளிக்கும் அனுபவமாகிவிட்டது. தனது தேவைகளைச் சூன்யமாக்கிக் கொள்பவனே, லட்சியத்துறவி. அஹமும், ஆசையும் அற்றவனுக்கு வேற்றுமையென்பதே கிடையாது. அவன் எதையும் பகைக்கான்; யாவற்றையும் நேசிப்பான். அவன் ஜனகரைப் போல், அரசனாகலாம்; அல்லது சுகரைப் போல் பால சந்நியாசியாகலாம். "நாம்" யார் என்ற வினாவுக்கு விடை விரிவாக அளித்துள்ளோம். நாம் இந்த உடலைக் கருவியாகப் படைத்துக் கொண்ட ஆன்மாவே, என்பதில் இனிச் சந்தேகத்திற்கு இடமில்லை.

## பிரபஞ்சமும், பரிணமவிதியும்

ஒரு உயிரின், உடல், உள, ஆன்ம பாகங்களைப்பற்றிய ஹிந்து சாத்திரங்களின் முடிவுகளை மேலே எடுத்துரைத்தோம். இங்கு, விஞ்ஞான ரீதியான விளக்கத்தையும் ஒப்பிட்டுக் காண்போம். எச்ஜீவனுக்கும் அகம், புறம் என இரு உலகங்கள் உள; ஆனால், விஞ்ஞானம், ஜடநிலையைச் சார்ந்து நிற்கும் புற உலகையே வகை செய்து, அளவிடடங்கிய, காலம், தேசம், நிமித்தங்களுக்குட்பட்ட இயற்கையையே ஆராய்ச்சி செய்து முடிவு கட்டுகிறது. படைப்பின் இயல்பை ஸ்தூல வழியாக மட்டும் கண்டு, ஆன்ம வழியை மறுக்கின்றது. ஸ்தூல பதார்த்தமும் (Matter), சக்தி (Force), இவை இரண்டுமே

பிரபஞ்சத்தின் மூலங்களென வாதிக்கின்றது. என்றாலும், அளவு கடந்த வேற்றுமைகள் காணும் இவ்வுலகப் பொருள்களுக்கும், ஜீவன்களுக்கும், இயற்கைச் சக்திகளுக்கும் பொதுவான மூலம் ஒன்றை யூகித்து, அதை யறியப்பாடு படுகின்றது. இவ்வாறு, ஜடப் பொருள்களுக்கெல்லாம் ஒருமைப்பாடான மூலம், ஆகாசம் (Ether) எனவும், சக்திகளாகிய, கவர்ச்சி, முறிவு, ஒட்டிணைவு, ஈர்ப்பாற்றல், ஒளி, ஒலி, காந்தம், மின்சாரம், இவை யாவற்றுக்குமான மூலம் பிராண சக்தி எனக் கண்டது. கட்புலனாகாத, மிக நுண்ணிய மேனியுடைய இவ்விரு மூலங்களும் ஒன்றையொன்று ஊடுருவியே, இப்பிரபஞ்சத்தை உண்டாக்கின பிராணன் என்பது ஒரு அதிர்வே — ஊசல் போலாடும் அலையாம். இவ்விரண்டின் கூட்டே நாம, ரூபமுள்ள, தோற்றத்துள்வரும் படைப்பு படைப்பென்பது, புறஞ்செலுத்தும் வினை ; உள்ளடங்கியவற்றை வெளிப்படுத்தும் கூற்று. நமது உடல்களும், இவ்வுலகில் மற்றும் தோற்றமளிக்கும் பொருள்களும், தங்கள் தடித்த, நுட்பமற்ற தன்மையால், புலன்களுக்குக்கிட்டும் இயல்பையடைந்தன. ஆனால், நம் மனமும், அதைச் சார்ந்த புத்தி, அஹம் போன்றவை, கட்புலனாகாத, மிக நுண்ணிய மேனியால், சூக்கும உடலெனப்பட்டன.

மனம் என்பது சூக்கும உடலிலுள்ள உறுப்புக்களின் பொதுப் பெயர். தோற்றமளிக்கும் ஐம்புல வெளியுறுப்புக்கள், மனத்தின் வாயில்கள். இவ்வைந்து புறக் கருவிகளுக்கும், ஐந்து உட்கருவிகள் அல்லது இந்திரியங்கள் உள. இவைகளுக்கு, நம் மூளையில் வெவ் வேறு தனிப்பட்ட இடம் உண்டு. ஆனாலும்,மூளை மனத்தைச் சார்ந்த தல்ல, ஜட உடலையே, ஒட்டிய பாகமாம். உள் இந்திரியங்கள், சித்தம், புத்தி, அஹம், இவைகளே மனத்தின் முக்கியப் பிரிவுகள். சித்தத்தை ஒரு ஆழ்கடலுக்கு ஒப்பிடலாம். சித்தம் ஒரு பொழுதும் கொந்தளிப் படையாது இருக்க இயலாது. இக்கொந்தளிப்புக்குக் காரணம், வெளியுலகிலிருந்தும், அகஉலகிலிருந்தும், அது அடையும் அதிர்வு களே. இவ்வதிர்ச்சிகள், சித்தத்தில் எதிர்த்தாக்குதல்களை யுண்டாக் கியே, வெளியுலக, அகஉலகக் காட்சிகள் ஏற்படுகின்றன. சித்தத்தைத் தாக்குவது அதிர்வுகளே — பொருள்களல்ல. வெளியுலகின் உண்மைத் தன்மையை நம்மால் ஒரு பொழுதும் அறிய முடியாது ; நமக்கும் அதற்கும் நேரடித் தொடர்பில்லை. நம்மனம் படைத்தளிக்கும் உலகையே உண்மை என நம்பிச் செயல்படுகிறோம். வாழ்க்கை என்பது, நம்மனத்தின் படைப்பேயின்றி வேறல்ல. மனமே நம்வாழ்க்கைக்கு ஆதாரம். ஆன்மாவைப்பற்றிய கருத்துக்களும், நம் மனம் படைத்

தளிக்கும் படிவங்களே. உண்மை ஆன்ம நிலை, நம மனத்துக்குப் புறம்பானதே.

நம் உடல் ஜடப்பொருள்களாலானது. அது கணந்தோறும் வளர்ந்தும், தேய்ந்தும், மாறிக்கொண்டே வருகிறது. எவ்வாறு ஒரு ஜீவநதியின் நீர் நிலைமாறிக் கொண்டிருக்கின்றதோ, அவ்வாறே, நம் உடல்ப் பொருள்கள் மாற்றமடைகின்றன. என்றாலும், இந்த ஓய்வில்லாத மாற்றங்கள், நம் உடலை நமதென்று எண்ண முடியாமல் செய்துவிடவில்லை. இம் மாற்றங்களை நம் மனம் பொருட்படுத்தாது, ஒரே உடலென உணர்த்துகிறது. அதே போல், ஜீவன்களின் மனமும், தொடர்ச்சியான மாற்றத்தால் ஏற்படும் எண்ணங்களே. இவ்வாறு, உடல்களும், மனங்களும், மாற்றமே இயல்பாகக் கொண்டிருந்தும், நம் அனுபவங்களில் இம்மாற்றங்கள் குறுக்கிடாமல், நம்மைப்பற்றியோ, பிறபொருள்களைப்பற்றியோ, ஜீவன்களைப் பற்றியோ, நமக்குள்ள கருத்துக்களை நிலைகுலையாது, ஒருமைப்படுத்தி, நிற்கும்படி செய்வது யாது? நம் உடல் மன மாற்றங்களுக்கேற்ப, நம் கருத்துக்களும் ஸ்திரமற்றுப் போனால், நாம் எல்லோரும் பித்தர்களாகி, வாழ்க்கை நடத்த முடியாதுபோம். கோடானு கோடி மானிட ஜீவன்களின் கருத்துக்களில் ஒற்றுமை ஏற்படுவது எங்ஙனம் கைகூடுகிறது? இக் கருத்துக்கள் படியும் அடிப்படை எல்லா ஜீவன்களுக்கும் ஒன்றே யாதலால், ஒருமைப்பாடான அனுபவங்கள் ஏற்படுகின்றன. தவிர, இந்த ஒரே பாங்கான பொது அடிப்படை, தான் மாறுதலடையாது, நிரந்தரமான ஸ்திரநிலை படைத்ததாகவும், இருத்தல் வேண்டும். அடிப்படையும் மாறுபடும் தன்மைக்குட்பட்டதானால், அதில் படியும் காட்சிகளும், உருவங்களும், கருத்துக்களும், திண்ணமான ரூபம் பெறா. திரைப்படம் இடுவதில், காட்சிகள் படியும் வெள்ளித் திரையும் அசைவுற்றிருந்தால், சிதைவுபட்ட, உருவற்ற, அர்த்தமில்லாத் தோற்றங்களே உண்டாகும். ஆனால், நம் கருத்துக்கள், எண்ணங்கள், நினைவுகள், பாவங்கள் யாவற்றிலும், ஒருமைப்பாடு ஏற்படுவதின் காரணம், நமக்கு அடிப்படையானதும், நம்மைத் தரித்து நிற்கும் மூலம், ஒரு நிரந்தரமானது, அழியாதது மாறாதது, அசைவற்றது என்பது உறுதியாகின்றது. அதையே, ஆன்மா, பரமன், கடவுளென்கிறோம். இந்த அடிப்படை, உடலாகவோ, மனமாகவோ, வேறு ஜட, சூக்குமப் பொருளாகவோ இருக்க முடியாது. ஏன்? ஜடப்பொருள், உடல், மனம், யாவும் மாறுபாட்டால் அழிந்து போவதேயாம். ஆகையால், ஆன்மா அழிவற்றதாகவே இருத்தல் அவசியம்.

முக்குணங்களுக்குட்பட்ட உடல்களும், மனங்களுமே, உரு மாற்றமாகிய பரிணாம வளர்ச்சியடையும். பரிணாம சித்தாந்தம், விஞ்ஞானிகளாலும ஒப்புக்கொள்ளப்பட்டதானாலும், விஞ்ஞானம் கூறும் விளக்கம், பகுத்தறிவுக்கு முரண்பாடுள்ளதே. பரிணமக் கோட்பாட்டின் கருத்து என்னவென்றால், இவ்வுலகப் பொருள்கள், உடல்கள் யாவும் ஒரே மூலவஸ்துவாலாக்கப்பட்டவை என்பதுடன், உடல் மாற்றம் மூலமே, ஜீவன்கள் கீழ்ப்படியிலிருந்து மேல்படியடையக் கூடு மென்பதாம். ஜீவன்களில், மேலினம், கீழினம், என்பது அவைகளைத் தாங்கி அடிப்படையாக நிற்கும் ஆன்மத் திறனை வெளிக்காட்டும் தன்மையைத் தழுவியதாகும். இதை, மனிதனும் இதர உயிரினங் களும் என்ற தலைப்பில் விளக்கியுள்ளோம். பரிணம மாற்றத்திற்குக் காரணம், ஜீவன்களின் உள் அவாவாகிய பூர்ணத்தன்மையடையும் முயற்சியே. ஆனால், விஞ்ஞானம், ஆன்மாவை ஒப்புக்கொள்ளாததால், உருமாற்றங்களுக்கு அளிக்கும் முகாந்தரம் முற்றிலும் விநோதமான தாகும். ஜீவன்கள் தங்கள் உருவை மாற்றியமைத்துக்கொள்ளும் நிர்ப்பந்தம், வாழ்க்கைப் போராட்டத்தாலும், சூழ்நிலைகளாலும், அல்லது காரணமின்றியும் ஏற்படுவதாய் விஞ்ஞானிகள் வாதாடுகிறார்கள். அவர்கள் கூறும் வேறு சில கருத்துக்களும், பின் விளக்கப்படி, உண்மைக்கு முரண்பட்டதாகவே காண்கின்றன. கீழ்படியாகிய, ஒரு ஸெல் உயிரியிலிருந்து, பரிபூரண மகா புருஷ ஜீவன் வரையும், பரிணாம மாற்றம் மூலமே, முன்னேற்றமடைந்து வருவதான பொதுக் கொள்கையை யாவரும் ஒப்புக் கொண்டாலும், வேதாந்தத்தின் நிலையும், விஞ்ஞானத்தின் நிலையும் ஒன்றுக்கொன்று கடும் வேறு பாடுகள் உள்ளவை.

ஆன்மாவை மறுக்கும் விஞ்ஞானம், ஜீவனுக்கு நோக்கமோ, குறிக் கோளோ கிடையாதென்று சாதிக்கின்றது. விஞ்ஞானி டார்வின், உரு மாற்றத்தின் காரணததை திடீரெனச் சிறுகச் சிறுக ஏற்படும் சம்பவங்களே என மொழிந்தார். வேறு சிலர், சூழ்நிலையே உறுப்பு வேற்றுமைக்குக் காரண மென்றனர். ஒரு விஞ்ஞானியாவது, ஜீவனின் உள் அவாவைக் காரணமாகக் கூறவில்லை; மாறுதல்கள், வாழ்க்கைப் போரின் விளை வெனக் கருதினார்கள். உருமாற்றத்தில் உயர்ப்படி ஏற, ஏற, வாழும் திறனும் அதிகரிப்பதைக் காண்கின் றோம். பிற ஜீவன்களைப் போரில் வென்றும், அழித்தும், தான் வாழ்வதற்காகவே, பிரபஞ்சத்தில், பரிணாம முறை மூலம் உருமாற்ற மும், அதற்க் கேற்ப சக்திகளும், திறன்களும், புத்தியும், அவ்வப் போது ஏற்படுவதாக, விஞ்ஞானம் கூறுகிறது. விஞ்ஞான உலகில்,

பலவானுக்கே வாழ்வு; எளிமை அழிந்தே மடியவேண்டும். இன்றைய உலகை, இதேபாங்கில் விஞ்ஞானம் நடத்திச் செல்வதை, மானிட வர்க்கம் அநுபவித்து அல்லற்படுவது கண்கூடு.

வாழ்க்கைப்போரில் வெற்றி பெற்று ஜீவித்து, இனவிருத்திக்கு உதவிப் பின் மடிவதே, பரிணும மாற்றத்தின் நோக்க மென்பது, கீழின ஜீவன்களின் வாழ்க்கை யனுபவங்களிலிருந்து ஒருவாறு யூகிக்கலாமே அல்லாது, மானிட சமூக வளர்ச்சிக்கு இக்கோட்பாடு சிறிதளவேனும் பொருந்தா வென்பதற்குச் சான்றுகள் பல உள. புஜபலமே கீழினங்களில் பெருகிக்கொண்டு வருவதைக் காண்கிறோம். பருத்த உடலும், மிக்க ஆற்றல் படைத்த தோள் வலிமையுமே, விலங்கினங் களின் உயர்ப்படியில் தோன்றுகின்றன. இவற்ருல், அவ்வுயர் விலங்குகள், தங்கள் ஆதிக்கத்தை பிற (வன) ஜீவன்களின் மேல் செலுத்தி, வெற்றி பெற்று வாழ்க்கை நடத்தினுலும், அவ்விலங்கு களின் தொகை வளம் குன்றிக்கொண்டே வருகிறது. சிங்கம், புலி, யானை, மனிதக் குரங்குகள், இவைகளின் பெருக்கம் குறைவே! ஆனுல், உயிரினங்களில் உச்சியை அடைந்த மானிடன், தோள் வலிமையையா படைத்துக் கொண்டான்? வாழ்க்கைப் போருக்கு உதவியாக, மனிதனுக்கு மானைப்போல், முயலைப்போல் ஓடும் திறனளிக்கும் கால்களுண்டா? நாயைப்போல், எறும்பைப்போல் மோப்ப ஆற்ற லுண்டா? யானையைப்போல், காண்டா மிருகத்தைப்போல் பருத்த உடலுண்டா? சிங்கத்தைப்போல், புலியைப்போல் தோள் வலிமை யுண்டா? கிடையாதே. விலங்குகளுக்கில்லாது, மனிதன் தனக் கெனப் படைத்துக் கொண்டது யாது? ஆன்ம ஒளி பெற்ற அறிவும், தியாகமும், அன்பும் போன்ற தர்மசீலங்களே. இவை செயல்பட உதவியாக ஏற்பட்டவையே அவனது பரந்த முதிர்ந்த மனமும், கனிந்த உள்ளமும், ஆழ்ந்த சிந்தனையும், பேச்சும், மொழி யும், எழுத்துமாம். கீழினங்களடைந்த மிருக பலத்தை மனிதன் புறக் கணித்த காரணத்தாலேயே, அவன் வாழ்க்கைப் போருக்கு அடிமைப் பட்டவனல்ல என்பது உறுதிப்படுகிறது. எத்துறையிலும் விலங்கு களுக்குள்ள வலிமைகள், மனிதனிடத்தில் குன்றியே நிற்பதால், வாழ்க்கையைப் போராடியே நடத்தல் மனிதப் படைப்பின் நோக்க மல்ல என்பது தெளிவு.

உடலை யொட்டிய திறன்களே பரிணும முறையில் மரபுரிமையாகப் பெற இயலும். இவ்விதி செயல்படுவதை விலங்கினங்களில் எளிதில்

காணலாம். ஆனால், ஆன்ம வளர்ச்சியால் ஏற்படும் சிலங்கள், இவ்வாறு மரபுத் தொடர் மூலம் அடைய முடியாது. அவ்வியல்பு கள், ஒவ்வொரு தனி ஜீவனும், தனக்காகத் தானே தன் வினை களாலும், எண்ணங்களாலும் படைத்துக் கொள்ளவேண்டும். பரிணாம முறை இங்கு செயல்படாது. மானிட வர்க்கத்தின் உடற் கூறுகளே ஓரளவு மரபுரிமைப்பேறாக அடைந்து, பெருவாரியான, இதர மனிதப் பண்புகள், ஆன்ம வலிவாலேயே ஏற்படுபவையாம். மனித இனத்தைச் சிறப்பிப்பது, தேவ — அசுர இயல்புகளே இங்கு பசுவின் வயிற்றில் புலியுண்டாகலாம்; புலிக்குப் பசு மகவாக ஏற் படலாம். ஹிரண்யன், பிரஹ்லாதன், இதற்குச் சான்றுகளாவார் கள். தீர்க்கதரிசிகளும், அசுரர்களும் உண்டாகும் இனம் மானிட வர்க்கம். பரிணாம உருமாற்றம், வாழ்க்கைப் போரின் விளைவே என்ற விஞ் ஞானத்தின் நிலை, மனிதனைச் சார்ந்தமட்டில் முற்றிலும் உண்மை யாகாது. மனிதன், உயர்ப்பண்புகளை யெல்லாம் அழித்துக் கொண்டு, விலங்கின சுபாவங்களையே வளர்த்துச் செயல்பட்டாலே, வாழ்க்கைப் போர் அச்சமூகத்தில் ஏற்பட இடமுண்டு. இன்று வாழ்க்கைப் போர் மானிடனை வாட்டுகிற தென்றால், மானிடன் தன் மனிதப் பண்புகளை இழந்தே செயல்படுகிறானென்பது உறுதி யாகிறது.

பரிணாம உருமாற்றம், சூழ்நிலைக் கேற்ப, வாழ்க்கைப் போராட் டத்தால் ஏற்படும் சம்பவமாயிருந்தால், உலகம் ஏற்பட்டு பல்கோடி வருடங்களாயும், ஜீவன்கள் தங்கள் சூழ்நிலைக்குத் தகுந்த மாறுதல் களை, இனியுமா அடையாதிருக்கின்றன? விஞ்ஞானத்தின், வாதம் விதண்டாவாதமே. மிகவும் தாழ்ந்தபடியில் நிற்கும் உயிரினங்களும் கூட, தங்கள் வாழ்க்கையைச் செவ்வனே நடாத்தி, வாழ்ந்து, தங்கள் இனமழியாது காத்துக் கொள்கின்றன. இதனால், உருமாற்றம் ஏற்படுவது, வாழ்க்கைப் போரின் தூண்டுதலல்ல வென்பது புலனாகின்றது. ஜீவன் படிப்படியாகப் பரிணாம முறையின் மூலம் முன்னேற்ற மடைவது உண்மை. ஆனால், இவ்வுரு மாற்றத்தில் பெரும்பங்கு கொள்வது ஆன்ம ஒளியடையும் புத்தியே. அறிவின் முன்னேற்றமே, ஆன்ம முன்னேற்றமாகிறது. ஆன்மா ஜடமுமல்ல, உடலுமல்ல; ஆனால் அது உடலை யுண்டு பண்ணி, காக்கும், அழிக்கும் நியதி. அது சக்தியு மல்ல; ஆனால் அது சக்தியளிக்கும் ஊற்று. ஆன்மா மனமுமல்ல, எண்ணமுமல்ல; அது எண்ணங்களின் வற்றாக் களஞ்சியம்; சுய ஒளியற்ற உடல், மனம், புத்தி இவை யாவும் ஆன்மாவின் ஒளி பெற்றே செயல்படுகின்றன. புத்தியே ஆன்ம

ஒளியின் சாளரம். அதன் மூலமே, ஜீவன்கள் ஆன்ம ஒளி பெற்றுப் பின் விடுதலேயும் அடைகின்றன.

இப்பிரபஞ்சம் நம்மை பிரமிக்கச் செய்கின்றது. அதற்கு ஆரம்பமோ, முடிவோ உண்டா? அதற்குக் காரணம் யாது? விஞ்ஞானமும் இவ்வினுக்களுக்குப் பலவிதமான விடைகள் அளிக்கின்றது; அவை யாவும் தற்காலிகமாக ஏற்கப்படும் கோட்பாடுகளே. ஆனால், ஹிந்து வேதங்கள் மொழிவது யாதெனில், இப்பிரபஞ்சம் தோன்றியும், பின் மறைந்தும், மறுபடியும் தோன்றுவதுமான மாறி மாறி வரும் நிலேகளேயுடையது. உதாரணமாக ஒரு பெரிய மரத்தின் வாழ்வை எடுத்துக்கொள்வோம். அம்மரம், ஒரு சிறிய விதையினின்றும் தோன்றி, வளர்ந்து பெரிதாகி, பின் தளர்ந்து, பல விதைகளே யளித்து, மண்ணோடு மண்ணுக மறைந்து விடுகிறது. வித்திலிருந்து உண்டாகிய மரம், மறுபடியும் வித்துக்குள் அடங்கித் தன் இனவிருத்தியைக் காக்கின்றது. அம்மரம் எதினின்றும் ஆரம்பமாயிற்ருே அதிலேயே போய் முடிவடைகிறது. இப்புவியிலுள்ள யாவும், எதில் துவங்குகின்றனவோ, அதிலேயே, முடிவும் அடைகின்றன. மனிதனும், விலங்குகளும், ஏன் மலேகளும் கூட, இதே ரீதியில், எந்நிலேயிலிருந்து உண்டாகின்றனவோ, அதே நிலேயிலே முடிவும் பெறுகின்றன. தாயின் கருவில் உற்பத்தியாகும் ஜீவன்கள் புதிய கருவில் முடிவடைகின்றன. மலேகளும், காற்று, உஷ்ணம், மழை இவற்ருல் கரைந்து, மண்ணும் மணலுமாகி, கடலில் கலந்து குவிந்து, இறுகிக் கடினமாகி, மறுபடியும் பாறைகளாகி, மலேகளாகின்றன. இயற்கையின் நியதி இதுவே. எப்படி மரமானது வித்துள் தோன்ரு நிலேயில் தங்கி, மரமாகத் தோன்றும் நிலேயடைந்து, மறுபடியும், வித்துள் தோன்ரு நிலேயை எய்தி முடிவடைகிறதோ, அதேபோல், பிரபஞ்சத்தின் கண் யாவும் தோன்ரு நிலேயிலிருந்து தோற்றத்தை யடைந்து, மறுபடியும் தோன்ரு நிலேயை எய்தும். இச்சுழல் வட்ட நிகழ்ச்சிக்கு ஆரம்பமோ முடிவோ இல்லே.

படைப்பில் தோற்றத்துள் வரும் எப்பொருளின் அல்லது ஜீவனின்; ஆரம்பமும், முடிவும் ஒன்றே என்பதை விளக்கினேம். இந்தக் கண் கூடான உண்மையை நாம் கவனத்தில் கொள்வதில்லே. இதினின்றும் நாம் முடிவுகட்டக்கூடியது யாதெனில், பருத்துத் தடித்துத் தோன்றும் நிலேயை அடைந்த பொருள்களுக்குக் காரணமாய் நிற்பது, அவற்றின் உயர் தூய்மை நயமுடைய நுண் துகளான நிலேயே. தடித்துத் தோன்றும் நிலேயானது, வினேவாகவும், நுண்நய, தோன்ரு

**நிலை அதற்குக் காரணமெனப் புலனாகிறது.** இப்பொழுது, நாம் அழிவு, என்று வீண் துயர்ப்படும் மாறுதலின் உண்மை நமக்குத் தெளிவாகும். அழிவு என்பது தடித்த பொருள் தோன்றும் நிலையினின்றும், நுண்ணிய தோன்றா நிலையை அடைவதாம். தவிர, **விளைவும், அதன் காரணமும் ஒன்றே** என்பதும் தெளிவாகின்றது; என்றாலும், இவைகளின் வடிவங்களில் ஏற்படும் வேறுபாடுகள், நம்மைச் சந்தேகவாதிகளாக்குகின்றன. உதாரணமாக, தண்ணீர், பிராண-ஜல வாயுக்களால் உண்டாக்கப் படுகிறது; அதாவது அவ்விரு வாயுக்களின் விளைவு தண்ணீர். நீருக்குக் காரணம் அவ்விரு வாயுக்களே. தங்கள் வெளிவடிவங்களின் கடும் வேறுபாட்டால், இவை சம்பந்தம் அற்றதுபோல் காணுகின்றன. **விளைவு என்பது காரணத்தின் தடித்த தோன்றும் நிலை.** நாம் வசிக்கும் பிரபஞ்சம், தடித்த தோன்றும் நிலையிலிருப்பதால், அது ஒரு விளைவேயாம். அது அழியும் பொழுது, அதற்கு காரணமான நுண்ணிய தோன்றா நிலையை அடைந்து மறைவாகிவிடும். என்றாலும், மூலப்பொருள்களுக்கு அழிவு கிடையாது. அவை நுண்ணிய தூய நிலையில் தோன்றாது நின்று, புதிய பிரபஞ்சத்தைத் தோற்றுவிக்கும் காரணமாகும். இவ்வாறு, **ஒவ்வொரு தோற்றத்திற்கு முன், ஒரு தோன்றா உள்ளடக்கிய நிலை ஏற்படுவது தெளிவாகிறது.** ஒவ்வொரு விரிவுறுதலுக்கு முன்னம், ஒரு உள்ளடக்கிய பருவம் அவசியமாகிறது. உட்கொண்டு அடங்கிநிற்காது யாதொன்றும் வெளித் தோன்றாது. சூன்யத்தினின்றும் சூன்யமே, அதாவது, யாதொன்றும் வெளியாக முடியாது. இப்பிரபஞ்சமும் அதனுள் தோன்றும் யாவும், தோன்றா உள்ளடக்கிய நிலையிலே நின்று, பின்னர் தோற்றத்திற்கு வருகின்றன. இச்சுழல் வட்டம் முடிவில்லாமல் மாறி மாறி நிகழ்கிறது.

பரிணாம விதி கூறுவது போல், **பிரபஞ்சத்தின் ஒவ்வொரு பொருளும் ஜீவனும், படைப்பின் ஒரு கண்ணியாம்.** படைப்பு என்பது ஒரு தொடர் கோவை. அதில் ஒவ்வொன்றும், சங்கிலியில் கண்ணிகள் கோர்த்து இருப்பதுபோல் இணைக்கப் பட்டிருக்கின்றது. ஒரு கண்ணி, அதன் முந்திய கண்ணியின் விளைவாகவும், பின் கண்ணியின் காரணமாகவும் அமைகிறது. இதனால் **தோற்றமளிக்கும் யாவும் ஒரேபொருள்** என்ற ஒருமைப்பாடு ஏற்படுகிறது. பொருள்களானாலும், ஜீவன்களானாலும், முன்னது, பின்னதின் காரணமாம்; பின்னது, முன்னதின் விளைவேயாம். இச்சங்கிலித் தொடராகிய **படைப்பின் முதல் கண்ணியே கடவுளெனப்படுகிறது.** அக்கண்ணிக்குக் காரணமான வேறுகண்ணி கிடையாது. அதுவே இச்சங்கிலிக்கு ஆரம்பமும், முடி

வுமாம். அதையுள்ளடக்கி, பின் வெளிப்படுத்தும் பொருள் இல்லை. அதுவே யாவற்றையும், தன்னுள்ளடக்கி, வெளித் தோற்றுவிக்கின்ற மூலகாரணம். **அதிலேயே யாவும் முடிவும் அடைகின்றன;** ஏனென்றால், ஆரம்பமும் முடிவும் ஒன்றே என்பதை முன் விளக்கி இருக்கிறோம். இப்பிரபஞ்சத்தின் ஆரம்பமும் முடிவும் கடவுளே என்பதில் இனி ஐயம் ஏற்படத் தேவையில்லை. தவிர, ஒரே சங்கிலித் தொடரிலுள்ள கண்ணிகள் யாவும், ஒரே தன்மையுடைத்ததாகும்; மாறுபாடுகளும், வேற்றுமைகளும் வெளித் தோற்றங்களே; உட்கருவில் யாவும் ஒன்றே என்பது தெளிவு. ஆதிகாரணமாயுள்ள பரம்பொருளிலே துவங்கி, பரம்பொருளிலே முடிவாகக் கொண்டது இப்பிரபஞ்சம். இடைக்கண்ணிகளாகிய எல்லாப் பொருள்களும், ஜீவன்களும், பரம்பொருளின் வெவ்வேறு தோற்றங்களேயாம். வேதாந்தம் பறைசாற்றும் உண்மை இது வே.

**தோன்றும் உலகம், ஜீவனின் ஒரேதொடர்.** ஓரணு உயிரிலிருந்து, பரிபூர்ண மகான்வரை, இணைப்பு முறியாது நிற்பதால், இந்த ஓரணு உயிரிலும், பரிபூர்ண மகா ஜீவன் உள்ளடக்கம் பெற்றிருத்தல் அவசியமாகிறது. இன்றேல், இச்சங்கிலித் தொடரில் அதற்கு இடமேற்படாது. ஓரணு உயிரில் வெளித்தோன்றாது, மறைவாக உள்ளடங்கி நிற்கும், இந்த வேண்டும்போது செயல்படும் ஆன்ம ஆற்றல்வளம், நமக்குக் கட் புலனாகாதிருப்பதால், அதை மறுப்பது தவறு. இவ்வுயிர்ச் சங்கிலித் தொடரில் எக்கண்ணியிலாயினும், அது உள்ளடங்கப் பெறாது போனால், கண்ணிகள் ஒன்றுக்கொன்று காரணமாகவும் விளைவாகவும் நிகழாது; அவை உட் பொருளில் ஒன்றுக்கொன்று ஒத்திருக்க முடியாது. **வெளித்தோன்றப் போகும் யாவும், மறைபட்ட தோன்றா நிலையில் உள்ளடங்கி, ஒவ்வொரு கண்ணியிலும் நின்றாலே, பின்னர் எக்கண்ணியிலும் அவை வெளித்தோன்றக் கூடும்.** பரமனே யாவற்றிலும் உள்ளடங்கி நின்று, வெளித் தோன்றவும் செய்கிறார். **அவரே யாவற்றிலும் மறைவிடமாக நிற்கும் ஆற்றல் வளம்.** அன்னாரை, புத்தி என்றும், அறிவென்றும் கூறுவது மரபு. **அறிவே, அண்ட அமைப்புக்கு இன்றியமையாத ஆன்ம அடிப்படை; இந்த உலகளாவிய ஆற்றலையே கடவுளென்கிறோம்.** கடவுள் அறிவைப் பெற்றிருக்கவில்லை, அவரே அறிவாம். இந்த அறிவாகிய கடவுளே, உயிர்ச் சங்கிலித் தொடரை ஏற்படுத்தித் தன்னைச் சிறுகச் சிறுகப் படிப்படியாகத் தோற்றத்திற்கு கொண்டுவந்து, கடைநிலையில் உத்தம மானிடவடிவம் தரித்து, அப்பால், தன்னிலே தானே ஐக்கியமாகின்றது. விஞ்ஞானம் அறிவை, மேலின உயிர்களே, திடீரென

வெளியிலிருந்து அடைவதாகக் கூறுவது உண்மையுமல்ல; அது, விஞ்ஞானத்தின் தத்துவங்களுக்கே முரண்பட்டதாம்.

நம் மனத்தை நம் ஜட உடல் தடுத்து நிற்கின்றது. இத்தடையைக்கிழித்து வெளியேற நம் மனம் முயற்சிக்கிறது. வெளியுலகை அலசிப்பார்த்த மனம், உள் உலகையும் ஆராயத் தொடங்குகிறது. எங்கும் அழிவும், உற்பத்தியும், நிலையற்ற நிகழ்ச்சிகளாக ஏற்படுவதையறிந்து, இக்காட்சிக்கு நிலையான அடிப்படை கிடையாதா, அது யாது? என்று விடைகாணத் தவிக்கின்றது. விடையையும் சில ஜீவன்கள் காண்கின்றன நம் உடலுக்கு சுயமாக ஒளி இல்லை. பிண நிலை இதை ஊர்ஜிதப் படுத்துகிறது. அதேபோல், நம் மனதுக்கும் சுயமாக ஒளி கிடையாது. நமது உடல் வலுவடைவதும், மெலிவதும் போல், நம் மனமும் மாறும் தன்மையது. இவ்வாறான மாற்றங்களாலேயே, இவை சுய ஒளியுடையவைகளல்ல என்பது நிரூபிக்கப் படுகின்றது. என்றாலும், உயிருள்ள உடலும், மனமும் ஒளிபெற்று செயல்படுகின்றன. இவ்வொளியை அளிப்பது எதுவோ அது சுய ஒளியுடையததாக இருத்தல் அவசியம். அதுவே, ஆன்மா, கடவுள், பரம் பொருள் எனப் படுகிறது. அது காரணமற்றது, ஆதி, அந்தம் இல்லாதது, அழிவில்லாதது, மாறுதலற்றது, காலம், தேசம், நிமித்தம், இவற்றைக் கடந்து நிற்பதாம். இவ்வாறான இயல்புகளில்லாது, அது முல காரணமாக முடியாது. பிரபஞ்சம் என்பது, மனிதனை மட்டும் கொண்டதல்ல; மற்றும் கணக்கற்ற ஜீவன்களும், பொருள்களும் அதில் உண்டு. பிரபஞ்சத்தின் மையத்தை (கடவுளை) நாடும் எண்ணிலடங்காத ஆரை (radius) களில், ஒன்றே மனித இனம். மனிதன் மையத்தை நோக்கித் தன் மனத்தை ஒருமுகப் படுத்தி ஆராய்ச்சி நடத்தினால், படைப்பின் ஒப்பற்ற ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் காண முடியும்; அல்லாது, மையத்திற்குப் புறம் காட்டி, வெளித் தோன்றும் வேற்றுமைகளில் ஈடுபட்டு, வெளி நோக்காகிய புற வாழ்க்கையிலே நாட்டங் கொண்டால், ஒருமைப்பாட்டினின்றும் வெகு தூரம் விலகி விடுவான்; உண்மையை அறிய இயலாது போம். இதுவே இன்று விஞ்ஞானம் ஏற்படுத்தும் அவல நிலை. ஒற்றுமையை உணர விடாது, வேற்றுமைகளை ஓங்கச் செய்வது, உலோகாயத விஞ்ஞான அறிவே.

கடவுளைக் கண்டதுண்டா என்ற வினாவுக்கு, உலகைக் கண்டோர் உண்டா என்பதே விடையாகும். உண்மை உலகை உருக்கொண்ட எந்த ஜீவனும் அறிய இயலாது. அவரவர் மனத்தால்

சமைக்கப்பட்ட உலகையே அவரவர் அறிவார். கடவுள் ஒருவர் உண்டானால், அவர் நம் உள்ளத்திலே இருக்கிறார் உலகப் பொருள்களும் ஜீவன்களும் கடவுளின் கோயில்களே. அன்னாரைத் தேடி யலைவது கையினுள் இருக்கும் வெண்ணெய்யை மறந்து, நெய்க் கலைவது போலாகும். தீர்க்கதரிசிகள் தங்கள் மனத்தைக் கட்டி, அலசிப் பார்த்துக் கண்டது போல், நாமும் காணலாம். அவர்கள் உண் முகமாகத் தங்கள் உள்ளத்தை விண்டு கண்டது, இவ்வுலக இன்ப துன்பங்களைக் கடந்த நிலையே. அந்நிலையின் அடிப்படையே கடவுள். அவர் எங்கும் வியாபித்து நிற்பவர். உத்தமனிடத்திலும், சுயவனிடத்திலும் ஒன்று போல் வித்திபாசமின்றி வசிப்பவர். அன்னாரை, நம்முடைய, தர்ம, அல்லது, அசுரச் செயல்கள் பாதிக்கா; என்றாலும், தீய வினைகள், அன்னாரை இருட் திரையிட்டு மேலும் மறைத்து விடுகின்றன. நல் வினைகள் ஆற்றும் பரிசுத்த ஜீவனுக்கு, ஆன்மக காட்சியுண்டாகும்; மாய இருட் திரை அகன்று விடும். பூமியினுள், மண், கல் போன்ற மாசுக்களால் மூடப்பெற்று, தன் ஒளியை வெளிக் காட்டாது நிற்கும் வைரம், மற்றும் நவரத்தினங்கள் போல் ஆன்ம அறிவாகிய ஒளி மறைவிடமாகவே ஜீவன்களுள்ளும், பொருள்களிலும் நிற்கின்றது. அதை வெளியாக்க, ஜீவன் தன் மனத்தின் கண் மாசுகள் போல் படியும், விருப்பு, வெறுப்பு ஆசைகள், சுயநல எண்ணங்கள் இவைகளைப் போக்கி, சத்தியம், அன்பு, சம நோக்காகிய நற்பண்புகளால், மனத்தை நீராட்டிப் பளிங்கு போல் சுத்தி செய்ய வேண்டும். அந்நிலையில், ஆன்ம ஒளியும் திறனும் மனத்திற்கும், புத்திக்கும் அமோகமாகக் கிட்டும். இத்திறனின் முன்னேற்றமே, பரிணும முன்னேற்ற நியதியாம்.

இப்பிரபஞ்சத்தில், முன் நிகழ்ந்ததின் விளைவுகளே வருங்கால சம்பவங்களாகின்றன. அவைகளே திரும்பத் திரும்பச் சுழல் வட்டமாக ஏற்படுகின்றன. எதிர் காலமானது, நிகழ் காலத்தின் தொடர்ச்சியே. பரிணும உருமாற்றத்தை விளக்க, திருவிழாக் காலங்களில் தொட்டில் இராட்டின மென்ற விளையாட்டுக் கருவியை உதாரணமாகக் கொள்ளலாம். ஒவ்வொரு தொட்டிலிலும், ஒரு சிலர் அமர்கிறார்கள்; இவ்வாறே, எல்லாத் தொட்டில்களிலும். இக் கருவி சுழன்று, தாழ்ந்திருந்த தொட்டில் உயர்ந்தும், உச்ச நிலையை யடைந்து, பின்னர் வட்டத்தை முடித்துக் கொண்டு, சவாரி செய்த ஜீவன்கள் வெளியேறுகின்றன. புதிய ஜீவன்கள் அத்தொட்டிலில் புகுந்து, இதே நிகழ்ச்சிகளுக்குள்ளாகின்றன. இயற்கையும் இவ்வாறான சுழலும் மிகப் பெரிய இராட்டினமே. அதில் கோடானு கோடி ஜீவன்கள் — ஒவ்

வொரு இனமும் ஒரு தொட்டிலில் அமர்ந்து, உச்சநிலையை யடைந்து மறைந்து போகின்றன. ஒவ்வொரு தொட்டிலையும் ஒரு இனத்தின் உடல்களாகப் பாவித்தால், ஆன்மாக்கள், இவ்வுருவங்களில் சில காலம் சவாரி செய்து, சுழல் வட்டம் முடிவடைந்ததும் வெளியேறி விடுகின்றன. இவ்வாறு முடிவில்லாது இயற்கையின் களியாட்டம் நடந்தேறுகிறது. ஜீவன்கள், பரிணாம முறையில், ஆன்மாவின் உதவியால், ஆன்ம முன்னேற்றங்காணவே, இயற்கைச் சக்கரத்தில், சிக்கி, உரு மாற்றங்கள் அடைந்து, விடுதலைக்கு ஏதுகின்றன. இயற்கையின் சிக்கலில் சிக்குவது, உடலுருக் கொண்ட ஜீவனே, ஆன்மாவல்ல.

பரிணாம முறையை விளக்கும் பொழுது, இப்பிரபஞ்சத்திலுள்ள ஒவ்வொரு பொருளும், ஜீவனும், ஒரே சங்கிலித் தொடரில் அமைந்தவை யென்றும், முந்திய கண்ணி பிந்தியதின் காரண மென்றும், பிந்தியது முந்தியதின் விளைவாகு மென்பதோடு, ஒன்றுக் கொன்று நெருங்கிய உறவு கொண்டவை என்றும், இச்சங்கிலித் தொடரின் ஆரம்பமும், முடிவும், இரண்டுமே, பரம் பொருளெனவும் கண்டோம். ஆகையால், இடையிலமைந்துள்ள யாவும், கடவுளின் வடிவங்களே என்றும் விளக்கினோம். கடவுளென்பது ஒரு கருத்துப் படிவம். எது போலென்றால், பாரதம் என்னும் சொல், அத்தேசத்திலுள்ள பொருள்கள் ஜீவன்கள் யாவற்றையும் உள்ளடக்கிச் சுட்டும் பெயர்ச் சொல். அதற்கெனத் தனி உருவம் இல்லை, என்றாலும் அக்கருத்து, சுட்டுவது, உருவம் படைத்த ஓரின மக்களையும், பொருள்களையுமே. கடவுள் என்ற கருத்து, இப்பிரபபஞ்சத்தைச் சுட்டுவதோடு, வேறு சுபாவங்களையும் அடக்கியதாகும். அது அளவிலடங்காதது, மாறாதது, அழியாதது, காரண மற்றது, பிறவாதது, இறவாதது, ஆதியோ அந்தமோ, குணங்களோ இல்லாதது, புலன்களுக் கப்பாற்பட்டது. இவ்வாறான கருத்துப் படிவங்கள், பிரபஞ்சத்தைப் பற்றிய நம் புலனனுபவங்களின் நேர் எதிர் மறைகளே. தோன்றாப் பரம் பொருளும், அது தோற்ற மளிக்கும் படைப்புப் பொருள்களும் ஒன்றுக் கொன்று நேர் எதிரிடை இயல்புடையதாக ஏற்படுகிறது. இவையே, உருவெடுத்ததால் உண்டாகும் பெருங் குறைபாடுகள்; அக்குறை நிலையைக் கடந்து பூர்ண நிலையை எய்துவதே ஜீவனின் குறிக்கோள்.

இப்புவி வாழ்க்கையே நமது முடிவென்றும், இவ்வாழ்க்கைக்கு முன்னோ, பின்னோ, கிடையாதென்றும், ஐம்புல அனுபவங்களே பிறவியின் குறிக்கோளென்று தீர்மானிப்பதுடன், இதர ஜீவன்

களுக்கும், பொருள்களுக்கும், தனக்கும் (தான் ஏற்படுத்திக் கொள்வதைத் தவிர) யாதொரு தொடர்போ, இணைப்போ, கிடையாதென்ற விரோத மனப்பான்மை கொண்டு, சுயநல நோக்கில் வினைகளை வகுத்துச் செயல் பட்டால், வாழ்க்கை துயரையே அளிப்பது உறுதி. இன்று பெரும்பாலோர் இப்புவி வாழ்வைத் துன்ப மயமாகக் காணுவது, அவர்கள் படைப்பின் உண்மையைப் புரிந்து கொள்ளாது, விபரீதமாகச் செயல்படுவதாலேயே. சகோதரத்வம், சமநோக்கு அன்பு, காருண்யம், சத்தியம் இவைகளையே கடவுளின் கருத்துப் படிவமாகக் கொண்டு வாழ்க்கை நடத்துவது, இன்பத்தின் வழியே நம்மை இட்டுச் செல்லும். உலகைத் துறப்பதென்பது, இல்லறத்தை வெறுத்து சந்நியாசியாவதல்ல. அதன் உட்கருத்து இதுவே:— பொய்யைத் துறந்து, மெய்யைக் கடைப்பிடி; தன்னலத்தை யகற்றி, தியாகவழி நட; பரமனை நாடி மரணத்தை வெல்; ஆசையைத் துறந்து அன்பை வளர். ஆசைகளுள் பொதிந்து கிடக்கும் பொல்லாங்கு, கொடுமை, பொறாமையாகிய பேய்த்தன இயல்புகளைக் களையவேண்டும். ஆசையின்றேல் உயிர் வாழ்வில்லை. ஜீவன் மண்ணல்ல, மரம், மட்டையல்ல, ஆசை அற்றுப்போக. பரமனே தன்னை, தர்மத்திற்கு முரண்படாத ஆசை என்று வர்ணித்துக் கொள்கிறார். (VII-11). படைக்கப்பட்ட யாவும் தனக்கே என்றும், அவற்றைத் தனதுடைமையாக்க எண்ணும் அவாவே தவிர்க்க வேண்டியவையாம். தன் தேவையைக் காட்டிலும், பிறர்தேவைக்கே முதன்மையளிக்கும் தியாகமனப்பான்மையை வளர்த்து நடப்பதே இன்ப வாழ்க்கை. நமது ஜீவனைக் காக்கவேண்டிய பொருட்தேவைகளை நம் பிறப்பாலேயே நாம் உரிமையாகப் பெற்றுள்ளோம். ஆனால், இத்தேவைக்குரிய பொருள்களை இன்றைய விஞ்ஞான உலகும், அதன் சமூக அமைப்பும், ஆட்சியும், நமக்கு எளிதில் கிடைக்கவொட்டாமல் தடை செய்கின்றன. இன்றைய சூழ்நிலை, வாழ்க்கைப் போரைக் கடுமையாக்கினாலும், தனிமனிதன், அவ்விடையூறுகளை வெல்ல வல்லமை பெற்றவன். அதில் தோல்விபடைவது அவன் குற்றமே. ஆன்ம தத்துவத்தில் முழுநம்பிக்கை ஏற்பட்டு, அதன்படி நடந்தால், ஆசைகள் ஒழியும், அன்பு வளரும், தேவைகள் குறைந்து, திருப்தி ஏற்படும்.

ஞானமின்மை, அஞ்ஞானம் என்பது, படைப்பின் ஆன்ம ஒருமைப்பாட்டையும் ஒற்றுமையையும் உணராது வாழ்க்கை நடத்தும் பாங்கே. அஞ்ஞானத்தின் அடிப்படையும், விஞ்ஞானத்தின் அடிப்படையும் ஒன்றே - அதாவது, படைப்பில் யாவற்றையும் இணைத்துக் காட்டாமல் பிரித்துக் காட்டுவதே: இதுவே, உலக இன்னல்களுக்

கெல்லாம் ஊற்று. இத்தவருன மனப்போக்கு ஒழிந்தாலே, உலக இடர்கள் பறந்துபோம். இவ்வேற்றுமையுணர்ச்சி, வெளித்தோற்ற மயக்கத்தாலானது. அது குறைபாடுள்ள நம்மனத்தின் கற்பனையே. இம்மாயை மனப்பான்மையை அகற்றவே மதங்கள் ஏற்பட்டன. ஒற்றுமையை போதிக்க ஏற்பட்ட உலக உயர் மதங்கள், தங்களுக்குள்ளேயே ஒற்றுமையின்றி கடும் முரண்பாடுகளை உண்டாக்கிக் கொண்டதேன்? அம் மதங்களும், உண்மையை முழுமையாகப், பூர்ணமாக உணராத காரணத்தாலேயே. பிற மதங்கள் வேற்றுமையை உண்டாக்கு கின்றன. வேதாந்தம் ஒன்றே யாவும் கடவுளே என்று முழங்கு கிறது. வேதாந்தம் — அதுவே ஹிந்து மதம் — பிற மதங்களைப் பழிக்காது, ஒப்புறவு காட்டும் மதமாம். எந்த உயர்மதமும், தர்ம வழியாகிய சத்தியம், அன்பு இவைகளை மறுக்கவில்லை. புத்தர் கடவுளை மறுத்ததாகக் கொள்ளும் கருத்து உண்மையல்ல. அம் மகான் மறுத்தது அதர்மச் சடங்குகளையே. அன்னர் காலத்தில், மதத்தின் பெயரால், அளவுகடந்த ஜீவ வதைகளும் மற்றும் காருண்யமற்ற வினைகளும் அவபக்தியின் விளைவாக நிகழ்ந்து கொண்டிருந்தன. அஞ்ஞானி ஜனங்கள், தவருகத் தெய்வம் என்று கொண்டாடி, கொடுமையை வளர்த்து வந்ததையே மறுத்தார். தங்கள் நாக்கையும், உருசியையும் கட்டுப்படுத்தாது விட்டு, வளர்க்க, தெய் வத்தைச்சாக்கு வைத்து, ஜீவவதை செய்து, பிணத்தை உண்ணும் வழக்கத்தைப் போலான, வஞ்சகம், சூது, ஏய்ப்பு, புரட்டு வேறு காணக்கிடைக்காது.

விஞ்ஞானம் இன்று வாழ்க்கையில் ஈடுபடுவது, நவநாகரீகத் தின் மூலமே. ஆகையால், நவநாகரீகத்தின் பிறப்பு, வளர்ப்பையும், பித்தலாட்டச் சூழ்ச்சிகளையும், போலி அனுகூலங்களையும் அம்பலப்படுத்துவது ஒரு சிலருக்கேனும் பயனளிக்கும். புற நாகரீகத்தில் மானிடன் மயங் கித் தவிக்கும் இக்காலத்தில், நாகரீகத்தின் உண்மைப் பொருளை விளக்குவது அவசியமாகிறது. நாகரீகம், இரு வகையானது. புற நாகரீகம், அக நாகரீகம் என இவ்விரண்டும், நெருங்கிய தொடர்பு கொண்டாலும், முற்றிலும் முரண்பட்ட பாங்குடையவை. புறவாழ் வையே முதன்மையாகக் கொண்டது புற நாகரீகம். இது ஒரு சமுதாயக் கட்டளை வாழ்க்கை முறை; பொருள் வளத்தாலும், நிலைத்த சமூக அமைதி, ஆட்சிகளாலும், நுண் கலைகள் வளர்ச்சி யாலும் உண்டாவது. ஆனல், மானிட வாழ்க்கைக்கு இது ஒரு அத்தி யாவசியத் தவிர்க்கமுடியாத தேவையல்ல. புற நாகரீகம், புறவாழ்க் கையை அழகுபடுத்தும் அணிகலம். இயற்கையழகற்ற ஒரு நங்கை,

நகைகள் அணிவதால் எவ்வாறு தன் குறைபாடுகளை உலகோர் கவனத்தைக் கவரச்செய்து கொள்வாளோ, அவ்வாறே அக நாகரீக மற்ற புற நாகரீகம் மனித இழிவை எடுத்துக்காட்டும், பின்னணித் தகடு போலாகும். வெளிப்பகட்டுக்கும், ஆடம்பர வாழ்க்கைக்கே உரிய புற நாகரீகம் அழியும் தன்மையது. உலகில் பல புற நாகரீகங்கள் தலையெடுத்துச் சிறிது காலம் நின்று, பின் அழிந்து போயின. நைல் பள்ளத்தாக்கு, சுமீரியா, பாபிலோன், அஸ்ஸீரியா, பாலஸ்தீனம், பாரசீகம், மெக்ஸிகோ, கார்த்தேஜ், ரோமாபுரி, கிரேக்க நாடு நாகரீகங்கள் ஒருகாலம் ஓங்கி வளர்ந்து, செயல்பட்ட சுவடுகளே இன்று புதைபொருள் ஆராய்ச்சியாளர் காணும் காட்சிகளாம்.

புறநாகரீகத்தின் அழிவு, இயற்கையாலும், செயற்கைக் காரணங்களாலும் ஏற்படலாம். உணவுப் பஞ்சம், கடும் நீடித்த வறட்சி, இனப்பெருக்கம், அராஜகம், இவைபோன்ற சம்பவங்களால் அது புறக்கணிக்கப்பட்டு, பின்னர் அழிந்தும் போம். செயற்கையாலேயே தொகுக்கப்பெற்ற சூழ்நிலையைக் கொண்ட புற நாகரீகம், ஸ்திரமற்றதாகவே இருக்கமுடியும்; அது நிலைத்து நிற்காது. மானிடனின் ஒழுங்கு, உரம், உயர் மனப்பண்புகள், நற்குண நற்செயல்கள், இவற்றை அடிப்படையாகக் கொள்ளாமல், வறட்டு அறிவையும், செயல் உரத்தையும் நாடி, இவற்றையே மிகைப்படுத்திப் போற்றும் நாகரீகமே புற நாகரீகம். அக நாகரீகமற்ற புற நாகரீகம், மனிதனைத் தன் கைப்பாவையாக்கி விடுகிறது.புற நாகரீகம், பொருள் வளம் செழித்த வாழ்க்கைக்குகந்த, புலன் இன்பஞ்சார்ந்த, செயற்கைப் படைப்புப் பண்டங்களால் ஆவதே. அதன் அடிப்படை சுயநலமும், அகந்தையுமே. "தான், தனது," என்ற மனப்பான்மையானது, பொதுவுடமைக்கான பொருள்களைத் தன் தனி உடமையாக்க முயன்று, தானும் வாழாது, பிறரையும் வாழவிடாத குறுகிய இயல்பையே ஊக்குவிக்கும்.

இப்புவியில் பிறக்கும் பொழுது புற உடமை யாதாகிலும் நமக்குண்டோ? இவ்வுலகை விட்டேகும் பொழுதும் எதையும் எடுத்துச் செல்ல இயலுமா? இல்லை. நமது உடலைக்கூட விட்டுவிட்டே போகிறோம்; இதனால், உலகப் பொருள்கள் யாதாயினும் சரி, அவைகள் பொது உடமையே ஆகுமல்லாது, தனி உடமை ஆகா. இதுவே, மரணத்தின் மூலம், உலகதர்மமாக நிகழ்வது. புற நாகரீகம், பொது உடமைப் பொருள்களையே படைப்பதிலும், ஈட்டுவதிலும், மனிதனை முழுநாட்டங் கொள்ளச் செய்து, அவன் நற்பண்புகளை முறியடித்து விடுகிறது. பொருள் நாட்டங் கொண்ட

ஜீவனிடத்தில் அருள் நாட்ட மேது? இருளே சூழும். மனிதன் மேம்பட, அன்பும், சத்தியமும், சமநோக்காகிய ஆன்ம போதமும், காரணமாகி நின்று, தங்கள் வளர்ச்சியின் மூலமே அவனைத் தெய்வமாக்குகின்றன. இதுவே அக நாகரீக மெனப்படுகிறது. இவ்வுயர்ப் பண்புகளின் மூலம், தனி மனிதனின் தன் உடமையாவது, அவன் நல்வினைகளும், நல் எண்ணங்களுமே. இந்நிலையில், மனிதனின் ஆன்ம அறிவு வளர்ந்து, அகம் குன்றிப் போம். இவைகளே நம் உண்மையான உடமைகள். மரணம் இவற்றை நம்மிடமிருந்து பறிமுதல் செய்ய இயலாது.

போலியல்லாத, மெய்யான மானிட வாழ்க்கை, புற உலகிலல்ல, அக உலகாகிய அவரவர் மனத்திலே திகழ்வதாம். ஜடப் பொருள்களாலான புற உலகம், நேரடியாக மனித வாழ்க்கையில் பங்கு கொள்ள இயலாது. பொருள்களின் கருத்துப் படிவமே, மனத்தில் விழுந்து, மனோபாவங்களாக ஏற்பட்டு, வாழ்க்கையை பாதிக்கின்றன வாழ்க்கையின் அனுபவங்க ளெல்லாம் மனோபாவங்களே. மனமின்றேல், அனுபவங்களில்லை, வாழ்க்கை இல்லை இந்த மன பாவங்கள், அளவைகளால், ஏற்றத் தாழ்வடைவதில்லை. ஒன்ருனாலும், பலவானாலும், பாவத்தின் தாக்குதல் (அதிர்வுகள்) ஒருங்கே உண்டாகிறது. பிச்சை யெடுத்துப் பிழைக்கும் ஜீவனும், குபேரச் சீமானும், உலக வாழ்க்கை நடத்த முடிவது இதனாலேதான். கூழுக்கு உப்பில்லை என்று தவிப்போனும், பாலுக்குச் சர்க்கரை வேண்டி ஏங்குவோனும் படும் அவதி ஒன்றேயாம். ஓரளவேயாம் மனிதனுக்கு மனிதன் பொருளுடமையில், அளவு கடந்த வேற்றுமையைப் படைக்கும் இயந்திரப் புற நாகரீகத்தில், எளியோனுக்கு இடமேது? என்ருலும், இப்புவியில், வறியோரே பெரும்பான்மையாவார்கள். பொருளின்மை, உண்மை வாழ்க்கையாகிய அக வாழ்க்கையைப் பாதிக்கா வென்பதற்கு வேறு சான்றும் வேண்டுமோ? ஒய்யாரமான ஆடம்பரப் பொருள்ப் பெருக்கம், நல் வாழ்க்கைக்கு இன்றியமையாததல்ல. அவைகளையே புற நாகரீகம் விஞ்ஞானத்தின் துணை கொண்டு பெருக்குவதால், எளியோனின் எதிரிகளே, அவைகள், எனப் புறக்கணிக்கப் படவேண்டும். எளியோனும் அடைவதற்கே இயந்திரப் பொருள்ப் பெருக்கம் என்ற பொருளியல் வாதம், பண வீக்கத்தாலும், ஜனப் பெருக்காலும் பயனற்று, செயல் படாது போகின்றன. நம் நாட்டின் இன்றைய அனுபவம் இதுவே.

மனிதனுக்கு இயற்கைத் தேவைகளாக ஏற்பட்டவை, பசியும், காலுணர்ச்சியுமே. ஆனல், செயற்கையால், புற நாகரீகத்தால் ஏற்

பட்டதே பொருள் மோகம். இயற்கைத் தேவைகளாலுண்டான தீப குணம், பேரவா ஒன்றே; ஆனால், நேர்மை யற்ற வஞ்சகமான ஏமாற்றும் நாட்டம், மனிதனுக்கு புற நாகரீகத்தின் நேர் விளைவாகிய சொத்துரிமையாலே உண்டாவதே. புற நாகரீகம் வளர, வளர நேர்மை குன்றி, நெறி கேடான வாழ்க்கையே ஏற்படுகிறது. பொருள் பெருக்கத்தால், அப் பொருள்களை வஞ்சித்துக கையாடும் வாய்ப்புக்களும் அதிகரிக்கின்றன. அத்துடன், சூழ்ச்சித் திறன் பயிலும் கல்வியாலும், வாழ்க்கைப் போரின் கொடுமையாலும் ஊக்குவிக்கப் படுகிறது. மனிதன் விலங்கினத்தினின்றும் வந்தமையால், வழி மரபுரிமையால், அவனுள் விலங்கினக் கீழியல்புகள் மண்டிக் கிடக்கின்றன. கட்டுப்பாடான, வாழ்க்கைத் தேவையின், அவசியத்தை, இப் பிறவிச் சுபாவம் வற்புறுத்துகிறது. ஆதி மனிதன், விலங்கினங்கள் போல், வேட்டையாடிக் கிடைத்தால், அமிதமாக உண்ணுவதும், கிடைக்காத பொழுது, கடும் பசியால் வாடுவதுமே அவனது அனுபவமாக இருந்தது. "நாளை" என்ற கவலை, அவன் வாழ்வில், குறுக்கிட்டதில்லை. ஆனால், மனிதன் தன் உணவைப் பயிரிட்டுச் சேமித்து வைக்கத் தலைப்பட்டதும், சொத்துரிமை தலை தூக்கி, அதனால், சமுதாயமும், அதற்காகவே, மிருக பல அடிப்படையில் அரசாங்கமும், உண்டாயின. புற நாகரீகத்தில், அரசாங்கம் வலுவடைந்து, மனிதனை எல்லா விதத்திலும் ஆண்டு அடிமையாக்கிக் கொள்ளும். அந்நிலையில், அக நாகரீக அணிகலன்களாகிய, அன்பு, சத்தியம், தியாகம் புறக்கணிக்கப்பட்டு, மானிடன் தன் குறிக்கோளுக்கு நேர் எதிரிடையாகவே நோக்கிச் செல்வான்.

புற வாழ்க்கையே புற நாகரீகத்தின் குறிக்கோள்; வாழ்க்கைப் போராட்டமே அதன் விளைவு. புற நாகரீக போகங்களை, ஒரு சிறுபான்மையோரே அடைய முடியும். என்றாலும், மானிட வாழ்க்கைக்கு, அதிலும், அக வாழ்வில் முன்னேற்றமடைந்தவர்களுக்கு, புறப் பொருள் தேவை அற்பமேயாம். தவிர, புறப் பொருட்க ளெல்லாம் பொதுவுடமையே யாதலால், உயர்ப் பணமுடையோர் எவரும், புற நாகரீகத்தின் பயன்களை யடைய, பொருள்களைத் தங்கள் தனி யுடமையாககிக் கொள்ளாமலே, அவைகளை அனுபவித்துக் களியுரலா மென்பதை ஒரு சிறு கதை மூலம் விளக்குவோம். பழங்காலத்து சீன ஆட்சி வகுப்பினரான மேண்டரீன் ஒருவர், தன்னை விலை யுயர்ந்த ஆடை ஆபரணங்களாலே அலங்கரிததுக கொண்டு வீதிகளில் டவனி வருவதுண்டு. அவர் வெளிச் செல்லும் போதெல்லாம், ஒரு புத்த பிக்கு (சந்நியாசி), அவரைப் பின் தொடர்ந்து, தன் வணக்கத்தையும், நன்றியையும் செலுததுவது வழக்கமாகி விட்டது. தன்னிட மிருந்து யாதொன்றும் கோராது, தன்னை எக்காலும் வணங்குவதின் காரண மறியாத அந்த மேண்டரீன், வியப்படைந்து, பிக்குவை விசாரித்தார். அந்த சந்நியாசி அளித்த பதில் இதுவே. "நானோ சந்நியாசி. எனக்கு விலை யுயர்ந்த பொருள்களைக் கட்டிக் காபந்து செய்து அணிந்து கொள்ள ஒரு வசதியும் இல்லை. அதே நிலையில் தான் இந்நகரிலுள்ள பெரும்பாலான மக்களும். என் மட்டில்,

அப் பொறுப்பையும், கவலையையும் ஏற்பது வீண் எனவும் அறிவேன். கண்ணுக்கே உணவளிக்கும் இப் பொருள்களுக்குப் பொறுப்பேற்றுப் பாதுகாத்துக்கொள்வது மன்னியில், பிறர் கண்டு களிக்கப் பெரிய மனதுடன், வாய்ப்பளிக்கும் தங்கள் பரோபகாரச் செயலுக்கு வந்தனமும், நன்றியும், செலுத்த உலகோர் யாவரும் கடமைப் பட்டுள்ளார்கள்". இவ்வாறு கூறி தன் நடத்தைக்கு விளக்கமளித்தார் அந்த பிக்கு. உணவுக்காக உபயோகப்படும் சிறிதளவு பண்டங்களைத் தவிர, வேறு ஜடப் பொருள்கள் நமக்கு வேண்டா; அவற்றை உடமையாக்கிக் கொள்வது, வண்ணான் கழுதை பொதி சுமப்பது போலாகும்; அல்லது பொருள் காட்சி பொம்மையை ஒக்கும். பணம் படைத்தவாகள் மதி யிழந்து நடந்தாலும், வறியோர் அதைக் கண்டு பொருமைப்படுவதேன்? ஏங்குவதேன்?

**உத்தம மானிட அகவாழ்க்கையான நாகரீகமே, புனித பாரதத்தின் மரபு** அதில் வளர்ந்த இந்தியப் பண்புகளே என்று மழியாது நிற்பது. இன்று உலகம் புறவாழ்க்கையிலும், புறச் சின்னங்களிலும் மயங்கி, அவற்றையே சிறப்பித்து, தலையைப் புறக்கணித்து, தலைப் பாகையைக் கொண்டாடுகிறது. தெய்வ பக்தி என்பது வாழ்க்கை நடை முறையில், அன்பையும், **சத்தியத்தையும் கடைப் பிடித்து வழுவாது வினையாற்றுவதேயாம்.** அகத்தில் அன்பும், நேர்மையுமற்ற நிலையில் ஆலயம் செல்வதும், வழிபாடுகள் நடத்துவதும், பிறர் காணப் பூசைகள் செய்வதும், ஜப மாலைகள் அணிவதும், குறிகள் இட்டுக் கொள்வது; யாவும் வஞ்சகமான புற நாகரீக நடிப்பே. **பழங்கால புற நாகரீகங்களெல்லாம் அழிந்துபோக, புராதன ஹிந்து நாகரீகம் வளர்ந்து வருவதேன் ?** ஹிந்து மதத்தின் உண்மையான அடிப்படைச் சித்தாந்தங்களும், எளிய, படா டோப மற்ற புற வாழ்க்கையுடன், அகத்தே அன்பையும், சத்தியத்தையும் போற்றி வந்த பண்பே, காரணமாம். இன்று விஞ்ஞானம் புறவாழ்க்கையை ஊக்குவிப்பதுடன், அக வாழ்க்கையைப் பாழ்படுத்தவும் தலைப்பட்டுவிட்டதைப் பல்லவியாகப் பலவிடங்களில் விளக்கியுள்ளோம். **பொருள் மோகங்கொண்ட புற வாழ்க்கை, நம் சிற்றியல்பின் மட்டரக வினைவே** யாதலால், அதை யடக்கி, மட்டுப்படுத்தினாலே, நம் பேரியல்பு செயல்பட இடமளிக்கும். மனிதனின் இழிவுக்கு இட்டுச் செல்லும் **இப்புற நாகரீக வாழ்வு நம் ஆன்ம அடிப்படையை மறுப்பதால், அது நமக்குக் கொடிய பகையாம்.** இதை எல்லாவிதத்திலும் தடுக்கவேண்டியதை, VI-5, 6-ல் திட்டவட்டமாக, கீதை பறை சாற்றுவதைப் பல்லவியாகப் பலவிடங்களில் எடுத்தோதியுள்ளோம். மனிதனின் சிற்றியல்பை (பொருள் மோகத்தை), கட்டுக்கடங்காமல் விடுவதே அவன் அழிவாம் என்ற கீதையின் எச்சரிக்கையை அறிவுடையோர் புறக்கணிக்க மாட்டார்கள்.

## VI. கர்மவிதியும், மறுபிறப்பும்

மறுபிறப்பு ஹிந்து மதத்தின் முக்கியமானதொரு சித்தாந்தம். ஆனால், இதைச், சில மதங்கள் மறுக்கின்றன. விஞ்ஞான ரீதியில், பரிணும முறையில், மறுபிறப்புக்கு ஆதரவு கண்டாலும், அடிப்படையில், கடுமையான முரண்பாடுகள் உள. ஆன்ம தத்துவத்தையும், பிறப்பின் நோக்கத்தையும், விஞ்ஞானம் அடியோடு மறுக்கின்றது. கீழினங்களாகிய தாவரங்களும், ஊர்வனவற்றின் கீழ்ப்படியிலுள்ள, புழு, பூச்சிகள், மீன், பறவைகள் போன்ற உயிர்களும், தங்கள் வாழ்க்கையை நடத்தச் செயல்பட்டாலும், அச்செயல்களெல்லாம், ஒரே ரீதியில், வித்தியாசமின்றி, இயந்திரப்பாங்கில், வேற்றுமையற்றுக் காணப்படுகின்றன. ஒரு இனத்திலுள்ள தனி நபர்கள், தங்களுள் வேற்றுமைப்பாடடைவதில்லை. ஒரு தென்னைக்கும் மற்றுமொரு தென்னைக்கும் வெளித்தோற்ற வித்தியாசங்காணுவது கடினம்; அதேபோல், ஒரு காக்கைக்கும், மற்றுமொரு காக்கைக்கும். ஆனால், பரிணும முறையில், உயர்ப்படியை அடையும் பொழுது, செயல் வேற்றுமைகள் அதிகரிப்பது போல், தனி நபர் வேற்றுமைகளும், அதிகப்படுவதைக் காண்கிறேம். படைப்பின் உச்சியில் நிறகும் மானிட வர்க்கத்தில், வினைகளின் வேறுபாடுகளும், தனி நபர் வித்தியாசங்களும் மிகுதியாகின்றன.

படைப்பினுல், ஒரே இன உயிர்களுள், வேற்றுமைகள் ஏற்பட நியாயமில்லை. படைக்கும் சக்தி, ஓரினத்தின் எல்லா ஜீவன்களிடத்தும், பாரபட்சமின்றி நடந்து கொள்ளுமேயல்லாது, ஓரவாரம் காட்டாது. (IX-29). ஒரே இனத்தின் உயிர்களுள் காணும் தனி நபர் வேற்றுமைகள், அவையவைகளின், வெவ்வேறு செயல்களினுலேயே ஏற்பட்டதென்பது தெளிவு. பல பிறவிக் கொள்கையை, IX-7, 8லும், IV-5லும், கீதை ஊர்ஜிதம் செய்கிறது. ஜீவன்கள், வினையில் கட்டுண்டு, பிறவி யெடுக்கவேண்டிய நிர்ப்பந்தம், ஏற்படுகிறது. வினையும், வினைப்பயனும், ஒரு கோலின் இரு முனைகள் போல், பிரியாது இணைக்கப்பட்டவை. செயலாற்றிய பின் அதன்பயனை அனுபவியாது, தவிர்க்க இயலாது. ஆனுல், வினையும், அதனுல் விளையும் பயனும், ஒன்றையொன்று அடுத்தும்வரலாம், அல்லது காலதாமதமாகியும் ஏற்படலாம். ஜீவனுக்கு, மரணமென்பது, தன்னிச்சையில்லாமல், திடீரென சம்பவிப்பதால், ஜிவன்கள் வினையாற்றி, ஆனுல், பயனையடையுமுன், மரணம் நேரிடுமானுல், அந்நிலையில், செய்தவினை, அஜ்ஜீவனை மறுபிறப்பிலும் தொடர்ந்து, தன் பலனை அனுபவிக்க வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்துகிறது. இதுவே கர்மவிதி.

**எந்த வினைக்கும், அதன் பலன், அதனுள்ளேயே, பொதிந்துகிடக்கின்றது,** அதைத் தவிர்க்க முடியாது. பலனின் வித்து, வினையுடனேயே. வளரத்தொடங்குகிறது. ஏனென்றால், வினையும், அதன் பயனும், ஒரே தண்டிலிருந்தே பிறக்கின்றன. ஆசையை, **அடிப்படையாகக் கொண்ட வினைகளின் பயன்களை அனுபவித்தாலே தீரும்.** மரணத்தின் காரணமாக, அனுபவியாத வினைப்பயன்களை, அனுபவிப்பதற்காக வேனும், புதிய பிறவி எடுக்க நேரிடும். வினையினால் உண்டாகும் விளைவே, மறுபிறப்பென்றால், அப்பிறவியை, ஒழிப்பதற்கு, வினையைத் தவிர்ப்பதே, தகுந்த உபாயமென ஒரு கோட்பாடு கையாளப் படுகிறது. சந்நியாசம் (துறவு) என்பது, ஆசையால் உந்தப்பட்டு ஏற்படும் வினைகளைத் துறக்கும் உபாயமாகவே, ஆரம்பமாயிற்று. **உலக பந்தங்களாலும், குடும்ப விசாரங்களாலுமே, ஒரு ஜீவனுக்கு வெகுவாக, வினையாற்ற வேண்டிய நிர்ப்பந்தம் உண்டாகிறது.** தன் குடும்பத்தாரின் பால் எழும் ஆசைகளாலேயே தூண்டப் பெற்ற வினைகளே பெரும் பாலானவையாதலால், வினையைக் குறைக்க, குடும்பப் பொறுப்பைத் தவிர்ப்பதே, நல்ல முறை என முடிவு கட்டினார்கள். பிறந்த ஜீவன் களெல்லாம் உடன் துறவு பூண்டால், படைப்பின் கதி என்ன ? இயற்கை, இதற்கு இடமளிக்குமா ? இல்லற வாழ்க்கையைத் தவிர்க் கும் துறவு ஒரு சிலருக்கே கூடும். பொதுவாக, இத்தர்ம முறை, ஜீவன்களுக்கெல்லாம் பொருந்தாது. என்றாலும், இல்லற வாழ்க் கைக்குப்பின், மரணம் கிட்டுமுன் துறவறம் ஏற்பது மானிடர் யாவருக்கும் அவசிய மென்பதை அடுத்த தலைப்பில் விளக்குவோம்.

**ஆசையை ஒழிப்பதா? ஆசையால் தூண்டப்படும் வினைகளைத்தவிர்ப் பதா?** எம்முறை உசிதமானது, சாத்தியக் கூறுள்ளது ? இதுவே கீதை எடுத்துக்கொண்டு விடைபகரும் பெரும்வினா. "ஆசை ரஜோ குணத்தின் விளைவு. அது எதையும் விழுங்க வல்லது; கொடிய பாவத்திற்குக் காரணமானது. ஜீவனுக்குப் பரமவிரோதி ஆசையே" (III - 27). "ஆசை, உண்மை ஞானத்தின் நித்திய வைரி. விவேகத்தைக் கெடுத்து, ஜீவனைத் தீயசெயலில் புகுத்து கிறது. காமத்தைப் போன்ற பெருந்தீ வேறு இல்லை. "அது தான் விரும்பியபடி, உருவத்தை மாற்றிக் கொள்ள வல்லது" (III-39). ஆகையால், புலன்களைக் கட்டுப்படுத்தி, பகுத்தறிவை யழிக்கும், இப்பாவியாகிய ஆசையைக் கருவிலேயே அழித்துவிடு" (III-41). இக்கட்டளைகளைக் கையாள, ஆன்மாவில் நம்பிக்கை வேண்டும். ஆன்ம வளர்ச்சியடையந்து, வலுப்பெற்றாலே ஆசையை அடக்க இயலும். ஆசையை வளரவிட்டபின், அதையடக்குவதும்,

அல்லது, வினையாற்றுது வாளா நிற்பதும், இரண்டுமே, இயற்கைக்கு விரோதமானது, கைகூடாதவை. இவ்வுண்மைகளைத் துறவறம் புறக்கணிப்பதாலேயே, கீதை துறவறத்தை ஆதரித்து கூற முடியவில்லை.

கீதையில், துறவறத்துக்குப் புதியதொரு இலக்கணம், கண்ணன் தருகிறுர். **தேவைகளைத் துறந்தவனே, துறவி. ஆசையை ஒழித்த நிலையே சந்நியாசம்.** அதுவே, யோக நிலையும். இவைகளே அத்தியாயங்கள், III, IV, XVIII-லும் திரும்பத் திரும்ப வற்புறுத்தப்படுகின்றன. ஜீவனுக்குக் கருமத்தைத் தவிர்க்க அதிகாரம் இல்லை. ஆனுல், நல்வினைகளின் பயனை அனுபவியாது தவிர்க்க வழியுண்டு. அது தான் கர்மபலத்துறவு, தியாகம். வினைப்பயனில் ஆசை கொள்ளாது, அதை பரமன் பெயரால், உலகுக்கு அர்ப்பணித்து விடுவதே, இக, பர, வாழ்க்கைகளுக்கும், விடுதலைக்கும் வழி என்று கீதை பறை சாற்றுகிறது. உலகத்தையோ, இல்லறத்தையோ, துறக்கும்படி, கீதை கட்டளையிடவில்லை. **ஜனகர் போன்ற இல்லற வாழ்க்கை நடத்திய புருஷர்களையே அது தன் லட்சிய ஜீவன்களாகக் கொள்கிறது.** கீதை, ஒரு வாழ்க்கைக் கலையும் கூட. வாழ்க்கையின் குறிக்கோள், ஜீவனின் விடுதலையாதலால், நல்வாழ்வு வாழ்ந்து விடுதலையும் பெற, கீதை வழி, சாலச்சிறந்தது. ஜீவன், உலகில் வாழ வேண்டிய நிலையை V-10ல் இவ்வாறு கீதை வர்ணிக்கிறது. "எந்த ஜீவன், தனது வினைப்பயன்களை, பரமன் பெயரால் அவரது வடிவமாகிய உலகத்திற்குக் காணிக்கையாகச் செலுத்தி, பற்றின்றிச் செயல் புரிகிறதோ, அஜ்ஜீவன், தாமரை இலையில் தண்ணீர் ஒட்டிக் கொள்ளாததைப்போல், வினைத்தளைகளால் பந்தப்படுவதில்லை." எந்த வினையும், செய்யக் கடமைப்பட்டதென்று உணர்ந்து, அதை யக்ஞமாக செய்தால், வினையால் ஏற்படும் மாசு முழுவதும், கரைந்து போகின்றது. தீயசெயல்களுக்கு இவை பொருந்தா. ஏன்? பயன் விரும்பாத தீய செயல் ஏது? பயனுக்காகவே, பற்றுக்கொண்டு, தீய வினைகள் ஆற்றப்படுகின்றன. அவற்றின் பயன்களை அனுபவித்தே தீரவேண்டும்; தப்புவது கிடையாது.

**துறவறத்தைப் பெரிதும் போற்றுபவர்கள், கர்மாவைத் துறப்பதென்ற முடிவுகட்டியது, வேதச் சடங்குகளைக் கருத்தில் கொண்டே செய்த தீர்மானமெனலாம்.** வேதங்களின், கர்மகாண்டமென்ற, முன் பகுதியிலுள்ள, இனிய, பசப்பான, மதச் சடங்கு உபதேசங்களில், மனிதன் மயங்கி, ஆசையால் செயல்படுகிறுன். செல்வமும், சொர்க்க போகமும் தவிர,

வேறு, உயர்ந்ததெதுவுமில்லை என்று கருதுகிறான். பல்வேறு ஆசைகளுக்கு, இலக்காகிப், பலவிதமான சடங்குகளைச் செய்து, இன்பதுன்பங்களையடைந்து, பிறப்பு இறப்புச் சுழலில் சிக்குண்டு, உழல்கின்றான். வேத கர்ம காண்டங்களில் இம்மை என்ற பூவுலக வாழ்க்கை, மறுமையென்ற தேவ உலக வாழ்க்கை, இவற்றைப்பற்றிக்கூறுவதாம். ஆனால், இவ்விரண்டுமே ஐம்புல நுகர்ச்சியாலுண்டானவை. கீதை, உலக வாழ்வைத் துறக்க எண்ணுவிடினும், கணக்கற்ற வேதச் சடங்குகளாலும், அனுட்டானங்களாலும் கிட்டும் பயன்கள், நீர்க்குமிழி போலானவைகளே என்று எச்சரிக்கை செய்கிறது. உலோகாயதமான போகங்களை — பணம், பெண்டு, பிள்ளைகள், பதவி, புகழ், இவை போன்றவற்றை — அடைவதற்கான வழியையே கர்மகாண்டம் காட்டுகிறது. இவைகள், ஆன்மீக வளர்ச்சிக்கு ஒழித் தடைகளாம். மேலும், இவற்றால், துன்பத்தைத் தவிர்க்க இயலாது. இன்ப துன்பங்கள் கலந்ததே புலன் வாழ்க்கை.

வினைப்பயன் தீர்ந்தாலே, பிறப்பு இறப்பு ஒழியும். மறுபிறப்பின் அடிப்படை இதுவே. மனிதன் படும் அவதிகளுக்கு, அவனே தான் காரணம் என்று கர்மவிதி கூறுகிறது. அவனவன் சுகதுக்கங்களுக்கு அவனவனே பொறுப்பு. பரமனோ, இயற்கையோ, மற்றும் உலகமோ, பழி ஏற்கா. நமது தற்போதைய நிலைக்குக் காரணம், நாமே. அது நம்மாலேயே சமைத்துக் கொள்ளப்பட்ட நிலை. இக்கொள்கையானது, மனிதனை, நற்செயலில் ஈடுபடச் செய்து, தீயதைத் தடுக்கவும் தூண்டுகிறது. நன்மையோ, தீமையோ, ஒரு பொழுதும், அவற்றின் பலனை யளிக்காது அழிந்து போகா. என்றாலும், இக்கண்டிப்பான கர்மவிதியின் நியதி, இயந்திரத்திற்குரிய பாங்கில் செயல்படவில்லை. குடியானவன், நிலத்தை உழுது, உரமிட்டு, விதை விதைத்தால், மட்டும் போதுமா? வெப்பம், காற்று, மழை, இவை போன்ற இயற்கைச் சக்திகளுடன், தெய்வ உதவியும் சேர்ந்தாலே, ஒரு விதை, பத்து, நூறாகப் பெருக்கெடுத்து அமோக மகசூல் அளிக்கும். இது காரணமாகவே, உணவுப் பொருள் யாவும், ஆண்டவனின் அன்பளிப்பென்று, அவற்றை, பாட்டாளியோ, முதலாளியோ, தனது ஏகபோக உடைமையென உரிமையாடலாகாதென்று, கீதை III–12ல் திட்டவட்டமாகக் கூறுகிறது. உடலெடுத்த ஜீவன்களுக்கெல்லாம் உண்ண உரிமையுண்டு. இதை மறுப்பது அதர்மம், அநீதி. அன்னதானத்தின் அடிப்படை இதுவே.

மனிதன், சுயநலத்தை நாடியே வினையாற்றுகிறான். சில சுயவர்கள், பிறர் தீமை அடையும் பொருட்டுச் செயல்புரிகிறார்கள். ஆனால், செயல்களின் பலன்கள், நம் இச்சைபோல், உண்டாவதில்லை; நம் விருப்பத்திற்கு விரோதமாகவும் விளைகின்றன. நாம் எதிர்பார்க்காத விதத்தில், பலனின் போக்கு ஏற்படுகிறது. உதாரணமாக, உலகில், ஒருவரும் சாக விரும்புவதில்லை. மரணத்தைத் தடுக்க, எவ்வளவோ, பாடுபடுகிறோம். வினைப்பயன் நம் இச்சை போல், நிகழுமானால், உலகில் எவராவது மரிப்பாரா? மூப்பு என்ற பிணியால், யாரேனும், வாடுவார்களா? தெய்வ நீதி என்ற ஒரு ஆணை, தன் சக்தியால், வினைகளின் பயன்களைச் சமைக்கின்றது. அதன் போக்கு நமக்குப் புரிவதில்லை. உலகம், நம் இச்சை போல் நடக்குமென்று எதிர்பார்ப்பது தவறு. இப்பிரபஞ்சத்தில், நாம், ஒரு தூசிக்கும் சமானமாக மாட்டோம். தெய்வ நியதியே, இவ்வுலகத்தைத் தர்ம வழியில் இட்டுச் செல்லுகிறது. ஆனால், அதற்கு இடையூறுகள் உண்டாகாமலில்லை. அதர்மத்தின் ஆதிக்கம் வெகு காலம் செல்லாது. தர்மம் தலை தூக்கி, அதர்மத்தை யழித்து விடுமென்பது உறுதி. இந்த அபயத்தையே, கீதை III-7, 8-ல் கண்ணன் உலகுக்கு அளிக்கின்றார். "தர்மம் குன்றி, அதர்மம் மேலோங்கும் பொழுதெல்லாம், நான் என்னைப் பிறப்பித்துக் கொண்டு, கொடுமையை அழித்து, மீண்டும் தர்மத்தை நிலைநாட்ட, நான் ஒவ்வொரு யுகத்திலும் அவதரிக்கின்றேன்."

வினை என்பது, எளிதில் புரிந்து கொள்ள முடியாததொன்று. மாயை என்ற அறிய முடியாத முக்குணங்களில் அது பிறப்பெடுத்து, உடலின் கருவிகளைக் கொண்டு, உடலையே, தன், களமாக்கி, பிராணனின் பலவகைப்பட்ட சக்திகள் மூலம், தெய்வ ஆசியோடு கூட அல்லது தெய்வீக ஆணையின் பேரில், செயல்படுகிறது. (XVIII-14). செயலின் கர்த்தாவாக, குணங்கள் ஏற்படுகின்றன. உடல், களமாகின்றது. உடல் கருவிகளாலும், பிராணனின் சக்திகளாலும், செயல் நடைபெறுகிறது. , இந்த நான்கையும் தவிர, தெய்வ நியதி என்பதும் பங்கு கொண்டு, வினை ஏற்பட்டு, பலனையும் தீர்மானிக்கின்றது. இந்த ஐந்து காரணங்கள் சேர்ந்ததே வினை. எந்த வினையும், மனம், வாக்கு, காயம் (உடல்) என்ற மூன்றின் வாயிலாகவே வெளிப்படவேண்டும். செயலில் பரமனுக்கு இடமில்லை. பரமனை (ஆன்மாவை), வினைக்குக் காரண மென்பதும், கர்த்தா வென்பதும் உண்மைக்கு மாறானது. ஒரு வினையை, அதன் வெளிப்படைத்

தோற்றத்தாலோ, அல்லது வெளிப்படையான பலனைக்கொண்டோ, நிர்ணயஞ் செய்வது, தவருகலாம். **வினையின் கதி, மிகவும் ஆழ்ந்தது; அறிதற்கரிது.** செயலே, படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களையும், ஏற்படுத்துவது. எந்த நோக்குடன் வினை யாற்றப்படுவதென்பது, பிறருக்குத் தெளிவு படாத ரகசியம். தவிர, செயல், விலக்கப்பட்ட செயல், செயலின்மை, என்பனவற்றை, அறி வாளிகள் கூட நிச்சயிக்க முடியாது, குழப்ப மடைகிருர்கள் (IV-16, 17). கீதை, IV-18-ல், ஞானியும், யோகியும், சமமானவர் கள் என்று பகர்ந்து, இவ்விருவருக்கும் இலக்கணம் கூறுகிறது. "செயலில் செயலின்மையும், செயலின்மையில் செயலையும், காண்பவரே, ஞானியும், யோகியுமாவார்". இதன் விளக்கம் பாகம் I-ல் காண்க. மனத்தைக் கட்டிஞலே, அது, ஜீவனுக்குத் துன்பத்தைத் தவிர்க்க இடமளிக்கும். மனத்தை ஆசைகளில் அலையவிட்டு, கர்மக்கருவிகளை யடக்கிஞல் பயனுக்கும் அதிகமான துன்பங்கிட்டும். ஒரு அடைபட்ட இடத்தில், காற்று அதிகமாக, ஆக, அழுத்தம் அதிகரிப்பது போல், உள் கட்டுப்பாடில்லாத ஆசை களும், எண்ணங்களும், வெளிக்கட்டுப்பாட்டால், வலுவடைந்து, அதிகம் கொடுமை தரும்.

விடுதலையடையாத ஜீவன்கள் யாவும், மறுபிறப்பெய்தவேண்டு வது அவசியம்; இது தவிர்க்க வொண்ணுதது. ஒரு பிறவியில் ஆற்றிய **வினையின் பயன்கள், புதிய பிறவியை, உருவாக்கப் பங்கு கொள்ளுகின்றன.** ஆஞல், எஞ்சிய வினைப்பயன்கள், மறுபிறவியை எவ்வாறு எட்டு கின்றன என்பது ஒரு பரம ரகசியமே. நம் அறிவுக்குப் புலப் படாதது. என்ருலும், அவற்றின் கூற்றை மறுக்கவொண்ணுத சான்றுகள் உள. உடலைவிட்டு ஆன்ம ஜீவன் பிரியும் பொழுது, காரண உடலாகிய விஞ்ஞான மயகோசத்தை (அகத்தையும், புத்தி யையும்) சம்ஸ்கார ரூபத்தில் எடுத்துச் சொல்லுகிறதென்று கூறினேம். இவை, முக்குணங்களால் பாதிக்கப்பட்டவை. முக் குணங்களே, ஆன்மாவை, உடலுடன் பிணைக்கின்றன (XIV-5). **இந்த முக்குணச் சேர்க்கை யளவின் ஏற்றத் தாழ்வாலேயே முன் பிறவியின் பாவ, புண்ணியங்களும், எஞ்சிய வினைப்பயன்களும், புதிய பிறவியில் பிரதி பலிக்கவேண்டும்.** தர்ம இயல்பால், நல்வினைகள் ஆற்றிய ஜீவன், சத்துவகுணம் மேலோங்கிப் பிறவி யெடுக்கும். தீயவினைகளை பெரும்பாலும் ஆற்றிய ஜீவன், தமோ குணம் ஓங்கப்பெற்று, பிறவி எடுக்கும் (XIV-14, 15). அவரவர்கள், ஆற்றிய வினைகளின் பயனுக்கேற்ற அளவு, குணவேறுபாடுகள் அடைந்து, புதிய பிறவி

எடுக்க நேரிடும். **இதுவே கர்ம விதி.** அசுர இயல்புடையவர்கள் ஒவ்வொரு பிறவியிலும், தீயவினைகள் ஆற்றி, தமோ குணம் மேலும், மேலும், அதிகரித்துக் கீழின நிலையை அடைவார்கள் (XVI-20). ஒவ்வொரு ஜீவனும், தன் ஆசையின் மேலீட்டால், ஏற்படும், எண்ணத்தை யடையத்தகுந்த உடலையே, ஆன்மா, ஏற்படுத்திக் கொடுக்கின்றது (VIII-6). "ஒரு ஜீவன், எந்த (பாவத்தை) உருவத்தை, இடைவிடாது உறுதியாக நினைத்துக் கொண்டிருக் கிறதோ, அதையே, அஜ்ஜீவன், தன் மரண காலத்திலும் நினைத்துக் கொள்ளும். எனவே, அந்த (பாவத்தையே) உருவத்தையே, அது, மறு பிறவியில் எய்தும். இந்த உண்மையைக் காரணமாகக் காட்டி, கண்ணன், தன்னையே (பரமனையே), சதா சர்வகாலமும், எண்ணும் படிக்கும், அவ்வாறு, மரண காலத்திலும் கூட, மனத்தையும், அறிவையும், பரமன்பால் நிலை நாட்டுவதால், பரமனையே, நிச்சய மாக அடையலாம் என்று உறுதி அளிக்கின்றார் (VIII-7).

ஒரு ஜீவனின் கடைசி எண்ணமானது, அதன் ஜீவிய காலத் தில், எந்த எண்ணம் மேலோங்கி வலுப் பெற்று நிற்கிறதோ, அது வாகவே இருக்கும். அவ்வெண்ணத்தைத் திடீரென மாற்ற இய லாது. வாழ் நாள் முழுதும் "சங்கரா, சங்கரா" என்றாலே, சாகும் பொழுதும் அதே நினைவு ஏற்படும். ஒவ்வொரு ஜீவனும், தத்தம் குணத்தை யனுசரித்தே வினையாற்றி, அக்குணத்தை மேலும் வலுக்கச் செய் யும். ஆசைகளுக்கும், அதர்மச் செயல்களுக்கும் இடமளிக்கும் ஜீவன் தமோ குணத்தையே அதிகரித்துக் கொள்ளும். பணம், பதவி, காமம் இவைகளில் அதிகமாக ஈடுபடும் ஜீவன், தன் ரஜோ குணத் தைப் பெருக்கிக் கொள்ளும். சுயநலம் குன்றி, தார்மீக முறையில் செயல் படும் ஜீவனிடத்தில், சத்துவ குணம் பலப்படும். இவ்வா றான குண வேறுபாடுகள், புதிய பிறவியின் குணத்தை நிர்ணயிப்பதுடன், அது செயல்படுவதற்கு ஏற்ற சூழ்நிலையையும், ஏற்படுத்திக் கொள்ளுகின்றன. அவரவர், பூர்வ வினைகளுக்கும், எண்ணங்களுக்கும், தக்கபடி, அனு கூலமான சூழ்நிலையோ, பிரதிகூலமான சூழ்நிலையோ, ஏற்படுகிறது. நற்குணமுள்ள பெற்றோர் மூலம் பிறவி எடுப்பதும், தார்மீக இயல் புள்ள செல்வந்தர்கள், அறிவாளர்கள் வீடுகளில் மகவாகப் பிறந்து வளர்வதும், முன் வினையின் பயனேயாம். நம் பெற்றோர்கள், நம் மைப் படைக்கவில்லை. நாமே, நம் பெற்றோரைத் தேடி அடைகி றோம். இவைகளே, நம் சூழ்நிலை, நம் வாழ்க்கைக்கு வாய்ப்பு. இவை கள், நமக்காக நாமே, சமைத்துக் கொண்டவை.

பிறந்த ஜீவனின் குணாதிசயங்களும், சூழ்நிலையும், அதன் வாழ்க்கைப் போக்கையும் தரத்தையும், நிர்ணயிக்கின்றன. என்றாலும், இப்போக்கை ஓரளவாவது, மாற்றி யமைத்துக் கொள்ளும் சக்தி, மானிடனிடத்தில் மட்டுமே குடிகொண்டே இருக்கிறது. அதுதான், தெய்வீகமான, மேல் இயல்பு. இந்த ஆன்மீக இயல்பின், ஆட்சிக்கு, வாழ்க்கையை உட்படுத்தினால், பிறவிக் குணங்களும், சூழ்நிலையும், அந்த ஆட்சிக் கேற்ப மாறி யமைந்து, சாத்வீகம் மேலோங்கச் செய்யும். இது உத்தம ஜீவனின் கதி. அசுர குணமுடையோர், இதற்கு மாறான கதியை அடைகிறார்கள். சீட்டாட்டத்தின் உவமையைக் கொண்டு, விளக்குவோமானால், கர்ம விதி, நமக்கு, சீட்டுக்களைத் தானே, பெருக்கி அளித்து விட்டது. ஆனாலும், கிடைத்த சீட்டைக் கொண்டு, திறம்பட ஆட்டம் ஆடி வெற்றி பெறுவதும், திறமை யின்றி தவறு செய்து ஆடித் தோல்வி யடைவதும், நம் பொறுப்பாகிறது. அடைந்த சீட்டுக்கள், உயர்ந்தவையாகவோ, சுமாராகவோ, அல்லது மட்டமாகவோ, இருக்கலாம். கிடைத்ததைக் கொண்டு, வெற்றி யடைவது, ஆட்டம் ஆடுபவரின் திறமையையும் பொறுத்ததே. நல்ல உயர்ந்த சீட்டுக்களை யடைந்தும், தோல்வி யுறுவோரும், மட்டமான சீட்டுக்களைப் பெற்று, வெற்றி காண்போரும், உண்டு. இதே போல், வாழ்க்கைக் களியாட்டமும், என்றாலும், இங்கு வெற்றி தோல்விகளுக்கு முறையே, காரணங்கள், நம் தெய்வீக இயல்பும், அரசு இயல்புமேயாம்.

மானிடன், யந்திரங்களைப் படைக்கிறான். ஆனால், மனிதனைப் படைத்த பரமன், மனிதனை ஒரு யந்திரமாகப் படைக்காமல், ஜீவனாகவே படைத்தார். ஒவ்வொரு ஜீவனும், தன்னை முன்னேறச் செய்து கொள்ளும் திறமையும், வாய்ப்பும், தன்னுள்ளேயே பெற்றிருக்கிறது. கீழின ஜீவன்கள், பிறவி எடுத்த, சொற்ப காலத்திற்குள்ளேயே, தங்கள் ஆயுளில், தாங்கள் அடைய வேண்டிய முழு வளர்ச்சியையும் அடைந்து விடுகின்றன. ஆனால், மனிதன், தன்னை மரணமெய்தும் வரை, வளர்த்துக் கொண்டும், முன்னேற்றிக் கொண்டும் போக இயலும். தவிர, கீழினங்கள், தங்கள் இனம் அடைந்த முன்னேற்றத்தையே எட்டக் கூடும். மனிதன், தன் இனத்தின் முன்னேற்றத்தையும் தான் அடைவதுடன், தனது தனிப்பட்ட முறையிலும் முன்னேற்றங் காண வழி யுண்டு. மனித வர்க்கத்தில் மட்டுமே காலப் போக்கால், உடல் வலுவிழந்து, மூப்பு எய்தி, குன்றிப் போனாலும், மனமும், அறிவும், உடலிழக்கும் வல்லமையை ஈடு செய்ய, பன்மடங்கு திறம் பெற்றுச் செயலாற்றக் கூடும். என்றாலும், இவை

யாவும், பெரும் முயற்சியாலேயே கிட்டு மல்லாது, தானுகவே முயற்சியின்றி, ஏற்படா. வெகு சிலரே இதை யறிவார்கள். அதிலும், பயிற்சி செய்து பலனடைவோர், மிக அரிது. **தோள் வலிமையை மட்டும் வளர்க்கும் மானிடன், மிருகமே யாவான்.** மனிதனின் தனிச் சிறப்பு அவன் மனமும், புத்தியும் வலிவு பெறுதலேயாம். **மானிடன் அடையக் கூடிய ஆன்ம சக்திகளுக்கு அளவே யில்லை.** முறையான வினைகளின் மூலமே அவற்றைப் பெற முடியும். இந்த உயிர் தத்துவ உண்மைகளை இங்கு திரும்பவும் வற்புறுத்துவதன் காரணம், இவை, எல்லா மானிட ஜீவன்களாலும், முயன்ருல் பெறத் தக்க மாபெரும் ஆன்ம சக்திகள் என்டதே. நம் முன்னேர்கள், சித்தி பெற்று சாதித்த அபார சாதனைகள், ஆன்ம வலுப் பெற்றவை. அவர்கள் கையாண்ட முறை, மனத்தையும், அறிவையும் ஒருமுகப் படுத்தி, உடலை மறந்து, மூல சக்தியைக் குறித்துத் தவம் செய்ததாம். நவ நாகரீக மனிதன், தன் வற்ருத ஜீவ சக்திகளைப் பாழடித்து விட்டு, குறுகிய எல்லை மானமுள்ள யந்திர சக்தியைப் பெற, வீண் முயற்சிகளில் ஈடுபட்டு, பிறர் உதவியை நாடி, மலையைக் கிள்ளி இன்று எலியைப் பிடிக்கின்ருன்!

**வினையைத் தோற்றுவிப்பது யாது?** மானிடனைத் தவிர, மற்றப் படைப்பினங்களில், சிற்றியல்பே யுண்டு. அதுவே வளர்ச்சி பெற்று வினை யுண்டாக்குகிறது. ஆனுல், **மனிதனிடத்தில், பேரியல்பும் வாழ்க்கையில் ஆதிக்கம் பெறப் போராடுகின்றது.** உறுதியடைந்த புத்தியும், ஒருமுகப்பட்ட மனதும், மனச் சாட்சியுமே, நமது பேரியல்பாம். ஆசை, அஹம் இவை மேலோங்குவதே சிற்றியல்பாம். இவ்விரு இயல்புகளில், எது நம் வாழ்க்கையில் ஆதிக்கம் பெறுகிறதோ, அதுவே வினைகளைத் தோற்றுவிக்கும். புத்தியும், மனமும் எக் கட்சிக்கு ஆதரவு அளிக்கின்றனவோ, அதுவே மேலோங்கி, ஜீவனை ஆட்கொண்டு, வாழ்க்கையை நடத்தும். சினிமா மூலமாகவும், மட்டரக சஞ்சிகைகள், பத்திரிகைகள், வாயிலாகவும், வெள்ளப் பெருக்கெடுத் தோடும் சிற்றின்ப நுகர்ச்சிகளால், புத்தியும், மனமும், தாழ்த்தப்படும் இக்காலத்தில், ஆன்ம உணர்ச்சி, வெட்கித் தலை குனிந்து, ஒதுங்கி நிற்க, ஓடும் திருடனே, "பிடி, விடாதே" என்று கூவி, ஓடித் தட்புவது போல், மனிதனின் இழிவான ஆசைகளும், அஹமும், ஆன்மப் போர்வையாகிய உத்ஸவங்கள், பூசைகள், கோயில் புதுப்பித்தல், யாத்திரைகள், மற்றும் டம்பார்த்தமான, தான, தர்ம, யக்ஞங்களால், மூடப் பெற்று, கபட நாடக வாழ்க்

கையை நடத்தி வைக்கின்றன. போதை யளித்து, அறிவை மயக்கும், லகிரிப் பொருள்கள், அமோகமாக உற்பத்தியாகி இன்று அமிதமாக உட்கொள்ளப்படுகின்றன. காம உணர்ச்சி யூட்டும், கட்டுரைகள், படங்கள், கவிதைகளே பெரும்பாலோரின் அறிவைக் கவரக்கூடியவை. வேதாந்தம், கீதை, போன்ற நூல்கள், அவர்களுக்குத் தலை நோவளிக்கும். நவ நாகரீகம், புகை பிடித்தலையும், மது அருந்துவதையும், தன் சின்னமாக்கிக் கொண்டு வருகிறது. மிருகங்கள் புகைப் பிடிப்பதில்லை; காப்பி குடிப்பதில்லை, ஆகையால், புகை பிடிக்காத மனிதனும், காப்பி அருந்தாத ஜீவனும் மிருகமே யாவான்.

மனித குலத்தில் மட்டும், ஒவ்வொருவரிடத்திலும், இரண்டு சரீரிகள் உண்டு. வினையாற்றுவது, ஒரு சரீரி. ஆற்றிய வினையை மதிப்பிடுவது மற்ற சரீரி. இந்த மதிப்பிடும் சரீரியை, மனச் சாட்சி என்று பகர்வது வழக்கம். செய்யப் போகும் வினை, தர்ம ரீதியானதா, அல்லது, தீய செயலா, பற்றற்றதா, அல்லது, சுயநலங் கொண்டதா, என்பதைத் தீர்மானிப்பதுடன், இந்த மனச் சாட்சி எப்பொழுதுமே, தர்ம ரீதியானதும், சுயநல மற்றதுமான, வினையை ஆற்றவே தூண்டி, அதற்காகப் போராடவும் செய்கிறது. இத் தெய்வீகப் பேரியல்பு, நம் கீழியல்புடன் போராடி, நம்மை மேம்படுத்தத் தன்னால் இயன்ற அளவு முயற்சிக்கின்றது. இது, நல்லோரிடத்திலும், தீயோரிடக்திலும் உளது. பரமனே, எல்லோர் உள்ளத்திலும், வீற்றிருந்து, மனச்சாட்சியாகச் செயலாற்றி, மானிட வர்க்கம் ஆன்மத் துறையில், முன்னேற வழி செய்கின்றார். XVIII-61. இவ்வாறான கட்டுக் காபந்துகள், முன்கூட்டியே ஏற்பாடாயிருந்தும், மனிதன் இவைகளையெல்லாம் மீறிச், சிற்றியல்புக்கே இடமளித்து வாழ்க்கை நடத்தினால், அவன் வீழ்ச்சியுற்று அவதிப் படுவதில் வியப்பேதுமுண்டோ ?

மேனாட்டுப் பாடகர் குழுவில், ஒரு தலைவன் உண்டு. அவரது ஆணையைக் கவனியாது எவரேனும் செயல்பட்டால், கானத்தில் தவறு ஏற்படும். அதேபோல், நம்முள் குடிகொண்டிருக்கும், பரமனின் குரலாகிய நம் மனச்சாட்சியின் ஆணையைப் புறக்கணித்து, அதற்கு மாறாக வினையாற்றினால், தவறான வழியில் நடப்போம் என்பது நிச்சயம். நம்மிடத்திலுள்ள, இந்த தெய்வீக, "குணந்தெரிவோன்". "பிழைபார்ப்போன்", தடையில்லாது, செயல்பட்டால், நம் வினைகள், நம் பேரியல்பால் தோற்றுவிக்கப் பெற்று, குற்றங் குறையற்றவையாகி, உலகுக்கும் நமக்கும் இன்பம் பயக்கும். அஃதல்லாது, இத் தெய்வீகப்

பிழைகாட்டியை, போதை தரும் பொருள்களை யுண்டு, நம் அறிவை மழுங்கச் செய்யவோ, மந்தமாக்கவோ செய்து, இத் தெய்வீகக் கட்டளைக் குரலை, நாம் உணர இயலாது அடித்துவிட்டால், சிற்றியல்பே வினையைத் தோற்றுவித்து, பெருமளவு வினைகளை ஆற்றிவிடலாம்; ஆனால், அவ்வினைகள், அப்பழுக்கற்ற, தார்மீகச் செயல்களாகா. **போதைப் பொருளின் இலக்கணத்தை மீண்டுமொருதரம் கவனிப்போம்.** எப்பொருள் நம் பேரியல்பின் தடையையும் மீறிய அவா ஏற்படுத்தி, அதைத் தவிர்க்க வொண்ணாத நிலையை ஜீவன் அடைந்து, அப்பொருளையடைவது தடைப்பட்டால், உயிரையும் கூட மாய்த்துக் கொள்ளும் துர்க்கதியை ஏற்படுத்துகிறதோ, அது மிகக் கொடிய போதைப் பொருளாம். சினிமா செல்லத் தடைப்பட்டால், அல்லது, தான் காமுற்ற ஆசைநாயகி, நாயகனையடையச் சூழ்நிலை குறுக்கிட்டால், தற்கொலை செய்துகொள்ளும் சிறுமி, சிறுவர்களின் பரிதாபச் செயல்கள் செய்தித் தாள்களில் அதிகரிக்கின்றன. சிற்றின்ப அவாவை மூட்டும் படமோ, கதையோ, யாவும் கடும் **போதை யளிப்பவையே.** இவை நம் பேரியல்பாகிய, மனச்சாட்சியை நேரில் பாதிக்க இயலாததால், அதன் சாஎரமாகிய **புத்தியை நேரில் தாக்கி, தெய்வக் குரலின் கட்டளையை, நம் அறிவும், மனமும்,** உள்ளபடி உணராவண்ணம் **அடித்துவிடுகின்றன.**

இதனால், நம் வினைகளை, நல்வழிப் படுத்தும், ஒரு நம்பிக்கையான தெய்வ நண்பனை இழந்ததோடு, தீயவினைகளுக்குத் தடையாக நின்ற நம் பகுத்தறிவையும் மழுங்கச் செய்து. நம் சிற்றியல்பின் மட்டரக ஆசைகளை ஆதரிக்கும்படி செய்துவிடுகிறது. மனிதன் தான் செய்வது தவறு என்பதையே உணராது, தீயவினைகள் ஆற்ற, போதைப் பொருள்களும், இழிவான எண்ணங்களும் ஏற்பாடு செய்கின்றன. ஒரு சிலர், தங்கள் தவற்றை யுணர்கிறார்கள்; ஆனால், திருடர்கள் தன் வீட்டில் புகுந்து கொள்ளையடிக்கும் பொழுது, அவ்வீட்டானை, கை, கால், வாய், இவைகளைக் கட்டி செயலற்று அடித்துவிடுவதுபோல், அவர்கள் அருந்தும் **போதைப் பொருள்கள், அறிவை வலுவிழக்கச் செய்கின்றன.** கீழினப் படைப்புக்களின் வினைகளெல்லாம் சிந்தனைக்குட்படுத்தப் படாதவை. அவ்வினைகள், வெகுவாக, அவயவங்களின் அசைவுகளாகவே அமைகின்றன. ஆனால் **மனிதனின் செயல்கள்,** தசைக்கட்டுக்களாலான, சலனங்கள். மட்டுமல்ல; பெருமளவு, **மனத்திற்கும், புத்திக்கும் உட்படுத்தப்பட்ட செயல்களாம்.** எந்த வினையும், அது செயல்படுமுன், மனிதன் சிந்தனைக்குட்படுத்தப் பட்டு, அவன், அறிவால், வினையின் குண தோஷங்களை, அலசிப்

பார்த்து, அங்கு, தன் உணர்ச்சிகளுக்கும் அவன் இடம் கொடுத்து, இவ்விரண்டுக்குமிடையே, போர் மூண்டால், வெற்றியடையும் கட்சியை, மனம் ஒப்புக்கொண்டு, கர்மேந்திரியங்கள் மூலம் வினையாக வெளிப்படுகிறது. இம்மாதிரியான உட்போரில், மனச்சாட்சி தர்ம ரீதியான வழியே நடக்கும்படி அறிவின் மூலம் தூண்டு கிறது. மானிட வர்க்கம், அறிவைப் பெரிதும் பாராட்டிப் பேணி வளர்ப்பது மிகவும் முக்கியமான கடமை. அறிவு என்பது, ஆன்ம அறிவாகிய உண்மையைக் குறிப்பதாம். இந்த ஆன்ம அறிவிலேயே, தர்ம உணர்ச்சிகளுக்கு இடம் உண்டு. VII-11-ல் கண்ணன் பகர்வதாவது — நான் காமமும், வெறிக்குணங்களு மற்ற, பலமாகவும், உயிர்களில், தர்மத்திற்கு முரண்படாத, ஆசை யாகவும் இருக்கிறேன். தர்மரீதியான ஆசைகளுக்கு வாழ்க்கை யில் இடமுண்டு என்று இதனால், உறுதிப்படுத்தப்படுகிறது. இக் காலத்துப் படிப்பினால், நல்லுணர்வுகள் அழிந்து போய், தீயவைகள் காளான், நாய்க்குடைபோல் உதிக்கின்றன.

இன்று உலகில், பொய்யும், களவும், கொலையும், விபசாரமும், பெருக் கெடுப்பதேன் ? போதைப் பொருள்களின் அளவு கடந்த உற்பத்தியும், உபயோகமுமே, இப்பயங்கரமான தீயவிளைவுகளுக்குத் தகுந்த வாய்ப் பும், சூழ்நிலையும் ஏற்படுத்துகின்றன. இவ்வெறி தரும் பொருள் களின் உபயோகம் குறைந்தால், அறிவு வலுத்து, மனச்சாட்சியின் குறுக்கீட்டால், தீய செயல்கள் வெகுவாக மட்டுப்படும். இரண்டாவ தாக, வாழ்க்கை போராட்டத்தின் கொடுமையைத் தணித்துக்கொள்ள வேண்டும்; இவ்விரண்டுமே, தனி மனிதன், அவனவன் கையாள வேண்டிய முயற்சிகளாம். அரசாங்கத்தையோ, சமூகத்தையோ எதிர்பார்த்து நிற்பது, தன்னையே ஏமாற்றிக் கொள்ளும் மடமை யாகும். சாதாரணமாக, சுயநலங்கருதியே, நாம் தீயவழியில் செயல் படத் துணிகிறோம். இம்முடிவுக்கு வருமுன், நம்முள், போராட்டம் நிகழ்வதைக் குறிப்பிட்டோம். ஆசைகளாகிய நம் மட்டரக உணர்ச்சி களுக்கு, நம் மனச்சாட்சியின் போக்கு ஒரு இடையூருக அமைகிறது. இந்த ஆன்மக்குரல், அறிவின் மூலம், தீய எண்ணங்கள் நம்மை ஆட்கொள்ளாமல் தடுக்க முயலுகிறது. இழிவான குணங்களின் காரணமாக, நாம் இத்தடையை வெறுத்து, அதை யொழிக்க, ஏதாவது, போதைதரும் பொருளையுட்கொண்டு, புத்தியை மடியச் செய்து விடுகிறோம். தீய உணர்ச்சிகளை, எதிர்க்கவோ, தடுக்கவோ, புத்தி எழாததினல், மனம் ஆசைகளுக்கு இடமளிக்கின்றது. பெரிய

யந்திர சாலைகளிலும், ரயில்வே நிலையங்களிலும், "கண்ட்ரோல் அறை", என்ற அதிமுக்கியமான கேந்திரம் ஒன்று உண்டு. அதில் "கண்ட்ரோலர்", என்ற கட்டளை பிறப்பிக்கும் உயர் அதிகாரி இருப்பார். இவர், ஒரு அணுப்பிசகுக்கு இடமளித்தாலும், பெரும் ஆபத்து நேரிடும். அதேபோல், மனிதனுள்ளும், கண்ட்ரோலர் என்ற மனச்சாட்சி, செயல்படுவதில் கடுகளவு தடை ஏற்பட்டாலும், ஜீவனுக்கு ஆபத்து நிச்சயம். மனச்சாட்சியின் துணைபெற்றே, நம் பகுத்தறிவு செயல்பட்டு, நல்லவை, தீயவை எனப் பிரித்துக்காட்டுகிறது. பகுத்தறிவையே, பயனற்றதாக்கி விட்டால், நன்மை, தீமை யென்ற பாகுபாடில்லாமலே ஜீவன் செயல்பட்டு வீழ்ச்சி பெறும். தயக்கமில்லாமல் பொய் மொழிவதும், எளிதில் கோபங்கொண்டு, மிருகத்தன்மையடைவதும், பகுத்தறிவின் செயலற்ற நிலையின் விளைவேயாம்.

பொய், களவு, சூது, விபசாரம் செய்பவர்கள், மட்டுக்கடங்காது குடிப்பதும், புகைப் பிடிப்பதுமேன்? இக்கொடிய பழக்கங்களைக் கையாளும், எவரும், ஒரே காரணத்தின் பொருட்டே, இவற்றை மேற்கொள்ளுகிறார்கள். அவர்களின் மனச்சாட்சி, அவர்களின் தீய நடத்தைக்குச் சிறிதேனும் இடந்தருவதில்லை. எனவே, மனச்சாட்சியை "மடிய"ச் செய்ய இம்முறைகளைக் கடைப்பிடிக்கிறார்கள்; அடிமையும் ஆகி விடுகிறார்கள். தெய்வக் குரலை யொழிக்க, நம்மால் இயலாது. ஆனால், நம்மை, நாமே செவிடாக்கிக் கொள்ள இயலும். இதையே போதையளிக்கும் பொருள்கள் செய்கின்றன. இக்கொடிய, பழக்கங்கள், முதலில், ஒரு சங்டமான நிலையினின்றும் தப்பக் கையாளப்பட்டுப், பின் கைவிட முடியாத பழக்கமாக அமர்ந்துவிடுகின்றன. ஒரு மனிதன், சில துறைகளில், மேதாவியாக இருக்கலாம். ஆனாலும், இக்கொடிய பழக்கமுள்ள எவரும், நீதி, அநீதி, என்றவேற்றுமையை உணர்ந்து, தர்ம ரீதியில் செயலாற்றும் திறமையை, நாளடைவில் இழந்துவிடுகிறார். சுயநல மேலீட்டால், எந்தவிதமான அநீதியையும் இழைக்கத் தயங்க மாட்டார். இக்காலத்தில், பொய்ப் பிரசாரங்கள், காட்டுத்தீபோல், எங்கும் பரவுவது ஏன்? மனச்சாட்சி "மடிந்து" போய் விட்டது; புகையும் மதுபானத்தின் ஆவியும், புத்தியை மூழ்கடித்துவிட்டன. இவ்வாறே, பொல்லாங்கு உலகில் ஏற்படலாயிற்று. மனிதனின் இழிவான ஆசைகளே, அவனவன் பாவத்தின் வித்து.

முன்வினைப்பயன், எவ்வாறு, ஜீவனின் குணப்போக்கையும், சூழ்நிலையையும் உருவாக்குவதில் பங்கு கொள்வதென்பதைக் கண்டோம். என்றாலும், பாமரமக்கள், நொந்து, கூறுவதுபோல், முன்வினைம்

பயன்கள், நம் புதிய வாழ்வை, எல்லாவிதங்களிலும், கட்டுப்படுத்தா. "விதி" என்று தவருக எண்ணும் அன்னிய சக்தியாதொன்றும், படைப்பில் இல்லை. இயற்கையின் சக்திகள், கிழினங்களே, விதிபோல், கட்டுப் படுத்தி, ஆண்டாலும், மனிதன், அவைகளை வென்று செயலாற்றும் திறம்படைத்தவன். இவ்வுலகம், தெய்வீக ஆணைக்கு அடங்கியே இயங்கு கிறது. மனிதன், தன் ஆசைகளின் போக்குப் போல் நடந்து, வெற்றி பெறலா மென்பது, வீண் கனவே. தார்மீகமாக, பற்றற்று, சுயநலங் கருதாது, செயல்பட்டாலே வெற்றி பெறலாம். தர்மத்தை, எதிர்த்துச் செல்வது, பெரும் வெள்ளத்தை எதிர்த்து நீந்துவதற் கொப்பாம். கோடானுகோடி ஜீவன்கள் வாழவேண்டிய இவ்வுலகைப் படைக்கும் பொழுதே, அதன் நிரந்தரமான, தர்மமும், உடன் ஏற்படாகிவிட் டது. வினைகளின் பயனும், ஆதியிலேயே, ஏற்பாடான, தெய்வத் தீர்ப்பின் விதிகளுக்குட்பட்டே விளையும். தனி ஜீவனின் சுவாதீனமும், இத்தெய்வ நியதிக்குட்பட்டதே. தெய்வத்தின் தீர்ப்பு, ஒரு தனி மனிதனுக்காக ஏற்பட்டதல்ல; அவனுக்காக, அது மாறுவதும் இல்லை. எக்காலும், அமலிலுள்ள மாருச் சட்டம் அது.

சாதாரணமாக, தகுந்த வெளிப்படை முயற்சி யில்லாமல், அனு கூலமான பலன் கிட்டினுல், அதை யோகம், அதிர்ஷ்டம் என்று உலகம் கூறுகிறது. அதிர்ஷ்டம் என்ற சொல்லின் பொருளே, பயனுக்குக் காரணம், வெளிப் புலப்படாத தொன்று என்பதாம். உலக மக்கள், விதி, யோகம், அதிர்ஷ்டம் என்று, ஏதேதோ கூறி, தெய்வ அநீதி நடந்ததாக எண்ணி, பொருமையை வளர்த்து, அவதிப்படுவது, சாதாரணமாகிவிட்டது. தெய்வ நீதியில், சந்தேகங் கொள்ளும் மனப்பான்மை அதிகரித்து வருகிறது. பொய், களவு, மற்றும், தீயசெயல்கள், ராஜ நீதிக்குத் தப்பிக்கொண்டு, சிலரைச் செல்வாக்கு டையவர்களாகவும், செல்வம் படைத்த சீமான்களாகவும், ஆக்கிவிடு கின்றன. "தெய்வ நீதி எங்கே?", என்று பறிகொடுத்தவன் பரித விக்கின்றுன். சிலர், தெய்வ நம்பிக்கை யிழந்து, தாங்களும் தீய வழியைப் பின்பற்றத் துணிகின்றுர்கள். கயவர்களே இப்புவியில், சுகவாழ்வு பெறுகிறுர்களென்றும், நல்லோர் அவதிப்பட்டு, ஏழ்மை யினுலும், தாழ்வாலும், துன்புறுகிறுர்களென்றும், இந்த அநீதி களுக்கு ஈடு, இங்கு, இவ்வாழ்வில் கிட்டாமல், மறுபிறவியிலே பெறுவதாகத் தவருன கருத்துக் கொள்கிறுர்கள். பணம் படைத்த வனே, சுகவாழ்வடைகிருன் என்பது, ஒரு பெருந் தவருன எண்ணம். பொருமையால் உதித்தது; உண்மைக்கு மாருனது. "அர்த்தம் அனர்த்தம், நாஸ்தி, தத:, சுகலேச: சத்தியம்". பணத்தால்

எள்ளளவு சுகமும் இல்லை, இது சத்தியம் என்று ஆதிசங்கரர், தம் பஜகோவிந்தத்தில், உறுதியளிக்கிறார். ஆன்ம நம்பிக்கை யுள்ளவர்கள், இவ்வாறு, பணப்பித்துப் பிடித்து, ஏங்கிப் பரிதவிக்க மாட்டார்கள். மனச்சாட்சியைப் போக்கடித்தவர்களே பணத்தைப் போற்றுவார்கள். இப்புவியில், தெய்வநீதியில்லை என்பது உண்மையாகாது. குற்றமும், தண்டனையும் இணைபிரியாது நிற்பவை. மிளகாயை மென்றவன் நாக்கு, எரிச்சல் எடுத்து அவதிப்படுவது நிச்சயம். இதுவே, பரமனின் நியதி. ஆனால், இது செயல்படும் முறை, நமக்கு எளிதில் விளங்குவதில்லை.

ஒவ்வொரு மானிட ஜீவனுக்கும், உள், என்றும், புற மென்றும், இரு நிலைகள் உண்டு. உள்நிலை யென்பது, ஜீவனின் ஆத்மார்த்தமான பாகம். இதில் அடங்குவது, மனச்சாட்சி, மனம், புத்தி, குண இயல்பு, உள்ளம்; இவை எளிதில் ஊறுபடுபவை. இவற்றில் ஏற்படும் மாறுதல்கள், ஜீவன் தன்னுள்ளேயே அனுபவிப்பதால், வெளித்தென்படா. தனி நபரின் இந்த உள் அனுபவங்கள், உலகம் எளிதில் காணவோ, அறியவோ முடியாதவை. புற நிலை என்பது, ஜீவனின் சூழ்நிலையாம். இதில் அடங்குபவை, வெளித் தோற்றமுடைய, உடல் நிலை, பொருள், பந்துக்கள், பதவி, இவையே. இவ்விரு நிலைகளும், இணை பிரியாது நின்றாலும், வெவ்வேறான நிலைகளே. ஜீவன் ஆற்றிய ஒவ்வொரு வினையும், உடனுக்குடன், அஜ்ஜீவனின் உள் நிலையையே தாக்கும். இத்தாக்குதல், ஏற்பட்டு, அதற் கேற்ப, வெகுமதியையோ தண்டனையையோ, கை மேல், அளித்து விடுகிறது. தனி ஜீவனின் மனச் சாட்சி, மனம், புத்தி, உணர்ச்சிகள் இவை மூலம், வினையின் எதிர்த் தாக்குதல் ஏற்பட்டு, ஜீவனை ஊடுருவி, எதிர் விளைவை உண்டாக்குகிறது. குற்றம் செய்தவனின் மனம், பயத்தால் தாக்கப்படுகிறது. பயத்தைப் போல் அவதியளிக்கும் கடும் தண்டனை வேறு பெற முடியாது. பயத்தின் கொடுமையை, "கடன் பட்டார் நெஞ்சம் போல், கலங்கினான் இலங்கை வேந்தன்," என்று கம்பர் வர்ணிக்கின்றார். (ஆனால், இதை, இக்காலத்து நியாய ஸ்தலங்களில் கையாளும் இளக்காரமான முறை இன்று பொய்யாக்கி விட்டது.) குற்றம் செய்த மனத்தின் நரக வேதனைகளை, வெளியுலககோர் அறியார். தீய செயல், தண்டிக்கப்படாமலே தப்பியதாக, வெளி யுலகம், தவறாக நினைத்துத் தானே அவதியுறுகிறது. இதுவும் ஒரு நியாயமான தண்டனையே!

அரசன், அன்றே கேட்பான்; தெய்வம் நின்று கேட்குமென்ற உலக மொழி, உண்மையை முழுதும் கூறவில்லை. அரச நீதி தவறினாலும், தெய்வ நீதி அன்றே கேட்கும்; நின்றும் கேட்கும். பின்னது, குற்றம் செய்த ஜீவன் தன் சூழ்நிலையில் அடையப்போகும் தண்டனையாகும். இது வெளிப்படையானதால், உலகம் காணக்கூடும். இத் தண்டனையின் வடிவம், வியாதி, பொருள் நஷ்டம், அவமானம், மரணம், இவை போன்றவை. இவை, சாதாரணமாக, தீயவினையாற்றிய உடனேயே உண்டாகா. ஆதலால், வினைக்கும் அதன் பயனுக்குமுள்ள தொடர்பை, காலதாமதத்தால், உலகம் கண்டு கொள்ளாது, தர்ம நியதியைத் தூஷிக்கின்றது. தெய்வ நியதியில், அவநம்பிக்கையும், சந்தேகமும், கொள்பவர்களைப்போல் அவதிப்பட்டு, அழிவு அடைபவர்கள் கிடையாது. "ஸம்சய ஆத்மா, வினச்யதி", சந்தேகங் கொண்டவன் கேடடைவான். விஞ்ஞானத்தின் ஒரு பேருண்மை:— "எதிர்த்தாக்குதலில்லாத வினை கிடையாது; வினையும் அதன், எதிர்த்தாக்குதலும், ஒன்றையொன்று அளவையில் சமமானாலும், தன்மையில் நேர்மாறானவை." தீய வினையாற்றும் கயவன், தன்னலம் பேணுகிறான். ஆனால், அவ் வினையின் எதிர்த்தாக்குதல், அவனுக்கும் கேடுவிளைவிப்பதாகவே ஏற்படும். தெய்வ நீதியினின்றும் தப்புவது கிடையாதென்றே கர்மவிதி கூறுகிறது.

ஒரு வினையையும், வேறு ஒரு வினைப்பயனையும், குழப்பிக்கொண்டு உலகம் வெகுவாக, ஏமாந்து, துயர்ப்படுகிறது; தர்மத்தின் போக்கையும் சந்தேகிக்கின்றது. உதாரணமாக, ஒரு கல்லூரி மாணவன், தன் பெரும் உழைப்பால், முதன்மையான வெற்றி கண்டு, அதன் காரணமாக, உபகாரச் சம்பளம் அடைகிறான். இந்த உதவி பெற்றபின், விரும்பத்தகாத சூழ்நிலைகளை ஏற்படுத்திக் கொண்டு, படிப்பில் பின் தங்கிவிடுகிறான். அவன் பெறும் உபகாரச் சம்பளத்தையும், இப் பொழுது அவன் காட்டும், அசட்டையையும், இணைத்துக் கூறுவது மடமை என்பது தெளிவு. என்றாலும் உலகம், எட்டி, ஆழ்ந்து, சிந்தனை செய்து, முடிவுக்கு வரும் பழக்கத்தை ஒரு பொழுதும் கையாளுவதில்லை. மேலிட்டவாரியாக, ஒன்றுக்கொன்று, தொடர்பில்லாததைக் கூட்டிக் குழப்பி, வீண்பழி சுமத்தி, அப்பிழைக்குத், தானே, தன் மன அவதி மூலம் தண்டனையளித்துக் கொள்கிறது. தர்மம், ஒரு பொழுதும், அணுவேனும் பிசகாது. தீயவினை, உடனுக்குடன் தண்டனை பெறுவதுறிதி. மானிட வர்க்கம், பரமனால் அளிக்கப்பட்ட, மனம், அறிவு, நாக்கு, இவற்றால் பரமனைத் துதி செய்யவேண்டியதை

விட்டு, தூஷணையில் ஈடுபட்டால், மனிதனின் வீழ்ச்சிக்கு எல்லையே யில்லை!

மானிடன் வினையாற்றிப் பயன் அடைகிறான். பொருள், பந்துக்கள், பதவி, புகழ், இவைகளுக்காக, அவன் படும்பாடும், எடுக்கும் முயற்சிகளுக்கும், தழுவும் அபாயங்களுக்கும் எல்லையில்லை. ஆழ் கடலில் மூழ்குவான். அம்புலிக்கு ஏகுவான். இவை யெல்லாம், உடலால் தேடப்பெற்று, அவன் ஏற்படுத்திக்கொண்டவை. உடலை யொட்டிய யாவும், உடலுடன் அழிவதில் தவறில்லை. இவைகளையே மரணம் பறிமுதல் செய்கிறது. உலகம் போற்றும் இவைகள், உண்மையில் நமது உடமைகளல்ல. நமக்குரியவை, நம் மனம், புத்தி, குணங்கள், இவற்றுடன் ஒட்டிய, நன்மை தீமைகள். மரணம் இவற்றைப் பறிமுதல் செய்ய முடியாது. நமது உடமைகளாகிய இவை மரணத்தால் தடை செய்யப்படாது, நம்மை எப்பிறவியிலும் பின் பற்றுகின்றன. மரணமானது, நம் உலக உடமைகளைத் தீண்டி, நம் எல்லோரையும் மட்டப்படுத்தி, தனி மனிதருள், உலகம் ஏற்படுத்தும், ஏற்றத்தாழ்வை, சமப்படுத்துகிறது. மரணம், நம் பாவ, புண்ணியங்கள், மனம், அறிவு, நாம் சமைத்துக்கொண்ட குண இயல்பு, இவைகளையும் பறித்து, எல்லா ஜீவன்களையும் சமமாக்கி விட்டால், பின், கர்மவிதியும், மறுபிறப்பும் செயல்படக்காரண மற்றதாகிவிடும். பிறவியில், ஜீவன்களின் வேற்றுமைக்குக் காரணம், அதனதன் மனம், அறிவு, குணஇயல்புகளேயாம். விவேகமுள்ள மானிடன், மரணத்தால் பறிமுதல் செய்து அடிபட்டுப்போகும், பணம், பதவி, பெண்டு, பிள்ளை, புகழ், பொருள், இவைகளுக்காகத் தனது உயிரையும், வாழ்க்கையையும் வீணடிப்பானா? அல்லது, இவைகளையும் பரமனின் அன்பளிப்பாகக் கருதி, அவைகளுக்கு தான் தர்மகர்த்தா என்ற நிலையை மனத்தில் பதிய வைத்து, வாழ்க்கையில் செயல் படுவானா? இந்த இடைவழி சம்பத்துக்காக, தான் அடைய வேண்டிய நற்கதியைப் பாழடிப்பது, மானிடனின் துர்ப்பாக்கியமே.

உலகில் அநேகர், உடலுழைப்பை, ஏழைப் பாட்டாளிக்கென்றே ஒதுக்கி விடுகிறார்கள். உணவு உண்ணும் உழைப்பைத் தவிர, மற்ற வேலைகளுக்கெல்லாம் பணியாட்களைத் தேடுகிறார்கள். உழைப்பின்மையால், உடல் கேடடைந்து, கையிலுள்ள வெண்ணெய்யை எண்ணாமல், நெய்க்கு அலைபவர்கள் போல், தங்கள் சொந்த வேலைகளைச் செய்யாது, தேகப் பயிற்சிக்காக, நவகளியாட்டங்களில் பணத்தையும், பொழுதையும் வீணடிக்கிறார்கள். இவர்களின் வாகனங்கள்,

இவர்கள் கால்களை மூடமாக்கி விடுகின்றன. திரைப்படக்காட்சிகள் இவர்களின் பார்வையைக் குருடாக்கிவிடுகின்றன. சமூகம் சமைக்கும் வேண்டாத தேவைகளுக்கு, இவர்கள் மனமும், புத்தியும் முதல் பலியாகின்றன. எளிய வாழ்க்கையும், உயரிய எண்ணங்களையும் கையாண்டு, ஏழைகளுக்கு வழி காட்டியாக வேண்டிய இவர்கள், தங்களிலும் அதிகம் செல்வம் படைத்தவர்களைப் பின்பற்றி, தாங்க முடியாத டாம்பீக வாழ்க்கை நடத்தி, "வறுமை, வறுமை" என்று எந்நாளும் ஓலமிடுவதே இவர்களின் திவ்ய நாம சங்கீர்த்தனம். உடலுழைப்பே, பசியைத் தூண்டும்; பசியே, உருசியை உண்டாக்கும். உடலுழைப்பில்லாதான், பசியின் உருசியைக் கண்டறியான். இயற்கை, எவ்வுயிருக்கும், உடலுழைப்பை, இன்றியமையாததாக அமைத்திருக்கிறது. கீதை IV-10-ல் உடலுழைப்பையே, யக்ஞம் என்று கூறி, "இதனால், நீங்கள், வளர்ச்சி யடைவீர்களாக. இது, உங்களுடைய, ஆசைகளை நிறைவேற்றுமாக" என்று உறுதியளிக்கின்றது. பணத்தால், அகந்தை கொண்ட சோம்பேறியே, தன் உடலை, உலோபி பணத்தைக் காப்பது போல், உபயோகியாது, பாழ்படுத்துவான்.

விதி, அதிர்ஷ்டம், என்ற தெய்வத் தீர்ப்பு, உழைப்பில்லாமல் பயன்தரா. காலா காலத்தில், போதிய முயற்சி எடுத்தாலே, தெய்வத் தீர்ப்பு செயல்பட இடமேற்படும். உழைப்பில்லாமல், கிட்டும், அதிர்ஷ்டம், நீரில் இட்ட சுடாத மண்பாண்டம் போல் கரைந்து மண்ணாகிவிடும். அதிர்ஷ்டம், எப்பொழுது, எவ்வழியாகக் கிட்டுமென்பது, யாரும் அறியார். அதையடைந்த பின்னரே, அதைப்பற்றி அறிய முடிவதால், முயற்சியை ஒரு பொழுதும், கைவிடலாகாது; வினையின் பயன் யாது, என்று, முன்னமே அறிய இயலாததால், அப்பயன் அனுகூலமாயினும், பிரதிகூலமாயினும், அதைக் குறித்து, முன் கவலை ஏதும் எடுப்பது வீண். எது வந்தாலும் ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மையை உண்டாக்கவேண்டும். "பலனில் பற்றுதல் கொள்ளாது, உன் கடமையைச் செய். அதுவே உன் பொறுப்பு," என்று கீதை முழங்குகிறது. தன்னடக்கமும், நல்லொழுக்கமுமுள்ள அறிவாளிகள், அதிர்ஷ்டத்தின் போக்கை எதிர்பாராமல், தங்களால் இயன்ற அளவு முயற்சி யெடுத்து, தர்மத்திற்கு முரண்படாத செயல்களிலே ஈடுபடுகிறார்கள். வெற்றியடைந்தாலும், அவர்கள், குதூகலமும், கொந்தளிப்பும் அடைவதில்லை; தோல்விகிட்டினாலும், வருந்துவதில்லை. வெற்றி, தோல்விகளைச் சமமாகப்பாவித்து, பலனுக்குப் பொறுப்பு பரமனே என்றும், அப்பலனை அவரே, உலக

நன்மைக்குதவும்படி செய்து கொள்வாரென நம்புகிறார்கள். நாம் பொறுப்பில்லாத ஒன்றைப்பற்றிக் கவலை கொள்வதையும், அதையே, எதிர் பார்த்து; வினையாற்றித் தளைகளை ஏற்படுத்திக்கொள்வதையும், கீதை வன்மை யாகக் கண்டித்து, கைவிடும்படி கட்டளையிடுகிறது.

மேனாட்டு விஞ்ஞானிகளில், சில தீவிர வாதிகள், மனத்தைத் தவறாக, மறுக்கின்றார்கள். ஆனால், மனமில்லாது வினையே இல்லை. வாக்கும், மெய்யும், மனம் ஈடுபட்டாலே செயல்பட முடியும். கீழே கூறப் படும் உண்மைகள் வாசகர்களின் அதிதீவிரமான கவனத்திற் குரியவை. அதைப் பின்பற்றும் ஜீவன், துன்பத்தைக் கனவிலும் கூட உணராது. மனமே, நம் இன்பத்திற்கும், துன்பத்திற்கும் கருவூலம். எல்லா இரட்டை நிலைகளையும் உண்டு பண்ணுவதும், அனுபவிப்பதும் மனமே. தானே, சமைத்துக்கொண்டதைத்தானே உண்ணுகிறது; இந்த துர்ப்பாக்கியத்தைத் தவிர்க்கவே, யோகப் பயிற்சியும், யோக நிலையும் எனத் தெளிவாக்கினோம். இவ்வுலகில், நம் எண்ணங்களே, நம்மைப் பாதிக்க முடியும். நம் மனத்தில், எண்ணங் கள் உண்டாகாவிட்டால், பிறர் எண்ணங்களும், சொற்களும், செய்கைகளும், நம்மை அணுகமுடியாது. ஒரு வினையை, நாம் ஆற்றினாலும், பிறர் ஆற்றினாலும், அதைப்பற்றிய எண்ணம் நம் மனத்தில் உதிக்காவிடில், அச்செயல் நம்மை பாதிக்காது. வெடி குண்டுகள் சரமாரியாக வெடித்து, ஒரு முழுச் செவிடனைச் சுற்றி விழுந்தாலும், அவன் அதனால் பீதியடைவதில்லை. ஆனால், மற்ற எவரும் பயத்தால், தற்காப்பின் நிமித்தம், ஓட்டமெடுப்பார்கள். செவிடனுக்குத் தற்காப்புத் தேவையில்லையா ? பயமில்லையா ? உண்மை என்னவெனில், அவன் மனது, வெடிக்கும் குண்டுகளை அறியவில்லை. அச்செயலைப் பொறுத்தவரை, அவனது மனது சூன்ய நிலையில் இருக்கிறது. மனம் பாதிக்கப்படாவிட்டால், இன்பம், துன்பம், பயம், இவை போன்ற இரட்டை நிலைகளுக்கு இடமேயில்லை. செவிடன், இயற்கையின் குறைபாட்டால், தன் மனத்தை வெடி குண்டின் நிகழ்ச்சி தாக்கவொண்ணாத நிலையை அடைந்து விட்டான்.

இதேபோல், நம் காதுகளுக்கு எட்டாத தூஷணையால், நம் மனம் கொந்தளிப்படைவதில்லை. ஆனால், அவ்வசை மொழிகள், நம் செவிக்குட் புகுந்து, மனத்திற்கு எட்டி, மனம், அவற்றைச் சிந்தனைக்கு எடுக்குமானால், நிச்சயமாக, நாம் துன்பமடைகிறோம். இத்துன்பம், பிறனுடைய தூஷணையில், இல்லை: அது, நம் மனத்தின் எதிர்த்

தாக்குதலே யாம். பிறர், நம்மை இகழ்வதும், புகழ்வதும், அவர்களின் மனத்தீர்மானமே யாகும். பிறர் மனம், என்ன நினைத்து வினை யாற்றினாலும், நம்மைத் துன்பப்படுத்துவது, நம் மனமே யல்லாது, பிறர் மனமோ, வினையோ அல்ல: தவிர, பிறர் மனமும், செயலும், நம் கட்டுப்பாட்டில் நிற்கா. ஆனால், நம் மனமும், செயலும், நாம் முயன்றால், நம் கட்டுப்பாட்டிற்குள் நிற்கும். மானிட வர்க்கத்திற்குப் பரமனின் அன்பளிப்பில், இது மிகவும் அவசியமான, முக்கியமானதொரு சக்தி. இதை நடைமுறையில் கையாளுபவர்கள் அரிதாகிவிட்டார் கள். பித்தனின் மனம் அவனது கட்டுக்கடங்கியதல்ல; அதே போல், அவனுடைய வினைகளும், அவன் கட்டுக்கடங்காதவை. இவ்வுலகில், மானிடன் அடையும் துன்பங்களுக் கெல்லாம் மூல காரணம், அவன், தனக்கு வசப்படக்கூடிய தன் மனத்தை யடக் காமல், விட்டு விட்டு, பிறர் வசமுள்ள, அவர்களின் மனத்தை யடக்கியாள எத்தனிப்பதே. கைகூடுவதைச் செய்யத் தவறியும், கூடாததை முயன்றும், தோல்வியுற்று, ஏமாற்ற மடைவதும், இரு பெருந்துன்ப நிலைகளாம். பிறர் வினைகள், அவர்கள் இஷ்டத்துக்கு ஏற்படுகின்றன. அதில் நம் இஷ்டம் குறுக்கிட்டால், நமது தோல்வி நிச்சயம். பின், வருந்துவதில் பயனுண்டோ? பிறர் வினைகளை, நாம் கட்டுப்படுத்த நினைப்பது, பித்தனுக்குரிய இயல்பாகும்.

நம், பெண்டு, பிள்ளைகளோ, நம் ஆணைகளையோ, புத்தி மதியையோ, சட்டை பண்ணுவதில்லை என்று ஓலமிடுவது இன்று அதிகரித்துக் கொண்டு வருகிறது. பெரியோர் வார்த்தைகளைச் சிறியோர் மதிப்பது, அது அந்தக் காலம், என்றாலும், புத்தி புகட்டுவதும், எச்சரிக்கை செய்வதும், பெரியோரின் கடமையாம். அதைத் துணிவுட னும், நல்லெண்ணத்துடனும், பலனைக் கவனியாது, செய்தாக வேண்டும். செய்த பின், நம் மனம், ஏன் புண்படவேண்டும்? நம் பெண்டு, பிள்ளைகள், நம்மை மதிக்காமல், நம் எச்சரிக்கையைப் புறக் கணித்து வினையாற்றிப் பின்னால் கஷ்ட நஷ்டங்களுக்குள்ளாவார் களே, என்ற கவலை, நம்மை, இன்றே வாட்டி, அதனால், நாம், அவதிக் குள்ளாவது முறையா? அவர்களின் வினைக்கு, நாம் எவ்வாறு, பொறுப்பாவோம்? வினையைத் தீர்மானிப்பதும், அதைச் செய லாக்குவதும், அவர்களே. இவ்வுடலால், ஏற்பட்ட ஆசாபாசங்கள், நம் மனத்தைப் பாதிக்கின்றன வென்பது, யார் செயல், யார் குற்றம்? நம், மனம் நமது ஆட்சிக்குட்பட்டதில்லை என்றால், நாம் துயரப் படுவதும், நமக்கு உரித்தான தண்டனையேயாம். பொய்யான இப்

பாசத்தால் துன்புறுவதைத் தவிர, வேறு பயனுண்டோ? பாசத்தின் அடிப்படை சுயநல ஆசைகளே. அவை ஒரு பொழுதும் ஒருவருக்கும் நன்மை பயக்கா. ஆசாபாசங்களை, விட்டொழித்தாலே, உலகில் துன்பம் நீங்கும்.

பிறர், செய்யும் வினையைப் பொருட்படுத்தி, நம் மனத்தினுட் புகவிட்டு, அங்கு அதன் எதிர்த்தாக்குதலை யுண்டு பண்ணிக்கொண்டு, நாம், சுகத்தையோ, துக்கத்தையோ, ஏன் அனுபவிக்கவேண்டும்? புத்தபிரானை ஒரு மதப்பித்தன், தூஷிக்கலானான்: அவர் அவனைக் கருணையுடன் அழைத்து வினவியது, "நண்பா, உனக்குப் பிடித்தமில்லாததை ஒருவர், உனக்களித்தால், நீ என்ன செய்வாய்? உடன், அவன் "நான் அதை யேற்க மறுத்து விடுவேன்," என்றான். "அப்படியானால், உனது தூஷணையை, நீயே எடுத்துக் கொள். எனக்கு வேண்டாம்," என்றார். புத்தர் காட்டிய வழியைப் பின்பற்ற, நம் மனம், நமது கட்டுக்கடங்கவேண்டுமே? நம் மனத்தை அடக்கியாண்டு பழக்கியிருக்கின்றோமா? நம், மனம், நம் விருப்பத்திற்கு விரோதமாக, எங்கெங்கோ அலைந்து, இன்ப துன்பங்களை வாரிக் கட்டிக்கொண்டு வருகிறதே. கோழைகளாகிய நமக்குத் துன்பங்கள் பிறப்புரிமைகளாகிவிட்டன. நம் மனம் நமது ஆட்சிக்கடங்காமல், தன் இஷ்டம் போல் நம்மை ஆட்டி வைக்கின்றது. நாமே, நம்மை, மதித்துக் கொள்ளாமல், பிறர் மதிப்பையும், அபிப்பிராயங்களையும், பெரிதாக எண்ணி, கவலைப்படும் பிறவியாகிவிட்டோம். நாம் எதைச் செய்ய முற்பட்டாலும், எதை நாம் எண்ணினாலும், பிறர், அவற்றை எவ்வாறு மதிப்பிடுவார்களோ, என்ன அபிப்பிராயம் தெரிவிப்பார்களோ, என்ற பீதியே, நம்முன் முதன் முதலாக எழுந்து, நம்மை வாட்டுகிறது. பிறர் மதிப்புக்கும், நல்லெண்ணத்திற்காகவே, நவநாகரீக மனிதன், வாழ்க்கை நடத்துகிறான். சுயமதிப்பும், சுவாதீனமும், அவனுக்கில்லை. அவற்றைப் பிறர் மதிப்புக்கு அடகு வைத்து விட்டான். உணவோ, உடையோ, பேச்சோ, வினையோ, எல்லாம், பிறர்மதிப்பை யடையவே நடைபெறுகின்றன. இத்தன் மானங் காக்கப்படாத, வாழ்க்கையில் இன்பத்திற்கேது இடம்? வாழ்க்கையைத் தன் கட்டுப்பாட்டிற்குள்ளாக்காமல், பிறர் மனத்தின் கட்டுப்பாட்டிற் கடிமையாக்கியவனை, மானிடனென்று கூற, நாவும் கூசாதோ? ஏழைக்கேது இன்பம் என்பார்கள்? அது பொய். மனத்தைப் பறிகொடுத்த அடிமைக்கேது இன்பமென்போம் நாம், மெய்யாகவே.

# VII. வர்ண, ஆச்ரம தர்மங்கள்

கர்ம விதியை விளக்கிய பின், அதை யடுத்து நிற்பது, வர்ண தர்மம். இந்த தர்மத்தை, ஹிந்து மதத்துடன் பிணைத்துக் கூறுவது முறையே என்றாலும், சமுதாய வாழ்க்கையின், அடிப்படையாகவே இது ஏற்பட்ட தென்பதையும், மனத்தில் கொள்ளவேண்டும். சமுதாய வாழ்க்கையும், அதன் கோட்பாடுகளும், காலம், நோக்கம் இவைகளுக்கு ஏற்ப, மாறியமைக்கப்படுகின்றன. வர்ண தர்ம முறை அமுலில் இருந்த காலத்தில், சமுதாய நோக்கமும், அமைப்பும், தற்காலத்திலுள்ள நோக்கத்திற்கும். அமைப்பிற்கும் முற்றிலும் நேர்மாருகவே இருந்தன. அக்காலத்து சமுதாய வாழ்க்கைக்கு, இந்த வர்ண தர்ம முறை, அற்புதமான விதத்தில், பொருத்தமாயிருந்தது. பல்வேறு இனத்தினரும், ஒரே இனத்தைச் சார்ந்த பல்வேறு கோஷ்டிகளும், ஒற்றுமையாகவும், அமைதியுடனும் சேர்ந்து வாழ முடிந்தது. முதலாவதாக, அக்காலத்தில், மானிட வாழ்க்கையின் நோக்கம், தனி மனிதன் ஆன்ம வளர்ச்சி யடைந்து, பிறப்பு, இறப்புச் சுழலிலிருந்து, விடுதலையடைவதேயாம். இதில், தனி மனிதனே முக்கியமாகவும், சமுதாயம், அவன் தன் நோச்கத்தையடைய வாய்ப்பு அளிக்கும் உபாயமாகவும், யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டது. வாழ்க்கைப் போராட்டமென்பது அக்காலத்தில் அதிகம் கேள்விப்படாத தொன்றே என நினைக்க இடமுண்டு.

தனி மனிதன், தன் உடமையாக்க முடியாததும், மரணத்தால் பறிபட்டுப் போகும் உலகப் பொருள்களை ஈட்டிக் குவித்து, பிறர்க்கில்லாது செய்யும் உலோபியின் நோக்கம், மானிட வர்க்கத்தை இக்காலத்தைப் போல், அக்காலத்தில் ஆட்கொள்ளவில்லை. ஒவ்வொருவரும், தத்தம் ஆன்ம வளர்ச்சிக்கே பாடுபட எண்ணி, அதையடையவே செயல்பட்டார்கள். இந்தக் குறிக்கோளை எட்டுவதில், ஒருவருக்கொருவர், போட்டியின் காரணமாக, எதிர்க்கவோ, முரண்பாடான செயல்களால் மற்றவர் போக்கைத் தடை செய்யவோ, இடமே கிடையாது. அவரவர் வேகத்தின்படி, முன்னேற்றங்காண, பிறர், வழித்தடையாக நிற்க முடியாது. தேவைக்கு அதிகமான பொருள்களை எவ்வாருயினும் கைவசப்படுத்தி, பிறர் தேவைக்கு அவை எளிதில் அளிக்கப் பெருமல் செய்வதை, இக்கால சமூகநிலை, தூண்டுவதுடன், அதற்கு வேண்டிய காப்புச் சட்டங்களும் இட்டுக்கொண்டு, பொதி சுமப்பவனே பெரியவன், என்ற கோட்பாட்டில் நடக்கும் நவீன சமுதாய வாழ்க்கையே, போட்டியையும், துவேஷத்தையும், வளர்க்கின்றது. வாழ்வே, வாழ்க்கையின் குறிக்கோளென, ஏற்

பட்டதும், எளிய வாழ்க்கை, கைவிடப்பட்டு. டாம்பீக முறைகளும், கற்பனைக்கும் எட்டாத தேவைகளும், ஊதாரிச் சிலவுகளும், தலை விரித்தாடி, தாளமுடியாத பளுவை, தனி மனிதன் சுமக்கும்படி செய்துவிட்டன. இன்று, ஆன்ம போதம் அடியோடு அகன்று, பலர் அதை மறுக்கவும் துணிந்து விட்டார்கள்.

முன்னாள் சமூகத்தையும், அதன் சுமுகமான வளர்ச்சிக்காக ஏற்பட்ட வர்ண தர்ம முறையையும், தற்போதுள்ள, தலைகீழான நிலைக்குப் பொருத்த எண்ணுவது, தலைக்காக ஏற்படுத்திய தலைப் பாகையை, காலுக்கு ரட்சையாக அணிய முயலுவதற் கொப்பாகும். நேர்மாறான நோக்குகளையுடைய, இரண்டு சமுதாய நிலைகளை எவ்வாறு ஒப்பிட முடியும்? ஒன்றுக்குத் தகுதியான முறை, நேர் எதிரான மற்றொன்றுக்குப் பொருந்தா தென்பது, நிதர்சனமான உண்மை. வர்ணாச்ரம முறை, இன்று வெகுவாகச் சிதைந்து, அதன் எலும்புக் கூட்டின், ஒரு சில எலும்புகளே தென்படுகின்றன. என்றாலும், அக்காலத்து சமுதாயத்தையும், அதற்காக ஏற்பட்ட வர்ண தர்மத் தையும் கீதையில் வெகு சுருக்கமாக விளக்கப்பட்டவாறு, அறிந்து கொள்வதால், நன்மை பயக்குமென்பதில், சந்தேகமில்லை. கீதை, ஒரு தெய்வீகமான கட்டளை. அது, வர்ண தர்மத்தை ஆதரிக்கிற தென்பதை மறுக்க முடியாது. ஆனால், கீதை வகுத்தளிக்கும் வர்ண தர்மம், இன்றைய சமுதாய நோக்குக்கு ஒவ்வா தென்பதை, யாரும் மறுக்கவில்லை. கீதை, ஒரு லட்சிய சமுதாயத்தை உருவாக்கக் கோரி, அதற்கென, ஒரு முறையையும் வகுத்துக் கொடுத்திருக் கின்றது.

இக்காலத்து சமுதாயமும், அரசியலும், அவை ஏற்படுத்திக் கொள்ளும் கணக்கற்ற சட்ட திட்டங்களும், கட்டளைகளும், காபந்து களும், தனி மனிதனின், சுதந்திரத்தைப் பறித்து, வேடுவன் வலையில் சிக்கிய மான் போல், தனி மனிதனைச் செயல்பட முடியாது அடித்து விட்டன. சேணம், கடிவாளம் இட்ட குதிரை போல், சமுதாயம் மனிதனை இட்டுச் செல்லுகிறது. ஒரு மனிதன், தன் முழுத்திறமை யையும், பொழுதையும், சிலவிட்டாலுங்கூட, நேர்மையான வாழ்க்கை நடத்த முடியவில்லை. தனி மனிதனின் பால் சமுதாயத்திற்குள்ள, ஆதிக்கமும், பிடிப்பும், அவனை ஒரு பணியாற்றும், யந்திரமாக்கிவிட்டன. முன்னாளில் தனி மனிதனுக்காகவே, சமுதாயம் ஏற்பட்டு, அவன் வாழ்க் கையை எளிதாக்கிக் கொடுத்து, அவன் திறமையும், பொழுதும், ஆன்ம வளர்ச்சிக்காக உபயோகப்படவே, உதவி செய்தது. சமுதாயத் திற்குத் தனி மனிதன் ஆற்றவேண்டிய தொண்டைத் தன் கடமை

யாகச் செய்து, ஆன்ம வளர்ச்சியை, அத்தொண்டின் மூலம் அடைய முடிந்தது. உதாரணமாக, துலாபரன் என்ற வாணிகன், பண்டங்களை நேர் சமன் நிலையில் நிறுத்துக் கொடுக்கும் வழக்கத்தில், தன் மனத்தை முழுதும் ஈடுபடுத்தி, திராசின் சமநிலைபோல், தன் மனத்தை, எவ்விஷயத்திலும், சமநோக்கடையும்படி பழக்கி, யோக நிலையின் சிகரத்தை யடைந்தான். சமூகத்திற்காக எத்தொழிலைப் புரிந்தாலும், அத்தொழிலால் ஏற்படும் வினைகள், ஆன்ம வளர்ச்சிக்குத் துணையாய் நின்றன. ஆன்ம வளர்ச்சிக்குத் தடையாயிருக்கும் உலோகாயத நோக்கங்களைப் புறக்கணித்து சமூகத் தொண்டை, ஆன்ம விடுதலைக்கு ஒருவாய்ப்பாக ஏற்படுத்திக்கொண்டார்கள். தன்னலம் பேணி, வினையாற்றுவதையே, இழிதொழிலாகக் கருதலானார்கள். தன்னல மற்ற, சமூகத்தொண்டையே, புனிதமான யக்ஞமாகக் கொண்டார்கள். எப்பணியைச் சமூகம் இட்டாலும், அதைப் பரமனுக்கான காணிக்கையாகவே ஏற்று உழைத்தார்கள். மகாபாரதத்தில், கண்ணனே, விருந்தாளிகள் உணவருந்திவிட்டுச் சென்ற இலைகளையும், அசுத்தங்களையும், சுத்தி செய்ததாகக் காண்கிறோம். உடலுழைப்பின் மகிமை எல்லோராலும் போற்றப்பட்டது. வாழ்க்கையை, ஒரு குறிக்கோளாகக் கருதாமல், ஆன்ம வளர்ச்சிக்கு ஒரு வாய்ப்பாகக் கொண்டதால், எவ்வகுப்பைச் சார்ந்தவரானாலும், தவிர்க்கவொண்ணாத, அத்தியாவசிய வாழ்க்கைப் பண்டங்களையே அடைந்து, வாழ்க்கைத்தரம், ஒரே ரீதியாகவே அமைந்திருந்தது; ஏற்றத் தாழ்வென்ற மனப்பான்மை அரிதான காலம் அது. பொருமைக்கும், மனக்கொந்தளிப்புக்கும் இடமேற்படவில்லை. ஒவ்வொருவரும், தத்தம் கடமையைப் பரிவுடன் நிறைவேற்றி, சிக்கனமான, எளிய வாழ்க்கை நடத்தி, பரமனின் எண்ணத்தையே சிந்தனையில் கொண்டு, வாழ்க்கை நடத்தலானார்கள். பொருளீட்டிப் பொதிமாடு போல் சுமந்து, மரணவாயிலில் கொண்டு சேர்க்கும் நோக்கம், பெரும்பான்மையோர் அறியாததே.

ஆன்ம வளர்ச்சியை, வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டு, சமூகத்தை நான்கு வகுப்புகளாகப் பாவித்தார்கள். இப்பிரிவு, இயற்கையின், மகாசக்தி வாய்ந்த முக்குணங்களின் அடிப்படையிலேயே அமைந்தது. குணக்கூட்டிற்குத் தகுந்த திறன், திறனுக்கேற்ப தொழில், தொழிலால் ஏற்பட்ட வர்ணம் அல்லது வகுப்பு. ஆகவே, வர்ணம் என்பது, குணபேதங்களைக் கொண்டு வகுத்த ஒரு பிரிவு முறை; இம்முறை, வளைந்து கொடுக்காத ஒரு விஷயமல்ல. படைப்பின் நோக்கமே, எல்லா ஜீவன்களும், தமோகுணத்தை ஒதுக்கி, ரஜோ

குணத்தையும் தணித்து, சத்துவ குணமே, பரிபூர்ணமாகச் செயல் படும்படி, தங்களை உயர்த்திக் கொள்ளவேண்டுமென்பது தான். இயற்கையினுல், குணவேறுபாடுகளும், அதன் மூலம் தொழில் வேறு பாடுகளும் ஏற்பட்டன. ஒவ்வொரு ஜீவனும், சமுதாய அமைப்பின் நலனுக்காகவே, பாடுபட்டாலொழிய, தனி மனிதனின் வாழ்க்கை சரிவர நடக்க முடியாது. அவரவர்களின் திறமைக்குத் தகுந்தவினை களைக் கடமையாகக்கருதி, ஈடுபடுவார்களாயின், சமூகத்திற்குச் சிறந்த தொண்டு புரிந்ததோடு, தங்கள் திறமையும் ஊக்குவிக்கப் பட்டு, மேலும் மேலும் வலுவடைய வாய்ப்புண்டு. நல்வினைகளின் மூலமே, ஒரு ஜீவன், தன்னை, உயர்ப்படியாகிய சத்துவகுண ஆட்சி யில் கொண்டு சேர்க்க முடியும். இதுவும், படிப்படியாகத்தான் செயல்படவேண்டும். தாழ்ந்த குணக்கூட்டை மாற்றி, உயர்குணக் கூட்டாக அமைப்ப தென்பது எளிதல்ல. என்ருலும், வினைகளின் மூலமே குணக்கூட்டுகளின் அளவையை மாற்ற முடியும். எந்தத் தொழிலானுலும், அதன் இழிவோ, உயர்வோ, அவ்வினையிலில்லை; வினை ஆற்றுபவரின் உள்ளத்தையும், நோக்கத்தையுமே பொறுத் திருக்கிறது. இழிவு என்று உலகம் கருதும் தொழிலை, நமது கண்யமான நடத்தையாலும், நோக்கத்தாலும் மேம்படுத்திவிடலாம். ஆப்பிரிக்காவிலிருந்து தாய் நாடு திரும்பிய காந்தீஜீ, கல்கத்தா காங்கிரஸ்ஸில் சுத்தியாளர் வேலை செய்தார் எனக் காண்கிருேம்.

கீதை IV-13-ல் பகர்வதாவது ;— "குண-கர்ம அடிப்படையில் மானிட வர்க்கத்தை நான்கு வகுப்புகளாகப் பிரித்துக் கூறுகிறேன்." பின்னர் XVIII-42, 43, 44-லும், இந்த நான்கு பரந்த வகுப்பு களின் அடிப்படைக் குணங்களோ, அல்லது தொழிலோ, விளக்கப் படுகின்றன. இப்பிரிவுகளையே வர்ணம் என வழங்கலாயிற்று. வர்ணத்தின் அடிப்படையில் சமூகத் தொழில்களைப் பங்கிடவில்லை. தொழில் பிரிவின் அடிப்படையிலேயே வர்ண பேதம் உண்டாயிற்று. தொழில்களின் பிரிவுக்கு அடிப்படை, குணங்களும், அவற்ருல் ஏற் படும் வினை ஆற்றும் திறமையுமே. இப்பரந்த பிரிவுகளை வகுத்துக் கூறிய பரமன், ஒரு இயற்கை யுண்மையை சுட்டிக்காட்டித் தெளிவு படுத்தினுர். அதாவது, மானிடனின் அறிவால், முடிவுகட்ட வேண்டிய பொது விதியை (உபபத்தியை), பரமன் எடுத்துரைத்தார். ஆனுல், அதை நடைமுறையில் செயலாக்கும் அனுட்டான விதிகளை ஏற்படுத்திக் கொள்ளும் பொறுப்பை, மனித சமூகத்திற்கேவிட்டு விட்டார். கீதை கூறும் உபபத்தி, ஒரு பொதுவிதி, ஒரு உலக உண்மை.

எந்த நாட்டுச் சமூகத்தை எடுத்துக் கொண்டாலும், அதில், நான்கு பரந்த தொழில் பிரிவினைகளைக் காணலாம். (i) தங்களிடத்தில், அறத்தையும், அறிவையும் வளர்த்து, அவற்றை சமுதாயத்திற்கு ஊட்டி, நல்வழி காட்டுவோரின் பிரிவு. (ii) சமூக ஆட்சி, நீதி, தர்ம பரிபாலனம் செய்வோர், தற்காப்பளிப்போர் வேறு ஒரு பிரிவினர் ஆவார். (iii) பொருள்களைப் படைப்போர், விளைவிப்போர்: அவற்றைப் பங்கீடு செய்து சமுதாயத்தை ஆதரிப்போர் மற்றுமொரு பிரிவு. (iv) இட்ட பணியையும், குற்றேவல்களையும் செய்து முடிப்போர் ஒரு பிரிவு. மேலே கூறப்பட்ட நான்கு பிரிவுகளும், எந்த சமூகத்தின் அவசியத் தேவைகளையும் அடக்குவதோடு, ஒவ்வொரு பிரிவின், தனித் தன்மையையும், தெளிவாக்குகின்றன. ஒரு தனி மனிதன், ஒன்றுக்கு மேற்பட்ட பிரிவுகளின் தொழில்களை ஆற்ற வல்லவனாக இருக்கலாம்; என்றாலும், எல்லாப் பிரிவுகளிலுமுள்ள எல்லா வினைகளையும் ஒரே ரீதியான திறமையுடன் அவன் செயலாற்றுவான் என்பது நடப்பில் உண்மையாகாது. எவ்வாறாயினும், முதல் பிரிவுத் தொழில்களைத் திறம்படச் செய்யக்கூடியவனை, நாலாவது பிரிவின் வினைகளையாற்ற, சமூகம் கட்டளையிடுவது, பொது நலனுக்கும் ஏற்றதல்ல. ஆனால், காட்டு வெள்ளம் போல், ஜனப்பெருக்கெடுக்கும் சமூகத்தில், எவ்வாறு, ஒவ்வொரு தனி நபரின் திறனைச் சீர் தூக்கி, அதற்கேற்ப வினையளிக்க முடியும்? இக்காலத்துப் போட்டிப் பரீக்ஷை முறை, ஒரு சிலருக்கே வாய்ப்பு அளிக்கின்றதென்பதே, அதன் பெருங்குறை. பெரும்பான்மையோருக்கு அதிருப்தியளிக்கும் இப்பரீக்ஷை முறையினால், விளையும் குணக்கேடுகள், ஆன்ம வளர்ச்சிக்குப் பெருந்தடையா யுள்ளவை.

XVIII-41-ல் பகர்வதாவது :— "நான்கு வர்ணத்தாரகளாகிய, பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர், இவர்களுடைய தொழில் பிரிவினை, அவரவர்கள் இயல்பில் உதித்த குணங்களின் அடிப்படையிலே ஆனவை." முன் IV-13-ல் கூறியதையே விளக்கம் கொடுத்துக் கூறுகிறார். குணத்திற்குத்தக்க திறன்: திறனுக்கேற்பவினை. குணம், அதாவது, சுபாவம், மனிதனுக்கு மனிதன், வேறு படுவதால், வினையாற்றும் திறமையிலும், மனிதனுக்கு மனிதன், வேற்றுமையடைகிறான். குணமும், கருமமும், இணை பிரியாதவை. குணம், செயல் வடிவெடுத்தே வெளிப்படும். செயலாற்றாது, ஒரு கணமும், குணங்களால் இருக்க இயலாது. வர்ணம், குணத்தைப் பொறுத்தது என்றாலும், கருமத்தைப் பொறுத்தது என்றாலும்

பொருள் ஒன்றேயாம். நடைமுறையில், வர்ணப்பிரிவைப் பிறப்பு நிர்ணயஞ் செய்யக்கூடுமென்ற நடப்பு விதிக்கு ஆதாரம் ஏதேனுமுண்டா என்பதைக் கவனித்தால், அது சமூகத்தால் ஏற்படுத்திக் கொண்டதேன்றே விடை பகரவேண்டும். என்றாலும், கர்மவிதியை விளக்கும் பொழுது, ஒரு ஜீவனின் பிறப்பும், பிறப்பின் சூழ்நிலையும், அவரவர்களின் வினைப்பயன்களாகிய குணங்களாலே சமைக்கப்பட்டவை என்று கண்டோம். நாம் எந்த குண சுபாவத்துடன் பிறக்கிறோம் என்பதும், எந்த சூழ்நிலையை அடைகிறோமென்பதும், ஒன்றுக்கொன்று அனுசரணையாயுள்ளவையே. இதனால், பிறப்பும், சூழ்நிலையும், நம்குண இயல்பை ஒருவாறு தெளிவு படுத்துகின்றன என்பதை ஒப்புக்கொள்ளப் போதிய ஆதாரங்கள் உள. எவ்வாறாயினும், நம் பிறப்பின் சூழ்நிலைக்கும், நம் குண சுபாவத்திற்கும், சம்பந்தமோ, தொடர்போயில்லை என்று கூறும் துணிவு, உண்மைக்குப் புறம்பானதே. வர்ணத்தைத் தீர்மானிக்க, பிறப்பு முற்றிலும், நியாயமான அனுட்டான விதியல்ல என்றால், பின், வேறு வழி ஏது? படைப்பில் குறைபாடில்லாதது இருக்கமுடியாது. ஏன்? குறைபாடற்றது தெய்வம் ஒன்றே தான். குறைபாடுள்ள மனிதன் ஏற்படுத்தும் எந்த நடைமுறை விதியும், குற்றம், குறைவுள்ளதாகவே தான் காணப்படும். இது காரணமாகவே, கீதை, எக்காலும் உண்மையான பொது விதியைக் கூறிவிட்டு, குறைபாடுக்குட்பட்ட நடைமுறை அனுட்டான விதியைக் குறிப்பிடவில்லை.

மனிதனுக்கு மனிதன், குணவேறுபாடுகளால் பேதமடைகிறான் என்பது கண்கூடான உண்மை. சில மேனாட்டு விஞ்ஞானிகள் சாதிப்பது போல், மனிதன், பிறவியில் ஒருவருக்கொருவர், குணத்திலும், அதனால் திறமையிலும் வேற்றுமை யில்லாதவர்களே என்றும், ஆனால், சூழ்நிலை வித்தியாசங்களின் காரணமாகவே, பின்னால், வேறு பாடடைகிறார்கள் என்ற வாதம், உண்மைக்கு முற்றிலும், முரணானது. வினை, அல்லது, படைப்பு என்பது குணபேதத்தாலேயே ஏற்படுகிறது. இது இயற்கையின் நியதி. குணபேத மற்ற நிலையே, செயலற்றநிலை. வர்ண பேதம், இயற்கையின் ஒரு அமைப்பு. இன்று, குணத்தையும், ஆன்ம வளர்ச்சியையும் அடிப்படையாகக் கொண்ட நிர்ணயமான வகுப்புகள் எதுவும் இல்லை. யந்திர நாகரீகம் ஓங்கி வளரும் இக்காலத்தில், வர்ண பேதத்தாலாகிய வகுப்புகளை அமல் செய்யத் தேவை யில்லை. ஆன்ம வளர்ச்சியும், விடுதலையும், உயிரினங்களின் குறிக்கோள் என்ற அடிப்படையை மறுக்கும் இந்நாளில், வர்ண வகுப்பால் யாது பயன்? வர்ணப் பிரிவு, ஆன்ம

வளர்ச்சியின் பேதங்களைத் தரப்படுத்தி, மனித இனத்தை நான்கு பரந்த வகுப்புக்களாகக்கொண்டு, ஆன்மவளர்ச்சிக்கேற்ப, வினைகளை யளிக்க ஏற்பாடு செய்து, அவ்வளர்ச்சியை துரிதப்படுத்த, சமூக அளவில் கையாண்ட ஒரு முறையே யாம்.

இன்று, வர்ண தர்மத்தை, சமூக அளவில் அமலாக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுக் கொண்டு வருகிறது. பொருளீட்டுவதும், டாம்பீக வாழ்க்கை நடத்துவதுமே, ஜீவனின் குறிக்கோள் என்பது வலுவடைந்து, பெருவாரியான மக்களால், பின்பற்றப்படும் யுகத்தில், வர்ணப்பாகுபாடு பொருளற்றதாகி விடுகிறது. ஆன்மத் துறையில் இன்று தனி மனிதன், சமயப்பகைவனுகி, தெய்வத் தன்மை யிடமிருந்து தன்னைத் துண்டித்துக் கொண்டு, உலோகாயதத்தில் மூழ்கி விட்டதால், உலகமும், சமூகமும், மானிடனுக்குத் துணைபுரியும் நிலையை விட்டு மாறி, பகையை வளர்த்து, அவனுக்குத் துணைபுரியாது, தடையாக நிற்கவும் தலைப்பட்டு விட்டன. இதுவே, வர்ண தர்மம் சமூக அளவில் அழிந்து போனதின் விளைவாம். என்றாலும், ஆன்ம அடிப்படையில் திடநம்பிக்கை கொண்ட தனி மனிதன், தன்னளவி லேனும், வர்ண தர்மத்தைக் கடைப்பிடித்து, தக்கவினையாற்றினுல், ஆன்ம முன்னேற்றம் காணுவதில் சந்தேகமில்லை. உதாரணமாக, சத்துவ குணம் படைத்த ஜீவன், அறம், அறிவு, இவைகளை மேலும் வலுப்படுத்த, சாத்வீக வினைகளையாற்றினுலே, முன்னேறி, மேன்மையடையலாம். அல்லாது, சுயநலம் கொண்டு, பொருளீட்டும் போட்டியில் குதித்து, குற்றேவல்புரியும் பணியில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டால், சத்துவகுணம் குன்றி, அவன் தாழ்ந்த குணக்கூட்டடையடைவது நிச்சயம். தனி மனிதன், தன் ஜீவனத்திற்காக, சமூகத்திற்குத் தொண்டுபுரிந்தாக வேண்டியது கடமை. இந்த ஜீவனத் தொண்டைத் தேர்ந்தெடுப்பதில், அவனும் பங்கு கொள்கிறுன். அவன், அச் சமூகத்தொண்டை கேவலம், பொருளீட்டும் வினையாகக் கருதாமல், அதன் மூலம், தான் ஆன்ம வளர்ச்சி பெறக் கண்ணும் கருத்தும் கொண்டு செயல்பட்டால், வர்ணப் பிரிவை, சமூகம் ஒப்புக்கொண்டா லென்ன, உதறித் தள்ளிவிட்டா லென்ன ?

சமூக அளவில் அடிபட்டுப்போன வர்ணப் பிரிவைக் குறித்து வருந்தவேண்டியதில்லை. தனி மனிதன், தன் ஆன்ம வளர்ச்சியில் கருத்துக்கொண்டால் — இதில் சமூகமோ, பிற ஜீவன்களோ குறுக்கிட இடமில்லை — அவ்வளர்ச்சிக் கேற்ப வினைகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு, தன்னளவிலே, வர்ண தர்மத்தை அமலாக்க

ஒருவிதத்திலும் தடை ஏற்படாது. ஏனெனில், செய்யும் பணியிலல்ல, தர்மம் நிற்பது; வினையாற்றும் தன்மையாலும், மனப்பான்மை, நோக்கம், இவைகளாலே, வினையின் தரம் உயரவும், தாழவும் கூடும்; எப்பணியானாலும், அதை ஆற்றும் மனோபாவமே, ஆன்ம வளர்ச்சியை ஊக்குவிக்கவோ, அல்லது தடைப்படுத்தவோ முடியும். தாமாக ஏற்படுத்திக் கொண்ட கர்மாவானாலும், அல்லது பிறர் கட்டளையை நிறைவேற்றினாலும், அவ்வினை செயல்படும் விதம், மனப்பான்மை, நோக்கம், இவைகளைத் தீர்மானிப்பது, வினையாற்றும் தனி மனிதனே. பலனில் பற்றற்று, தன்னல மற்ற மனத்துடன், முழுத்திறம்பட, எவ்வினை யாற்றினாலும், அது ஆன்ம வளர்ச்சி ஏற்படுத்தும். ஆனால், பலனில் ஆசை கொண்டு, அதாவது, தன்னலம் பேணிச் செய்யும் யாவும், ஆன்ம வளர்ச்சிக்கு தடைகளாம். தனி மனிதனின், ஆன்ம நிலையை மதிப்பிட்டு, சமூகம், வர்ணப்பட்டம் அளிக்காவிட்டால் என்ன ? பல்கலைக் கழகப்பட்டம் பெறாத மேதாவிகள் கிடையாதா? மனிதப் பிறவி எடுத்ததின் உண்மை நோக்கை யுணர்ந்து, சமூகம் அதை மறுத்தாலும், தனி மனிதன் அதைக் கைவிடாது செயல் படுவதே மானிடப் பிறவியின் கடமை. வர்ணப் பிரிவால் ஏற்படும் பட்டமும், சலுகைகளும் எதற்கு?

எந்த வழக்கானாலும், வாதமானாலும், அதற்கு முடிவு கட்டுவது, மூலவினாவாகிய, நான் யார்? என்பதற்கு அளிக்கும் விடையேயாம். தனி மனிதன், தன்னை ஆன்மா என்று உணர்ந்துவிட்டால், பின், தன்னளவிலாவது, வர்ண தர்மத்தை, அதாவது, ஆன்ம வளர்ச்சிக்கான முறையைக் கையாண்டு மேன்மையடைவான். வர்ண தர்மம் ஒரு பிரிவினரையும் இழிவாகக் கூறவில்லை ; எத்தொழிலையும் இழிவாகக் கருதவில்லை. சமூகம் தானாக ஏற்படுத்திய அனுட்டான விதிகளில் குற்றம் குறை கண்டால், அதற்கு தர்மமுறை பழியேற்காது. ஒரு ஜீவன், தான் பிறந்த வர்ணப் பிரிவினின்றும், தன் ஜீவிய காலத்திலேயே வேறு பிரிவையடையத் தடை ஏதும் இருக்க முடியாது. அவ்வாறு, தடை போடுவது, தர்மத்திற்கும், உண்மைக்கும் முரணானதாகும். க்ஷத்திரிய குலத்தில் உதித்த விசுவாமித்திரர், கடும் தவம் ஆற்றி, பிராமண இயல்பையெய்தி, முதல் பிரிவையடைந்தது, சரித்திரப் பிரசித்தி பெற்றதே. மற்றும் ஒரு புராண சம்பவம், பரசுராமரைக் குறித்தது. பிராமண வகுப்பில் பிறவி யெடுத்தும், தன்வினைகளால், க்ஷத்திரிய இயல்பைப் பெற்றதால், க்ஷத்திரியரென்றே கருதப் படுகிறார். நந்தனர், தீண்டாதார் வகுப்பில் (இம்மாதிரி ஒரு வகுப்பு

உண்டு என்பதை கீதை அங்கீகரிக்கவோ, ஆதரவளிக்கவோ இல்லை) உதித்தாலும், சிதம்பரம், அதிதீவிர வர்ணப் பற்றுள்ள, பிராமணர்களால், தங்களிலும் மேம்பட்டவராக வரவேற்கப் பெற்று முக்தியடைந்தார். இவைகள், விதிக்கு விலக்குகள் எனத் தள்ளிவிட முடியாது. வினை ஆற்ற ஆற்ற, ஒவ்வொரு ஜீவனும், தன் குணக் கூட்டில், மாறுபாடு அடைவது உண்மையே; என்றாலும், இம் மாறுதல் ஒரு புரட்சிகரமாக ஏற்படுவது, மிகவும் அரிதே; வெகு சிலரே ஒரே பிறவியில் அதைச் சாதிக்க முடியும்.

வர்ண தர்மத்தை யொட்டி மற்றும் ஒரு வாதம் ஏற்படுகிறது. அது தான், சுயதர்மம், அல்லது சுதர்மம் என்ற கொள்கை. சுதர்மம், அதன் எதிரிடை, பரதர்மம், என்ற இரண்டு சொற்களும் கீதையில் காணப்படுகின்றன. தனி மனிதனின், அல்லது ஒரு வர்ணப் பிரிவின் தருமம் என மிகவும் குறுகிய பொருளை, இச்சொல்லுக்கு அளித்துக் குழப்படிக்கிறார்கள். தர்மம் நிலையாயுள்ளது. அது ஒரு இனத்திலுள்ள எல்லா ஜீவன்களுக்கும் பொதுவாகும். ஜீவன்களுக்குத் தனித்தனியாக, சநாதன தர்மம் இருக்க முடியாது. மானிடவர்க்கத்திற்கு ஒரு சாசுவதமான தர்மம் ஏற்படலாம். ஆனால், அந்த தர்மம், விலங்கினங்களுக்கும் பொருந்தாது எனலாம். குணத்தால் மனிதனுக்கு மனிதன் வேறு பாடடைந்து, அதனால் வெவ்வேறு விதமான வினைகள் ஆற்றுகிறான்; என்றாலும், மானிட குலத்தின் லட்சியமாகிய தர்மம் எவ்வாறு வேறுபாடடையும்? தியாகமும், யக்ஞமும், மனித குலத்தின் தர்மம். எந்த வர்ணத்தைச் சார்ந்த மானிடனுக்கும், இது விலக்கொண்ணாதது. எவ்வினை ஆற்றினாலும், அதைக் கடமை என்று எண்ணிப் பற்றற்று செயல்பட்டு, வினைப்பயனைப் பரமனின் உலகுக்கு அர்ப்பணிப்பதே மானிட குலத்தின் நிரந்தரமான சுயதர்மம். தர்மமென்பது நல்லோரின் மனோபாவம்; வினை, கர்மேந்திரியங்களாலான நிகழ்ச்சி. தர்மம், உள் மனநிலை; கர்மம், வெளிப்படையாகத் தோற்ற மளிக்கும் இந்திரிய நிலை. எந்த ஜீவனுக்கும், தனியான பிறவிக்குண இயல்புண்டு. ஆனால், லட்சியமாகிய தர்மம் ஒன்றே யாம். வெளிச் செயலை, மாற்றிக் கொள்ளலாம். உள் நிலையை எளிதில் மாற்ற இயலாது. எளிதில் மாற்றக்கூடிய தொழிலையும், என்றும் மாறாத தர்மத்தையும், குழப்பியதாலே, III-35, XVIII-45, 47, 48 சுலோகங்களுக்கு விளக்கந் தருவதில் வாதங்கள் ஏற்படுகின்றன,

**தரும வழி நடப்பது எளிதல்ல:** கழைக்கூத்தாடி, சட்டிக்கு மேல் சட்டிகளையடுக்கி, தலையில் சுமந்து, அந்தரத்தில், கயிற்றில், நடப்பது எளிதெனலாம் யோக மனோபாவம் அடைந்தாலே, தர்மம் நிரந்தரமாக நம்முள் செயல்படும். நமது கீழியல்பைக்கட்டி யடக்கி, நம் மேலியல் பின் ஆட்சிக்குள்ளாக்குவது, மாறாத தர்மத்தில், உறுதி கொண்டவர்களுக்கே இயலும் மேட்டிலிருந்து பள்ளத்தை யடைவது போல், கீழியல்புக்கு இடங்கொடுத்து வினையாற்றுவது எளிது. அதனால், உலோகாயத போகங்கள் கிட்டலாம். ஆனால், ஆன்ம வளர்ச்சி தடைப்பட்டு, அபாயமான விளைவுகள் ஏற்படும். இதுவே, ஆசா பாசங்களுக்கு இடங்கொடுத்து, சுயநலத்தைக் கோரிச் செயல்படும், பரதர்மமாகும். ஒரு ஜீவன், தர்ம நோக்குடனும், அதர்ம நோக்குடனும் வினையாற்றலாம். இந்த வேறுபாடான உள்மன நோக்காலே, வினைகள், நல்வினையாகவோ, தீயதாகவோ ஏற்படுகின்றன. ஜீவன் பிறக்கும் பொழுது குணஇயல்புடன், அதாவது, தர்மம், அதர்ம நோக்குடனும், வினையாற்றத் திறனும் பெற்று வருகிறதே யல்லாது, குறிப்பிட்ட செயலையும் தீர்மானித்துக்கொண்டு பிறவி எடுக்கவில்லை. ஜீவன், எத்தொழிலில் ஈடுபட்டாலும், அதை சமுதாய வாழ்க்கையின் சீரிய நலனுக்கு உகந்த தொண்டாக ஆற்றல் வேண்டும். தர்மநோக்கும், பற்றற்ற யோக நிலையுமே, இவ்வாறு கைகூடச் செய்யும்.

ஒரு தனி மனிதன், தன் ஜீவிய காலத்தில், தன் தொழிலை மாற்றிக் கொள்ள III-35 தடை விதிப்பதாக விளக்குவது தவறு. தோட்டித் தொழில் ஏற்றவன், தோட்டியாகவே மரிக்கவேண்டு மென்பது உண்மை யாகாது; தர்ம விரோதமானது. இந்த மனப்பான்மையே, வருண தர்மத்திற்கும், பாரம்பரியத்திற்கும், எதிர்ப்பை யுண்டு பண்ணுகிறது. நாவிதன், மந்திரியாகவோ, சேனைத்தலைவனாகவோ வினையாற்றும் திறன் படைத்துக் கொண்டால், அப்பதவிகளை ஏற்றுவகிக்கத் தடையேதும் கிடையாது; திறமையின்மையே, தொழிலை மாற்றியமைத்துக் கொள்ளத் தடையாக நிற்கும். திறமையைப் படைத்துக்கொண்டால், பின், தொழில் மாற்றம் நியாயமே யாம். ஆனால், இச்செயல் மாற்றத்தின் உள்நோக்கு யாது என்பதே கவனத்திற்குரியது. பதவி மோகத்தாலோ, பொருளீட்டிக்குவிக்கும் பேராசையாலோ, தொழில் மாற்றத்தை மேற்கொண்டால், அது ஆன்ம வளர்ச்சிக்கும், தர்ம நோக்குக்கும் விரோதமாகும். அதையே, கீதை தடை செய்கிறது. தொழில் மாற்றத்தில், பரதர்ம நோக்குண்டானால், அது கண்டிப்பாகத் தடுக்கப்படவேண்டியதாம். அது ஜீவனுக்கு அபாய நிலையைத் தோற்றுவிக்கும்.

இந்த நிலையையே, III-35லும் XVIII-45, 47, 48லும் விளக்கப்படுகிறது. அர்ஜுனனின் நிலையைக் கவனிப்போம். அவன், தன் உறவினர்கள் என்ற உடல் பாசங்களால், மயக்க முற்று, தர்மத்தைக்காக்க மறுத்து, அதர்மம், தலைவிரித்தாடும்படிவிட எண்ணுகிறான். பந்துக்களல்லாத, துஷ்டருடன் போர் தொடுத்து, அவர்களை மாய்த்த, அர்ஜுனன், எதிரிகளாகிய தர்ம விரோதிகள், தன் பந்துக்களே என்ற காரணத்தால், போர் தொடுக்க மறுக்கிறான். உறவினருக்கு ஒரு மன நோக்கும், மற்று முலகத்தோருக்கு வேறு ஒரு மனப்பான்மையில், சமநோக்கு என்ற உயர்நிலை அறம், அறவே, அற்றுப் போயிற்று. தர்மத்தைக் காப்பது, எல்லா ஜீவன்களின் கடமை. அதிலும், அர்ஜுனனைப் போன்ற, தகுதி வாய்ந்த வீரர்களின் முதல் கடமை யாம். அவர்களுக்கு அத்திறனை இயற்கை படைத்தது, ஏன்? ஆகையினாலே பின் வாங்கிய அர்ஜுனனைக் குறித்து, "கடமையைச் செய்," என்ற பல்லவியாக, கீதை வற்புறுத்துகிறது. ஒரு வீரன், தன்னையே தியாகம் செய்து கொண்டு போரில் இறங்குகிறான். தன் உயிரை,, தர்மத்திற்காக அர்ப்பணம் செய்வதே வீரனின் சுதர்மம்; பிறரைக் கொலை செய்வதல்ல, பிறர் மாண்டால், அது போரின் இயல்பே. அர்ஜுனன் மரண பயமற்றவன்; அதனால், பின் வாங்கவில்லை. அதர்மமாகிய, சுயநல மேலிட்டால், மயக்க முற்று, தர்மத்தைக் கைவிட எண்ணினான். அதுவே அவனது பெருங்குற்றம். தர்மத்தைக் கைவிட்டு, செயலற்று நிற்பதும், மானிடனுக்கு அதர்மமேயாம், பரதர்மமாம்.

எந்த வினை ஆற்றினாலும், பற்றற்று, தன்னலமற்ற நிலையாகிய, யோக பாவத்தைக் கையாண்டு செயல்படுவது மானிட சுதர்மமாகும். தோட்டி என்ற சுத்தியாளர்கள், தங்களுக்கு ஏற்படக்கூடிய ஆபத்தை எண்ணாமல், சமூக சுகாதார நலனுக்காக, அசுத்தங்களை அப்புறப் படுத்தி, கேடுதராவண்ணம் செய்கிறார்கள். வைத்தியர்களும், அபாயமான தொத்து நோய்கள் பரவுங் காலத்திலும், தங்கள் உயிருக்கு ஆபத்து நேரிடுவதைப் பொருட்படுத்தாது, பிற உயிர்களைக் காக்க முற்படுகிறார்கள். படை வீரரும், தன்மானத்தையும், தர்மத்தையும் காக்கத் தங்கள் உயிரைப் பலி கொடுக்க முன் வருகிறார்கள். இவர்களெல்லோரும், தங்கள் செயல்களைத் தன்னல மற்றதாக்கி, பிற ஜீவன்கள் வாழப் பாடுபடுவார்களானால், அவர்கள் சுதர்மத்தைக் கடைப்பிடித்தவர்களே. வாணிபத்தொழிலிலும், வியாபாரிகள், தன்னலத்தைப் பேணாமல் நல்ல பண்டங்களை, வேண்டும் பொழுது, தேவைப்பட்ட இடத்தில், நியாயமான விலைக்குக் கிடைக்கச் செய்

வதே, அவர்களின் சுயதர்மம். அல்லாது, கிராக்கியை, அனுகூல மாகப் பயன்படுத்திக் கொண்டு, கலப்படம் செய்து, அளவிலும், விலையிலும் தங்கள் லாபத்தையே நாடி, இழிதொழில் புரிந்தால், அது பரதர்மமே யாம். ஆன்ம வளர்ச்சி குன்றுவதுடன், பாவச் செயலுக்குள்ள தண்டனையும் அடைவார்கள்.

மனிதன், பரதர்ம நோக்கைக் கையாண்டால், பணம், பதவி இவை போன்ற உலோகாயத அனுகூலங்களை, தற்காலிகமாக, அடையலாம். ஆனால் பயங்கரமான பின் விளைவுகள் ஏற்படுவது நிச்சயம். தியாகமே, மானிட வர்க்கத்தின் சுதர்மத்தின் சின்னம். தியாகம், தன்னல மற்ற மனோபாவத்தின் விளைவு. தியாகியினிடத்தில், அன்பு குடி கொண்டு பொங்கும். அர்ஜுனனைப்போல், உறவினரிடத்தில் மட்டும் அன்பும், மற்றவர்களிடத்தில் கடும் நியாயமும், காட்டுவது, தன்னலம் பேணுவதே யாகும். அதனால், அதர்மம் ஓங்குகின்றது. தன்னலம், கீழினங்களின் இயல்பு. இயற்கை அவைகளுக்கு வேறு வழி வகுக்கவில்லை. மனிதனோ, இயற்கைக்கு அடிமையல்ல வென்று, விஞ்ஞானம் தம்பட்டம் போடுகிறது. ஆனால், உண்மையில், மனிதன், தன் கீழியல்புகளுக்கு அடிபணிந்தே வாழ்கிறான். வெளி யுலகில், சந்திரனும், செவ்வாயும், அவனை அடுத்து வரும் தருவாயில், அவனுள்ளேயே வசிக்கும், பரமனுக்கும், அவனுக்குமிடையே யுள்ள, பிளவு, மனோவேகத்தில், அதிகரிக்கின்றது. இது தான், நவநாகரீக மானிட வாழ்க்கையின் பரிதாப வீழ்ச்சி!

நவநாகரீக உலகிலும், சாதி பேத மில்லாமலில்லை. பணம் படைத் தவனும், அதிகார பீடத்திலமர்ந்தவனும், உயர்சாதியினர்; மற்றவர் எல் லோரும், தாழ்த்தப்பட்ட தீண்டாச் சாதியார். உயர் வகுப்பிலுள்ள வர்கள், ஒரு சிலரே. பெரும்பான்மையான மக்கள், தங்கள் உயிரையும், வாழ்க்கையையும், அடகு வைத்து, அடிமைகள் போல், பணத்திற்கும் பதவிக்கும் பணியாட்களாகி விட்டார்கள். தேவைகளையே பெருக்கிக் கொள்வதில் பெருமை கொண்டாடும், நவநாகரீக மனிதன், தன் னலம் தவிர்க்க விரும்பினாலும் கூட இயலாது. தியாக உணர்ச்சி அவன் உள்ளத்தில் எவ்வாறு உதிக்கும்? என்றாலும், பரமன் நம் முள் வசிக்கும் வரை, அதாவது, உயிர் உடலைவிட்டுப் பிரியும் வரை, மனிதன் நம்பிக்கை இழக்க வேண்டியதில்லை. திமர் ராஜ்யப் புரட்சிகள் இக்காலத்தில், ஏற்படவில்லையா? அதே போல், நம் உள்ளத்திலும், புதிய ஆட்சி (ஆன்ம ஆட்சி) ஏன், ஏற்படக்கூடாது? ஆனால், பரமனின் இருப்பையே மறுப்பவர்களிடத்தில், அவர் எவ் வாறு புரட்சியைத் தோற்றுவிப்பார்? குறைந்த பட்சம் ஆன்மாவில்

நம்பிக்கையாவது வேண்டுமே. இதில் தவறினல், மனிதன் தப்பப் போவதில்லை. எத்தனை பிறவிகள், எடுத்தாகிலும், பரமனின் எண்ணம் வந்தே, விடுதலையடைவான். இதில் சந்தேகமே யில்லை.

வர்ணப் பிரிவு, மானிட வர்க்கத்தின் ஒரு பேருண்மை எனத் தெளிவாக்கினேம். சமூக வாழ்க்கை, ஆன்ம வளர்ச்சியை அடிப்படை யாகக் கொண்ட காலத்தில், அது அமுலில் வந்தது. சமுதாயம், தன் அடிப்படை குறிக்கோளை மாற்றி யமைத்துக்கொண்ட காரணத் தால், இன்று, வர்ண முறை பொருந்தாது போனதில் வியப்பில்லை. ஆன்ம வளர்ச்சியே, மானிட வாழ்க்கையின் இலக்காகச் செயல்பட்ட புராண காலத்தில், ஆன்மத் துறையில் மேம்பட்டவர்களுக்கு, விசேஷச் சலுகைகளும், தற்காப்பும், மற்றும் வசதிகளும், சமூகம் அளித்ததை மறுக்க முடியாது. மனுதர்ம முறையில், அதாவது, சமூகத்தின் அனுட்டான விதிகளை வகுக்கும் சாத்திரத்தில், இம் மாதிரியான, இளக்காரமான, விதிக்கட்டுப்பாடுகளைக் காண்கிறேம். இக்கால சமுதாயத்தால், அவை, ஒரு சார்புடையவை எனக் கொண் டாலும், புராணகால சமூகம், தனக்காகத்தானே இட்டுக்கொண்டு, ஒழுகி, நடந்த முறையே அவை, என்பதை முறுக்க முடியாது. பணமும், அதிகார உயர் பதவியுமே, இன்று பெரிதாகப் போற்றப் படுகின்றன. இவைகளுக்கு, இன்றைய சமுதாயம் அளிக்கும் சலுகைகளை நாம் ஒப்புக்கொண்டு ஒழுக வில்லையா? சமூகம், எதைப் பெரிதாகப் பாவிக்கின்றதோ, அது விசேஷச் சலுகைகளுக்குப் பாத்திரமாவது, மானிட மரபு.

வர்ணப்பிரிவு, சமூக வாழ்க்கைக்காகவே ஏற்பட்ட ஒரு ஆன்ம தரப் பாகுபாடு. அதை இன்று அமுல் நடத்துவதில் முரண்பாடு கண்டால், ஹிந்து மதத்தையே பழிப்பது, துவேஷ மனப்பான்மையையும், குறுகிய அறிவையும் கொண்டதாகும். ஒருவிவேகமற்ற நண்பன், தன் சிநேகிதன் தலையில், ஒரு கொசு அமர்ந்து, அவதி கொடுப் பதைத் தடுக்க, ஒரு தடியால், அக்கொசுவையும், தன் நண்பனையும், அடித்துக்கொன்ருன். ஒரு அரசன், நெல் களஞ்சியத்தில், எலிகள் படையெடுத்ததைக் கண்டு, நெல் களஞ்சியத்தையே தீக்கிரையாக் கிஞன். இத்தகையதே, வர்ணப்பிரிவின் நடைமுறையிலுள்ள குற்றங் குறைகளைக் காரணமாகக் காட்டி, ஹிந்து மதத்தைப் பழிப் பதும். ஹிந்து மதம் வளர்ந்த விதமே, ஒரு விசித்திரம். கடவுள் நம்பிக்கையுள்ள எக்கூட்டத்தாரும், ஹிந்து மதத்தில், அன்றும், இன்றும்

இடம் பெறலாம். ஒவ்வொரு கூட்டத்தாரும், தங்கள் தங்கள் வெவ்வேறான சமூகப் பழக்கவழக்கங்களையும், கட்டுப்பாடுகளையும், சிறிதும் தளர்த்தாமலே, ஹிந்து மதத்தைத் தழுவினார்கள். மதக்கட்டுப்பாடென்பது, ஹிந்துக்களிடத்தில், கண்டிப்பற்றதாகவே, இன்றும் திகழ்கிறது. ஹிந்துக்களின் கட்டுப்பாடு, சமூக அளவிலேதான் செயல்படுகிறது; மற்ற மதங்களின் அனுபவம், இவைக்கு நேர் மாறானவை. இதன் காரணமாகவே, ஹிந்துக்களிடத்தில் முறையான மதபோதனை இல்லை. ராமாயணம், மகாபாரதம், மற்றும் சில புராணங்களை, மேலிட்டவாறு, படித்தோ, கேட்டோ, குற்றம், குறைவுடன், அவற்றையே ஹிந்து மதமெனக் கொள்ளுகிறார்கள். ஹிந்து மதச் சீர்திருத்தவாதிகள், இப்பெரும், ஆபத்தான நிலையை உடனடியாக நீக்கி, ஒவ்வொரு ஹிந்துவும், தன் மதத்தைப்பற்றிய மேலாம் உண்மைகளைக் கற்க வழி வகை செய்து, முறையான மதபோதனையும் அளிக்க ஏற்பாடு செய்வார்களாக. இக்கடமைக்கு உதவியாகவே, "பகவத் கீதை (புதிய ஏற்பாடும்), இந்நூலும் வெளியிடுகிறோம்.

மனிதனின் குண இயல்பை, நாலு பரந்த வகுப்பாகக் கொண்டது வர்ண தர்மம். ஆச்ரம தர்மம் என்பது, மனிதனின் வாழ் நாளை நான்கு பாகமாக வைத்து, ஒவ்வொரு பாகத்திற்குண்டான கடமைகளைக் கூறுகிறது. இப்பிரிவும், ஒரு மகத்தான உண்மையை அடிப்படையாகக் கொண்டதே. மனிதனுக்கு, உள்ளும், புறமும், என இரண்டு முனைகள் உண்டென்று பலவிடங்களில் கண்டோம். வெளிப்புறம், அவனது உடலும், அதன் வெளியுறுப்புகளுமாகும். உட்புறத்தின் முக்கிய உறுப்புக்கள், அவன் புத்தியும், மனமுமே. முதலில் உடலே, வளர்ச்சி பெற்று, நாளடைவில், அது மெலிவு காணும். அப்பொழுது, மனிதனின் மனமும், அறிவும், அதிக வளர்ச்சி பெற ஆரம்பிக்கின்றன. இச்சம்பவங்களை யொட்டி, அவனிடம், குணமாறுதல்களும் ஏற்படுகின்றன. நடுவயதைத் தாண்டியதும், அனுபவத்தாலும், உடல் தளர்ச்சியாலும், கீழியல்பான, சிற்றின்ப நுகர்ச்சிகளைக் கைவிட நேரிடுகிறது. அவனுடைய முதிர்ந்த அறிவும், மனமும், அது சமயம், உலோகாயத விவகாரங்களில் பற்றுதலைக் குறைத்துக் கொண்டு, ஆன்ம நாட்டத்தில், ஈடுபடத் தயாராகின்றன. இம் மாறுதல்களுக் கேற்ப, இப்புவி வாழ்க்கையில், அவன் நோக்கமும், மாற்றம் காணுகிறது. இவ்வாறான கூற்றை யெல்லாம், ஹிந்து மதக்கோட்பாடுகள், பிரதிபலிக்கின்றன.

இளமைப் பருவத்தில், வாழ்க்கைக்குத் தன்னை ஆயத்தம் செய்து கொள்ள, வேண்டிய கல்வி, தொழிற் பயிற்சி, முதல் ஆச்ரமம் எனத் திகழ்கிறது. சமயக் கல்வியையும், தொழிற் கல்வியையும், பயிற்சியின் மூலம் இளமையிலேயே பெறுகிறான். வயது வந்ததும், ஒரு குடும்பத்தைத் தானே ஏற்று நடத்தும் திறமை வாய்த்தவுடன், இரண்டாவது ஆச்ரமாகிய, இல்லற வாழ்க்கையில், புகுகிறான். சமூகப்பணியில் ஈடுபட்டு, வருவாய் பெற்று, மக்கட் பேற்றையும் உண்டாக்கி, குடும்ப தர்மத்தை நடத்துகிறான். வாழ்க்கையில், இந்த ஆச்ரமமே, கொடிய சிரமத்தையும், பரிசோதனைகளையும் ஏற்படுத்துகிறது. இப்பொழுது, மனிதன், இயற்கையின், நியதியான இனப் பெருக்கத்தையும் கவனித்துக் கொண்டு, அதில் மூழ்கி மாண்டு போகாமல், பிறப்பின் குறிக்கோளாகிய தன் ஆன்ம வளர்ச்சியையும் கைவிடாது, கூடிய வரை காப்பாற்றி வருபவனே, இல்லற வாழ்க்கையை வெற்றிகரமாக நடத்தியவனாவான். உலகப்பற்று, தன்னை முற்றிலும் ஆட்கொண்டுவிடாமல், கண்விழித்துச் செயல்படவேண்டிய நிர்ப்பந்தம் இந்த இரண்டாம் படிவத்திலே யுண்டு.

குடும்ப வாழ்க்கை நடத்தும், க்ரஹஸ்தன், எப்பொழுதும், தன் ஆன்ம விடுதலையை நாடி, இந்த பூவுலகப் பற்றுக்களைக் குறைத்துக் கொண்டு வந்து, நாளடைவில், மனம், ஆன்ம வளர்ச்சிக்கான பக்குவம் அடைந்தால், குடும்பக் காரியங்களைப் பிறர் வசம் ஒப்படைத்து விட்டுத் தானும் தன் மனையாளுமாகத் தனி வாசம் செய்யக் கானகம் ஏகுவான். உலக விவகாரங்களற்ற, இந்தத் தனி வாழ்க்கையில், மனது அமைதியடைந்து, ஒரு முனைப்பட வாய்ப்புக் கிட்டுகிறது. இதையே, மூன்றாம், ஆச்ரமம் என்பார்கள். குழவி, யுவன், காளை, இம் மூன்று பருவங்களும், வாழ் நாட்களின் முற்பகுதியை விழுங்கி விடும். எஞ்சிய, பிற்பாதியை, பிறவி எடுத்ததின் லட்சியமாகிய, ஆன்ம விடுதலைக்கே முழுவதும் செலவிடுவது, தர்ம நியாயமாகும். சமூகத்திற்குத் தொண்டு புரிவதும், அதனால், ஏற்படும் பொருளீட்டலும், இல்லற தர்மத்துடன் முடிவடைந்து விடுகின்றன. குடும்பக் கவலைகள் தீண்டாத, கானக வாழ்க்கை, ஆன்ம ஆராய்ச்சியிலும், தியானத்திலுமே கழியும். நாளடைவில், ஆன்ம ஞானம் கிட்டி, பிறரும், அதனால் பயனடையும்படி செய்ய, கடை ஆச்ரமமாகிய, சந்நியாசம் ஏற்கிறான். சீடர்களைச் சேர்த்து, பலவிடங்கள் சென்று, ஆன்ம அறிவைப்புகட்டி, பிற ஜீவன்களுக்கு வழி காட்டியாகத் திகழ்ந்து, உபதேசஞ் செய்வதையே, தொண்டாகக் கொண்டு அவனது உலக வாழ்வு இன்பமாக முடிவடையும்.

சாதாரணமாக, மானிட ஜீவன்கள் யாவும், இந்த நான்கு படிவங்களையும் முறையே கடந்தாகவேண்டும். ஆன்ம ஞானம் பெறுவது, எப்படியிலிருந்தும் கிட்டலாம். என்றாலும், இது, அசாதாரணமான ஒரு சிலருக்கே கைகூடும். உதாரணமாக, ஹனுமான், பிரம்மசாரியாகவே, வாழ்க்கை நடத்தி, ஆன்மீகத் துறையின் சிகரத்தையடைந்தார். சுகர், பிறந்ததுமே ஆன்ம ஞானம் பெற்று, சந்நியாசியாகிவிட்டார். ஜனகர், இல்லற தர்மத்தைக் கையாண்டு கைவல்யம் அடைந்தார். ஹிந்து மதம் ஒன்றே, மன அறிவு வளர்ச்சிக்கு ஏற்றதக்க, ஆன்ம உணவு ஊட்டி, மானிடன் தன் குறிக்கோளையடையச் செய்ய வழி வகுத்தளிக்கிறது. மற்ற மதங்களெல்லாம், குழவிக்கேற்ற உணவையே கிழவனுக்கும், காளைக்குமளித்து, அதிருப்தியை உண்டாக்குகின்றன. அவற்றால், அறிவிலியும், அறிவாளியும், ஒரே பாங்கில் வைக்கப்பெற்று ஆன்ம வளர்ச்சியின் வேகத்தைத் தடைப்படுத்த இடமேற்படுகிறது.

ஹிந்து மதத்தின், ஆதார நூலாகிய வேதங்கள், நான்கு பாகங்களாகச் சமைக்கப்பட்டிருக்கின்றன. அவை, இந்த நான்கு மானிட வாழ்க்கைப் படிவங்களுக்கு ஏற்ற பாடங்களாக அமைந்திருக்கின்றன. இந்த ஆச்ரம தர்ம முறையும், வர்ண முறையைப்போல் இன்று கையாளப்படவில்லை. ஆன்மாவை மறுக்கத் தலைப்பட்ட சமுதாய மனமாற்றமே காரணம். சமூகம் தன் மனப்போக்கைத் தலை கீழாக மாற்றியமைத்துக் கொண்டு, இவ்விரு முறைகளும் பொருந்தா எனப் புறக்கணித்துவிட்டது. இக்காலத்தில், நடைமுறையிலுள்ள குறிக்கோள் ஒன்றே. அதாவது, எவ்விதத்திலும், எவ்வழியிலும், எவ்வாறாயினும், எந்நாளும், பொருளீட்டி, டாம்பீக வாழ்க்கை நடத்துவதே. இவ்வுலக வாழ்க்கைப் போராட்டத்திலிருந்து, ஓய்வோ, ஒழிவோ, தேடிக் கொள்ளாமல், மரணம், தன்னை வலியவாரிச்செல்லும் கணம் வரை, பொருள் தேடும் விசாரமும், முயற்சியுமாகவே, மானிடன் மாள்கிறான். "உதர நிமித்தம் பஹுக்ருத வேஷ:" என்று ஆதிசங்கரரின் இடித்துரைத்த பழி, இன்று எல்லா மானிடனிடத்தும் சாதாரணமாகக் காணும் காட்சியாகிவிட்டது.

கீதையில், ஆச்ரம தர்மத்தை நேரடியாகக் குறிப்பிடாவிடினும், துறவு என்ற கர்ம சந்நியாசம் தேவையில்லை என்றும், இல்லற வாழ்க்கை நடத்தியே முக்தி பெறலா மென்று, தனது லட்சிய ஜீவனாக, ஜனகரை

கூறுகிறது. ஆன்மத் துறையில் தீவிர முயற்சி எடுத்துக் கொள்பவர்கள், துறவிகளே. இல்லற தர்மத்தை நடத்துவோரில், ஆன்ம விடுதலையைக் குறிக்கோளாகக் கொள்பவர்கள் இன்று அரிதிலும் அரிதாகிவிட்டார்கள். உலகக் களிப்பில் பகுதி வாழ் நாட்களும், பின் ஆன்ம விசாரங்களுக்காகப் பிற்பகுதியும் என்று ஹிந்து மதம் வகை செய்ததை நாகரீக மனிதன் மறுத்துவிட்டான். பிணமாகிச் சுடலை ஏகுமட்டும், பணம், பணம் என்றே பரிதவிக்கின்றான். கீதை உலக வாழ்க்கையை, வெறுக்கவோ, துறக்கவோ கூறவில்லை. பலாப்பழத்தைக் கையாளுமுன், கையில் எண்ணை தடவிக் கொள்வது எவ்வாறு நலந்தருமோ, அதே போல் உலகத்தோடு பழகுமுன், மனத்தைப் பக்குவப் படுத்திக்கொள், என எச்சரிக்கை விடுக்கிறது. எதிலும், பற்றும் வேண்டாம்; வெறுப்பும் வேண்டாம். சமநோக்கைக் கடைப்பிடி; தன்னலத்தை அகற்று இவவாறு செயல்படத் தடையாக நிற்பது, ஆசையே. ஆசைக்கு அடிப்படை தேவை. தேவையைப் பெருக்குவது நவநாகரீகப்பித்து. ஆன்ம நம்பிக்கையின்மையால் மரண பயமும், உலகப் பற்றுக்களால் மரண அவதியும், மனிதனே ஏற்படுத்திக கொள்பவை. இவற்றினின்றும் மனிதனை விடுவிக்கவே, நான்கு ஆச்ரம தர்மங்களும் ஒவ்வொரு மானிட ஜீவனுக்கும் அவசியமாகின்றது.

இக்காலத்தில், இரண்டு ஆச்ரமங்களே தென்படுகின்றன. ஒன்று, இல்லற வாழ்ககை; மற்றது, துறவு வாழ்க்கை. ஹிந்து மதம், ஆன்ம வளர்ச்சிக்காக வகுத்தளித்த, நான்கு படிகளை மானிடன் முறையாகக் கடந்து செல்லும் வழககம் ஒழிந்து விட்டதென்றே கொள்ள வேண்டும். பெருவாரியான மக்களுக்கு ஒரே ஆச்ரமந்தான் வாழ்க்கை முறையாகி விட்டது; பொருளீட்டி வயிற்றைக் கழுவி, உயிருடன் வாழ்வதே அது. வேறு நோக்கம் அவர்கள் சிந்தனையில் எழ வொட்டாது, வாழ்க்கைப் போரின் கொடுமை அடித்து விட்டது. துறவு பூண்ட சிலரும், உலகப் போக்குக்கு இடமளித்து, எளிய வாழ்க்கையைக் கைவிட்டு, ஆடம்பர விளம்பரங்களுக்கு இலக்காகி வருகிறார்கள். மடாதிபதிகள், பெரும் பணம் படைத்துக் கொண்டு, செல்வத்தை வளர்த்துப் பேணுவதிலே அதிக நாட்டங் கொண்டு, தனவந்தர்களுக்கே இவ்வுலக வாழ்க்கை என்ற தவறான மனப்பான்மையைத் தங்கள் ஆசிகளாலும், ஆதரிப்பாலும் தீட்டி வருகிறார்கள். இளமையில் ஆசைகளை ஒழிக்க இயலா விட்டாலும், நடு வயதுக் கப்பாலேனும், உலக பந்தங்களைத் தவிர்த்து, மரணமேகு முன் யாவற்றையும் துறந்து, மரண வேதனைகளைப் போக்கவே, ஆச்ரம தர்மம் ஏற்பாடாயிற்று. அதை மனிதன் ஏற்காமல், அவதி யுறுவது, அவன் மதிவீனமே, துர்ப்பாக்கியமே.

## VIII. ராஜயோகம்

யோகத்தின் பொருளை முன்னால் விவரித்துள்ளோம். தியான யோகத்தை, விளக்கும் பொழுது, யோகப் பயிற்சியைப் பற்றிய சில குறிப்புக்கள் கொடுக்கப்படுகின்றன. இப்பயிற்சியின் ஒரே நோக்கம், மனம், புத்தி, பிராணன், ஆகியவற்றைக் கட்டு திட்டங்களுக்கு உட்படுத்தி ஆன்ம சிந்தனையில், ஜீவனை லயிக்கச் செய்வதே. இந்நிலையில், தியானம் சித்திக்கும். மனம் ஒருமுகப்படாவிட்டால், சிந்தனை சிதறிப் போம்; தியானம் கைகூடாது. இந்த யோக முயற்சியை விபரமாக வர்ணிப்பது, பதஞ்ஜலியின் யோக சாத்திரம். அதை மிகவும் எளிய நடையில், ராஜயோகம் என்ற தலைப்பில், விளக்கம் தந்தவர், விவேகானந்தர். கீதை, விடாப்பிடியாக வற்புறுத்தும் வாழ்க்கைக் கலையாகிய, யோக நிலைக்கு, இந்த யோகப் பயிற்சி பெரிதும் உதவுமென்றாலும் இப்பயிற்சி, இல்லாதவர்கள், யோக மனோபாவத்தைத் தங்கள் குறிக்கோளாக்கி, சமநோக்கடைய முயற்சிக்கக் கூடாதென்பதில்லை. II-40-ல் உறுதியளிப்பது போல், யோக முயற்சியில், எதுவும் வீணாவதில்லை. இந்த முயற்சியை, சிரத்தையுடன், ஒரு சிறிதளவேனும் கைக்கொண்டாலும், பெரும் பயனை யளிக்கும். இதே போல், IV-41, 46-லும் யோக முயற்சி, அதாவது, சம நோக்கு ஒருக்காலும் வீண் போகாதென்று உறுதியளிக்கப்படுகிறது.

மனிதப் பிறவியின் நோக்கம் என்ன? தியாகமா, அல்லது போகமா? ஆன்ம தத்துவத்தில் திடநம்பிக்கை கொண்டவர்கள், தியாகமே என்றும், அதை மறுப்பவர்கள், போகத்திற்காகவே என்றும் விடையளிப்பார்கள். இந்த இரு தரத்தாரையும், பைபிளின் புதிய ஏற்பாட்டில் முறையே, அகப்பே, ஈராஸ் என்ற பெயர்கள் சூட்டி, முன்னவரை, ஆண்டவன் வழி நடப்பவர் என்றும், பின்னவரை, உலக வழி பின்பற்றுபவர் என்றும் கூறப்பட்டிருக்கிறது. ஈராஸ், தன், கீழியற்கையின் இயல்பாகிய ஆசையை அடிப்படையாகக் கொண்டு, இப்புவியில் புலன்களால் நுகரக்கூடிய சுக, துக்கங்களை அனுபவிப்பதிலேயே கண்ணும் கருத்துங் கொண்டவர். இவருக்கு உறுதியான புத்தி கிடையாது. இயற்கைக்கு அடிமைப் பட்டு, சுயநலத்தையே பேணுவார். விருப்பு, வெறுப்பு, கஷ்ட நஷ்டங்கள் இவருக்குப் புத்தி புகட்டா. பூவுலக வாழ்க்கையையே மேலாகக் கருதி, மிருக இயல்பை வளர்த்து, ஆன்ம இயல்பைக் குன்றச் செய்து, பிறப்பு, இறப்புச் சுழலில் கிடந்து உழல்வார். அகப்பே, உலக வாழ்க்கையை வெறுப்பவர் அல்ல. என்றாலும், தனக்கென வாழாமல்,

பிற ஜீவன்களின் நலனையே கருதுவார். தன்னைக் காட்டிலும், பிற உயிர்களை நேசித்து, அவர்களின் இன்பத்திலே தன் இன்பம் காண்பார். புலன் களிப்பில் ஆசை கொள்ளாதவர். கீழ் உணர்ச்சிகளுக்கு வசப்படாமல், எல்லாம் பரமனே என்ற நிச்சய புத்தியில், தியாக வாழ்வே வாழ்வார். இவ்விரு தரத்தாரை, கீதையும் XVI அத்தியாயத்தில், தேவ சம்பத்துடையவர்கள், அசுர சம்பத்துடையவர்களென்றும் விளக்கம் தந்து, அசுர இயல்புடையோரின் விரிவான வர்ணனையும் அளிக்கின்றது. மிருகங்கள், சுதந்திரமாகச் செயல்பட இயலாது; ஆசையின் அடிப்படையில், இயற்கைக்கு அடிமையாகி, வாழ்க்கை நடத்தினாலும், அவற்றால், பிற ஜீவன்களுக்கு, ஓரளவே பாதகம் ஏற்படுகிறது. ஆனால், அசுர இயல்புகளுக்கு அடிமையாகிச் செயல்படும், மானிடனால், உலகமே பாழாகிவிடலாம்.

மனிதனின் இக் கொடிய இயல்பை யடக்க, கீதை VI-5, 6-ல் மிகவும் முக்கியமான தொரு உபதேசத்தைச் செய்கிறது. அதைப் பின்பற்றி நடப்பவர்கள், தங்கள் வாழ்க்கையை மிகவும் இனிதாக்கிக் கொள்வதோடு, உலகுக்கும் நன்மை பயக்க இயலுகிறது. இக்கட்டளையே நல்வாழ்வுக்கு அடிகோல். நம் ஜீவனுக்கு யஜமானன், ஆன்மாவே. ஆன்மாவையே, மேல் பிரகிருதி என்றும், அதன் இயல்பையே தேவ சம்பத் என்றும் சொல்லப்படுகிறது. இந்த உத்தமமான, தன்னல மற்ற இயல்புக்குப் போட்டியாக, கீழியல்பின் சின்னமாகிய, அகங்காரம் ஏற்பட்டு, ஜீவனை அடக்கியாள முயல்கிறது. இந்த அகப் போரின் விபரம், பல விடங்களில், குறிப்பிட்டிருக்கிறோம். ஒரு ஜீவன் தன்னைத் தானே உயர்த்திக் கொள்வ தென்பது, அதன் வாழ்க்கையில், தெய்வ இயல்பு ஓங்கி, அசுர இயல்புகள் ஒடுங்கி நிற்பதேயாம். இவ்வாறு, தன்னலத்தை யொழித்து, தியாக வாழ்க்கை நடத்தினால், ஜீவன், பரம ஆனந்தத்தை யடைகிறான். உலகமும் இன்புற்று வாழ்கிறது. ஆனால், அசுர இயல்பாகிய சுய நலத்தை ஓங்க விட்டால், ஆன்மீகம் நசுங்கி, ஜீவன் தாழ்வு அடைந்து, தனக்கும் உலகுக்கும் துயரையே தேடி அடைகிறது. நமக்கு நண்பனோ, சத்துருவோ, நமது கீழியல்பே. ஆசை ரூபமாகிய இக்கீழியல்பு, நம் தெய்வீக மேலியல்புக்கு அனுசரணையாக நடந்து கொள்வதே, நல் வாழ்க்கை முறை.

கீழியல்பின், முக்கியமான கருவிகள், அகங்காரமும், மனமுமே. மனத்தைக் கட்டுவ தென்பது, மிகவும் கடினமானது. (VI-34). என்றாலும், யோக முறையைக் கையாண்டு, விடா முயற்சியால், மெல்ல,

மெல்ல, மனத்தை, அப்பியாசத்தின் மூலம் கட்டி விடலாம் என்றே கண்ணன் உறுதியளிக்கிறார். (VI-35). யோகப் பயிற்சியின் பரந்த நோக்கம், நம் கீழியல்பை அடக்குவதே. யோகப் பயிற்சி, ஏன், மானிட வாழ்க்கைக்கு இன்றியமையாதது என்பது, இப்பொழுது நன்கு விளங்கும். ஒருவனது மனச் சாட்சியும், அறிவும், எதிர்த்தாலுங் கூட, பலவந்தமாகத் தூண்டி, அவனைப் பாவம் செய்ய வைப்பது யாது, என்று அர்ஜுனன் கேட்ட வினாவுக்கு விடையாகக் கண்ணன் பகர்வது :— "அதுதான், காமம், ஆசை. அதுதான், கோபம். ரஜோ குணத்தில் பிறந்தது. கொடிய பாவத்துக்குக் காரணமானது. இவ்வுலகில், ஆசை, மனிதனுக்குப் பரம விரோதி என்றுணர்." (III-38). ஆசை, அஹங்காரத்தின் எழுச்சியே. தான், தனது என்ற எண்ணங்கள் அற்றுப் போனால், பின், ஆசை எழாது. ஆசைக்குக் காரணம் என்ன? "ஒவ்வொரு ஜீவனும், பிறக்கும் பொழுதே, விருப்பு, வெறுப்புக்களிலிருந்து எழும், முரண்பாடான எதிர் உணர்ச்சிகளால், மயங்கிக் குழப்பமடைகின்றது." (VII-27). எல்லா ஜீவன்களும், இந்த மயக்கத்துடனேயே, பிறப்பெடுக்கின்றன. இந்த மயக்கமே, ஆன்மாவைப் புறக்கணித்து, உலகப் பொருள்களை நாடும்படி தூண்டுகிறது. ஒவ்வொரு புலனுக்கும், அதற்கான உலக சாதனங்களில் மன விருப்போ, அல்லது மன வெறுப்போ, உண்டு. இவைகளே, ஜீவனுக்குக் கேடு விளைவிப்பவை. ஆகையினால், புலன்களின் ஆட்சிக்கு, வாழ்க்கையை உட்படுத்திவிடலாகாது (III-34). தவிர, ஒவ்வொரு ஜீவனும், தன் வினைகளை ஏற்படுத்திச் செயலாக்கும், முக்குணங்களையும் சமப்படுத்தி, அவற்றையும் கடந்தோனாக வேண்டும். (II-45). விருப்பு, வெறுப்பு போன்ற இருமைகளை நீக்கிய மன நிலையில், தெய்வ இயல்பு ஓங்கி வளரும், சிற்றியல்பு அடங்கிப் பணிந்து நிற்கும். மனம் ஒரு வெளுத்த வெண்ணிற ஆடை போலானது. அதற்குப் புலன்கள் எவ்வர்ணம் தீட்டுகின்றனவோ, அதையே, மனம் கெட்டியாக ஏற்றுக்கொள்ளும். புலத் தீண்டுதல்கள் மூலமே, விருப்பு, வெறுப்பு ஏற்படக் கூடுமாதலாலும், அப்புலன்களைப் பின்பற்றும் சுபாவம், மனத்திற்கு இயற்கையாய் ஏற்பட்டிருப்பதாலும், புலனடக்கமே, ஜீவனுக்கு முதற் தேவையாம். ஆசைக்கு, நிலைக்களன்கள், புலன்கள், மனம், புத்தி. (III-40).

ஆசையே, துன்பங்களுக்குக் கருவூலம். உலகப் பொருள்களையெல்லாம் போக சாதனங்களாக, ஒரு ஜீவன், நினைத்துக் கொண்டேயிருந்தால், அப்பொருள்களில், பற்றுதல், நிச்சயமாக ஏற்படும். பற்று, அப்பொருளைத் தனது உடமையாக்கிக் கொள்ளும் முயற்சியில் கொண்டுவிடும். இச்செயல்கள், தர்ம முறையாகவும், அல்லது

அதர்ம முறையாகவும் அமையலாம். எவ்வாருயினும், நினைத்த பலன் கிட்டாவிட்டால், கோபம் எழும். கோபம் என்பது, மனத்தின் அபாயமான கொந்தளிப்பு நிலை. அதில், மனச்சாட்சிக்கும், பகுத்தறிவுக்கும் செயல்பட இடமில்லாமல் அடித்துவிடுகிறது. இவை செயலற்றுப் போனால் தர்மம், அதர்மம், என்ற பாகுபாடுகள் காண முடியாமல், ஆசை எவ் வழி தூண்டுகிறதோ, அவ்வழியே மனம் சென்று செயல்படுகிறது. மனத்தில் அமைதியின்மையும், அதனுல், துன்பமும் அதிகரிக்கிறது. கண்களால், ஆசை ஏற்படுகிறதென்று, கண்களை அழித்துவிடலாமா? புலன்க ளைத் தரும வழியில் திருப்பிப் பழக்க வேண்டும். ஆமையின் உவமையை மனத்தில் கொண்டு, புலன்கள் நுகரும் யாவும் பரமன் வடிவமே என்றும், பரமனே எங்கும் வியாபித்திருக்கிருர் என்ற திடநம்பிக்கை யுள்ள அறிவையும் வளர்த்து, எப்பொழுதும், யாவற்றிலும் பரம னின் எண்ணமே எழப் பழக்க வேண்டும். ஆசைகளை அகற்றிய ஜீவன், எங்கு வசித்தாலென்ன ? எந்த வேடம் பூண்டா லென்ன ? ஆசையை ஒழிக்கவே யோகப் பயிற்சி, கையாளப்படுகிறது.

தேவை என்ற உணர்ச்சியே, ஆசைக்கு அடிப்படை. ஒரு பொருள் நம்மால் வேண்டப்படா விட்டால், அதன்பால் ஆசை யெழுவது எங்ஙனம் ? வேண்டாமையே ஆசையற்ற நிலை. ஆசை யற்ற நிலையே ஆனந்த நிலை. இதை யுணராத, நாகரீக மானிடன், புலன்களை ஏவி விட்டு, எதையும் வேண்டி, ஆசைப்பட்டு, தவிர்க்க முடியா தென்ற தற்கொலைக் கொப்பான நிலையைத் தழுவுகிருன். பிறர் ஏளனத் தைத் தவிர்க்கவும், போலி மதிப்பை ஏற்படுத்திக் கொள்ளவும், வேண்டாதவை யெல்லாம், அத்தியாவசியம் என்ற தலைப்புக்குள் வந்து விழுகின்றன. உயிரைக் காக்க, உணவு அவசியம். இயற் கையின் கருணையால், இது ஒரு மட்டுப்பட்ட தேவைதான். என்ருலும், மானிடன், இத்தேவையைத் தீர்த்துக் கொள்வதிலேயே, தன் முழு நேரத்தையும், சக்திகளையும் வீணடிக்கின்ருன். தேவைகளைப் பெருக்கிக் கொண்டால், துயரை யடைவதோடு நிற்காமல், பிறவியின் நோக் கத்தை மறந்து, நாளடைவில், அந்நோக்கை மறுக்கவும் துணிந்துவிடுகிருேம். அபரிமிதமான தேவைகளின் பெருக்கால், வாழ்க்கைப் போராட்டத் தின் கொடுமை, வானளாவிக் கொண்டு வருகிறது. மனிதனுகவே ஏற்படுத்திக் கொள்ளும் இச்சுழலில் ஆன்ம வளர்ச்சிக்கு முரணுன வாழ்க்கை ஏற்படுவதால், மானிடப் பிறவியின் பயன் கிட்டாது போகின்றது. மரமாகவோ, விலங்காகவோ, ஜன்ம மெடுத்தால், போதாதா ? அவை, வீண் அல்லல் ஏற்படுத்திக் கொள்ளாமல், தங் கள் இயற்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்கின்றன.

யோகப் பயிற்சி மூலம், ஆன்ம பலத்தையே நாட வேண்டும். (III-42). குறள் கூறுவது போல், பற்றற்றானைப் பற்றுக, அப் பற்று விடற்கு. இதையே பஜகோவிந்தத்தில் ஆதிசங்கரர், "யஸ்ய, ப்ரஹ்மணிரமதேசித்தம், நந்ததி, நந்ததி, நந்தத்யேவ" என்கிறார். பரமன் நினைவிலே மகிழ்ச்சி யடையும் ஜீவன், தேவையின்மையால் சுகத்தையே அடையும். தெய்வத்தை நாடும் மனம், உலகபோகத்தை நாடாது.

நமது, புலன்கள், உலகப் பொருட்களுடன் உறவாடும்பொழுது மனமும், புத்தியும், ஆசையால் தூண்டப்பட்டு, புலன்களைப் பின்பற்றி, கொந்தளிப்படைகின்றன. ஆனால், தார்மீக முறையில் புலப்பழக்கம் கொண்ட ஜீவன், சமநோக்காகிய யோக நடுநிலையடைந்து, சாக்ஷிபோல் துன்பமடையான். II-59-ல், "நிராஹாராஸ்யதேஹின:," என்பது, உபவாசம் போன்ற வயிற்றுப் பட்டினியை குறிக்கவில்லை. அதர்மமான ரீதியில், புலநுகர்ச்சி யளிக்காதிருப்பதே உண்மையான உபவாசமாகும். மனத்தைப் பற்றற்றதாக்குவதே, யோகப் பயிற்சியின் முதலான குறிக்கோள். இரண்டாவதாக, காண முடியாத, அறிய முடியாத, பரமனை நுகர்வதேயாம். மனத்திலிருந்து, ஆசையை அடியோடொழிக்க, பரமனின் போதம், மனக் காட்சியாகவோ, அல்லது, ஆன்ம ஞானமாகவோ கிட்ட வேண்டும். இதை II-59-ல், "ரஸவர்ஜம், ரஸோப்யஸ்ய, பரம்த்ரஷ்ட்வா, நிவர்த்ததே", என்று மொழிகிறார். ஆனால், ஆன்ம நம்பிக்கை யற்றவனுக்கு ஆசையும், அதன் விளைவாகிய துன்பமும், பிறப்புரிமைகளாம். அவனுக்கு யோகம் கிட்டாது.

யோக சித்தாந்தத்தை மனதில் பதியவைக்க, யோக முறையையும், விஞ்ஞான முறையையும், ஒப்பிட்டு, அவற்றின், ஒற்றுமை, வேற்றுமைகளைக் கூறுவது அவசியமாகும். இவை இரண்டும், மனிதன் கையாளும் இரு சாதனங்கள், என்பதைத்தவிர, மற்றெல்லா வகைகளிலும், ஒன்றுக்கொன்று, முற்றிலும் முரண்பாடானவை. நோக்கங்களிலும், உபயோகிக்கும் கருவிகளிலும், கிட்டும் பலன்களிலும், ஒன்றுக்கொன்று நேர்மாறானவை. விஞ்ஞானம், மனிதனின் வாழ்க்கையை எளிதாக்கவும், அதன் தரத்தை மேம்படுத்தவும் உபயோகப்படுகிறது. ஆனால், யோகம், மனிதனையே உயர்த்த உதவி புரிகிறது. யோகப் பயிற்சி, மனிதனின் உள் உலக இயல்புகளை ஆராய, மனிதனையே, ஆராய்ச்சிசாலையாகக் கொண்டு, மனிதனின் மனத்தையே கருவியாகக் கையாளுகிறது. ஆனால், விஞ்ஞானம், வெளியுலக இயற்கை இயல்புகளை ஆராய, பூதக்கருவிகளை உப

யோகப் படுத்துகிறது. யோகம், மனிதனுள் எழும் இயற்கை யுணர்ச்சிகள், வினைகள், இவைகளைக் கட்டுப்படுத்த முயலுகிறது. விஞ்ஞானம், வெளி இயற்கையையும், அதன் சக்திகளையும் கட்டுப் படுத்தி, அவற்றை மனிதனின் வாழ்க்கைக்கு உபகாரமான வழியில் திருப்பி, உலக வாழ்க்கையை எளிதாக்கும் நோக்குடையது. மனித னின் உள்ளத்துள் எழும் போராட்டத்தை, விஞ்ஞானம், தன் கவனத்துக்கு எடுத்துக் கொள்ளவில்லை. விஞ்ஞானி, ஜடப்பொருளை விண்டு விண்டு, அதன் மூலப் பொருளாகிய, ஏகத்தைக் காண முயலுகிறான்; என்றாலும், பிரபஞ்சத்தின், ஒரு சிறு பகுதியாகிய ஜடப் பொருளையும், அதைப் பாதிக்கும் இயற்கை சக்திகளையும் மட்டுமே, கணக்கிலெடுத்து, பரிமாணம், நிறுத்தல், என்ற அளவைக்குட்படாத, அழகு, சத்தியம், அன்பு, பகை. ஆசை, கோபம், நோக்கம், இவை போன்றவைகளை முற்றிலும் புறக்கணித்து விட்டு, உலகத்தைப்பற்றி ஒரு முடிவும் கட்டிவிடுகிறான். அந்த முடிவு, எவ்வாறு உண்மையாகும்?

வெளியுலகிலும் சரி, மனிதனின் உள் உலகிலும் சரி, ஒருமைப் பாட்டை, மேதாவிகள் உணர்கிறார்கள். இந்த ஒருமைப் படுத்தும் மூலத்தைக் காண, இரு சாராரும் முயற்சிக்கின்றார்கள். விஞ்ஞானி, உள் உலகை ஒப்புக் கொள்ளாமல், வெளியுலகை மட்டும் ஆராய்ச்சி செய்து, ஜடப்பொருளை விண்டு, அதன் தத்துவத்தை, முதலில், எலமென்ட் என்றும், பின் அணு என்றும், அப்பால், எலெக்ட்ரான் என்றும், அந்த எலக்ட்ரானின் தன்மை ஒரு சமயம் ஜடப்பொருள் போலும், வேறு சமயம், சக்தி அலைகள் போலும், காண்கின்றார். ஜடப்பொருள், ஜடப்பொருளின் தன்மையை இழந்து, உணர்ச்சி களின், எண்ணங்களின் தன்மையை அடைவதாகவே ஏற்படு கிறது. இந்தக் கடைநிலையே, யோகியும் வற்புறுத்தும் நிலை. யோகி, இப்பிரபஞ்சத்தின் மூலதத்துவம் ஸ்தூலமல்ல வென்றும், ஆன்மத் தன்மை கொண்டதென்றும் நம்புகிறார். அந்த ஆன்ம நிலையை அடை வதே மனிதனின் குறிக்கோளாகக் கொள்கிறார். அத்தன்மையை மனிதன் பெற்றால், பின், இந்தப் பூதவுலகையும், அதன் சக்திகளையும், தன் இச்சைபோல், அடக்கியாள இயலுமென்று உறுதியளிக்கிறார். யோகி, தன்னுள்ளத்தில் எழும் உணர்ச்சிகளையடக்கி, தன் மனத்தைத் தூய்மைப்படுத்தி, சூன்யமாக்கி, ஆன்ம நிலையை அடைய முயலுகிறார். விஞ்ஞானி, ஆன்மாவை மறுத்து, யாவும் ஜடமேயென்று நம்புகிறார். யோகி, ஜடப்பொருள் யாவும், அநித்தியம் என்றும், அவற்றைப் பின்பற்றி நிற்பது மண்குதிரையை நம்பி ஆற்றில் இறங்கிய கதையில் முடியுமென்றும் எச்சரிக்கை விடுக்கிறார்.

விஞ்ஞானிக்கும், யோகிக்கும் முரண்பாடுகளே அதிகம். விஞ்ஞானி உலக வாழ்க்கையை எளிதாக்குவதில், ஓரளவு வெற்றி கண்டாலும், பெருவாரியான உலக மக்களுக்கு, வாழ்க்கை எளிதாகாமல், வாழ்க்கைப் போராட்டமே, கடுமையாகி வருகிறது. இந்த அவதி நிலைக்கு விஞ்ஞானம் பொறுப்பல்ல. மனிதனின், இழிவான கீழியல்பே காரணம் என்ருலும், பெருமிதப் பண்ட உற்பத்தியென்ற விஞ்ஞானத் தூண்டுதலால், தூண்டிலில் உள்ள இரைக்கு, மீன் ஆசைப்படுவதுபோல், ஆசைகளை வளர்த்து, பெரும்பான்மையான மக்கள் அவதிக்குள்ளாகிருர்கள். விஞ்ஞான முறையில், மனக்கட்டுப்பாடு, தன்னடக்கம், பற்றின்மை, திருப்தி இவை போன்ற நற்குணங்களைப் பற்றிய விசாரமேயில்லை. இவையின்றியும், விஞ்ஞானத்தில் முன்னேற்றங் காணலாம். ஆனல், யோகமுறை, இக்குணங்களையடையாது வெற்றிபெறுவதில்லை. விஞ்ஞானம், மானிடனின் ஆசைகளைக் கட்டுக்குள்ளடக்க முயலாததுமின்றி, அவைகளைத் தூண்டிப் பெருக்கவும் செய்கிறதென்றே கூற இடமுண்டு. யோகத்தின் நோக்கம் ஆசையை வேருடன் ஒழிப்பதாம். ஒரு பாழுங் கிணற்றில், மனிதர்கள் வீழ்ந்து மடிவதைக் கண்டும், விஞ்ஞானம் அதைத் தடுக்க, அக்கிணற்றைச் சுற்றி வேலிபோட எண்ணுமல், விழுந்து காயமடைந்த பின் வேண்டிய சிகிச்சை செய்ய மருத்துவமனைகளைக் கட்டிக்கொண்டு போவதே, நாம் காணும், நாகரீக உலகக் காட்சி. வீண் ஆசைகளாலேயே, பெருவாரியான மக்களின் வாழ்க்கை பாழாகி விடுகிறது. மனிதன், தன் இழிவான ஆசைகளாலேயே, தானும் அழிந்து, உலகத்தையும் அழிக்கிருன். இதினின்றும் அவனைக் காப்பது விஞ்ஞானமல்ல; யோகப்பயிற்சியே மனிதனைக் கை கொடுத்து, அவன் கடைத்தேற வழிவகை செய்கிறது. விஞ்ஞான அறிவை, மனிதன் இன்று அதர்ம முறையிலும், அநீதியான வழியிலும் உபயோகிப்பது, அவன் யோகப்பயிற்சி பெருததினுலேயே. தன்னைக்கட்டிய, ஜீவன், அதர்மவழியில் ஒருபொழுதும் ஏகான். நகர வாழ்க்கையை, நரக வாழ்க்கையாயடிப்பது, மனிதனின் கட்டுப்பாடற்ற இழி குணங்களே. வாழ்வைக் கெடுத்து, பொருளைப்படைத்துக் குவிப்பதில் யாது பயன்? விஞ்ஞான முறையால், பொருள் பெருக்கத்தில், ஓரடி முன்னேற்றங் கண்டால், ஜனப்பெருக்கத்தால், வாழ்க்கைத் தரம், ஒரு முழம் தாழ்த்தப்படுகிறது. சாண் ஏற, முழம் இறங்க என்ற ரீதியிலே, மானிட வாழ்க்கையில், அமைதியின்மையும், அவதியுமே அதிகரிக்கின்றன.

வாழ்க்கைத்தரம் என்பதின் பொருள் என்ன? எல்லோரும் இதற்கு ஒரே மாதிரியான விடை பகரமாட்டார்கள். என்றாலும், வாழ்க்கைத் தரம், பொருள்ப் பெருக்கால் உயர்வதாக, அறிஞர்கள் கருதார்கள். யோகமுறையில் வாழ்க்கைத்தரம், ஏன் மனிதத்தரம், உயர்வதென்பது, மனத்தின் சாந்தி நிலையால் குறிக்கப்படும். மனத்தில், கொந்தளிப் பில்லாமல், அமைதி நிலவுவதே, உயர்ந்த வாழ்க்கைத்தரம், மனிதத் தரம். ஆனால், விஞ்ஞான உலகம், பொருளுடைமையை வெகு வாகப் பாராட்டி, பொதி சுமப்பதே இன்பமெனக் கருதுகிறது. எந்த ஜீவன், தன் தேவைகளையும், பிறரை அண்டி நிற்பதையும் கம்மிப் படுத்திக் கொள்கிறதோ, அஜ்ஜீவனே, சமூகத்தின் உண்மைத் தொண்டன். இவ்வாறு குறைதது்க் கொள்ளப் போதிய திறன் அளிபபது ஆன்ம வலிமையும், ஆன்ம அறிவுமே. தான் ஆன்மாவே, என்ற அறிவு முற்ற முற்ற, தன் தேவைகள், தாமாகவே நழுவிவிடும். ஆன்ம போதத்தில் முன்னேற்றங் காணக்காண, அஹம் குன்றி, ஆசைகளும் அழிந்து போம். இதற்கு நேர்மாறாக, ஆன்மநம்பிக்கை யிழக்க யிழக்க, உலகப் பொருள்களின் தொடர்பு வலுப்பெற்று, அவற்றைத் தன் உடமை யாககிக்கொள்ள ஜீவன் படாதபாடுபடும் பரமன், மனிதன், உலகம், இம்மூன்றும், ஒரு முக்கோணத்தின் மூன்று மூலைகளாம். ஒன்றுக் கொன்று, நெருங்கிய, அனுசரணையான தொடர்பு கொண்ட நிலையில், மனிதன் ஆன்ம வலிமை பெற்று, உலகில் சுகவாழ்க்கை நடததுகிருன். உலகமும், மனிதனும் பரமனில் இணைப்பால், ஒன்றை யொன்று அடுத்து, நேசப்பான்மையில் செயல்படுகின்றன. ஆனால், சுதந்திரமும், பகுத்தறிவும் அடைந்த மனிதன், அகத்தால் மமதை கொண்டு, பொருள்ப் பெருக்கத்தால் மதிமயங்கிப் பரமனை மறுத்துத் தன்னைத்தானே துண்டித்துக் கொண்டால், அவ்வாறு தனித்து நிற்கும் மனிதனிடத்தில், பரமனின் உலகம், தன் நேசப்பான்மை யைக் காட்டாது, போராடத் தொடங்குகிறது. தோள்வலிவை நம்பி, ஆன்ம வலிவைத் துறந்த மனிதன், வாழ்க்கைப் போரில் வெற்றியை விட, தோல்வியையே அதிகம் அடைகிருன். ஆன்ம துரோகியான மனிதனுக்கு, உலகம் நட்பு நிலையை விட்டு, விரோதியு மாகிறது. இன்று விஞ்ஞான மோகத்தால், மனிதன்–பரமன், இடைவெளி அளவுகடந்து போகிறது. ஆன்மத் தொடர்பை மீண்டும் அளிக்க வல்லது, யோகமே, யோகப் பயிற்சியே.

இவ்வுலகப் பொருள்களல்ல நமது உடமை. "காதற்ற ஊசியும் வாராது காண்" என்று பாடினர் பட்டினத்தார். நம் குணங்களும், அவற்றால் ஏற்பட்ட வினைகளுமே, நம்மை எக்காலும் விட்டு அகலா.

விஞ்ஞானம் அக்கரையே காட்டாத நம் உள்முனே வாழ்க்கையே, மனிதனுக்கு ஜீவநிலையாம். **யோகமே நம் இரு இயல்புகளையும் இணைத்து ஒழுங்கு படுத்த வல்லது.** இதுவே யோகப்பயிற்சியின் முதல் படி என்று விதிக்கப்பட்டிருக்கிறது. **நியமம்,** என்பது பரிசுத்தம், படிப்பு, சரண் அடைதல் இவற்றை வற்புறுத்துகிறது. உடலைச் சுத்தம் செய்வது புனிதமான நீர்; ஆனால், மனத்தைக் கழுவிச் சுத்தி செய்வது சத்தியமும், அன்பும். உண்மையே பேசி, மனத்தை நீராட்டுவது, அதைப் புனிதமாக்கும் ஒரே முறையாம். தவிர, உடலையும், தகுதியான நிலையில் வைத்துக் காக்க, சில ஆசனங்கள், அதாவது, தேகப்பயிற்சி முறைகளும் ஏற்கப்படுகின்றன. **யோகப்பயிற்சியில், மனத்துக்கே முக்கியமான இடம்** அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், மனது, ஒரு கணமும் கொந்தளிப்பில்லாது இருப்பதில்லை. ஆகையால், **மனம் அமைதிபெற, பிராணயாமம், அல்லது பிராணனையடக்குதல்** என்ற முக்கியமான பயிற்சியை, யோகம் கையாளுகிறது.

பிராணன் யாது என்று கோசங்களை விளக்கும் பொழுது கண்டோம். இரண்டாவது கோசமாகிய **பிராணனே இப்புவியிலுள்ள சக்திகளெல்லாமாக ஆனது.** இச்சக்தியே, உடலையும், அதன் உறுப்புக்களையும், மனத்தையும், புத்தியையும் வேலை செய்விக்க வேண்டிய ஆற்றல் அளிக்கின்றது. பிராணன் இன்றேல், இவை யாவும் மரித்துப்போம். பிராணனின் வெளிப்படை நிகழ்ச்சி, சுவாசம் விடுதலே. ஆகையால், பிராணனையடக்க, சுவாசத்தையடக்குதலே, முறையாகின்றது. **நம் உடலில் ஏற்படும் சுவாசத்தையடக்கினால்,** நமது இஷ்டம் போல், நம் உடலின் உறுப்புக்கள் செயல்படும். புலன்களையடக்கலாம்; அதே போல், உணர்ச்சிகள், சிந்தனைகள், கற்பனை யாவற்றையும் அடக்கி, நாம் வேண்டுவது போல், செயல்படவோ, செயலற்றிருக்கவோ செய்ய முடியும். இந்நிலையில், நமது உடலுறுப்புக்கள், நாம் ஆட்டிவைக்கும் கருவிகளாக அமைகின்றன. **மனத்தையும், சஞ்சலப்படாமல், தனித்து நிற்கச் செய்யலாம்.** அதுவே, நாம் அடைய வேண்டிய நிலை. கொந்தளிப்பில்லாத மனத்தாலேயே, **உண்மையை அறிய இயலும்.** ஒரு குட்டத்திலுள்ள நீர், கலங்கிக் கொந்தளிப்படைந்தால், அதனடியில் இருக்கும் எப்பொருளும் எளிதில் தென்படாது. ஆகையால், மனது தூய்மையடைந்து, தெளிவுடன், கொந்தளிப்பின்னியில், அமைதியாக நின்றாலே, அங்கு வசிக்கும் ஆன்மாவின் போதம் நமக்குக் கிட்டும். குழப்பமடைந்த மனத்தில், ஆன்மா மறைந்தே நிற்கும். **சிந்தனை, எண்ணம், கற்பனை, ஆசை, கோபம், இவை யாவும் மனத்தில் கொந்தளிக்கும் அலைகளையுண்டாக்கும்.**

இவைகளைத் தவிர்ப்பதே யோகத்தின் நோக்கம். அந்நிலையில், மனம் சூன்யமாகி, உள்ளதை உள்ளபடி காட்சியளிக்கும்.

பிராணன் என்பது ஆன்ம சக்தியே. அதைப் படைக்க வல்லவர் பரமன் ஒருவரே. இயற்கையாலோ, செயற்கையாலோ, இச்சக்தியை உண்டுபண்ண முடியாது. அதன் வெளிப்படைத் தோற்றம், நாம் விடும் சுவாசம். மூச்சுவிடுவதைக் கட்டுப்படுத்தவும், அடக்கி யாளவும், கற்றுக்கொண்டால், பிராண சக்தியின் மேல், ஆதிக்கம் ஏற்படும். பிராணன் நம்முள் மட்டுமல்ல, எங்கும் எவ்விடத்திலும், எல்லா ஜீவன்களிலும், வியாபித்திருக்கிறது. எங்கு நின்றாலும், பிராண சக்தியெல்லாம் ஒன்றேதான்; ஒரே தொடர்புள்ளவையே. நம்முள்ளே, வினையாற்றத் துணைபுரியும் இச்சக்தியை வசப்படுத்தினால், அத்துடன் சங்கிலிபோல் தொடர்புள்ள, இப்புவியிலுள்ள எல்லா ஜீவன்களில் இயங்கும் பிராண சக்தியை வசப்படுத்த நமக்கு வல்லமை ஏற்படும். இப்பிரபஞ்சத்தில், யாவும் ஒன்றுக்கொன்று தொடர்பு கொண்டவை; தவிர, யாவற்றின் மூலமும் ஒன்றேயாம். இக்காரணமாக, தன்னையடக்கி ஆளுபவன், இப்புவியை யடக்கி ஆள்வான் என்று கூறப்படுகிறது. சாதாரணமாக புலன்களை அடக்கி ஒடுக்க, உடலுக்களிக்கும் ஆகாரத்தை தடைசெய்வது ஒரு முறையாக வழங்குகிறது. ஆனால், பிராணனே, ஆகாரத்தைச் சக்தியாக மாற்றி உடலுறுப்புகளுக்கு ஊட்டுவதால், அப்பிராணனையே அடக்குவது, புலன், மற்றும் உறுப்புக்களை மிக எளிதில் கட்டுப்படுத்த உதவுமென்பது தெளிவு. புலன்களின் ஆதிக்கத்தையும், ஆசைகளையும், அடக்கப் பிராணயாமமே கைகண்ட சஞ்சீவி. இதையே நமது முன்னோர்களாகிய ரிஷிகளும், தீர்க்கதரிசிகளும் கையாண்டு சித்திபெற்றதுடன், உலகில், சுகமும், புகழும் அடைந்தார்கள்.

மூச்சை வெளிவிடுவதும், உள்ளிழுப்பதும், நம்மிச்சையின்றியே, தானாகவே நடைபெறும் சம்பவம். பிராணனின் சக்தி நம்மார்பை விரியச் செய்து, அவ்விரிவால் ஏற்படும் அதிக இடத்தில், நமது நுரையீரல்கள் விரிந்து பெரிதாகின்றன. விரிவடைந்த நுரையீரல்களுள், காற்றின் அழுத்தம் குன்றுவதால், அதை சமப்படுத்த, வெளிக்காற்று, நம் நாசிகள் மூலம் நுரையீரல்களுள் புகுகின்றது. இதுவே உட்கொள்ளும் சுவாசம். இந்தக் காற்று நம் இரத்தத்தை சுத்தி செய்கிறது. உடன் நமது பிராணசக்தி, நமது மார்பைச் சுருக்க, சுருங்கும் மார்பு, நுரையீரல்களை அழுத்துகிறது. இந்த அழுத்தத்தால், முன் உட்புகுந்த காற்று, தன் வேலையைச் செய்து, வெளியேற்றப்படுகிறது. இதுவே நாம் வெளியாக்கும்

சுவாசம். பிராணனின் கூற்றே, நாம் மூச்சுவிடுவதற்கும், உள்ளிழுப்பதற்கும் காரணம். நமது தூண்டுதலோ, முயற்சியோ, இல்லாது நடைபெறும் இச்சம்பவத்தை, நாம் நம் கட்டுக்குள் ஓரளவு அடங்கச் செய்வதே பிராணுயாம முறை. இதைக் கையாள, விடாமுயற்சியும், அப்பியாசமும் தேவைப்படுகிறது. இளமை பருவத்திலேயே இம்முறையைக் கையாண்டால், எளிதாக முடியும். என்றுலும், மன உறுதியேற்பட்டால், கைகூடாது போகாது. ஹிந்துக்களில் முக்கியமாக, பிராமணர்கள், பிராணுயாமத்தை தங்கள் நித்திய கர்ம அனுட்டானங்களில் பயிற்சி பெற இடமுண்டு. கதிரவனைக் காணுமல், கோணுமல், கண்டுகொடுக்கும் சந்திவேளை வந்தனமளிக்கும் வழக்கம் வெகுவாகக் கைவிடப்பட்டதாகவே கருதவேண்டும். இது ஒரு பெருந் துர்ப்பாக்கியமே. பிராணுயாமம் எல்லோராலுமே கையாளப்பட்டு, பழக்கத்துக்கு வந்தால், மானிடப் பண்பு பெரிதும் மேம்பாடடையும். பிராணுயாமத்தைப் பற்றிய நுட்பமான செயல் முறை விளக்கம் பெற, அதைப் பயிற்சி செய்து அநுகூலமடைந்தவர்களை நாடிப் பெறுவதே அபாயமற்ற வழியாகும்.

மானிட உடல் கூற்றைக் கவனிக்குங்கால், அதில் உணர்ச்சிக்காக ஏற்பாடாயிருக்கும் அற்புதமான நரம்பு வரிசைகள், நம்மைப் பிரமிக்கச் செய்கின்றன. மானிட வர்க்கத்திலேயே, இவை அதிக அளவிலும், முதிர்ந்த வளர்ச்சியும் அடைந்து காண்கின்றன. இந்த நரம்புத் தொடர்களுக்கு, நம் தலையிலுள்ள மூளையே பிரதான கேந்திரம் இரண்டாவதாக, முதுகெலும்புகளாலான ஸ்பைனல் கால்வாயில் செல்லும் கயிறு போன்ற நீண்ட நரம்புக் கொத்தும், அதினின்றும் உடலின் எல்லாப் பாகங்களுக்கும் செல்லும் பொடி நரம்புகளுமாம். சில விஞ்ஞானிகள் கருதுவது போல், நரம்புகளே உணர்வின் உற்பத்தி இடமல்ல. இவை, உணர்வை எடுத்துச் செல்லும் பாதைகளேயாம். மின்சாரத்தைக் கொண்டுபோகும், உலோகக் கம்பிகள் போல், நரம்புகள் செயல்பட்டு, உணர்வைத் தாங்குகின்றன' நரம்புகள் இருந்தாலும், சில சமயம், சில பாகம் உணர்வற்றுப் போவதை, அதாவது, மரத்துப் போவதைக் காண்கிறோம். ரண சிகிச்சையில், உணர்வைப் போக்கடிப்பதும், இக்கருத்தை ஊர்ஜிதம் செய்கிறது. பிராணன் உள்ளவரைதான் உணர்வும் உண்டு. நரம்புகள், மனம் இட்ட கட்டளைகளை எடுத்துச் சென்று, உறுப்புக்களை அதன்படி செயல்படச் செய்வதும், வெளியுலக விபரங்களை உணர்ச்சி வாயிலாக மனத்திற்குக் கொண்டு சேர்ப்பதும் அவைகளின் கடமை. முன் வகை நரம்புகளுக்கு, பிங்கள, என்றும், மற்ற

வைக்கு இடா, என்றும் பெயர்கள் வழங்குகின்றன. இவை செயல்பட, இவைகள் இணைக்கப் பெற்ற ஸ்பைனல்கார்டு மூலமே, மூளையை அடைகின்றன. எப்படி, இயற்கையில், மின் அலைகள், தந்திக்கம்பி யில்லாது பரவுகின்றனவோ, — உதாரணமாக, ரேடியோ, கம்பியில்லாத் தந்தி, டெலிவிஷன் போன்ற கருவிகளில் — அதே போல், நம் உடலிலும், நரம்புத் தொகுதிகளின் மூலமல்லாது, உணர்ச்சி சக்தி செயல்படும் முறையை யோகி கையாளுகிறுர். எல்லா ஜீவன்களிலும், அதற்கேற்பட்ட சக்தி, ஓரிடத்தில் குவிந்து கிடக்கிறது. மானிட வர்க்கத்தில், இந்த அபார சக்தி, ஸ்பைனல் கால்வாயின் அடிமுனையாகிய, மூலதாரை, என்ற முக்கோண வடிவாயுள்ள, ஆனுல், அடைபட்டு வெளித் தொடர்பில்லாத இடத்தில் மண்டிக்கிடக்கின்றது. இச்சக்தி பாம்பு போல் சுருண்டு கிடப்பதால், குண்டிலினி, எனப் பெயர் பூண்டது. ஸ்பைனல் கால்வாயை, சுஷும்னு, எனப் பகர்வார்கள். இக்கால்வாயின் மேல் முடிவு மூளைக்குள், அதன் அடிப்பாகத்தில், ஒரு பந்து வடிவமாக ஏற்பட்டு, மூளைக்குள் உள்ள திரவத்தில் மிதக்கின்றது. இப்பந்து வடிவமான பாகத்திற்கு, சஹஸ்ரதாரை, அல்லது, ஆயிரம் தளங்கள் கொண்ட தாமரை எனப் பெயர் வழங்குகிறது.

யோகியின் குறிக்கோள், மூலதாரையில், வெளித் தொடர்பில்லாது மண்டிக் கிடக்கும் குண்டிலினி என்ற அபார சக்தியை எழச் செய்து, அதை சுஷும்னு கால்வாயின் மூலம், மேலெடுத்துச் சென்று மூளைப் பாகத்தில் உள்ள, சஹஸ்ரதாரையில் கொண்டு சேர்த்து, கலங்கச் செய்வதே. இவ்வாறு கொண்டு செல்வது, படிப்படியாகவே முடியும். குண்டிலினி சக்தி, தன் இருக்கையான மூலதாரையை விட்டுக் கிளம்பி, மேலெழும்பொழுது, மனம் ஆன்ம வளர்ச்சி பெற்று, ஜீவனின் வாழ்க்கை முறையும், படிப்படியாகவே, முன்னேற்றமடைகிறது. இந்த ஆன்ம வளர்ச்சியில், உலகப் பொருள்களுக்கோ, உறவுகளுக்கோ, பிறர் உதவிக்கோ, இவற்றுல் உண்டாகும் இடையூருக்கோ, இடமேயில்லை. தனி மனிதனின் தன் முயற்சியாலேயே, இது கைகூடும். ஆனுல், உலகில், நம் உடலால், நாம் ஏற்படுத்திக் கொள்ளும், பந்தங்கள், இந்த ஆன்ம வளர்ச்சிக்கு நேரடியல்லாத, பிற வழித்தடைகளாக அமையலாம். அவைகளைக் குறைத்துக் கொண்டாலே, யோகாப்பியாசம் எளிதாகும். இவ்வாருன, மன வளர்ச்சியை, ஏழு படிகளாக வகுத்து யோகசாஸ்திரம் கூறுகிறது. ஒவ்வொரு படியும், மனத்தின் தன்மையை, உயர்த்தி, ஜீவனின் உலக வாழ்க்கையில், பெரும் மாறுதல்கள் ஏற்படுத்துகிறது.

கீழ், மூன்று படிகளின் நிலை மட்டம், குதம் (மலம் கழியும் வாய்), ஜனன இந்திரியம் (இன உற்பத்திக் கருவிகள்), தொப்பிள் (நாபி), இவற்றிலே முறையே நின்று, இவ்வுறுப்புக்கள் வினையாற்று வதிலே, சக்திகளெல்லாம், விரயமாகின்றன. முற்றிலும் மிருகவாழ்க்கை நடத்தும், ஜீவன்களிடத்தில், குண்டிலினி சக்தி இந்த மட்டரக நிலையைத் தாண்டுவதில்லை. இவர்களின் வாழ்க்கைக்கு, ஆசையே அடிப்படை. இவர்களின் மனம், உலகப் பொருள்களாகிய, பொன், மண், பெண்ணாசைகளிலே உழலும். உண்பதும், உறங்குவதும், உடுப்பதுமே இவர்கள் பிறவி எடுத்ததின் நோக்கம். அடைபட்டு, சுற்றிக்கொண்டு கிடக்கும் இந்த மாபெரும் குண்டிலினி சக்தியைப் படைப்பில் எல்லோரும் பெற்றிருந்தாலும், அதை நல்ல முறையில் கையாண்டு பயன்படுத்தப் பெரும் முயற்சி தேவைப்படுகிறது. அம்முயற்சியே, யோகப் பயிற்சியாம். யோகப்பயிற்சி யற்றவர்களின் குண்டிலினி சக்தி பெரும்பாலும், கீழ்படிகளில் வீணடிக்கப்படுகிறது.

நாலாம்படியாகிய, இருதய மட்டத்திற்கும், அதற்கு மேலும், குண்டிலினியை எழுப்பிச் செல்ல, யோகப் பயிற்சியோ, தியானமோ, பக்தியோ, அல்லது பெரியோர்களின் ஆசியோ, இவற்றில் ஏதேனும் ஒன்று அவசியப் படுகின்றது. குண்டிலினி சக்தி இருதய மட்டத்திற்கு ஏறிவிட்டால், மனம் சிற்றின்ப ஆசைகளில், களிக்காமல், உலகப்பற்று குறைந்துபோய், மனத்தின் வெளி நாட்டம் மட்டுப்பட்டு, அது தன்னுள்ளேயே வாழ்ந்து மகிழ்வடைகிறது. ஆன்ம ஒளியின் உதயம் கிட்டுகிறது. ஐந்தாவது படி, தொண்டையை எட்டிய நிலையாம். இங்கு குண்டிலினி, அடைந்ததும், ஜீவன், ஆன்ம ஒளி பெற்று, அஞ்ஞானமாகிய இருள் நீங்கி உலகப் பற்றுக்களை உதறித் தள்ளி, பரமனின் தொண்டனாக, உலகுக்குச் சேவை புரிகிறான். நெற்றி மட்டமே, ஆறுவது படி. இங்கு ஆன்ம ஞானம் முற்றி, எங்கும் பரமனின் வடிவத்தையே உணருகிறான். என்றாலும் "தான்" என்ற வாசனை அடியோடு அகன்றபாடில்லை. அஹங்காரமே, கடைசிவரை, மனிதனுக்குத் தொல்லை கொடுக்கும் பிணி. அது நம்மை விட்டகன்றாலே, நாம் முத்தி நிலையை அடைவோம். கடைசியாக, ஏழாம் படியாகிய, சகஸ்ரதாரையில், குண்டிலுனி சக்தி கலந்தவுடன், ஜீவன் ஆன்ம பரவசமாகி, நிர்விகல்ப சமாதியில் நிற்கின்றது. இந்நிலையில், ஜீவன் ஆன்மாவுடன் ஐக்கியமாகி, உடலைத் தள்ளிவிடுவதால், அந்த நேரத்தில், உடல் உயிரற்றதாகக் காணப்படுகிறது. சமாதி கலைந்தவுடன், [ஜீவன் மறுபடியும், உடலையடைந்து விடுகிறது. என்று

லும், உடலை விட்டு, மரணத்தில், அஜ்ஜீவன், பிரிந்த பின், மறுபடியும் பிறப்பு எய்தாதென்றே, யோகசாஸ்திரம் பகர்கிறது. முதல் படியிலிருந்து, ஏழாம் படியை, ஒரு ஜீவன் ஒரே ஆயுளில் (பிறவியில்), அடைவது அசாதாரணமே. கீதை VI-45-ல் கூறுவது போல், பலபிறவிகளில் பக்குவமடைந்தே, கடைநிலையாகிய, சமாதி நிலையை, சகஜமாக எட்டமுடியும்.

இவ்வாறு, குண்டிலினிசக்தியை எழுப்பி, மேலே இட்டுச் செல்ல, பிராணுயாமம் இன்றியமையாதது. பிராணுயாமம் பயிலும் பொழுது, மூச்சை நம் இச்சைபோல் அடக்கியும், வெளியேற்றியும், உட்கொண்டும் செய்வதனுல், உடலின் அசைவுகளெல்லாம், ஒரு ஒழுங்குக்குள்ளாகி, கட்டுப்பட்டு நடக்கின்றன. இதனுல் மனது ஒருமுகப்பட்டு, புத்தியும் உறுதிப்பட்டு, அசாதாரணமான சக்திபெறுகின்றன. உடலும், அனுவசியமான சலனங்களைத்தவிர்த்து உன்பையானஓய்வு பெறுகிறது. இவற்றின் காரணமாக, சக்தி சேமிக்கப்பெற்று, வேண்டும் பொழுது பயனுகின்றது. யோகப்பயிற்சியின் குறிக்கோள், மனத்தை ஒருமுகப் படுத்தி, செயலற்ற, சூன்ய நிலையை அடையச்செய்வதே. இதுவே, பிராணுயாமப் பயிற்சியின் பலன். குண்டிலினி சக்தியை எழுப்பவும், ஆசைகளையடக்கவும் — இச்சிக்கலான சுழல் வட்டத்திலிருந்துமீள, வேறு உபாயம் இல்லை. பக்தி, தியானம், இவையேபோதிய சூழ்நிலையையும் ஆற்றலையும் நமக்களிக்கவல்லவை. தெய்வநம்பிக்கையற்றவனுக்குயோகமில்லை. பரமனையே எண்ணிக்கொடு, அவன் பால் மனத்தை நிறுத்தி, ஒருமுகப் படுத்தினுல், மற்றெல்லா எண்ணங்களும், பறந்தோடிவிடும். மனத்தின் இயல்பு, ஒரேசமயத்தில், இரண்டு முரண்பாடான, எண்ணங்களைக் கொள்ள இயலாது. ஆண்டவனின் நினைவுள்ள மனத்தில், உலக எண்ணங்களுக்கு இடமில்லை

யோகப்பயிற்சியின் விசேடம் நம் மனத்தின் ஒருமித்த கவனமே. ஒருமுகப்பட்ட மனநிலையை அடையாவிட்டால், யோகப்பயிற்சி, கேவலம், உடல்பயிற்சியாகவே முடியும். அதனுல், உடல் நலம் கிட்டலாம், ஆன்மவளர்ச்சிக்கு இடமிராது. ஆகையால், பிராணுயாமம் செய்யும் பொழுது, குண்டிலினி சக்தியை, உட்கொள்ளும் சுவாசத்தால் தாக்கி எழுப்புவதாகவே நம்மனம் கருத்தூன்றி, முழுநம்பிக்கையும் கொள்ளவேண்டும். பின், மூச்சை வெளியேற்றும் பொழுதும், வெளிவரும் சுவாசத்துடனும் குண்டிலினி சக்தி இழுக்கப்பட்டு, மேலேறிக் கொண்டு வருவதாக நம் மனம் நம்பவேண்டும். இவ்வாறே, மூச்சை உட்கொள்ளும்பொழுதும், நிறுத்தி வைக்கும் பொழுதும், வெளியேற்றும் பொழுதும், குண்டிலினி சக்தி, நம் சுவாசத்துடன் பிணைக்கப்பட்டு, பிராணசக்தியுடன் மேலேறி வருவதாக, மனம் கூர் நோக்கடைந்து பூரண நம்பிக்கை கொண்டாலே, யோகம் சித்திக்கும். எண்ணம், சங்கல்பம், கற்பனை, நினைவு என்பவை, பிராணனின் சக்தி, வடிவங்களே. எண்ணம் வலுத்து உறுதிப் படுமானுல், காரிய சித்தியடைவதும் உறுதி.

## IX. மானிடனும், இதர உயிரினங்களும்

மானிடன் யார்? அவன் குறிக்கோள் யாது? இதற்கு உண்மையான விடை ஒன்றுதான் என்று, பஞ்சகோசங்களை விளக்கிக் கண்டோம். ஆனாலும், அதில் எல்லோருக்கும் முழு நம்பிக்கை எளிதில் ஏற்படுவதில்லை வாழ்க்கை வாழ்வதற்கே என்ற சித்தாந்தம் வலுப்பெற்று வருகிறது. ஆன்ம நிலையில் அவநம்பிக்கை ஏற்படுகிறது. இதை மாற்ற பரமனின் அருளாலேயே இயலுமென்றாலும், மனிதனுக்கும் இதர படைப்பினங்களாகிய, தாவரம், விலங்குகள், இவற்றுக்குமுள்ள, ஒற்றுமை, வேற்றுமைகளைக் சிந்தித்துப் பார்க்கச் செய்வதால், ஒரு சிலருக்கேனும் உண்மை புலப்படலாம். நம்மில், பெரும் பாலோர், மனிதனுக்கும் விலங்குகளுக்கு முள்ள, அளவுகடந்த இடை வெளியையும், வேற்றுமைகளையும், உணராமல், தங்கள் கீழியல்பாகிய, அசுர குணங்களுக்கு இடம் கொடுத்து, மிருகத்தையும் வெட்கச் செய்யும் கேவலமான முறையில், வாழ்க்கை நடத்துகிறார்கள். மனிதனுள், மிருகஇயல்பு மண்டிக்கிடந்தாலும், விலங்கினத்தைத் தாண்டி வெகுதொலை கடந்த, அவன், பின்நோக்குக் கொண்டு, அவற்றை வெளிப்படித்திச் செயல்புரிவது, தன் அழிவையே தேடிக் கொள்வதாகும். அனுபவத்தால், பழுக்காத மனமும், அறிவும், பண்டம் எது; பானையெது, என்ற பாகுபாட்டை யுணராது, பண்டத்தைப் புறக்கணித்துப் பானையையே வெகுவாகக் கொண்டாடும். அதே போல், வெளித் தென்படாத தலையை மறுத்துத் தோற்ற மளிக்கும் தலைப்பாகையையே பெரிதும் போற்றும் அறிவிலிகள், ஆன்மாவின் அருமை, பெருமையைக் கண்டு கொள்ளாது, அதை மூடி மறைந்து நிற்கும் உடலையே, உண்மை எனக் கொள்வார்.

படைப்பின் பல் வேறு வர்க்கங்கள், எத்தன்மையில், ஒன்றுக்கொன்று, பெரிதும் வித்தியாசம் காட்டுகின்றன? அறிவிலே, மனிதன் மற்றவைகளைவிட மிகவும் ஆற்றல் படைத்தவனாயினும், ஒவ்வொரு இனமும், அடைந்த ஆன்ம வளர்ச்சியே அவற்றின், பிரதான வேற்றுமை யாகத் திகழ்கின்றது. பிரபஞ்சத்திலுள்ள ஒவ்வொரு ஜீவனும், தன் சூழ்நிலையினின்றும், பிரித்துக் காட்டும், "தான்" என்ற பிரிவு உணர்ச்சியுடன், உலகுக்கும் தனக்குமுள்ள ஒற்றுமையையும் உணர்கிறது. ஆனாலும், இந்த, ஒற்றுமை, வேற்றுமையுணர்ச்சிகள், ஒன்றுக் கொன்று, முரண்பட்டுத் திகழாமல், தனி ஜீவனுக்கும் பிரபஞ்சத்துக்குமிடையே, ஒத்துழைப்பையும், ஒருமைப்பாட்டையும் ஏற்படுத்துகின்றன. இந்த ஒத்துழைப்பும், ஒருமைப்பாடும், தனி

ஜீவனிடத்தில், எந்த அளவுக்குப் பூர்ணமடைகின்றனவோ, அவ்வளவுக்கே, அத்தனி ஜீவன், மேம்பாடடைந்து, வாழ்க்கையிலும் சுகம் பெற வாய்ப்பு ஏற்படுகிறது. ஒரு தனி ஜீவன், தன் சுய வாழ்க்கையைத் தனித்தே நடத்த வேண்டுமென்றாலும், படைப்பின் மற்ற உறுப்புக்களுடன், சமாதான சகவாழ்வைக் கடைப்பிடித்தாலொழிய தன் நிறைவும், முன்னேற்றமும்,தன்வாழ்வில் காணமுடியாது. இப்பேருண்மை, இன்றைய உலகில், தேசங்களுக்கிடையேயும், அதிமுக்கியத்துவம் அடைந்திருக்கிறது.

புல், பூண்டு, மரம், செடி, கொடிகளாகிய, தாவர வர்க்கத்தை எடுத்துக்கொண்டால், அவைகளுக்கும், அவற்றின் சூழ்நிலை யுலகு மாகிய, சூரிய ஒளி, வெப்பம், காற்று, மழை, நிலவளம், இவை யாவும், பெருமளவு அவற்றின் வாழ்கையைப் பாதிக்கக்கூடியவை. இவற்றுடனெல்லாம், அத்தாவரங்கள், நெருங்கிய ஒருமைப்பாடான சம்பந்தங்கொண்டாலே, அவை, வாழமுடியும். ஒரே இடத்தில் வேர் ஊன்றி, மாற்றிடம் செல்ல இயலாத, இத்தாவர ஜீவன்கள், தங்கள் தங்கள் சூழ்நிலையிலிருந்தே, தங்களுக்கு வேண்டிய ஆகாரப் பண்டங்களைப் பெற்று, பூரண வளர்ச்சி பெறுகின்றன. தங்கள் இனப் பெருக்கத்திற்காக, வித்துக்களை யுண்டுபண்ணியதோடு அவற்றின், பொறுப்பு அற்று விடுகிறது. உயிரும், உணர்வும் அவைகளுக்குண்டு. ஆனால், அறிவின் சின்னமாகிய, புத்தி, மனம், மனச்சாட்சி, இவைகள்முளைவிட்ட பருவத்திலேயே நிற்கின்றன.

விலங்கினத்தைக் கவனிப்போமானால், இங்கு தனித்தவாழ்க்கையும், படைப்புடன் ஒற்றுமையும், அதிகம் வளர்ச்சியடைந்திருப்பதைக் காண்கிறோம். ஒவ்வொரு ஜீவனின் தனித்தத்துவம்,பெரிதும் வளர்ச்சிபெற்று, ஒன்றை, மற்றவை களினின்றும் பிரித்துக்காட்டும் தன்மை, தெளிவாகத் தென்படுகிறது. ஒரே இனமரங்களுக்குள்ளே, ஒன்றுக்கொன்று வித்தியாசம் காட்டுவதில்லை; ஆனால், ஒரே இன விலங்குக் கூட்டத்தில், ஒருஜீவனுக்கும், மற்றவைகளுக்குமுள்ள வேற்றுமை எளிதில் காணமுடியும். இத்தனி நபர் தத்துவம், மானிடவர்க்கத்தில், உச்சநிலையடைந்து, ஒருமனிதனை, மற்ற மனிதர்களினின்றும், பிரித்துக் காட்டுகிறது. இத்தனித்தத்துவ வேற்றுமைகள், வெளித்தோற்றமாகிய உடலமைப்பில், ஓரளவே தென்பட்டு, அதிகமாக இல்லாமல், உள் முனையாகிய, ஆன்மநிலை, மனோபாவம், குணாதிசயங்கள் மூலமாகவே, வெகுவாகத் தெளிவாகின்றன. ஒருதனி

ஜீவனின், ஆன்ம, மன, குணவளர்ச்சி, அதன் சொந்தப் பொறுப்பேயாகும். விலங்கினங்களின் சூழ்நிலை, உலகத்தாலும், மற்றும் ஜீவராசிகளாலும் சமைக்கப்பட்டதேயானாலும் அச் சூழ்நிலையைத்தனக்கு, சாதகமாகவோ, பாதகமாகவோ, செய்துகொள்வது தனி நபரேதான். ஆதலால் அவரவர் நிலைமைக்கு, அவரவரேதான் காரணம் என்பது தெளிவு. மானிட வர்க்கத்தைப் பொறுத்த மட்டில், இது தான் கர்மவிதி பகரும் உண்மை.

விலங்குகளுக்கும், அவற்றின் சூழ்நிலைக்குமுள்ள சம்பந்தம், தாவரங்களில் காண்பதைவிட அதிகம் நெருங்கியது. விலங்குகள் தங்கள் ஆகாரத் தேவைகளைத் தாவரங்கள் போல், ஒரே இடத்திலிருந்து அடையவேண்டிய நிர்ப்பந்தமில்லாமல், வேறு இடங்களுக்குச் சென்று தேடிக்கொள்ளும் வசதிகளைப் பெற்றிருக்கின்றன. இன்ப, துன்ப உணர்ச்சிகளும் வலுப்பெற்று, வேண்டியவை, வேண்டாதவை, என்ற பாகுபாட்டை உணர்ந்து செயல்பட இடமளிக்கின்றன. அறிவும், ஓரளவு வளர்ச்சியடைந்து, இரை தேடும் முயற்சிகளுக்குப் பெரிதும் உதவுகின்றது. இனப்பெருக்கத்திலும், பால் வேற்றுமை ஏற்பட்டு, இவற்றின் சேர்க்கைக்குப் போதிய உணர்ச்சிகளும், இயற்கையின் இயல்பாகத் தோன்றுகின்றன. ஆண் பெண் நேசம், அன்பு, ஒத்துழைப்பு, தியாகம், குடும்ப வாழ்க்கை, இவை போன்ற உயர் ரக உணர்ச்சிகளும், வளர்ந்து வருகின்றன. அதே போல், போட்டி, போராட்டம், பொருமை, கொடுமை, துவேஷம், ஆகிய மட்டரகக் குணங்களும், எதிர்மறையாகத் தலைதூக்க ஆரம்பிக்கின்றன. இனவிருத்தியால் ஏற்பட்ட புத்துயிர், பிரிந்து நின்றாலும், அதற்குப் பாதுகாப்பளிக்கும் பொறுப்பு, நீடிக்கப்பட்டு, விலங்கினத்தின் உயர்படியை அடைந்த மானிட வர்க்கத்தில், மகவைக் காத்து வளர்க்கும் பணி பெரிதும் விரிவடைந்து, அதன் மூலம், தாயன்பு, பெற்றோர் பாசம், மகவின் நன்றி, பணிவு, கடமை, ஆகிய உத்தம குணங்களும் ஏற்பட்டு, தீவிரமாகச் செயல்படுகின்றன. நன்மையும், தீமையும், இணைபிரியாது நிற்கும் இப்பூவுலகில், மேற்கண்ட உத்தம இயல்புகளுடன், எதிர்மறையான கொடிய சுபாவங்களும் தலை காட்டாமல் இருக்க முடியாது.

பசி, தாகம், உறக்கம், இவை போன்ற இயற்கையான உடல் தேவைகளின் பொருட்டும், தவிர்க்கவொண்ணாத தற்காப்பு, இன விருத்தி, இவைகளுக்காகவும், விலங்கினங்கள், உலகத்துடன், மிகவும் நெருங்கிய தொடர்பு கொள்ளுகின்றன. அவை, தங்கள், முழு நேரத்

தையும், சக்திகளையும், இத்தேவைகளுக்காகவே, செலவு செய்கின்றன. உயிர் வாழ்வதே, விலங்கினத்தின், குறிக்கோள். உண்ணுவதும், உறங்குவதும், இனவிருத்தி செய்தலுமே அவைகள் வாழ்க்கையில் கண்டவை; வேறு வினை யொன்றையும் அவைகள் அறியமாட்டா. இயற்கைச் சுபாவ உணர்ச்சிகளைத் தவிர, வேறு செயற்கை அவாவை விலங்குகள் ஏற்படுத்திக் கொள்வதில்லை. அவற்றின் அறிவு மிகவும் குன்றியதே; சிந்தனையற்ற இயற்கை அறிவே அவைகளுக்கு உண்டு. சூழ்நிலை, ஆகாரம், பருவங்கள், இவற்றைத் தெரிந்து கொள்ளப் போதிய ஞானம் படைத்தவை; என்றாலும், எழும் உணர்ச்சிகளெல்லாம், அவற்றின் மட்டரக வாழ்க்கைக்கு உதவியானவையே தவிர, வேறில்லை. மிருக வாழ்க்கையின், அடிப்படை, ஆசையே. அறிவு, வளர்ச்சியடையாததால், விலங்கினங்கள், இயற்கைக்கு அடிபணிந்து வாழ்கின்றன. அவைகளின் செயல்களுக்கு, அவைகள் பொறுப்பாகா. இயற்கை சுபாவத்தால், அவற்றில் சில இனங்கள் கொலைபுரிகின்றன. இக்கொடிய செயலைத் தங்கள் தற்காப்புக்கான பயத்தாலோ, அல்லது, உணவுத் தேவைக்காகவோ, கையாளுகின்றனவேயன்றி, வேறு பகை அவை அறியா. சிங்கங்கள், பசியடங்கியதும், பூனையின் சுபாவத்தையடைகின்றன. மிருகங்களிடத்தில், தன்னிச்சையான சுயச்செயல் என்பது கிடையாது. அவற்றின் உள்முனைப் போராட்டம், ஆசையாலே, எழுவது தான். என்றாலும், மனிதனைப்போல், அளவு கடந்த, பலவகைப்பட்ட, தானே உண்டாக்கிக் கொள்ளும், செயற்கை ஆசைகளோ, தேவைகளோ, அல்லாமல், யாவும் இயற்கையின் தூண்டுதலாலான உணர்ச்சிகளேயாம்.

மனிதனிடத்திலும், தனியாள் தத்துவம் பன்மடங்கு பெருகி, உச்சநிலையடைந்திருக்கிறது. இதுவே, மானிட வர்க்கத்தின் சிறப்புச் சின்னம். ஒரு மனிதனைப்போல், எவ்வகையிலும் ஒத்த, மற்றுமொரு மனித ஜீவன் படைப்பில் கிடையாது. எவ்வளவுக்கு ஒரு தனி நபர், சுதந்திரம் அடைய விரும்புகிறானோ, அவ்வளவேனும், நேசபாவமும், சகிப்புத்தன்மையும் மற்ற உயிர்களின் பால், அவன் காட்டக் கடமைப்பட்டவனாகின்றான். இன்றேல், தனிநபர், உலகத்துடன் போராடவும், அதனால் ஏற்படும் துன்பங்களுக்கும் ஆளாகவேண்டும். தன் சூழ்நிலையாகிய, இப்பிரபஞ்சத்துடனும், அதில் வாழும் எல்லா ஜீவன்களுடனும், தனி நபர் தன் இணைப்பைப் பூரணமாக்கிக் கொள்வது, தவிர்க்கவொண்ணாதது. மனிதன், உலகத்தை அண்டிப்

பிழைக்க வேண்டுவது, தன் உடல் தேவைகளுக்கு, மாத்திரமல்ல; படைப்பின் மற்ற இனங்களுக்கில்லாத, மன உலகத்தைத்தன்னுள் பெற்றிருக்கின்ருன், மானிடன். அதன், தேவைகளும், அவனை வெளியுலக ஜீவன்களுடன் ஒன்றிச் செயல்பட வற்புறுத்துகின்றன. அவனுடைய உடல் தேவைகள், மற்றப் படைப்பினங்களைப் போலவே யானுலும், அவ்வுடல் தேவைகளை, நிறைவேற்றிக் கொள்ள, அவனுக்கு மற்ற இனங்களுக்கில்லாத, அரும்பெரும் சக்திகளும், வசதிகளும் அளிக்கப்பட்டிருக்கின்றன. இவ்வரிய திறமைகளைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தி, அவன் தன் உடலின் அவசியமான தேவைகளையும், இயற்கை அவாக்களையும், சொற்பப்பிரயாசை கொண்டே தீர்த்துக் கொள்ள முடியும். மிருகங்களைப்போல், வாழ்க்கைக்காகத்தன் ஆயுளையும், திறமைகளையும் வீணடிக்கவேண்டிய நிர்ப்பந்தம் இயற்கையளிக்கவில்லை. வாழ்க்கையின் ஒரு சிறு பகுதி நேரத்தில் உடல் தேவைகளைத் தீர்த்துக் கொண்டு, பெரும் பகுதியை, ஆன்ம வளர்ச்சிக்கான முயற்சிகளில், செலவிடவே, அபார சக்திகளும், திறமைகளும், மானிடனுக்கு, பரமனுல் அளிக்கப் பெற்றன.

மற்ற உயிரினங்கள் பெற்று அனுபவியாத, மன உலகமே மானிட வர்க்கத்தின் மிக்கச் சிறப்பு வாய்ந்த தனி உடமையாகும். ஆசையை அடிப்படையாகக் கொண்டு அமைந்த, மிருக வாழ்க்கை நடத்த, முதிர்ச்சி பெற்ற மனமும், அறிவும், சிந்தனு சக்தியும், பேச்சும், பாஷையும், வேண்டியதில்லை. தேவைப்படாத, உறுப்பையும், சக்திகளையும், இயற்கை ஒருபோதும் அளிக்காது, எனவே, இவ்வரிய அற்புதமான சாதனங்களும், அபார ஆற்றல் படைத்த சக்திகளும், ஒரு அரிய பெரிய வினையை ஆற்றுவதற்கென்றே, திட்டமிட்டு, இயற்கை மனிதனுக்கு அளித்திருக்க வேண்டுமென நிச்சயிக்கலாம். மனிதனின் குறிக்கோளாகிய, ஆன்ம விடுதலைக்கு, இவை இன்றியமையாதவையே. ஆனுல், அந்த நோக்கை யடைவதும், அடையாமலிருப்பதும், இவற்றை மனிதன் உபயோகிக்கும் முறையைப்பொருத்ததே. இச்சாதனங்களையும், சக்திகளையும், அளித்த பராசக்தியின் ஆணையாகிய, தர்மத்தின்படி, இவை உபயோகிக்கப்பட்டால், குறிக்கோளை எளிதில் அடையலாம். அவற்றை வீணடித்து, தீய வழியில் உபயோகித்தால், மானிடன் அவதியுறுவான். மனித மனம், ஒரு மிகவும் அற்புதமான படைப்பு. உடலுடன் பிறவியெடுக்கும் மனம், உடல் விரைவாக வளர்ச்சி பெறும் இளமைப் பிராயத்திலும், காளைப் பருவத்திலும், அதிக வளர்ச்சி பெருமல், உடல், மூப்பால் வலிவிழக்கும் பொழுது, இயற்கையால் ஏற்படும் இந்த நஷ்டத்தைப்

பன்மடங்கு ஈடு செய்வது போல், மனம் விரைவாக வளர்ந்து, வலிவும், உறுதியும் பெற்றுக்கொண்டே போகிறது. ஆனால், இக்காருண்யமான அனுகூலத்தைப் பெற, மனிதனின் தனி முயற்சி யில்லாமல் ஆகாது. எவ்வாறு, உடல் வளர்ச்சிக்கு உணவு அவசியமோ, அவ்வாறே, மனத்திற்கும் அதற்கான ஊட்டங் கொடுத்தாலே, அது வளர்ந்து வலுப்பெறும். புறக்கணிக்கப்பட்ட மனம், வளராது, குன்றிப்போய், பாழடைந்து விடும். சிந்தனையே, மனப் பயிற்சிக்கும், வளற்சிக்கும் இன்றியமையாத உணவு. நல்லெண்ணங் களும், நல்லோர் கூட்டுமே, போற்றத்தக்க மன உணவாம். கெட்ட எண்ணங்கள், உணவாக இடப் பெற்ற மனம், அவற்றையும் ஏற்றுக் கெட்டுப்போம். தர்ம நெறியில் மனப்பயிற்சி யளிப்பது, மானிட வர்க்கத்தின் கடமை. மனம், ஒரு சலவை செய்த தூய வெண்ணிற ஆடை போலாம்; அதற்கு, எந்த வர்ணத்தை, அளிக் கின்றோமோ, அதைக் கெட்டியாக, எளிதில் ஏற்கும். கெட்டுப் போன மனத்தைத் திருத்துவதும், நல்ல மனத்தைக் கெடுப்பதும், இரண்டுமே கடினம்.

படைப்பிலுள்ள மற்ற உயிரினங்களைப் போலல்லாது, மனிதன், இரண்டு உலகங்களில் வாழ்க்கை நடத்துகிறான். ஒன்று, பூதவுலக மாகிய, தோற்றமளிக்கும் வெளியுலகம்; மற்றது, வெளித் தோன்றா மன உலகம். பூதவுலகம், இயற்கையால், மனிதன் உள்பட, எல்லா ஜீவன்களுக்கும் பொதுவாகப் படைக்கப்பட்டது. ஆனால், மன உலகம், இயற்கையின் அடிப்படையிலேயே, பொதுவாகச் சமைக்கப் பட்டாலும், ஒவ்வொரு தனி மனிதனும், வெகுவாகத் தனக்கென்றே, தானே படைத்துக் கொள்வது அவனவன் மனஉலகம். என்றாலும், மன உலகம், வெளியுலகைச் சார்ந்து, அத்துடன் எதிர்த் தாக்குதலால், ஏற்பட்ட படிகமே. இவை காரணமாகவே, வெளியுலகம், மானிட வர்க்கத்தார் எல்லோருக்கும், சற்றேறக் குறைய, ஒன்றுபோலவே, தோற்றமளிக்கின்றது. அதுபோலவே தனிமனித மன உலகங் களும், வெகுவாக, ஒரே பாணியில் செயல்பட்டு, ஒன்றுக் கொன்று ஒத்திருக்கின்றன. இன்றேல், மனிதர்கள், ஒருவருக் கொருவர், தங்கள் சிந்தனை, கற்பனை, எண்ணம், செயல், முதலான அனுபவங்களை, பரிமாறிக் கொள்ளவும், அவற்றைப் புரிந்து கொள்ளவும் இயலாது போய்விடும்.

மனித குலத்தின் மனங்களெல்லாம், ஒரே, அச்சில் வார்க்கப் பெற்றவை. அந்த மூல அடிப்படைதான், பரமன். எங்கும் வியா

பிக்கும், எக்காலுமுள்ள, என்றுமழியாத இந்த அடிப்படையின்றி, கோடிக்கணக்கான மனங்கள், பல்லாண்டு காலமாக, இப்புவி தொடங்கியது முதல், ஒன்றுபோல் செயல்படாது. பிளேட்டோ, சாக்ரதர், ராமர், கிருஷ்ணர், புத்தர், இயேசுநாதர், மகமதுநபி இவர்களின் மனத்தில் எழுந்ததை, நம் சித்தங்கள் இன்றும் புரிந்து கொண்டு, அவற்றால் கவரப்படுவதேன்? இப்பூவுலகம், நமது மனமாகிய காமிராவால் பிடித்துக் கொடுக்கப்பட்ட படமேயாம். மனமின்றேல் உலகமில்லை. நம்மைச் சுற்றி நடக்கும் எல்லா சம்பவங்களும், நம் அறிவுக்கு வருவதில்லை. ஏன்? நமது மனம் அவற்றை நாடிப் படமெடுத்து, நமக்கு அளிக்கவில்லை. இந்த, நமது மனம் சாதாரணமாக, நமது புத்திக்குக் கட்டுப்பட்டே செயல்படும். ஆனால், புத்தி, மனத்தையடக்கி ஆளும் வல்லமையைப் பயிற்சியாலே பெற வேண்டும். அறிவு குன்றிப் போனால், மனம் கட்டுக்கடங்காமலே செயல்படும். ஆகவே, கூர்மையான, வலிவுள்ள, அறிவையும், மானிடன், தானே யுண்டாக்கிக் கொள்ளவேண்டியது அவசியமாகிறது. மனத்தை, அஹங்காரம், தன் ஆதிக்கத்திற்குள்ளாக்க முற்படும். இதைப் புத்தியே, தடுக்கவேண்டும். இவ்வாறு, புத்தி, மனத்தையும், அகத்தையும் அடக்கிச் செயல்படுவதே மானிட இயல்பாம்.

புல்லிலும், பூண்டிலும், கொடியிலும், செடியிலும், புழுவிலும், பூச்சியிலும், பறவையிலும், பசுவிலும், புலியிலும், கடைசியாக, மனிதனிலும், ஜீவன், சங்கிலித் தொடர் போல், பிணைப்பு அற்றுப் போகாது, வளர்ந்து கொண்டே வந்திருப்பதைக் காண்கிறோம். இதையே, விஞ்ஞானி, டார்வின், பரிணாம சக்தி செயல்பட்டு, ஜீவன் முன்னேற்ற மடைந்து வருவதாகக் கூறினார். அவரும், அவரைச் சார்ந்தவர்களும், பொதுவாக, ஆன்ம தத்துவத்தை, ஆதரிப்பவர்களல்ல; யாவும், தற்செயலாய் உண்டானவை, என்ற கொள்கையை மேற்கொண்டவர்கள். ஆனால், நாம் காண்பது, ஒழுங்கு, ஒற்றுமை, படிப் படியான முன்னேற்றம், அதற் கேற்ப சக்தி, திறன், கருவிகள்; தவிர, ஒவ்வொரு ஜீவனிலும், சுதந்திரத்துடன் கூடிய, ஒருமைக் கட்டுப்பாடும், ஆதிக்கமும் ஏற்பட்டு, ஜீவ-உடலின் குறிக்கோள், சந்தேகமறத் தெளிவு படுத்தப்படுகிறது. தான் தோன்றித்தனமான சம்பவங்கள் நடைபெறவோ, முரண்பாடான ஆணைகளோ, சக்தியோ, கருவியோ, படைப்பில் ஏற்பட்டதாகக் காணவில்லை. அழகும், வனப்பும், எழிலும், மற்றும் உயிரின் உபயோகத்திற்கு அவசியமான சட்ட திட்டமே, தென்படுகின்றன. உயிரினங்கள் படி ஏற, ஏற, இயற்கையின் ஆதிக்கத்திலிருந்து, விடு படவே

முயற்சிக்கின்றன, என்பது நம் யூகத்திற்கு எட்டுகிறது. ஜீவன், தன்னுள்ளேயே, தனது வளர்ச்சிக்கு வேண்டிய சக்திகளை யெல்லாம், ஆரம்பத்திலேயே பெற்று, படிப் படியாக முன்னேறி வருவதைக் காணலாம். துவக்கத்திலே ஜீவன் தன் முழு வளர்ச்சிக்கான சக்திகளைப் பெற்றிருக்கின்றதென்ற சித்தாந்தம், அத்துவைதத்தின் ஆணி வேர். அதை மேநாட்டு, மேதாவிகள் ஒப்புக் கொள்ளாமல், ஜீவன் வளர, வளரவே வெளியிலிருந்து, தான் தோன்றித் தனமாக, அறிவும், சக்திகளும், அதனுட் புகுகின்றன என்று கூறுகிறார்கள். ஆனால், இது தவறு என்று முன்னால் பரிணாம முறையில் விளக்கினோம்.

படைப்பு என்பது, திட்டமிட்ட செயலே, என்று, மேலே கூறியவற்றால், தெளிவாகிறது. இத்திட்டத்தைப் போட்டு, அதை சரிவரச் செயல்படும்படி, முன் கூட்டியே, வேண்டிய, முழு ஏற்பாட்டையும் செய்துமிருக்கிற, இச் சக்தியை, பரமான்மா என்று அழைக்கிறோம். அச்சக்திக்கு, நம் அங்கீகாரம், தேவை யில்லை. அதை யொப்புக் கொண்டு, அதன் ஆணைப்படி நடப்பவனுக்கு, உலக வாழ்க்கை இன்பமாயும், எளிதாயும், முடிவதுடன், விடுதலையும் கிட்டும். ஆனால், அதை ஒப்புக் கொண்டாலும், மறுத்தாலும், அதன் ஆணையை மீறி நடப்போரெல்லாம், இருளில், தனிமையாகவே, தட்டுத்தடுமாறித் தத்தளித்து அவதிப்பட வேண்டும். மனிதனிலும் மிக்கதொரு பராசக்தியே, இவ்வரும் படைப்புக்குக் காரண மென்பதை எல்லோரும் உணருகிறோம். ஆனால், நமது அஹங்காரம் இதை ஒப்புக் கொண்டு, நமது செயல் முறைகளை வகுக்க தடையாய் நிற்கிறது. அகத்தை யடக்கி, பராசக்தியை ஒப்புக் கொண்டு நடந்தால், நாம் சிறுமை யடையோம்; பெருமையும் பேருனந்தமுமே பெறுவோம்.

கீதையின் கோட்பாடும், பரிணாம முறை கூறுவது போல், கடவுள் வெளியே நின்று, ஒவ்வொரு பொருளையும், ஜீவனையும், தானே நேரில் செயல்பட்டுப் படைக்க வில்லை என்பதே. பரமன் காரணகர்த்தாவே யல்லாது, ஒரு பொழுதும் நேரில் பங்கு கொள்வதில்லை. அவர் வகுத்த ஆணையே செயல்படுகிறது; வினையாற்றும் கருவி, பிரகிருதியே. மற்றும் ஒரு உண்மை — ஆன்ம சம்பந்தமோ, சம்மதமோ, இல்லாத படைப்பே கிடையாது. (XIII-26). மனிதன் உள்பட, யாவற்றிலும், பரமான்மா வியாபித்திருப்பதுடன், அங்கு வசிக்கவும் செய்கிறார். என்றாலும், எல்லாப் படைப்பிலும், அவர் மகிமை ஒரே அளவாக வெளியாக்கப்பட வில்லை. கல்லிலும், தூணிலும், துரும்பிலும், அவர் இல்லாமலில்லை. தாவர வர்க்கத்தை நோக்கினால், அவற்றில், உணவெடுத்து, வளர்ந்து, இனவிருத்திக்கு ஏற்பாடு செய்வதுடன், ஆன்மா வேறு காட்சியளிக்க வில்லை. விலங்கினங்களில் மேல் கூறிய செயல்களோடு, புலன் உணர்ச்சியையும், சலனத்தையும், ஏற்படுத்துகிறது, ஆன்மா. ஆனால், மனிதனிலோ வெனில் ஆன்மா தன் மகிமையை பெரிதும் வெளிக் காட்டுகிறது. சிந்தனை, பேச்சு, பகுத்தறிவு, தர்ம இயல்பு, அன்பு, இவை யாவும், மனிதன் மூலமே படைப்பில் வெளித் தோன்றுகின்றன. மிருகங்களுக்கு, மட்டரகப் புலன்

ஆசைகளைத் தவிர, வேறு தெரியாது. ஆனால், மனிதன், அறிவாலும், உள்ளத்தாலும், ரசித்து அடையும் இன்ப உணர்ச்சிகளையே, உயர்தர ஆனந்தமாகக் கொள்கிறான். சிற்றின்ப சுகம், சொறி கண்டவன், தேனவெடுத்துச் சொறிந்து கொள்வது போலாம். படைப்பில் மனிதனை உயர்த்துவது, அவனது சிந்தனை சக்தி, பேசும் திறமை, பகுத்தறிவுமேயாம். இவற்றாலே, அவன் மற்றப் படைப்புக்களையெல்லாம், தனக்குப் பணிய வைத்து, உலகையே ஆளுகிறான். மனவலிவும், உறுதியான புத்தியுமே, மனிதனை முழு மனிதனுக்குகின்றன. இவற்றை விருத்தி பண்ணாத மானிடன், நிறை மனிதனல்ல. குறை மனிதனே, மிருகமே.

ஜீவன் என்பது, சலனமுள்ள, இயந்திரம் மாத்திரமல்ல. அது தானே வளர்ச்சி பெறவும், தன்னைத் தானே பேணிப் பழுது பார்த்துக் கொள்ளவும் இயலும். இவ்வரிய சக்திகளே ஆன்ம பலமாம். ஆன்மா எல்லா உயிரினங்களிலும் இருந்தாலும், அது, கீழினங்களாகிய தாவரங்களில், ஜடப் பொருள் இயல்பையே பெரிதும் காட்டி, அசைவற்ற நிலையில் நின்று, சலனத்தால் ஏற்படக் கூடிய அபாயங்களைத் தவிர்த்து, கவலையற்ற பாதுகாப்புள்ள நிலையை வகிக்கிறது. இந்த, விலங்கிட்டு, காவலில் வைத்தாற் போலான, அசைவற்ற தாவர நிலையை விட்டகன்று, விலங்கினத்தை அடைந்தால், அந்த ஆன்மா, சுதந்திரமான சலனத்தையும், அதனாலான, ஆபத்து கண்டங்கள், இவைகளுக்குட்பட்டுச் செயல்படும் நிலையை ஏற்கின்றது. தாவரங்களும், விலங்கினங்களும், இயற்கை இயல்பைத் துணையாகக் கொண்டு, தற்காப்பையே முக்கியமாகக் கருதி, வாழ்க்கை நடத்துவதால், பகுத்தறிவைத் தன் ஆயுதமாகக் கொண்ட மனிதனுக்கு அடி பணிய வேண்டியதாயிற்று. அறிவைக் கருவியாகக் கொண்டதினால், மனிதன் தன் சுதந்திரத்தை யடைகிறான். அவன் தற்காப்புக்கும், அதுவே, உதவுகிறது. இம்மாதிரி இந்த பூவுலக மேடையில், பரிணாம ரீதியில், ஜீவன் (ஆன்மா), மூன்று படிகள் ஏறியிருக்கின்றது. முதல் படியில், துணிவற்று, தற்காப்பே பிரதான மென்று, பல்லாண்டு பல்லாண்டாய்ப் பிழைத்திருக்கும், தாவர இனங்கள் உள. இவை, ஒரு பாவச் செயலையும் அறியா. படைப்பின் மேலினங்களுக்குத் தங்கள் உடலை ஆகாரமாக்கித் தங்களையே தியாகம் செய்யும் பெருமைக்குரியவை யாகின்றன. தாவரங்கள் இல்லாது, மேல் உயிரினங்கள் ஜீவிக்க முடியா தென்பதை பஞ்சகோசத்தில் விளக்கினோம். இரண்டாம் படியில், ஊர்வன விலங்குகள் நிற்கின்றன. சலனமும், சுறு சுறுப்பும், முயற்சியு மிருந்தாலும், ஆபத்தைத் தவிர்க்க, இவை இயற்கை யறிவையே தற்காப்புக்காகப் பயன்படுத்தி, இயற்கையால் தூண்டப் பெற்ற ஆசைகளுக்கு அடிமையாகிச் செயல் பட்டு, பாவ புண்ணியத்திலும், ஓரளவு பங்கு கொள்ளுகின்றன. இயற்கை சுபாவத்தால் கட்டுண்டு, பிற ஜீவன்களுக்கு கெடுதல் புரிகின்றன. ஆனால், மனிதனைப் போல், ஆழ்ந்து, ஆராய்ந்து, வேண்டுமென்றே கேடு செய்யும் ஆற்றல் பெறவில்லை. தர்ம, அதர்மப் பாகுபாடு காணாதவை, விலங்குகள்.

மூன்றும் படியில், மனிதன் ஏறி நிற்கின்றான். அவனுடைய பகுத்தறிவு, சிந்தனையைத் தூண்டி, எதையும் எதிர்க்கத் துணிவு கொடுத்து, இயற்கையின் பிடியிலிருந்து விடுவித்து அவன் சுதந்திரத்தை நாட்டுகிறது பகுத்தறி வில்லாது, இயற்கை யறிவை மட்டும் உபயோகிக்கும் மனிதன், விலங்கினங்களைப் போலவே, வரண்ட, உருசியற்ற, சலிப் பூட்டும் வாழ்க்கையே நடத்தக் கூடும். பகுத்தறிவை மட்டும், கருவியாகக் கையாளும் மானிடன், வெளி இயற்கையையும், அதற்கு அடிமைப் பட்ட ஜீவன்களையும், அடக்கி ஆளலாம். ஆனால், தன்னைத் தானே கட்டி ஆள, வறட்டு அறிவினால், இயலாது. (இங்கு அறிவு என்பது உண்மை ஞான மல்லாத, உலோகாயத அறிவாகிய ஏட்டுப் படிப்பைக் குறிக்கும்). பிறருக்கு, யஜமானனாகும் மனிதன், தன்னைக் கட்டுப்படுத்தி, தனக்குத் தான் யஜமானனாவது, அவசியம். இது மெய்யறிவு, ஏற்பட்டாலே கூடும். தன்னைத் தான், அறியாதவனின் அறிவு மெய்யறிவல்ல. தான், ஆன்மா, இந்த அழியும் உடலல்ல, என்ற திட நம்பிக்கை கொண்டு, அதன் அடிப்படையில் செயல் படுபவனே, தன்னை யறிந்தவனாவான்; அவனே, தன்னைக் கட்டியாள வல்லவன். தாவரங்களுக்கும், விலங்கினங்களுக்கும், சுயேச்சை என்பது கிடையாது; அவை, இயற்கையின் நியதிப்படியே செயலாற்றும். ஆனால், மனிதன், தன் இச்சைப்படி செயல் புரிய இடம் உண்டு. இந்த, சுதந்திரம், மனிதனைத் தவிர, மற்ற உயிரினங்கள் பெறாததால், துர் நடத்தைகளுக்கு அவைகளிடம் வாய்ப்பு இல்லை, மனிதன் தன் இஷ்டம் போல் வினையாற்றி, அதற்கான, இன்ப துன்பங்களை வெகுமதியாகவோ, தண்டனையாகவோ, உடனுக்குடன் அடைகிறான்.

மனித வடிவமே, பரமனின் கோவில். கடவுள், மனிதனைத் தன் உருவத்தில் படைத்ததாகச் சில மதங்கள் கூறுகின்றன. விலங்கினங்களின் உடல்கள், ஆசைக்கும், துயருக்கும் இருப்பிடம். விலங்குகள் போல், வாழ்க்கை நடத்தும் மனிதனும் ஆசைக்கும், துயருக்கும் அடிமையாகிறான். மனிதனின் தெய்வீகம், அவனை எளிதில் தெய்வமாக்க முடியும். மனிதனுள், முன்னேற வேண்டுமென்ற அவா, என்றும் மணையா நந்தா விளக்காக எரிகின்றது. இத் தாகத்தை, மனிதன் தன் ஆன்ம விடுதலைக்காகப் பயன் படச் செய்தால், அவன் தன் கடமையைச் செய்தவனாகிறான். அல்லாது, பணம், பொருள், பதவிகளைத் தேடத் தலைப்பட்டால், துயரை அடைவான். எல்லா உயர் ஜீவன்களிடத்தும், வெளிப் போராட்டம், உள் போராட்டம் என, இரு முனைச் சண்டைகள் மூண்டு கொண்டே இருக்கின்றன, வெளி முனைப் போரே, உடல் வாழ்க்கைப் போராட்டம். இதையே, மேனாட்டு விஞ்ஞானிகள், மிகைப்படுத்திக் கூறுவதுடன், உள்முனைப் போரை மறுக்கின்றார்கள். ஆனால், உள் முனைப் போரே, கடுமையானதோடு, ஜீவனை வெகுவாகப் பாதிப்பதும் அதுவே. பணமும், பதவியும், புகழும், படைத்தவர்கள் கூட, வாழ்க்கையில், நிறைவோ, திருப்தியோ காணாது தவிப்பதேன்? வெளிப் போரில் ஜயங் கண்டவர்கள், உள் முனைப் போரில் தோல்வி யுற்றால், பின், வாழ்க்கை எவ்வாறு இன்

யம் பயக்கும்? மனிதனுள் மூளும் உள் முனைப் போர், அவனுடைய ஆசைகளால், அவன் வேண்டுவதற்கும், அவன் வேண்ட வேண்டுவதற்கும், அதாவது, அவன் செய்வதற்கும், செய்ய வேண்டியதற்கும், நினைப்பதற்கும், நினைக்க வேண்டியதற்கும், இடையே நிகழ்கிறது. இதுவே, அவன் கீழியல்பாகிய அசுர குணங்களுக்கும், அவன் மேலியல்பாகிய தெய்வ குணங்களுக்கு மிடையே மூளும் போர்.

புலன்களால் தூண்டப்பெற்ற, மட்டரக ஆசைகளின் அடிப்படையில் செயலாற்றுவது, அசுரத்தன்மையாம், ஜீவனின் விடுதலைக்கு, அதுவழித்தடையாம். நமது, தார்மீக இயல்பு, ஜீவனின் விடுதலையைக் குறிக்கோளாகக் கொண்டது. மனிதன், தன் வினைகளுக்குத் தானே பொறுப்பு என்ற உணர்வு பெற்றவன். அவனது ஆற்றல் பெற்ற அறிவு, ஆன்ம ஒளி (அருள்) கிட்டி, தார்மீக இயல்பைத் தூண்டுகிறது. அறிவைப் புறக்கணிக்கும் மனிதன், தன் புலன் உணர்ச்சிகளுக்கு அடிமையாகின்றான். அம்மனிதனே, தன் கடமையில்; தவறியவன். தன் சுயதர்மத்தைக் கைவிட்டவன். ஆசைகளே, மனிதனை, ஆன்மவழி செல்லவொட்டாது, மிருக வாழ்க்கையில்தள்ளுகின்றன. மனிதனையும், மிருகத்தையும், பிரித்துக்காட்டுவது, மனிதன் தன்னைத்தானே உயர்த்திக்கொள்ளும் சக்தியாம். இத்திறமை, அவன் மனத்தாலும், புத்தியாலும், எற்படுவதே. ஒரு மிருகம், தான், பிறந்த சிலமாதங்களிலேயே, அதன் ஆயுளில் பெற வேண்டிய முழு வளர்ச்சியையும், அடைந்து விடுகிறது. அப்பால், முன்னேற்றம் காணுவதில்லை. மனிதனோவெனில், நாளடைவிலே, படிப்படியாகத் தன் இன முறையிலும், தனிப்பட்ட முறையிலும், முன்னேறிக்கொண்டேயிருக்கிறான். பரிணாம முறை பகர்வதுபோல், வாழ்க்கைப் போராட்டத்தைக் கருவியாகக் கொண்டு, முன்னேற்றமடைவதாகக் கூறும் கூற்று, கேவலம், உடல் வாழ்க்கையை யொட்டியதாகவே இருக்கக்கூடும். மனவளர்ச்சியற்ற கீழினங்களுக்கு, அது பொருத்தமாகலாம், ஆனால் உறுதி மனம் படைத்த மனிதனுக்கு அதுபொருந்தாது. மனிதனின் தனிச்சிறப்பு, அவன் தன்னைத்தானே கட்டுப்படுத்திக் கொள்ளும் திறமையேயாம். விலங்கினங்களின் இயற்கைச்சட்டமாகிய, "புஜபலமே, தர்மநீதி" என்பதை, அவன் மறுத்து, தன்னைத்தானே தியாகம் செய்வதே தன் கடமை, சுதர்மம் என உணர்ந்து செயல்படுகிறான்.

இந்த பூத உலகில், இயற்கைச் சக்திகளின் கொடுமைகளையும், ஜடப் பொருள்களின் உபயோகங்களையும், விஞ்ஞானமுறையில், தன் அறிவால், மனிதன் மாற்றியமைத்துக் கொண்டான். இவ்வாறு, தன் பகுத்தறிவால், வெளி இயற்கையின் கொடுமைகளைத் தணித்துக் கொண்ட மனிதன், தன்னுள்ளே, குமுறியெழும் மட்டரக, சுயநல ஆசைகளையும், உணர்ச்சிகளையும், அடக்கியாண்டு செல்பட இன்னும் பயிர்ச்சி பெருது, நிற்கிறான். இவற்றின் கொடுமைகள், தன்னையும், உலகோரையும் வாட்டி வதைக்கின்றன. விஞ்ஞானத் தேர்ச்சி மூலம், அவன் பகுத்தறி

வானது, எவ்வாறு, வெளி இயற்கைச்சக்திகளின் வேகத்தை அடக்கியாண்டு, வருகின்றதோ, அதேபோல், அவன், தன்தெய்விக இயல்பாகிய அன்பின் மூலமும், உறுதி பூண்ட உண்மைஞானத்தாலும், தன் கீழியல்பின் ஆசைகளையும், உணர்ச்சிகளையும் அடக்கியாளப் பயிற்சிபெறவேண்டும். **சன்மார்க்க நன்னெறி வாழ வேண்டிய உலகில், அன்பே, செல்லும் காசு.** வறட்டுப் படிப்பினாலான உலோகாயத அறிவு, சிருமைபடுத்தும் செல்லாக்காசே. உண்மை ஞானம்பெற, இன்பதுன்பங்களையளிக்கும், விருப்பு வெறுப்புக்களை, நம் வினைகளின் அடிபடையாகக் கொள்வதை, அடியோடு அகற்றல் வேண்டும். இத்துடன், நமது புத்தியும், சுயநலநோக்கை வேருடன் களைந்துவிட வேண்டும். கத்தரிக்கோலின் இரட்டை அலகுகள் போல், இவ்விரண்டு தார்மிகக்கட்டளைகளும், நமதுவாழ்க்கையில் செயல்பட்டால், நமது கீழியல்புக் குணங்கள் பறந்தோடிப்போம். **ஆசையற்ற, பற்றற்ற, அடிப்படையில் செயல்களும், தன்னலமற்ற நோக்கும், நம்மைத் தெய்வங்களாக்கிவிடும்.** இந்தக்கோட் பாட்டை, கீதை வற்புறுத்தாத இடமில்லை. “அஹங்காரத்தைக் கொல். நான், என்ற உணர்ச்சியை அழி. என்னுடையது என்ற எண்ணத்தையொழி.” இவைதான், கீதையின் பல்லவி. கீதை வகுத்தளிக்கும் வாழ்க்கைக்கலை, இதுவே, விடுதலைக்கும் வழி.

முக்குணங்களில், எவ்வாறு, ஒன்று தணிந்தால், மற்றொன்று, மேலோங்குமோ, அவ்வாறே, அஹம், **மட்டுப்பட்டால், தெய்வீக பேரியல்பு ஓங்கும்.** நம் தெய்வீக இயல்பு வலுப்பெற, அதற்காகக் கண்ணீர் விட்டுக் கதறி, வருந்தவேண்டும். ஒரு பச்சிளங்குழவி, தன் தாயின் அன்பில், நம்பிக்கை கொண்டு, தான்வேண்டுவதைப் பெறக் கதறுகிறதோ, அதேமுறையில், நாம் வருந்தி விடுக்கும் வேண்டுகோள், பரமனின் செவிகளைத் தாக்கி, அவர், கருணையைப் பெறவழிவகை செய்கின்றது. நம்முள்வாழும், அப்பரமனின் மேலுள்ள, நமது நம்பிக்கையே, நம்மை, இவ்வாறு கதறி, அவரிடம் முறையிடத் தூண்டவேண்டும். நாமெல்லோரும் குழவிகள், அவர் நமக்குத்தாயுமானவர். அவரிடம், சரண்புகுந்தாலே, அவரது கருணைக்குப் பாத்திரமாவோம். சரண் என்பது, கோவிலுள், தரையில் புரளுவதல்ல. அது வெளித்தோற்றமே, போலிவினையாகவும் அமையலாம். அஹம் அழிவதே சரண். அஹம் சூன்யமான ஜீவனிடமே, இறுமாப்பும் தன்னலமும் அற்றுப்போம். அஜ் ஜீவனே சரண் புகத்தன்னைத் தகுதியாக்கிக் கொண்ட உண்மை பக்தன். **தன்னைச் சூனியமாக்கிக் கொண்ட பக்தனை, தர்மவிதிகள் யாதொன்றும் கட்டுப்படுத்தாவென்ற உறுதியை,** கண்ணன், பிரசித்தி பெற்ற சுலோகங்களாகிய XVIII-17-லும், 66-லும் **அளிக்கின்றார்.** பக்தனுககுப் பாவமூட்டைகள்கிடையாது. அவன், தர்மவிதிகளைப் பின்பற்றி, புண்ணிய மூட்டைகளையும், சிபார்சுக் கடிதங்கள் போல், பரமனின் சந்நிதிக்கு எடுத்து வரத்தேவையில்லை, என்று அருள்புரிகிறார். தன்னைச் சூன்யமாக்கிக் கொண்டவனிடம்,

புண்ணியமேது? பாவமேது? புண்ணியம், எஞ்சிநின்ருல், அதன் பலனையனுபவிக்கப் பிறவி எடுத்தாக வேண்டுமே. ஆகையால், தன்னைச் சூன்யமாக்கிய பரம பக்தனைத் தர்மவிதிகளினின்றுங் கூட விலக்களித்து, விடுதலையளிக்கின்ருர்.

தெய்வ சந்நிதியிலும், பெரியோர்முன்நிலையிலும், தலைவணங்கி, விழுந்து கும்பிடுவது, ஹிந்துக்களின் வணக்க முறை. இதில், புறவினை, சேவலம், திரேகப் பயிற்சியாகி, உடல், வலுவையளிக்க லாம். ஆனுல், இங்கு முக்கியமானது, மனநிலையே. அஹத்தைத் தலை தூக்கவொட்டாமல், தரையோடு தரையாய்க் கிடத்தி வீழ்த்து வதே, உட்செயலின் பொருள். அதன் பலனே தெய்வ கருணை. இக்கருணை மூலம், வேண்டு கொள், நிறைவேறும். அஹத்தை யழிக்காது வேண்டுகோள் விடுத்தால், தெய்வம் செவிமடுக்காது. ஏன்? அஹம் விடுக்கும் வேண்டுகோள், சுயநலத்தை நாடுவதுடன், பிறர் கேட்டையும் கோரும். பாரபட்சமற்ற பரமன், இதற்கு அனு கூலமாயிரார். அவர் படைப்பின் பால் நாம் காட்டும், அன்பாகிய உணர்ச்சியொன்றுக்கே, பரமன் கட்டுபடுவார். அதுவே, அவர் கருணைக்கு விலை. தெய்வ வழி பாட்டில், பொருட்சேதம், உணவுச்சேதம், உயிர்ச்சேதம் செய்வது, வீண்டாம்பீகமான விரயமாதலால், அவை களுக்கு விரும்பிய பலன் ஏற்படா.

தப்பமுடியாத சங்கடங்கள் நேரிட்ட காலத்திலும், தகாத பலனையடைய ஆசை கொள்ளும் பொழுதும், அவபக்தி (மூடபக்தி) யுள்ளவர்கள், தெய்வத்திற்கு லஞ்சம் அளிப்பது போல், ஏதேதோ, சங்கற்பங்கள் செய்து, கோரியபலனை எதிர்பார்க் கின்ருர்கள் நேற்றுகடன், அல்லது தெய்வ கடன் என்பது, குற்றம் செய்த பயத்தினுலானதே. தெய்வம், வாயையும், வயிற்றையும், துறந்தால், பின், பிரபஞ்சம் ஏது? அல்லது, நாம் இப்பொழுது கடவுளுக்கென, நிவேதனமாகக் கோயிலுக்கு எடுத்துச் செல்லும் வழக்கம் எவ்வாருகும்? கருத்து யாதெனில், நமது உடமை என்று உரிமை கொள்ள நமக்கேதுமில்லை. வரும்பொழுது உடலுடன் வந்தோம்; வெளியேகும் பொழுது, அதையும் களைந்தே ஏகு கிறேம். பிரபஞ்சமும், நாமும், யாவும், பரமனின் உடமைகளே. அன்னுரின் கருணையால், அவர் அருளியதை, அவருக்கே, மான சீகமாக, அர்ப்பணித்துப் பிறருக்கும் இட்டு, எஞ்சிய சொற்பத்தையே, பிரசாதமாக நாம் கொள்ளவேண்டும். பரமன், நம்மிடமிருந்து, தனக்கு, பச்சிலையோ, பூவோ, பழமோ, அல்லது தண்ணீரோ, எதுவாயினும் சரி, பக்தியுடன், தியாகமாக, அளிக்கப்பட்டால், அதை, விரும்பி ஏற்பதாக, XI-26-ல் மொழிகின்ருர். அவர் வேண்டுவது, நம் அஹந்தை; நம் உடமைபித்து தங்கத்தால் கட்டிய துளசி மாலையும், ருத்திராக்ஷமும், அணிவதால், விஷ்ணுபக்தியும், சிவப் பிரீதியும் வளர்ந்துவிடுமா? அஹத்தைக் கொன்றவனே ஆண்டவன். அந்த லட்சிய ஜீவன், யாது செய்தாலும், இவ்வுல கத்தையே, அழித்தாலுங்கூடத் தளைப்பட மாட்டான் என்ற

லட்சியநிலையை, XVIII—17 ல், பகர்வதை, விபரீதமாகப் புரிந்து கொள்கிறார்கள், சிலர்.

இந்தப் பிரஞ்ச நாடகத்தை நடத்திக் களியுறவே, பரமன், க்ஷர புருஷனாகின்றார். ஜீவனின் விடுதலை என்பது, பரமனுக்கும் க்ஷர புருஷநிலைக்குமுள்ள சம்பிரதாயப் பிரிவு, அகன்று போவதே. இயற்கை, கீழினங்களுக்கு யஜமான். பிறப்பு, இருப்பு, இனஉற்பத்தி, இறப்பு, ஆகிய சுழல் வட்டத்தையே நோக்காகக் கொண்டவை, கீழின உயிர்கள். அவற்றின், வற்றாத பேராசை, பயங்கரமான கொடுமை, பஹிரங்கமான காமம், எல்லாம், அவைகளை வெட்கித் தலைகுனியவைப்பதில்லை! ஏன்? இவற்றாறேலே, விலங்குகள், தங்கள் வாழ்க்கை நோக்கை நிறைவேற்றிக் கொள்ளுகின்றன. மனிதனோ வெனில், இயற்கையைத் தனக்கு மேலானதாகமதிக்க வில்லை. அத்துடன், இயற்கைக்கு அடிமையான இந்த மண்ணுலக வாழ்க்கையே, தனக்கு நிரந்தரமானது, என்பதையும், மறுக்கின்றான். இப் பூவுலகை அடையுமுன், அவன் தன் தாயின் கருப்பையில், கருவாகத் தங்கி வளர்ந்து வரும் பொழுது, அதுவே தனக்கு, சாசுவதமான இருக்கையென்று, எப்படி நினைக்க வில்லையோ, அதுபோலவே, இந்த அழியும் உலகமும் தனக்கு, நிரந்தரமாக ஏற்பட்ட இருப்பிடமாகாதென்றே, அவன் தெய்வீக இயல்பு கருதுகிறது. இவ்வுணர்ச்சி, தானாகவே எல்லா ஜீவன்களுக்கும் தோன்றுவதால்த்தான், முட்டைக்குள் சிறைபட்டுவளரும் கரு, தன்னைக்கட்டுப் படுத்திவைக்கும் முட்டையின், ஓட்டைத் தனது அலகுகளால், கொத்திக் கொத்தி, உடைத்துக் கொண்டு, முட்டையினின்றும், இப்புவியை அடைகிறது. முட்டையும், தாயின் கருப்பையும், இயற்கை இட்ட தடைகளே. இக்குறுகிய எல்லைக்கட்டை, ஜீவன் ஏற்க மறுக்கின்றது. கருநிலையிலுள்ள ஜீவன், தான் கட்டுண்டு கிடக்கும் அச்சிறைக்கு அப்பால், தன்னை வரவேற்று, தன் இலக்கையடையப் போதிய வாய்ப்பளிக்கக் காத்து நிற்கும், வேறு உலகததை, சுயேச்சையாகவே, உணர்கிறது.

தாயின் கருப்பையில், வளரும் கருவுக் குண்டான உடல் தேவைகளை எல்லாம், தாயானவள் அளிக்கின்றாள். இல்லையேல், கரு, வளர்ந்து குழந்தையாகாது. என்றாலும், அந்த ஜீவனுக்கு, ஒரு பெருங்குறையுண்டு—அதைக் கொடுமையென்றும் பகரலாம்—அதுதான், தாயும் இயற்கையுமாகக் கூட்டுச் சேர்ந்து, அந்த ஜீவனுக்கு, சுவாதீனமோ, சுயேச்சையோ, இல்லாது, சிறையிலடைபட்ட, தனித்த கைதிபோலாக்கியநிலை. ஆகையால், அக்குழவி, விடுதலையடைய முயல்வது நியாயமே. விடுதலையடைந்து, இப் பூவுலகுக்கு வந்ததின் காரணம், வாழ்க்கைப் போராட்டம் நடத்தி வாழ்வதற்கல்லவென்பது தெளிவு இதை மானிடன் மறப்பது மன்னியில, மறுக்கவும் துணிகிறான். தாயின் சிறையில், இயற்கையால் அடைக்கப்பட்டு, அங்கு பெற முடியாமல் ஏங்கித் தவித்தது, தன் சுதந்திரத்தைப் பெறவும், அதன்மூலம்,

ஆன்ம வளர்ச்சி பெற்று, தன் குறிக்கோளாகிய, விடுதலையை அடைவதே. ஆனால் சிசு புகுந்த இப் பூவுலகும், இயற்கையின் ஆதிக்கத்திற்குட் பட்டு, ஜீவன் தன் இலக்கையடையப் போதிய வாய்ப்பு அளிக்காமல், அதற்குத்தடை போடவும் முயல்கின்றது. தாயின் கருப்பையில், போராட்டமின்றி, தன் உடல் தேவைகளைப் பெற்றிருந்தும், தன் குறிக்கோளான ஆன்ம வளர்ச்சிக்கு எப்படி வாய்ப்பில்லாமலிருந்ததோ, அதேபோல் இந்தப் பரந்த **இயற்கையுலகிலும்**, இயற்கையின் ஆணைக்குட் பட்ட நியதிகளும், சக்திகளும், ஜீவனின் தெய்வீக இயல்பை, ஓங்கி வளர இடம்தராது, **ஜீவனைப் புதிதாக, வாழ்க்கைப்போராட்டத்தில் புகுத்தி, ஈவு இரக்கமற்ற தன்னலப் பிசாசாக்கப் பாடுபடுகின்றன.** இந்த அபாயநிலையினின்றும், ஜீவன் தப்ப, ஒரேவழிதான் உண்டு. இயற்கையால் ஏற்படும், வாழ்கைப் போராட்டத்தை, தன்னால் இயன்ற அளவு தவிர்க்க, ஆசையின் அவதாரமாகிய, அஹங்காரததையும், சுயநலத்தையும், வேரோடு களைந்து, ஆசைகள் குன்றக் குன்ற, அவைகளுக்கு மாற்றாக, பிற ஜீவன்கள் பால், அன்பைப் பெருக்கி, தனக்கென வாழ்க்கை நடத்தாமல், புற உயிர்களுக்குத் தொண்டு புரிவதையே, தன் கடமையாகவும், சுதர்மமாகவும் எண்ணிச் செயல்புரிவதாம்.

மரம், மட்டை, மாடு, மிருகம், இவைகளின் நிலைகளைத் தாண்டி, மனிதன், வெகுதொலை, ஆன்ம வளர்ச்சியில், முன்னேற்றங் கண்ட ஜீவன் என்பதைத் தெளிவு படுத்தியுள்ளோம். மனிதப் பண்பு ஒரு அருமை பெருமை வாய்ந்த, பலகாலப் பயிற்சியின் விளைவாம். அதைக் குன்றவிடவோ, அழிக்கவோ செய்யாமல், மேலும் தூய்மைப்படுத்த வேண்டியது நமது கடமை. ஆனால், **யந்திரங்களைப் படைக்கும் ஆற்றல் பெற்ற பேரிடரால், மனிதன், யந்திரசுபாவத்தையே முன்னேற்றமாக, மயங்கி மோகங்கொண்டு பின்பற்றுகிறான்.** நமது முன்னோர்களும், ஆன்ம பலத்தால் வலிவுமிக்க அஸ்திரங்களை (அழிவையுண்டாக்கும் யந்திரங்களை) அடைந்து, நல்வினைகளையும், தீயவினைகளையும் ஆற்றினாலும் அவர்கள் மானிட சுபாவத்தை இழக்கவில்லை. எந்த யந்திரமானாலும், ஒரு ஜீவனுக்கு நிகர் ஆகாது. சுதந்திரமாகச் செயல்படுவதே ஜீவன். சுதந்திரவாழ்வே சுகவாழ்வு என்பதை அறியாதவனே யந்திரம். மண் வாழ்க்கையில், சுதந்திரம் வேண்டிப் போராடும் மானிடன், தன் ஆன்ம வாழ்வில் அடிமை யாவதைப் பொருட்படுத்தாது நிற்பது, தனக்குத்தானே இழைத்துக் கொள்ளும் தற்கொலையாம். **ஆன்ம சுதந்திரம் அடைவதே நம் குறிக்கோள்.** அதற்காகவே பிறப்பெடுத்தோம். அதுகிட்டாது வரை இனியும் பிறப்பெடுப்போம். அநம்பாடு பட்டுக் கழிந்த விலங்கின வழியே திரும்பவும் ஏகிப்பரிதவியாதிருக்கப் பரமன் அருள்புரிவாராக.

❋ ஓம் தத் ஸத் ❋

திருநெல்வேலி டயோசேசன் பிரஸ், பாளையங்கோட்டை — R. 100

28 MAY 1980

*SERVICE OF TRUTH AND SCIENCE I & II*

**VOL. I. SRI GITA, SCIENCE & MODERNITY RS. 6.**
**VOL. II. GITA SLOKAS** *(Freely Rendered into English Prose)*

With Running Commentary & Elucidatory Notes Rs. 1-50.

"Your two Books on the Gita are precious contributions to the Gita Library. You have a psychic intuition to take a pearl-diver's plunge into the ocean-depths of the Universal Book. You have brought out pearls from the heart of the Gita and have woven them into an ornament of crowning beauty The grand style and the deep substance afford a thought provoking study to Savants. You have taken into account the modern Science and schools of thought to enrich your art. Every English-knowing individual should read this Gita-elaboration. *Kavi Yogi Suddhananda Bharati.*

"A remarkable and profound study of the Gita, in a new spirit, combining research and devotion. An excellent and powerful work, contains an excellent exposition of dynamic, essential, integral, Hinduism, by an able modern probing challenging mind presenting the Gita Teaching as a Spiritual *Cum* Socio - Political Gospel. Gives a masterly analysis of the crisis that developed in the Soul of Arjuna. With rare and incisive insight, draws our attention to the two Natures and to two planes of conduct; shows well, how the Gita transcends the Sankhya and solves the puzzle of Soul, Body and Death. The work is a fine synthesis of Religion, Science and Modernity".

K. S RAMASWAMY SASTRY.

---

பாகம் I. பகவத் கீதை (புதிய ஏற்பாடு)

(1) பரமான்மா; (2) பிரபஞ்சம்; (3) முக்குணங்கள்; (4) காமம்; (5) யோகம்; (6) கர்மம்; (7) பக்தி; (8) ஞானம்; (9) கதம்பம்.

"The Lord has lit the lamp of wisdom in your heart and it shines there for all men to see. The Book is very readable. It is in simple and chaste tamil. Your presentation emphasises the truth that the Bhagavat Gita is the New Testament of Hinduism."
"ANNA" N. SUBRAMANIA IYER.

---

Modern Scientific Management Vols. I & II

*Complete Costing & Management Accounting with A. B. C. of Industrial & Production Engineering*

(Foreword by Dr. P. S. Lokanathan, New Delhi.)

**VOL. I.** **Cost-Control & Management Technique** *through* Standard Costing & Budgetary Control, Planning, Organisation, Marginal Costing, Labour Problems & Relations, Time & Motion Study, Job Evaluation, Bonus & Incentive Systems, Work-Study, Stores Organisation & Accounting etc., in 18 Chapters, Demy 8 vo. 340 pp. ... Rs. 12—50.

**VOL. II.** **Textiles Costing, Organisation & Cost Control** A classic for Textile-men, 232 pp. ... Rs. 7—50.